வெளியீடு 25-02-2000 Issued 25-02-2000

400
2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 28, 1999 - தொகுதி 76 - எண் 1

Wednesday, 28th April, 1999—Volume 76 - No. 1

... மன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...tive Assembly Secretariat, Fort St. George,

Chennai - 600 009

[Price Rs. 3.00

D
Y211,31'N99.
N99.76.1
221805

28-04-1999

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ₅மிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| ²ersonnel of the Government of Tamil Nadu | vii-x |
| ₅மிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| ₅மிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-37 |
| *2.* **கவன ஈர்ப்பு--** | |
| கோவிலூர் ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ்க் கட்டப்படும் 35 மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகளுக்கு மின் இணைப்பளித்தல் | 38-40 |
| *3.* **மன்னார்குடி தொகுதியில் இடி, மின்னல் தாக்கி ₁₁லியானவர்களுக்கு முதல்வர் நிதி உதவி--** | 40-41 |
| *4.* **தகவல் கோரல்--** | |
| வேலூர், பெரியகண்ணாச்சிப்பாளையத்தில் சத்துணவு சாப்பிட்ட மாணவர்கள் உடல்நலம் பாதிப்பு | 41 |

பக்கங்கள்

5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 5 -முத்திரைத் தாள்கள் - நிருவாகம்
(ஆ) கோரிக்கை எண் 6 - ஆவணப் பதிவு
(இ) கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள்
(ஈ) கோரிக்கை எண் 59 - ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு — 42-147

| | |
|---|---|
| *மாண்புமிகு திரு. இ. பெரியசாமி | 42,47,52,56, 59,70-71,72, 73-77,98-99, 100-101,106, 113-138 |
| திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் | 45-46,50,55, 58,59-65,140, 142,145,147 |
| திரு. ப. பாலசுப்பிரமணியன் | 66-68 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 68-78,116, 126-127,137 |
| திரு. ஏ.எம். ராமசாமி | 78-80 |
| *திரு. கே. தங்கமணி | 80-83 |
| திரு. ப. மோகன் கந்தசாமி | 84-88,133 |
| *திரு. பி.என். வல்லரசு | 89-92 |
| *திரு. ஆர். சிவானந்தம் | 92-97 |
| திரு. பி. வெங்கடசாமி | 51,56,97-101,143,145 |
| *திரு. பா. வேல்துரை | 101-107 |
| திரு. க. மணிவர்மா | 107-112 |

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- 148

221805



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :**
பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :**
தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :**
வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :**
நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன் :** பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :** நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு :** உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :** பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :** சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :** கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :** பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :** வனம், சின்கோனா மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :** வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
*கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.*

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.*

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**
*கால்நடைப் பராமரிப்பு*

22. சமூக நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. கதர்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

26. மீன் வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan :**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N. K. K. Periasamy:**
Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Forest, Cinchona and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

| | | |
|---|---|---|
| 20. | **Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| 21. | **Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. | **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. | **Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. | **Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. | **Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. சி.டி. தண்டபாணி

டாக்டர் காஞ்சனா கமலநாதன்

திரு. பெ. ஆசையன்

டாக்டர் ஆ. ஞானசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. வை. சிவபுண்ணியம்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன்,<br>பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி அனந்தராஜன்,<br>பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. இரா. வெங்கடேசன்,<br>எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 5. | திரு. கி. சாயிநாதன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 7. | திருமதி பவானி சுப்பையா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திரு. சா. கணேசன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. தி. திருமாவளவன்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. வெ. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்புத் தனிச் செயலர் |
| 11. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள்,<br>எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 12. | திரு. க. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 13. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்பு நேர்முக<br>உதவியாளர் |
| 14. | திரு. க. சம்பத்ராஜன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 15. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 16. | திரு. எம். ஜோபாய்,<br>பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இரா. முருகானந்தம்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 18. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 19. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 20. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 21. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 24. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 25. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 30. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 31. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 32. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 35. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| 36. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 37. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ.,பி.எல். | .. தலைமை நிருபர் |
| 38. | திரு. தி. உமாபதி, பி.ஏ., | .. தலைமை நிருபர் |
| 39. | திருமதி பி. சரஸ்வதி | .. சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. இராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. | .. கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |
| 20. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |

21. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு

22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்

23. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)

24. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்

25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்

26. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு

27. இராசன், திரு. வி. பி. .. இராஜபாளையம் (செ.வ.)

28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்

29. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி

30. இராமசாமி, திரு. கே..ஆர். .. திருவாடனை

31. இராமச்சந்திரன், திரு. ஓ..ஆர். .. கம்பம்

32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்

33. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்

34. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

35. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்

36. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு

37. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்

38. இராஜரெட்டி, திரு. ச. .. தளி

39. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்

40. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)

41. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

42. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்



43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

44. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி

45. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்

46. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்

47. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

48. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்

49. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)

50. கன்னையன், திரு. க. .. தொட்டியம்

51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி

52. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை

53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)

54. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி

55. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்

56. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்

57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்

58. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி

60. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்

61. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

62. கோபால், திரு. பா. .. மேட்டூர்

63. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு

64. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

65. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்

66. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
71. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
72. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
73. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
75. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
76. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
84. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
86. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



88. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
89. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
90. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
91. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
92. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
93. சுந்தரம், திரு. பி.ஆர். .. இராசிபுரம்
94. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
95. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
96. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
97. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
100. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
102. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
103. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
104. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
107. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
108. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
109. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

110. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
111. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
112. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
113. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
118. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
125. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
129. திருநாவுக்கரசு, திரு. என். .. அறந்தாங்கி
130. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
131. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
132. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி



134. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
135. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
136. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
137. நடராஜன், திரு. த. .. செஞ்சி
138. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
139. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
140. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
143. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
144. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
145. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
153. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
172. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
173. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
174. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
175. மணி, திரு. டி. .. விளவங்கோடு
176. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்
177. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
178. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



179. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
180. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
181. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
182. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
183. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
184. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
185. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
186. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
187. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
188. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
189. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
190. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
191. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
192. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
193. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
194. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
195. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
196. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
197. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
198. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
199. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
201. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 202. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 203. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 204. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 205. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 206. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 207. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 208. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 210. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 211. வல்லரசு, திரு. பி. என். | .. | உசிலம்பட்டி |
| 212. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 213. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 214. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 216. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 217. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 218. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 219. வெங்கடாசலம், திரு. ஜி. எல். | .. | பாலக்கோடு |
| 220. வெங்கடேசன், திரு. ச. க. | .. | மதுராந்தகம் |
| 221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 222. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 225. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 226. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 227. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 228. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 229. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 232. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |
| 234. வெற்றிடம் | .. | திருவட்டாறு |
| 235. வெற்றிடம் | .. | நத்தம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 15, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2030**

**1999 ஏப்ரல் 28, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்*
*உயிர்க்கிறுதி யாகி விடும்."*

தன்னைப் பற்றி அதிகமாகக் கணக்குப் போட்டுக்கொண்டு எல்லை மீறிப் போகிற ஒருவர், நுனிக்கிளையில் ஏறியவர் அதற்கு மேலும் ஏறிட முயற்சி செய்தால் என்ன ஆவாரோ, அந்தக் கதிக்குத்தான் ஆளாவார்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 521, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**521—**

**பல்கலைக்கழகத்தில் புதிய பிரிவுகள் ஏற்படுத்துதல்**

***7429—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தில் புதியதாக அமையவிருக்கும் பல்கலைக்கழகத்தில் கனிமவளப் பிரிவு மற்றும் மருத்துவ மூலிகைப் பிரிவு ஆகியவற்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1999 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், தருமபுரி மாவட்டங்களில் கனிமவளம் அதிகம். மைக்கா, இரும்புத்தாது, lime-stone என்று அழைக்கப்படுகிற சுண்ணாம்புக் கல் மற்றும் பலவகையான கிரானைட் கற்கள் அதிகமாக உள்ளன. வேலைவாய்ப்புகளை எதிர்நோக்கி கல்லூரிப் படிப்பினை மேற்கொள்ளும் இளம் தலைமுறையினர் - டாக்டர், இன்ஜினியர் போன்ற தொழிற்கல்விகளையும் கணிதம், பௌதீகம், வேதியியல், தாவரவியல், விலங்கியல், கணினி அறிவியல் என்று ஒரே மாதிரியான பாடங்களையும் பெரும்பாலானவர்கள் தேர்ந்தெடுத்துப் படித்துவிட்டு, வேலைவாய்ப்பினை எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கின்றார்கள். இந்தக் காலகட்டத்தில் வாய்ப்புகளை அதிகமாக ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய Bachelor in Mining and Geology, Bachelor in Herbal Science (மணியடிக்கப்பெற்றது) I am coming to the question, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'ஆம்' என்று சொல்லியாகிவிட்டது. அதன் பிறகு இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** ஒரே ஒரு clarification. Bachelor in Mining and Geology, Bachelor in Herbal Science என்பன போன்ற புதிய பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளனவா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து பல்கலைக்கழக ஆட்சிக்குழு தகுந்த பரிந்துரை வழங்க இருக்கிறது. அந்த ஆட்சிக்குழு மூலமாக எத்தகைய பாடம் தேவை என்பதை பல்கலைக்கழகத்திற்குத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த ஆலோசனையை ஏற்கச் செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் பல்கலைக்கழகத்தோடு இணைந்த சேலம் அரசினர்



1999 ஏப்ரல் 28]

பொறியியல் கல்லூரியில் ஏற்கெனவே சுரங்கப் பொறியியல் பட்டப் பிரிவு இருந்தது. அது இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அந்தப் பிரிவு தொடங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது, சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தைக் குறித்தது. துணைக் கேள்வி, பொறியியல் கல்லூரியைக் குறித்தது. அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 522, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**522—**

### துணை மின் நிலையம் அமைத்தல்

***13758—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலைப் பகுதியில் ஜமுனாமாத்தூரில் துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலைப் பகுதியில் மூன்று சட்டமன்றத் தொகுதிகள் அடங்கியிருக்கின்றன. அங்கேயிருக்கின்ற மலைவாழ் மக்களுக்கு வேறு வேலையும் இல்லை. ஆனால், நிலத்தடி நீர் உள்ளது. ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் ஏராளமான கிணறுகள் எடுக்கப்படுகின்றன. மின் இணைப்புக் கிடைக்காத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, அந்த மக்கள் பெரிதும்

[1999 ஏப்ரல் 28

பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுடைய நலன் கருதி,— 'ஆம்' என்று சொன்னதற்கு நன்றி— அந்தத் திட்டத்தை விரைவாக அரசு செயல்படுத்துமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலை குறித்த ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பை ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். அதை இன்று எடுக்க இருக்கிறோம். அப்போது இந்தத் துணைக் கேள்வியைக் கேட்டுக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 523, திரு. லா. சந்தானம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**523—**

## ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்

***14911—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், ரிஷபம், இடும்பாடி ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ரிஷபம், இடும்பாடி கிராமங்கள் டி. வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளன. ரிஷபம் கிராமத்திற்கு 3 கிலோ மீட்டர் தூரத்தில் சோழவந்தான் அரசு மருத்துவமனையும், 9 கிலோ மீட்டர் தூரத்தில் டி. வாடிப்பட்டி அரசு மருத்துவமனையும் செயல்படுவதாலும், இடும்பாடி கிராமத்திற்கு 5 கிலோ மீட்டர் தொலைவில் சோழவந்தான் அரசு மருத்துவமனையும், 9 கிலோ மீட்டர் தொலைவில் டி. வாடிப்பட்டி அரசு மருத்துவமனையும் செயல்படுவதாலும், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இரண்டு மருத்துவ மையங்களுக்கு



1999 ஏப்ரல் 28]

இடையேயான குறைந்தபட்ச தூரம் 8 கிலோ மீட்டர் என்ற வரையறையின்படி இக்கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 9-35

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நமது அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்கின்ற நிலையை ஏற்று இருக்கிறதா? அப்படி அமைப்பதாக இருந்தால் இந்த ஆண்டு எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும்? மேலும், என்னுடைய தொகுதியிலே இந்தப் பகுதியிலே அவை அமையவில்லை என்று சொன்னாலும்கூட, சித்தலாங்குடி என்ற கிராமத்திலே மருத்துவத் துறையின் மூலம் ஆய்வு செய்யப்பெற்று, அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கலாம் என்று சொல்லி, அதற்குரிய 10 ஆயிரம் ரூபாய் பணமும் அந்தக் கிராம மக்களால் கட்டப்பட்டு இருக்கிறது. அதைப்பற்றி அமைச்சர் அவர்களிடத்திலே பலமுறை வலியுறுத்தி இருக்கிறேன். அதை இந்த ஆண்டிலே ஏற்படுத்தித் தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தின்போது, இந்த ஆண்டு 2 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்படும் என்று தெரிவித்தேன். ஒன்று, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்களுடைய தொகுதியிலும், இன்னொன்று மாண்புமிகு மத்திய மக்கள் நல்வாழ்வு இணை அமைச்சர் தலித் எழில்மலை அவர்களுடைய ஊரிலும் தொடங்கப்படும் என்று தெரிவித்தேன். அந்த இரண்டைத் தவிர, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இந்த ஆண்டு இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்து, உலக வங்கி நிதி இந்த அரசுக்குக் கிடைக்குமானால், அப்போது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 524, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 28

524—

## கையகப்படுத்திய இடத்தில் அரசுக் கட்டடங்கள்

***13833—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் புதிய வட்டத்திற்கான அரசு அலுவலகங்கள் மற்றும் நீதிமன்றங்கள் கட்ட எடப்பாடி வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்தி உபரியாக வைத்துள்ள நிலத்திலிருந்து இடம் எடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை எடப்பாடி-பவானி சாலையிலுள்ள வீட்டு வசதித் துறை நிலத்தில் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், எடப்பாடி வீட்டுவசதி வாரியம், கிட்டத்தட்ட 110.55 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தி உள்ளது. அதிலே, இதுவரை 10 ஏக்கருக்குள்தான் சுமார் 80 வீடுகள் மட்டும் கட்டி இருக்கிறார்கள். மீதி, கிட்டத்தட்ட 100 ஏக்கருக்கு மேல் அந்த நிலம் காலியாக உள்ளது; பராமரிப்பற்றுக் கிடக்கிறது. அந்த இடம் எடப்பாடி-பவானி செல்லக்கூடிய நேஷனல் ஹைவேஸ் சாலையிலே இருப்பதால் தாலுகா அலுவலகம் மற்றும் புதிய அரசு அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு மிகச் சிறப்பான இடமாக இருக்கும். குறிப்பாக, நகராட்சிக்குள்ளே 6-வது வார்டு, 7-வது வார்டு, 13-வது வார்டு ஆகியவற்றிற்குள் இந்த 110 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆகையினால், அரசாங்கம் அந்த இடத்திலே தாலுகா அலுவலகம் கட்ட நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1999 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்தில் பொதுமக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டது. மேற்படி கையகப்படுத்தப்பட்ட நிலம், வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்காகவும், மற்ற பிற அரசு அலுவலகங்கள் கட்டுவதற்காகவும் அல்ல. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் அரசு அலுவலகங்கள் கட்டும் கருத்துரு எதுவும் இல்லை. எனினும், உறுப்பினரின் கோரிக்கை, வருவாய்த் துறை, வீட்டுவசதித் துறையுடன் கலந்து, உரிய நேரத்தில் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 525, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

525—

## விதையில்லா திராட்சை உற்பத்தி

***16960—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் விதையில்லா திராட்சை உற்பத்தியை அதிகரிக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எவ்வாறு?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழகத்தில் சுமார் 2326 எக்டேரில திராட்சை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மொத்த உற்பத்தி 44,750 மெட்ரிக் டன்களாகும்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி திராட்சைத் தோட்டங்கள் எங்கெல்லாம் இருக்கின்றன? இப்போது சொல்லப்பட்ட 2326 எக்டேரிலும்

விதையில்லா திராட்சைதான் பயிரிடப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே திராட்சை 12 மாவட்டங்களில் தற்போது சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அது தேனி, கோவை, திண்டுக்கல் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் உற்பத்தியாகக் கூடிய, தாம்சன், சரத், ஸ்நேகா போன்ற விதையில்லா திராட்சை இரகங்கள் தேனி, திண்டுக்கல் மற்றும் கோவை மாவட்டங்களில்தான் பெரும்பாலும் சாகுபடி செய்யப்படுகின்றன.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல இடங்களில் திராட்சைத் தோட்டங்கள் இருந்தாலும்கூட, ஹைதராபாத்திலே இருக்கின்ற திராட்சைத் தோட்டங்கள் மிக இலாபகரமாக நடத்தப்படுவதாகத் தகவல்கள் இருக்கின்றன. அங்கே திராட்சை விளைந்தாலும், விளையாவிட்டாலும்கூட, ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய அளவிற்கு இருப்பதாக ஆதாரப்பூர்வமான தகவல்கள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினை ஏற்படுத்தி, அந்தத் திராட்சைத் தோட்டங்களைப் பார்வையிடச் செய்து, அதுபோன்ற திராட்சையை இங்கே பயிரிடச் செய்ய முடியுமா? மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அந்த மாயாஜால திராட்சை தமிழகத்திலே விளைவதில்லை. ஆந்திரத்திலே விளைவதாகத்தான் கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் விளையக்கூடிய விதையில்லா திராட்சைக்கு வெளிநாடுகளிலே மிகவும் அதிகமான கிராக்கி இருப்பதாகக் கேள்விப்பட்டேன். கடந்த 2 ஆண்டுகளாக,





தோட்டக்கலைத் துறை மூலமாக ஏற்றுமதிக்கான பல முயற்சிகள் செய்யப்பட்டாலும்கூட, அது இன்னும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. ஆகவே, இந்த ஆண்டாவது தகுந்த நேரத்தில் விவசாயிகளைச் சந்தித்து, அந்தத் திராட்சையை ஏற்றுமதி செய்வதற்கு உண்டான முயற்சிகளை இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதையில்லா திராட்சை பயிரின் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்க வெப்ப, மித வெப்ப மற்றும் குளிர் பகுதி பழப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதிலே எக்டேருக்கு 30,250 ரூபாய் மானியம்கூட வழங்கப்பட்டது. ஆனால், ஏற்றுமதிக்கான அந்தப் புள்ளிவிவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் சேகரித்துத் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் விதையில்லா திராட்சை அதிகமாக விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், தொடர்ச்சியாக நட்டம் ஏற்படுவதால் அந்தத் தொழிலைச் செய்பவர்கள் படிப்படியாக அதைக் குறைத்துக் கொள்ளக்கூடிய நிலை ஏற்பட்டு வருவதை அரசு அறியுமா? அப்படி அறியுமானால், அந்த விவசாயிகள் மேலும் இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு, விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசு என்னென்ன உதவிகளைச் செய்கிறது? இருக்கின்ற உதவிகளோடு மேலும் சலுகைகள் அளித்து, அந்தக் குறிப்பிட்ட திராட்சையை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விதையில்லா திராட்சையை உற்பத்தி செய்வதற்கு 1996-97 வரையில் மத்திய அரசாங்கம் எக்டேருக்கு 30,250 ரூபாய் மானியம் வழங்க அனுமதித்தது. பிறகு, 1997-98 மற்றும் 1998-99-இலே இதை நிறுத்திவிட்டது. இதைப்பற்றி, இந்த மானியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டுமென்று மத்திய அரசுக்கு நாமும் இப்போது எழுதியிருக்கிறோம். ஒரு பெரிய நட்டம் ஏற்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அப்படி

ஒரு புகார் வரவில்லை. விதையில்லா திராட்சையில் ஹெக்டேருக்கு மகசூலாக, 15 டன் பழங்களும், 2,25,000 ரூபாய் வருமானமும் வருவதாகவும், கிலோ ஒன்றுக்கு 15 ரூபாய் வீதமும், விதையுள்ள திராட்சை ஹெக்டேருக்கு 20 டன்களும், 2,00,000 ரூபாய் வருமானமும் வருவதாகத்தான் இங்கே புள்ளிவிவரம் இருக்கிறது. அந்த அளவுக்கு வருமானம் நிரந்தரமாக வந்தால்கூட, விவசாயிகளுக்கு ஒரு பெரிய நட்டம் இருப்பதாக நான் கருதவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதையில்லா திராட்சை — சில இடங்களிலே பச்சை திராட்சை மட்டும்தான் வந்துகொண்டிருக்கிறது. புதிதாக இப்போது விதையில்லா கருப்பு திராட்சைகளும் வந்து கொண்டிருக்கின்றன. இந்த விதையில்லா கருப்பு திராட்சைகளை வேலூர் போன்ற மாவட்டங்களிலே அதிகமாகப் பயிரிடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். சில மாவட்டங்களில் மட்டும்தான் வருகிறது. சில மாவட்டங்களில் உற்பத்தியே இல்லாமல் இருக்கிறது. இதைப் பரவலாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராட்சை, குறிப்பிட்ட சீதோஷ்ணம், மண் வளம் ஆகியவற்றைப் பொறுத்து, சில பகுதிகளில், சில மாவட்டங்களில்தான் வருகிறது. எல்லா மாவட்டங்களிலும் உற்பத்தி செய்ய இயலாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனிக் கேள்வி போட்டால், அந்த மாவட்டத்தினுடைய நிலைமையை அறிந்து பதில் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராட்சை பயிரிடும் விவசாயிகளைக் கொண்டு, திராட்சையைப் பயன்படுத்தி உலர் திராட்சையைத் தயாரித்திடும் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியமும், கடனும் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.



முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** கூட்டுறவுச் சங்கம் அமைத்து, திராட்சையை உலரச் செய்து அதை விநியோகம் செய்கின்ற அந்தத் திட்டம் அரசிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் முன்வந்தால் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதையில்லா திராட்சையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். விதையில்லா திராட்சையில் வீரியம் குறைந்து இருக்குமா? நான் கேட்கிற கேள்வி என்னவென்றால், அந்தத் திராட்சையில் சத்து குறைவாக இருக்குமா என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புவதோடு, உலர்ந்த திராட்சைகள் நம்முடைய தமிழகத்திலே குறைவாக இருப்பதாகவும், அதுவும்கூட ஆந்திராவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருவதாகவும் தகவல் இருக்கிறதே, அந்த உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகளை தமிழக அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரியம் குறைந்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அது எனக்குத் தெரியாது. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரைக் கேட்டால், உரிய பதில் கிடைக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொடர்பு இருந்தால்தான் நான் அனுமதியே கொடுப்பேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தொடர்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொடர்பு இருக்கிறதா, இல்லையா என்று முடிவு எடுக்க வேண்டியது நான். வங்கியில் கடன் வாங்குவதற்கும், திராட்சைத் தோட்டத்திற்கும் என்ன சம்பந்தம்? Relevant-ஆக இல்லையென்றால் அது குறிப்பிலே இருக்காது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1999 ஏப்ரல் 28

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தொடர்பு இல்லையென்றால், நீங்கள் நீக்கிவிடுங்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தத் துணை வினாவை நான் அனுமதிக்கவில்லை. திரு. பி. வெங்கடசாமி. (குறுக்கீடு) நான்தான் சொல்லிவிட்டேனே, அது தொடர்பு உள்ளதாக இருந்தால்தான் அனுமதிப்பேன், இல்லையென்றால் அனுமதிக்கமாட்டேன் என்று சொல்லி விட்டேனே. (குறுக்கீடு) நான் தீர்ப்புச் சொல்லியாகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் தீர்ப்புச் சொல்லியாகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள். திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, I would like to bring to the notice of the Hon. Minister for Agriculture that `Sharath' seedless grape and `Thomson' seedless grape varieties are coming out very nicely in Bangalore climate and especially in Dharmapuri district. Cultivation of 1 acre of `Sharath' seedless grapes and `Thomson' seedless grapes costs about Rs. 1 lakh. May I know from the Hon. Minister for Agriculture whether this Government will come forward to give subsidy, so that, these varieties of grapes could be cultivated in large number of areas thereby benefitting the farmers?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலேயே நான் பதில் சொல்லியிருக்கிறேன். பல மாவட்டங்களில் — குறிப்பாக, தருமபுரி மாவட்டத்திலே இந்த தாம்சன், சரத் போன்ற திராட்சைகள் பயிரிடப்படுகின்றன. ஆனால், சப்சிடி இல்லை என்றுதான் நான் பதில் சொல்லியிருக்கிறேன். மத்திய அரசில் 1996-97-ல் கொடுத்தார்கள். இப்பொழுது அதை நிறுத்தி விட்டார்கள். ஆகவே, மீண்டும் கொடுக்க வேண்டுமென்று மாநில அரசின் சார்பிலே மத்திய அரசுக்கு எழுதிக் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த சப்சிடியை வழங்கலாம் என்று அனுமதித்து, நிதி ஒதுக்கீடு செய்தால், மாநில அரசு அதை வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 526, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1999 ஏப்ரல் 28]

526—

**திருமலை நகருக்குக் கூடுதல் பேருந்து இயக்குதல்**

***22360—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் பேரூராட்சி, திருமலை நகருக்குக் கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதியைச் சார்ந்த செம்பாக்கம் பேரூராட்சி, திருமலை நகருக்குக் கூடுதல் பேருந்துகள் இயக்க சாத்தியமில்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்பாக்கம், திருமலை நகர்ப் பகுதியிலிருந்து பிரதான சாலைக்கு வருவதாக இருந்தாலும், ரெயில்வே நிலையத்திற்கு வருவதாக இருந்தாலும், கிட்டத்தட்ட 4 கி.மீ. தூரம் வரவேண்டியுள்ளது. அது வளர்ந்து வருகின்ற புறநகர்ப் பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தால், குறைந்தபட்சம் பள்ளி, கல்லூரி, அலுவலக நேரங்களிலாவது பல்லவபுரம் வரையிலாவது ஒரு பேருந்தை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா எனத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30-1-1997 முதலும், 14-3-1997 முதலும் 2 பேருந்துகள் அந்த வழித்தடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை 16 நடைகளாக அந்த வழித்தடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதற்கே போதிய, பயணிகள் அதிகம் இல்லாத சூழ்நிலையில் அந்த வழித்தடத்தில் பேருந்துகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு வாய்ப்புகள் இல்லை.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 527, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 28

527—

**பேருந்துகளை இயக்குதல்**

***22536—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூரிலிருந்து குருங்குளம் கிராமத்திற்கு ஏற்கெனவே இயக்கப்பட்டு வந்த, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து தடம் எண் 7 மற்றும் 27-ஐ மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறிப்பிட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 528, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

528—

**தரைப் பாலத்தை மேம்பாலமாக அமைத்தல்**

***10554—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதி, வேப்பந்தட்டையையும், கிருஷ்ணாபுரத்தையும் இணைக்கும் தரைப் பாலத்தை மேம்பாலமாக அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் நிதி நெருக்கடி காரணமாக, இப்பணியை அண்மைக் காலங்களில் எடுத்துச் செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை.



1999 ஏப்ரல் 28]

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூரிலிருந்து ஆத்தூர் செல்லும் வழியில் இந்தப் பாலம் low level bridge-ஆக இருக்கிறது. மழைக் காலங்களில் பார்த்தால், பல பேருந்துகள் அதில் உருண்டு விழுந்து, பல பிரயாணிகள் இறந்துள்ளார்கள். இது காலந்தொட்டு நடந்துகொண்டே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆபத்தான விளைவுகளைத் தவிர்க்க, இந்த நிதியாண்டில் இதை எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இந்தச் சாலையில் ஒரு தரைப்பாலம் இப்போது இருக்கின்றது. வெள்ளம் வருகின்ற நேரத்தில் அது மூழ்கிவிடுகிறது என்பது உண்மை. பெரம்பலூர் மாவட்டத்தையும், சேலம் மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய இந்தப் பாலம், உயர்மட்டப் பாலமாக இருக்க வேண்டும். அதற்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. எனவே, வருங்காலங்களில் இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 529, திரு. வெ. கோவிந்தன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

529—

**பத்திரபல்லி அணைக்கு இணைப்புச் சாலை**

***18254—திரு. வெ. கோவிந்தன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோர்தானா அணையிலிருந்து குண்டலம்பல்லி ஊராட்சி வழியாகப் பத்திரபல்லி அணைக்கு இணைப்புச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது தொடங்கப்படும்?

[1999 ஏப்ரல் 28

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 530, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**530—**

**பழங்காலக் கோயில்களைச் செப்பனிடுதல்**

***18849—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், மன்னர்கோவில், பிரம்மதேசம், வாகைக்குளம் போன்ற கிராமங்களில் உள்ள பிரசித்தி பெற்ற பழங்காலக் கோயில்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால், அவற்றைச் செப்பனிட அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பிரம்மதேசம் கிராமத்தில் அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயிலும், மன்னர்கோவில் கிராமத்தில் அருள்மிகு இராஜகோபாலசாமி குலசேகர ஆழ்வார் திருக்கோயிலும் பிரசித்திபெற்ற பழங்காலத் திருக்கோயில்களாகும். இத்திருக்கோயில்களின் திருப்பணிக்கென மதிப்பீடுகள் தயார் செய்து, திருப்பணிக் குழு அமைத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. வாகைக்குளம் கிராமத்தில் திருப்பணி செய்யப்பட வேண்டிய பிரசித்தி பெற்ற பழங்காலத் திருக்கோயில்கள் ஏதும் இல்லை.



1999 ஏப்ரல் 28]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், மன்னர்கோவில், பிரம்மதேசம் போன்ற ஊர்களிலே இருக்கக்கூடிய பிரசித்தி பெற்ற பழங்கோயில்களைப் புதுப்பிப்பதற்காக உத்தேச மதிப்பீடு திட்டப்பட்டு வருவதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் மனமார்ந்த நன்றியைச் சொல்லிக்கொள்கின்றேன். அதேநேரத்தில், இப்படி தமிழ்நாடு முழுவதும் மிகப் பிரசித்திபெற்ற ஆலயங்கள் இருக்கின்றன. எங்கள் பெண்ணாகரம் தொகுதியில்கூட அலேபுரத்தில் ஒரு சிவன் கோயிலும், சோழப்பாடியில் வீரபத்திரசாமி திருக்கோயிலும் மிகச் சிறந்த ஆலயங்களாகும். அங்கே ஆண்டுதோறும் திருத்தேர் இயங்கி வந்த நிலையிலே இப்போது தேர் பழுதடைந்து, கோயில்கள் பழுதடைந்து, இயங்காமல் இருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையும் இயக்குவதற்கு, அந்தக் கோயில்களைப் புதுப்பிப்பதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புவதோடு, இப்படி தமிழ்நாடு முழுவதும் புதுப்பிக்கப்படாத ஆலயங்கள் எத்தனை இருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கேட்ட கேள்விக்குத் தனிக் கேள்விதான் போடவேண்டும். என்றாலும், ஏற்கெனவே அவர் கேட்ட அந்த மூலக் கேள்வியில், ஒவ்வொரு கோயிலுக்கும் இருக்கின்ற வருமானம் மிகக் குறைவாக இருக்கிறது என்பதை தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற கோயில்களைப்பற்றி நன்கு அறிந்தவர்கள் விவரத்தோடு தெரிந்து வைத்திருப்பார்கள். இவர் கேட்ட பிரம்மதேசம் கோயிலுக்குக்கூட 4.70 ஏக்கர் நன்செய் நிலமும், 0.36 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. ஆனால், வருவாய் ஓர் ஆண்டுக்கு 1,00,087 ரூபாய்தான். ஆனாலும்கூட சுவாமி மண்டபம், அம்பாள் மண்டபம், முன்மண்டபம் போன்றவற்றைக் கட்டுவதற்காகவும், எழுநிலை கோபுரம் கட்டுவதற்காகவும் 6,10,270 ரூபாயில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதேபோல மன்னர்கோவிலில் இருக்கின்ற அந்தக் கோயிலுக்கு 2 ஏக்கர் 93 சென்ட் நிலம் இருக்கிறது. ஆனாலும் வருவாய் வெறும் 8,759 ரூபாய்தான். எனவே, இதைக்கொண்டு பெரிய அளவிலே சீர்திருத்தம் செய்ய முடியாது. எனினும், திருக்கோயில் பணி, அறப்பணிக் குழுவினுடைய ஆலய வைப்பு நிதி இவற்றையெல்லாம் கொண்டுதான் ஓரளவுக்கு முன்மொழியப்பட்ட கோயில்களை எடுத்துச் சீர்செய்கிறோம். இந்தக் கோயிலுக்கும் 10 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு தயார் செய்யப்படுகிறது. எனவே, பழுதுபட்டிருக்கின்ற தேர்கள்,

[1999 ஏப்ரல் 28

பழுதுபட்டிருக்கின்ற கோயில்களை எல்லாம் விரைந்து சீர்செய்ய வேண்டும் என்ற அக்கறை இந்த அரசுக்கு இருந்தாலும், அங்கே இருக்கின்ற அடிப்படை வசதிகளைக் கொண்டும் ஆலயத் திருப்பணியை நிதானமாகத்தான் செயல்படுத்த முடியும், வேறு வழியில்லை என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உணர்வார்.

முற்பகல் 9.55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 531, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**531—**

**தொழிற்சாலைகளை மீண்டும் திறத்தல்**

***22508—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகள் எவை?

(ஆ) அவற்றைத் திறக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் நீண்ட காலமாக இயங்காமலுள்ள நிறுவனங்கள் 43; சமீப காலத்தில் இயங்காமலுள்ள நிறுவனங்கள் 19 ஆகும்.

(ஆ) மேற்கூறிய நிறுவனங்கள் அனைத்துமே நிதி நெருக்கடி காரணமாக மட்டுமே மூடப்பட்டு இயங்காமலுள்ளன. இவற்றில் தொழிலாளர் பிரச்சினை காரணமாக ஏதும் இயங்காமலில்லை. நிதி நெருக்கடி காரணமாக மூடப்பட்டுள்ள நிறுவனங்களைத் திறக்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை. இருப்பினும், மேற்கூறிய நிறுவனங்களைத் திறந்து நடத்த வேறு ஏதேனும் வாய்ப்புகள் உள்ளனவா என்பதை ஆராய, அரசு, சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர், தொழிற்சங்கத் தரப்பினர் மற்றும் அரசு அதிகாரிகளுடன் மண்டல வாரியாகக் கூட்டங்கள் நடத்தி விவாதித்தது. இக்கூட்டங்களில்



1999 ஏப்ரல் 28]

எடுக்கப்பட்ட முடிவுகளின்படி மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த, தொழிற்சங்கங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அதிகாரிகள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடவடிக்கைகள் தொடரப்பட்டன. ஆயினும், பேச்சுவார்த்தைகளில் சுமுக முடிவு ஏற்படவில்லை.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுதம் செய்வோம்; நல்ல காகிதம் செய்வோம்; ஆலைகள் திறப்போம்; பலருக்கு வேலைகள் கொடுப்போம் என்ற கொள்கைக்கு ஏற்ப, முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையின்கீழ் இயங்கும் தமிழக அரசு, பல தொழிற்சாலைகளைத் திறந்தும், இன்னும் பல தொழிற்சாலைகளைத் திறக்கத் திட்டமிட்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் தமிழகத்தில் மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகள் எவை, என்ற விவரங்களை விளக்கிக் கூறிய அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, வாடிய வயிறோடு இருக்கும் இந்தத் தொழிலாளர்களின் வயிறு நிறைய, மூடிய தொழிற்சாலைகளைத் திறக்க எப்போது அரசு முழு முயற்சியோடு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல மில்கள் சம்பந்தப்பட்டவை, மத்திய அரசினுடைய பஞ்சாலைக் கொள்கை, ஏற்றுமதி, இறக்குமதி, நூல் விலை, அதுபோலவே கடன், அதற்கான வட்டி போன்ற அடிப்படைகள், மத்திய அரசைப் பொறுத்தமட்டிலே இருக்கின்றன. ரிசர்வ் வங்கிக்கும் இதிலே பங்குண்டு. அதைப்போலவே மாநில அரசுக்கும் பங்குண்டு. நம்முடைய முதல்வர் அவர்கள், பஞ்சாலை நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள், தொழிலாளர்கள் அனைவரையும் அழைத்து, என்னையும், கைத்தறித் துறை அமைச்சர் அவர்களையும் அழைத்து, பலமுறை பேச்சுவார்த்தை நடத்தி, பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். அதைப்போலவே, துறையின் சார்பாகவும், நானே நேரடியாக பல்வேறு மண்டலங்களுக்குச் சென்றும் அதுகுறித்து அறிந்து வருகிறேன். ஆனால், இந்தச் சபையிலே பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. சில மில்கள் நிதிநெருக்கடியின் காரணமாக; சில மில்கள் Court, Liquidation, BIFR, AAIFR போன்ற அமைப்புகளிலுள்ள நிலைமை; சில ஆலைகளைப் பொறுத்தமட்டிலே, சிப்காட் போன்றவைகள் கொடுத்த கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாததனாலே, அவர்களே சீல் வைத்த நிலைமை; இவை நீண்டநெடுங்காலமாக கடந்தகால ஆட்சியிலே இருந்து இப்படிப்பட்ட

[1999 ஏப்ரல் 28

நிலைமையிலே இருக்கின்றன. அது ஒரு நிலை. தற்காலிகமாக 19 நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதிலே ஏறத்தாழ ஆறு நிறுவனங்களை நாங்கள் இப்போது திறந்திருக்கிறோம். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், பவானி மில்ஸ், கொங்குநாடு டெக்ஸ்டைல்ஸ், உடுமலைப்பேட்டை, கொங்குராார் காட்டன் சிந்தட்டிக் மில்ஸ் போன்ற மில்களையெல்லாம் திறந்திருக்கிறோம். மீதியுள்ளவற்றில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தக் கேள்வி எழுப்பப்பட்டதற்கு முன்னதாகவே இவையெல்லாம் நடைபெற்றிருக்கின்றன. எனவே, நீண்டகாலமாக இருக்கின்ற ஆலைகளைத் திறப்பது குறித்து மிகுந்த சிரமமான சூழ்நிலை இருக்கிறது, நான் சொல்லிய காரணங்களினாலே. இருந்தாலும், தொடர்ந்து நாங்கள் ஆய்வு செய்து வருகிறோம். இப்போது அரசு மில்லை மீண்டும் இயக்க, டெல்லியிலே, மத்திய அரசினுடைய பங்கிற்காக சில கோரிக்கைகளை வைப்பதற்காக ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி, upgradation-க்காக ஒதுக்கப்பட்ட தொகைகளையும் இந்த நலிந்த ஆலைகளுக்குக் கொடுக்கும்படி, பாரதீய ஜனதா ஆட்சி, வாஜ்பாய் அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டு, பதில் கடிதமும் எழுதியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 532, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**532—**

### நினைவாலயம் எழுப்புதல்

***12940—திரு. கே. சுப்பராயன்:**

*மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பட்டுக்கோட்டையில், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நினைவாலயம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*



1999 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்:

(அ) ஆம்.

(ஆ) பட்டுக்கோட்டையில், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு, ரூ. 20.50 இலட்சம் மதிப்பீட்டில் நினைவு மண்டபம் கட்ட அரசாணைகள் வெளியிடப்பட்டு, அப்பணி பொதுப்பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் அப்பணி நிறைவுபெறும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நினைவாலயம் அமைக்கப்படும்; அதற்குரிய பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டதற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பணிகள் முடியப் போகின்றன.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடங்கியதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதேநேரத்தில், நினைவாலயம் என்பது, வாழ்ந்த காலத்திலே அவர்கள் வலியுறுத்திய கருத்துக்களை, வர இருக்கின்ற தலைமுறை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்குத்தான் நினைவு மண்டபங்கள் அல்லது நினைவாலயங்கள் கட்டப்படுகின்றன. எனவே, இத்தகைய நினைவாலயத்தை, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் வாழ்ந்த காலத்தில் வலியுறுத்திய செந்நெறிகளைப் பொதுமக்கள் பயின்று கொள்கின்ற முறையில், ஒரு library-யாக மாற்றியமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

(முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய ஆலோசனையின்பேரில் மணிமண்டபம் அமைக்கப்பட்டு அவருடைய வாழ்க்கை வரலாறு போன்ற சிறப்பான நிகழ்ச்சிகளை எல்லாம் தொகுத்துப் படங்களாக வைத்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தைக் கவனத்தில் கொண்டு அரசு செயலாற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காயிதே மில்லத் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுவதாக நமது அரசு அறிவித்திருக்கிறது. காயிதே மில்லத் அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்ட நமது தமிழக முதல்வர் அவர்கள் அதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்து மணிமண்டபம் அமைத்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில், மறைந்த அருமை நண்பர் அப்துஸ் சமது அவர்கள், இந்திய யூனியன் முஸ்லீம் லீகினுடைய தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு கோரிக்கையை கடந்த கால ஆட்சிக்கு வைத்து, அவர்கள் அதை நிறைவேற்றுவதாகச் சொல்லி, ஆனால், அதற்கான இடத்தைக்கூட அப்துஸ் சமது அவர்களிடத்திலே சுட்டிக்காட்டி, எந்தவிதமான கோப்பும் நகரவே இல்லை, அதற்கான குறிப்பும் கிடையாது. இதை சமது அவர்கள் மறைவதற்கு முன்பு என்னிடத்திலே வந்து சொல்லி, அதைக் கவனிக்கும்படிக் கேட்டார்கள். நான் உடனடியாக அதிகாரிகளுக்கு எடுத்துச்சொல்லி, அந்தக் கோப்பைப் பற்றி விசாரித்தால், எந்தக் குறிப்பும் இல்லை. அப்படி உறுதியளிக்கப்பட்டதாக இருந்ததே தவிர, எந்தக் குறிப்பும் இல்லை. ஆனாலும், சமது அவர்கள் மறைவதற்கு 5, 6 நாட்கள் முன்பு அவர்கள் இதைப் பற்றி என்னிடத்திலே வலியுறுத்திய நேரத்தில், அது குறித்து விசாரித்து, அந்த இடம் இராஜரத்தினம் ஸ்டேடியத்திற்குப் பக்கத்தில் இருக்கின்ற காரணத்தால் இடைஞ்சலாக இருக்கிறது என்பதால், வேறு ஓர் இடம் அதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும், தேர்ந்தெடுக்கலாம் என்று அரசு அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். வேறு ஓர் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த நினைவாலயம் அமைக்கப்படும். ஏனென்றால், காயிதே மில்லத் அவர்களுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயே, கடற்கரையிலே சிலை வைக்க வேண்டும் என்று எண்ணம் எழுந்தபோது, இஸ்லாமிய சமுதாயத்திலே, சிலைகள் வைப்பதை அவர்கள் ஏற்கமாட்டார்கள் என்ற காரணத்தால் அது கைவிடப்பட்டது. அதனால்தான், காயிதே மில்லத் கல்லூரி என்று— அண்ணா சாலையிலே உள்ள பெண்கள் கல்லூரிக்கு காயிதே மில்லத் மகளிர் கல்லூரி என்று— நான் பெயர் வைத்தேன். அதைப்போலவே, 5, 6



1999 ஏப்ரல் 28]

இடங்களில் காயிதே மில்லத் பெயரால் கல்லூரிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல, அந்த நினைவகமும் விரைவிலே அமைக்கப்பட இந்த அரசு ஏற்பாடு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்.

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உச்சிமலையிலே ஊறும் அருவிகள் ஒரே வழியிலே கலக்குது, ஒற்றுமையில்லா மனிதகுலம்தான் உயர்வும், தாழ்வும் வளர்க்குது' என்று பாடியவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள். இப்போது நாடெங்கும் சமத்துவபுரங்களை உருவாக்குவதன் மூலமாக, மனிதகுலத்தை ஒன்றுபடுத்துகிற முயற்சியிலே பாடுபட்டு வருகிற, மாந்தர் நேயத்தின் மறுவடிவம் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைப்பற்றி தமிழகத்தினுடைய புகழ்வாய்ந்த கவிஞர் வைரமுத்துவைப் பார்த்து ஒரு வாசகர் கேட்கிறபோது, 'டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே ஏன் அரசவைக் கவிஞர் நியமிக்கப்படவில்லை' என்ற ஒரு கேள்விக்கு வைரமுத்து சொன்ன பதில்:— 'தலைவர் கலைஞர் அவர்களுடைய அமைச்சரவையில் அரசவைக் கவிஞர் தேவையில்லை, காரணம், இங்கு அரசரே ஒரு மாபெரும் கவிஞராக விளங்குகின்ற காரணத்தால் அரசவைக் கவிஞர் தேவையில்லை' என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிக் கவிஞர்களே ஒத்துக்கொள்கிற, கவிஞர்களுக்கெல்லாம் கவிஞராக விளங்குகிற ஒப்பற்ற முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்திற்கு நினைவாலயம் அமைக்கின்ற பட்டுக்கோட்டையிலேயே, தஞ்சை மாவட்டத்திலேயே மிகப் பெரிய நூலகம் என்று சொல்லத்தக்க வகையிலே, அங்கேயே பயன்படத்தக்க வகையிலே ஆக்கப்பூர்வமான ஒரு நூலகத்தை அமைத்துத்தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு முதல்வரோடு கலந்துபேசி, என்னுடைய மானியத்திலே அறிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்கத்திலே, கல்கத்தாவிலே மிகப் புகழ்பெற்ற

இயக்குநராக இருந்த சத்யஜித்ரே நினைவாலயத்தைச் சென்று பார்க்கின்ற வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. சத்யஜித்ரேயினுடைய திரைப்படங்கள் அத்தனையும் சுருள்களாக, cassettes — ஒளி, ஒலிப் பேழைகளாக ஆக்கப்பட்டு, யார் போனாலும் அங்கே போட்டுப் பார்த்து மகிழத்தக்க வகையிலே, அங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தைப் பொறுத்தவரையில், மிகப்பெரிய சீர்திருத்தக் கருத்துக்களை எளிமையாகப் பாடிய முன்னோடிகளில் ஒருவர். அவருடைய கருத்துக்களைக் கொண்ட திரைப்படப் பாடல்களை ஒளி, ஒலிப் பேழைகளாக அந்த நினைவாலயத்திலே வைத்துப் பாதுகாக்க அல்லது அங்கு செல்கிறவர்கள் பார்க்கும்வண்ணம் அரசு ஏற்பாடு செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பார்க்கவா? கேட்கவா?

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** பார்க்கவும், கேட்கவும்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கலைஞர் அவர்களுடைய அரசில், தியாகிகளையும், மொழிப் போர்த் தியாகிகளையும் போற்றுகிற வகையில், பல்வேறு நினைவுச் சின்னங்களை எழுப்பி வருகிறோம். அதன் அடிப்படையில், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு இப்போது நினைவு மண்டபம் அமைக்கப்படுகிறது. அந்த நினைவு மண்டபத்திலே அவருடைய வாழ்க்கை வரலாறு பற்றிய அத்தனை படங்களும் இடம்பெற இத்துறை நடவடிக்கை எடுக்கும். அதே நேரத்தில் அவருடைய பாடல்களை, சிறப்பான பாடல்களை ஒலிபரப்புவதற்கான நடவடிக்கையையும் இத்துறை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுக்கு உழைத்த நல்லவர்களைப் போற்றி மரியாதை செலுத்துவதற்கு முன்னுதாரணமாக இந்த அரசு செயல்பட்டு வருகிறது சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்போது, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்ப வேண்டுமென்று கேட்டபோது, அவரோடு சேர்ந்து உடுமலை நாராயண கவிக்கும் மணிமண்டபம் எழுப்பப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு தியாகி





சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு மணிமண்டபம்—அதற்கான இடம் எல்லாம் இருக்கிறது; ஆகவே, அதை— அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள், முதலமைச்சரோடு கலந்து, ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னோர்களை நினைவுபடுத்துவதிலே இந்த அரசு சிறந்து விளங்குகிறது என்று திரு. பெரியசாமி அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். செய்வதைப் போற்றுகின்றவர்களும் இருக்கிறார்கள் நாட்டில் என்பதற்கு உதாரணமாக திரு. பெரியசாமி விளங்குகிறார். பெயரிலேயே பெரியசாமியாக இருப்பதால், அப்படி விளங்குகிறார் என்று நான் கருதுகிறேன். உடுமலை நாராயண கவிராயர் அவர்கள், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்திற்கே வழிகாட்டியாக விளங்கியவர்கள். கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் பாடிய சீர்திருத்தப் பாடல்கள் அத்தனையும், உடுமலை நாராயண கவி அவர்கள் இயற்றியதாகும். 'பெண்ணைத் தொட்டுப் பார்த்தால், சுட்டுப்புடுவான் இந்தக் காலம்' என்கின்ற புரட்சிகரமான பாடல்களையெல்லாம் எழுதியவர், உடுமலை நாராயண கவி அவர்கள். அவருக்கான நினைவு மண்டபமும், உடுமலையிலே இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே அறிவித்தவாறு உருவாகிக் கொண்டிருக்கிறது. அவர்கள், சுப்பிரமணிய சிவாவைப் பற்றிக் கேட்டார்கள். திண்டுக்கல்லிலே, மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்கு சுப்பிரமணிய சிவா அவர்களுடைய பெயர்தான் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நான்தான் அந்தப் பெயரைச் சூட்டினேன் என்பதையும் நினைவுபடுத்துகின்றேன். அதுமட்டுமல்ல; இன்னொன்று. முன்னோர்களுடைய பெயர், மறைந்தவர்களுக்குச் செலுத்த வேண்டிய மரியாதை என்கின்ற பெயரால், கடந்த கால அரசில் செய்யப்பட்ட ஒரு விபரீதத்தையும் விளக்க விரும்புகிறேன். மறைந்த கந்தப்பன் அவர்களுடைய பெயரால், அரூரிலே, சர்க்கரை ஆலைக்குப் பெயர் சூட்டினோம், 'கந்தப்பன் சர்க்கரை ஆலை' என்று. ஆனால், கடந்த கால ஆட்சியில், ஜெயலலிதா ஆட்சியில், அந்தப் பெயரை எடுத்துவிட்டு, சுப்பிரமணிய சிவா என்று பெயர் வைத்திருக்கிறார்கள். பரவாயில்லை; நல்ல பெயர்தான் வைத்தார்கள் என்று அதற்காக நாங்கள் அதைப் பொறுத்துக் கொண்டோம். இவை எல்லாம் தமிழகத்திலே கடைப்பிடிக்கப்படுகின்ற நாகரிகங்களின் எடுத்துக்காட்டுகள்.

[1999 ஏப்ரல் 28

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 533, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

533—

**தீபத் திருவிழாவின்போது அரசுப் பொருட்காட்சி**

***22811—திரு. க. மணிவர்மா:***

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை தீபத் திருவிழாவின்போது, அரசுப் பொருட்காட்சி நடத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுகுறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை தீபத் திருவிழா, பத்துநாட்கள் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இலட்சக்கணக்கான மக்கள் தமிழகத்திலிருந்தும் மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் வருகிறார்கள். அரசு மூலம் பொருட்காட்சியை அங்கு நடத்தினால், மக்கள் பொது அறிவு பெறுவதற்கும், அரசின் நலத் திட்டங்களை விளக்குவதற்கும் வாய்ப்பாக இருக்கிற காரணத்தினால், அரசு அங்கு பொருட்காட்சி நடத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் அரசுப் பொருட்காட்சிதான் நடத்தப்பட வில்லையே தவிர, டிசம்பர் மாதத்தில் நடைபெறும் திருவண்ணாமலை தீபத் திருவிழாவையொட்டி, பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் கண்டுகளிக்கக்கூடிய வகையில், அரசு நலத் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கும் கண்காட்சி நடைபெற்று வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில்,



1999 ஏப்ரல் 28]

செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலரைச் செயலாளராகக் கொண்டு, தீபத் திருவிழாவின்போது மாவட்ட நிர்வாகத்தால், அரசு கண்காட்சி நடத்தப்படுகிறது. இக்கண்காட்சி, பொதுமக்கள் நலன் கருதி, பல்வேறு அரசுத் துறைகள் அரங்குகள் பங்கேற்கும் பல்துறை விளக்க விழாக் கண்காட்சியாக நடத்தப்பட்டு வருகிறது. இக்கண்காட்சியை, செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பாக நடத்தி வருகிறார்கள். எனவே, தனியாகப் பொருட்காட்சி நடத்தத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியத்திலேகூட, நான் திண்டிவனத்திலே, ஓமந்தூர் கிராமத்திலே, பிறந்த 'ஓ.பி.ஆர்.' என்று அழைக்கப்படும் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டப்படுமா என்று கேட்டிருக்கிறேன். அது முதலமைச்சர் அவர்களால் பரிசீலிக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது மூலக் கேள்வியின் தொடர்பாகக் கேட்கக்கூடிய கேள்வியா? திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை தீபத்தின்போது, இலட்சக்கணக்கான மக்கள் கூடுகிறார்கள். ஆங்காங்கே கூடுகிற மக்களுக்கு, திருவண்ணாமலை ஆலயத்திலே நடைபெறுகிற நிகழ்ச்சிகளை, தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, எல்லா தொலைக்காட்சிகளும் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றன. படங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 534, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

[1999 ஏப்ரல் 28

534—

## கால்நடை மருத்துவமனை தொடங்குதல்

***13503—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியம், வரிக்கல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது குறித்து செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதியாண்டில் தமிழகத்தில் 10 கால்நடை மருந்தகங்கள் தொடங்கப்படும் என்கின்ற இனிப்பான செய்தியை அறிவித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியை உள்ளடக்கிய வரிக்கல் கிராமத்திற்கு, அந்த 10-ல் ஒன்றினை இந்த நிதியாண்டில் எங்களுக்கு வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஊராட்சி ஒன்றியம், செஞ்சியில் ஒரு கால்நடை மருத்துவமனையும், ஆனந்தபுரம் என்ற இடத்தில் கால்நடை மருந்தகம் ஒன்றும் தற்போது செயல்பட்டு வருகின்றன. அப்பம்பட்டு, ஒட்டம்பட்டு, நல்லான்பிள்ளை, சத்தியமங்கலம் மற்றும் கணக்கன்குப்பத்திலும் கால்நடைக் கிளை நிலையங்களும், அதைப்போல, இவற்றிற்கு முறையே, கவரை, பாலப்பட்டு, புத்தகரம், செம்பட்டு மற்றும் தேவனாம்பட்டு ஆகிய இடங்களில் பார்வைக்கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போல— எங்கெங்கு கால்நடைகள் அதிகமாகச் சிகிச்சைக்கு வருகின்றன என்பது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பரிசீலிப்பின்போது— அவருடைய



1999 ஏப்ரல் 28]

கோரிக்கையையும் இணைத்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 535, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

535—

## கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் மற்றும் கருவிகள்

***19136—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மல்லாங்கிணறிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டவும், கால்நடை மருத்துவமனைக்கு வேண்டிய கருவிகள் வழங்கிடவும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மல்லாங்கிணறு கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கு வருவாய்த் துறையின் ஒப்புதல் பெற வேண்டியுள்ளது. இம்மருந்தகத்திற்குத் தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்கள் ரூ. 35,000 செலவில் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக்கூடிய இந்த நிலையிலே, மல்லாங்கிணறில் இருக்கக்கூடிய மருந்தகத்திற்குத் தேவையான ரெஃப்ரிஜிரேட்டர்கள், ஃபர்னிச்சர்கள் மற்றும் அதுபோல முக்கியமான கருவிகளை வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் உரிய நிதி ஒதுக்கீடு செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லாங்கிணறு கால்நடை மருந்தகம் காரியாபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் மூன்றாவது மருந்தகமாக இருக்கிறது. அந்த மூன்றாவது கால்நடை மருந்தகம் கட்டப்பட வேண்டுமென்று

சொன்னால், அந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 75 விழுக்காடு நிதியும் அரசு நிதியிலிருந்து 25 விழுக்காடும் ஒதுக்கீடு செய்யப்பட்டுத்தான் கட்டடம் கட்டப்பட வேண்டும். அதைப்போல, அதற்கு வேண்டிய உபகரணங்கள், நாற்காலி, மேஜைகள் போன்றவையெல்லாம் பக்கத்திலே இருக்கும் நிலையங்களிலிருந்து அவசரத் தேவைகளுக்கு ஏற்றவாறு எடுத்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டி தொகுதியில் கட்டதேவன்பட்டியில் கால்நடை மருத்துவ மனை தொடங்கப்பட்டு உள்ளது. அது சொந்தக் கட்டடம் இல்லாத சூழ்நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, அரசு சொந்தக் கட்டடத்தை கட்டித் தர முன்வருமா; அதுபோல கருவிகளை வாங்கிக் கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஒப்பற்ற முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அந்தத் தொகையிலிருந்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 536, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**536—**

**தலைமை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு**

***9603—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-



(அ) ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகளில் பணியாற்றும் தலைமை ஆசிரியர்களுக்குக் கல்வித் துறையில் உள்ளதுபோல் பதவி உயர்வு அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற தலைமை ஆசிரியர்களுக்கு கல்வித் துறையிலே பணியாற்றுகின்றவர்களுக்குப் பிற இடத்திலே அவர்களுக்குப் பதவி உயர்வு, அதாவது வட்டாரக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர் போன்ற பதவிகள் வழங்கப்படுகின்றன. எனவே, சம கல்வித் தகுதிக்கு சம வேலைவாய்ப்பு என்ற அடிப்படையிலே ஆதிதிராவிடர் நலத் துறைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற தலைமை ஆசிரியர்களுக்கும் பதவி உயர்வுகள் வழங்கிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையைப் பொறுத்தவரையில் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற தலைமை ஆசிரியர்களுக்கு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியும், மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற தலைமை ஆசிரியர்களுக்கு உதவி இயக்குநர் பதவியும், உதவி இயக்குநராகப் பணியாற்றுகின்ற முதுநிலையில் உள்ளவர்களுக்கு மண்டல இயக்குநர் பதவியும் வழங்கப்பட்டுவருகிறது. தற்போது ஆதிதிராவிடர் நலத் துறையில் 4 மண்டல இயக்குநர் பதவிகளுக்கு ஆணையர் அவர்களிடமிருந்து முன்மொழிவு வரப்பட்டிருக்கிறது. தற்காலிகமாக, நிதி நெருக்கடியின் காரணமாக அது நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. எதிர்வரும் ஆண்டில் நிதி நெருக்கடி தீருமானால் ஆவன செய்வதற்கு வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 ஏப்ரல் 28

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 537, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**537—**

**கொத்தடிமைகளுக்கு நிவாரண உதவி**

***12584—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

*மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு மீட்கப்பட்ட கொத்தடிமைகளின் எண்ணிக்கை எவ்வளவு?*

*(ஆ) அவர்களுக்கு அரசு அளித்த நிவாரண உதவி என்ன?*

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையைத் தங்கள் அனுமதியோடு அவையில் வைக்கின்றேன்.

சேலம் மாவட்டத்தில், கடந்த 1996-97-ல் 43 கொத்தடிமைகளும், 1997-98-ல் 121 கொத்தடிமைகளும், 1998-99-ல் 43 கொத்தடிமைகளும், மொத்தம் 3 ஆண்டுகளில் 207 கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு நிவாரணத் தொகையாக ரூபாய் 12 இலட்சத்து 78 ஆயிரத்து 750 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மக்கள் தங்களது வறுமையின் காரணமாக, ஆந்திரா, கர்நாடகம் போன்ற அண்டை மாநிலங்களுக்கு கல் உடைக்கும் தொழிலில் ஈடுபடுவதற்காக கொத்தடிமைகளாக செல்கின்றார்கள். சேலம் மாவட்டம் கற்கள் நிறைந்த பகுதி. ஆகவே, அந்தத் துறையின் சார்பாக அங்கே கல் உடைக்கும் தொழிலில் அவர்களை ஈடுபடுத்தி, அந்த மக்களைப் பயன்பெறச் செய்வதோடு, அந்தத் தொழிலில் கிடைக்கும் கற்களை நெடுஞ்சாலைத் துறை, பொதுப்பணித் துறை போன்ற துறைகளில் பயன்படுத்திக்கொள்ள அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



1999 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் ஒவ்வொருவருக்கும் 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. உடனடியாக 1,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அந்தக் கொத்தடிமைத் தொழிலாளர்கள் எந்தத் தொழிலைச் செய்ய விரும்புகிறார்களோ, அந்தத் தொழில் செய்ய மீதி 9,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், அவர்களுக்கு வீட்டுமனை வழங்கப்படுகிறது. குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. ஓமலூர் சட்டமன்றத் தொகுதியில்கூட தொகுப்பு வீடுகள் 10 பேருக்குக் கட்டப்பட்டு வருகின்றன. இப்படி அடிப்படை வசதிகளை கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு இந்த அரசு தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. கொத்தடிமைகளுக்குச் சிறப்பாகப் பணியாற்றுகிறது என்ற பாராட்டையும் உச்ச நீதிமன்றத்திலே தமிழக அரசு பெற்றிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 538, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**538—**

**பாலமதி மலைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்குதல்**

***10155—திரு. சி. ஞானசேகரன்:**

*மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேலூர் தொகுதியில் உள்ள பாலமதி என்ற மலைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக மாற்ற அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் தொகுதியில் உள்ள பாலமதி என்ற மலைப் பகுதியை சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் மாவட்டம், சினிமாவை விட்டால் வேறு பொழுதுபோக்கு அம்சமே இல்லாத ஒரு பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. பாலமதி என்கிற மலை வேலூருக்குப் பக்கத்திலே

[1999 ஏப்ரல் 28

இருக்கக்கூடிய ஒரு மலை. மிகவும் இயற்கை எழில் கொஞ்சுகின்ற ஒரு மலை. அங்கே புகழ் மிக்க ஆஞ்சநேயர் கோயில் ஒன்றிருக்கிறது. சென்ற ஆண்டுகூட 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுலா மையம் ஆக்குவதற்கு ஏற்கெனவே முன்மொழிவுகள் எல்லாம் அனுப்பப்பட்டன. ஆனால், என்னுடைய மாவட்டத்தில், மாவட்ட சுற்றுலா அலுவலர் என்பவர் மகாபலிபுரத்திலேயே இருந்துகொண்டு, அவர் இங்கு வருவதே கிடையாது. அதனாலே, அந்த இடத்திலே எந்தவிதமான முன்னேற்றமும் செய்ய முடியாமல் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருமுறை எங்களுடைய பாலமதி மலைக்கு வந்து பார்த்துவிட்டு—அதனால் நிச்சயமாக நீங்கள் ஈர்க்கப்பட்டு - அதை உடனடியாக சுற்றுலா மையமாக மாற்றுவதற்கும், பக்கத்திலே இருக்கக்கூடிய ஓட்டேரியிலே படகு விடுவதற்கும் ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், சுற்றுலாத் துறையின் சார்பாகக் கடந்த ஆண்டு, வேலூர் கோட்டையை ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக எடுத்துக் கொண்டு 26 இலட்சம் ரூபாய்க்கான பணிகள் அனுமதிக்கப்பட்டு 9 இலட்சம் ரூபாய்க்கான பணிகள் முடிவடைந்து, இன்றைக்கு அந்த வசதிகளை சுற்றுலாப் பயணிகள் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பாலமதி மலைப் பகுதியைச் சுற்றுலா மையம் ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை, நிதி நிலையைப் பொறுத்தே வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கோட்டைக்கு 26 இலட்சம் சென்ற ஆண்டு கொடுத்து, அதிலே கலர், கலரான ஒளி விளக்குகளை மட்டும் நாம் அமைத்திருக்கிறோம் — அந்த இடத்திலே படகு விடுவதற்குக்கூட அகழியிலே ஒரு பக்கம்தான் நீர் இருக்கிறது. இன்னொரு பக்கம் நீரே இல்லாமல் இருக்கிறது— நான்கு பக்கங்களிலேயும் நீரை நிரப்பி, அந்த இடத்திலே படகு விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கோட்டையைப் பொறுத்தமட்டிலும்



1999 ஏப்ரல் 28]

மத்திய அரசால் 26 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு, 9 இலட்சம் ரூபாய்க்கான முதல் தவணை விடுவிக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த இரண்டாவது கட்டத் தவணையை, மத்திய அரசு ஒதுக்கிய பிறகு, அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 539, திரு. செங்கை சிவம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்

**539—**

**சுற்றுலா விடுதி அமைத்தல்**

***14746—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக சுற்றுலா விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை, பிராட்வேயில் உள்ள பழைய மாணவர்கள் விடுதியைப் புதுப்பித்து, அங்கு தங்கும் வசதியுடன் கூடிய உணவு விடுதி அமைத்திட, மாநில அரசின் நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு, மத்திய அரசு நிதியுதவியுடன் இத்திட்டத்தினைச் செயல்படுத்த 1997-98 ஆம் ஆண்டு முன்னுரிமைத் திட்டத்தில் சேர்க்கக் கோரும் செயற்குறிப்பினை மைய அரசு ஏற்று, இத்திட்டத்திற்காக மொத்த மதிப்பீடாக ரூ. 60.00 இலட்சத்தில், ரூ. 45 இலட்சம் மத்திய அரசின் பங்காக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. முதல் தவணையாக ரூ. 10 இலட்சம் வழங்கியிருக்கிறது. இத்திட்டத்திற்கான மாநில அரசின் பங்கு ரூ. 15 இலட்சம் ஆகும். பழைய சட்டக் கல்லூரி விடுதிக் கட்டடத்தின் உறுதியினை உறுதி செய்வதற்காக ஒரு தொழில்நுட்ப வல்லுநர் குழு அமைக்கப்பட்டு

அதன் அறிவிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் மாநில பொதுப் பணித் துறையினால் நிறைவேற்றப்படவிருக்கிறது.

முற்பகல் 10-20

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருக்கு நன்றி தெரிவிக்கின்ற அதே நேரத்தில் சென்னையைச் சுற்றியுள்ள வண்டலூர், முட்டுக்காடு, மகாபலிபுரம் மற்றும் வேடந்தாங்கல் போன்ற பகுதிகள் சுற்றுலாப் பகுதிகளாக இருக்கின்றன. கோடை விடுமுறை தொடங்கிவிட்ட காரணத்தால், கல்லூரி, பள்ளி மாணவர்களும் மற்றும் சுற்றுலாப் பயணிகளும் அந்தப் பகுதிகளுக்குச் சென்றுவர சென்னையிலிருந்து சிறப்புப் பேருந்துகள் விடுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் சார்பாக தினந்தோறும் 18 வகையான சுற்றுலா இடங்களைப் பார்ப்பதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. சென்னையைச் சுற்றியுள்ள இடங்களைப் பார்ப்பதற்காக ஒரு நாள் சுற்றுலா என்ற முறையில் இன்றைக்கு சுற்றுலாத் துறையின் சார்பாக பஸ்கள் விடப்பட்டு, சுற்றுலாப் பயணிகள் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 540, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**540—**

### காதி நூற்பு நிலையத்திற்குக் கட்டடம்

***21711—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் நடத்தப்படும் காதி நூற்பு நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டையில் காதி நூற்பு நிலையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. கட்டடத்தின் உரிமையாளர் நீண்டநாட்களாக அதைக் காலி செய்ய வற்புறுத்தி வருவதால், வேறொரு கட்டடம் கிடைக்காத ஒரு நிலை அங்கே இருக்கின்றது. ஆகவே, கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமாகச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நூற்பு நிலையத்திலே 10 தொழிலாளர்கள் நூற்பாளர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள். இந்தக் கட்டடத்திற்கு மாத வாடகையாக 250 ரூபாய் அளிக்கின்றோம். நூற்பாளர்கள் அதிக எண்ணிக்கையில் வருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அதிக எண்ணிக்கையில் நூற்பாளர்கள் வந்தால், கண்டிப்பாகச் சொந்தக் கட்டடம் கட்டுவதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. கவன ஈர்ப்பு

### கோவிலூர் ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ்க் கட்டப்படும் 35 மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகளுக்கு மின் இணைப்பளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. திருவேங்கடம் அவர்கள் ஈர்ப்பார்கள்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கோவிலூர் ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ்க் கட்டப்படும் 35 மேல்நிலை குடிநீர்த் தொட்டிகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டிய அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் கோவிலூர் ஊராட்சியின்பால் அமைந்துள்ள சவ்வாது மலைப்பகுதியில் 27 குடியிருப்புகள் இருக்கின்றன. தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம், இப்பகுதியில் 35 இடங்களில் மேல்நிலை குடிநீர்த் தொட்டிகள் அமைக்கத் திட்டமிட்டு, அவற்றில் 16 இடங்களில் மும்முனை மின்விசையும் 19 இடங்களில் ஒருமுனை மின்விசையும் தேவைப்படும் எனவும், நீர்த்தொட்டிகள் அமைக்கும் நேரத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் மின்விசை கோரும் விண்ணப்பங்களை அனுப்புவதாகவும் தெரிவித்துள்ளனர். இம் மலைபபகுதியில் ஏற்கெனவே 35 இடங்களில் மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இரண்டு இடங்களில் ரூ 11.5 இலட்சம் செலவில் அண்மையில் மின்மாற்றிகள் நிறுவப்பட்டன. எனவே, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்துடன் இணைந்து தமிழ்நாடு மின்சார வாரியம் செயல்பட்டு மேல்நிலை நீர்த் தொட்டிகளுக்குத் தேவையான மின்விசையை வழங்கும்.







2. தற்சமயம் சவ்வாது மலைப்பகுதிக்கு ஆலங்காயம் துணை மின் நிலையத்திலிருந்து 11 கிலோ வோல்ட் மின்பாதை மூலம் மின்விசை வழங்கப்படுகிறது. இத்துணை மின் நிலையத்திலிருந்து சற்று அதிக தூரத்தில் சவ்வாது மலைப்பகுதி அமைந்துள்ளபடியால், சில நேரங்களில் மின் அழுத்தக் குறைவு ஏற்படுகிறது. இக்குறையைக் களைவதற்காக சவ்வாது மலைக்கு அருகில் இருக்கும் காவலூர் பகுதியில் ஒரு புதிய துணை மின் நிலையம் நிறுவி, அதிலிருந்து சவ்வாது மலைப்பகுதிக்கு மின்விசை வழங்கும் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு வருகிறது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், சவ்வாது மலைப் பகுதியில் மின்விசை வழங்குவது வெகுவாகச் சீரடையும்.

3. பொதுவாகவே, குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் முன்னுரிமை அடிப்படையில் மின்விசை வழங்கி வருகிறது.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையை நான் படித்தேன். நான் ஏற்கெனவே கேள்வியில் சொல்லியதுபோல், அந்த ஜவ்வாது மலைப்பகுதியில் 1971 ஆம் ஆண்டுதான், நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில்தான் அப்பகுதி மக்கள் மின்சாரத்தைப் பார்த்தார்கள். அதற்குப் பிறகு மின்சார வாரியத்தால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தாலே, மின் அழுத்தம் இல்லாமல் இன்றையதினம் தெருவிளக்கும் எரிவதில்லை. அதே நேரத்திலே, சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் ஆகியும், நம்முடைய அந்த மலைவாழ் மக்கள் இன்னும் ஓடையில்தான் தண்ணீர் குடிக்கின்ற ஓர் அவல நிலை இருக்கின்றது. அதைப் போக்குகின்ற வகையில் நம்முடைய முதல்வர் அவர்கள் கொண்டு வந்த இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். இன்றையதினம் அந்தக் கோவிலூர் ஊராட்சியில்— ஒரே ஊராட்சியில்-42 கிராமங்கள் உள்ளன. அதிலே 35 இடங்களிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு வருகின்றன. அதிலே மின்விசை கிடைக்காது என்ற ஒரு நிலை இருந்தது. நம்முடைய அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், காவலூரியிலேயிருந்து தற்சமயம் இங்கே துணை மின் நிலையம் அமைத்து, இதற்கு மின்சாரம் தருவோம் என்று சொல்கிறார்கள். காவலூர் என்பது வேலூர் மாவட்டத்திலே வாணியம்பாடி தொகுதியிலே வருகிறது. எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்திலே அமைக்கப்படவுள்ளதை

[திரு. பெ.சு. திருவேங்கடம்] [1999 ஏப்ரல் 28

ஜமுனாமருத்தூர் கிராமத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைத்து இந்தக் குறைகளையெல்லாம் போக்க வேண்டுமென்று பல்லாண்டுகளாக ஒரு கோரிக்கை இருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜமுனாமருத்தூரிலே ஒரு புதிய துணை மின் நிலையம் அமைப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த பிரச்சினையில் உடனடியாக மின்சார வாரியம் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதற்காக, காவலூர் பகுதியிலே ஒரு துணை மின் நிலையத்தை அமைப்பது என்று முடிவெடுத்து, அதற்கான திட்டம் தயாரித்து இந்த ஆண்டு அங்கே ஒரு துணை மின் நிலையம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, இந்த மாதம் மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்களும், நானும் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியில இந்தப் பிரச்சினையைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதற்கு முன்பே மாண்புமிகு உறுப்பினரும், மாண்புமிகு அமைச்சர் பிச்சாண்டி அவர்களும் எடுத்துச் சொன்ன அந்தப் பரிந்துரையை ஏற்று அதிகாரிகளிடத்திலே கலந்து பேசினோம். மாண்புமிகு உறுப்பினர் மகிழத்தக்க வகையில் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய இடத்திலேயும் ஒரு துணை மின்நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் இப்போது செய்யப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-25

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அந்த மலைவாழ் மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. மன்னார்குடி தொகுதியில் இடி, மின்னல் தாக்கி பலியானவர்களுக்கு முதல்வர் நிதி உதவி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 22 ஆம் தேதி திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி தொகுதியில்



1999 ஏப்ரல் 28] [திரு. வை. சிவபுண்ணியம்]

கடுமையான மழை பெய்த காரணத்தினாலே, இடி, மின்னல் தாக்கி மூன்று பேர் மரணம் அடைந்துவிட்டார்கள். அந்தச் செய்தி தொலைபேசியில் வந்தவுடனே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே இந்தத் தகவலைத் தெரிவித்தவுடனே, அடுத்த ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே மின்னல்தாக்கி இறந்த மூன்று பேர்களுடைய குடும்பத்திற்கு உடனடியாக நிவாரணத்தை வழங்கி, அந்தக் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டார்கள். 'காக்கை நோக்கறியும்' என்று சொல்வார்களே, அந்தச் செய்திக்கேற்ப, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சொன்ன மாத்திரத்திலேயே உதவி செய்தது (மேசையைத தட்டும் ஒலி) அந்தத் தொகுதி மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அந்தக் குடும்பத்தின் சார்பிலேயும், அந்தத் தொகுதி மக்கள் சார்பிலேயும் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## 4. தகவல் கோரல்

### வேலூர், பெரிய கண்ணாச்சிப்பாளையத்தில் சத்துணவு சாப்பிட்ட மாணவர்கள் உடல்நலம் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில், கந்திலி ஊராட்சி ஒன்றியத்தில் பெரியகண்ணாச்சிப்பாளையம் என்ற இடத்தில் சத்துணவு சாப்பிட்ட 380 மாணவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, 28 பேர் தீவிர சிகிச்சையில் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்தச் செய்தி வந்திருக்கிறதா? இந்தப் பிரச்சினை எதனால் ஏற்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருப்பதுபற்றி பத்திரிகைகளில் காலையிலே படித்தேன். அதுபற்றிய முழு விவரங்கள் இன்னும் எனக்குக் கிடைக்கவில்லை. கிடைத்தவுடன் தெரிவிக்கப்படும்.

## 5. மானியக் கோரிக்கைகள், 1999-2000, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 5 - முத்திரைத் தாள்கள்-நிருவாகம்**

**(ஆ) கோரிக்கை எண் 6 - ஆவணப் பதிவு**

**(இ) கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள்**

**(ஈ) கோரிக்கை எண் 59 - ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999-2000 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 5 - முத்திரைத் தாள்கள் - நிருவாகம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 10,19,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2740, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முத்திரைத் தாள் விற்கும் விற்பனையாளர்கள் முத்திரைத் தாள்களைக் கூடுதல் தொகைக்கு விற்பனை செய்வதைத் தடுக்க ஒரு தணிக்கைக் குழு நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2636, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் முத்திரைத் தாள்கள் நியாயமான விலைக்கு விற்பனையாளர்களிடமிருந்து கிடைக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3056, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முத்திரைத் தாள் விநியோகிப்பாளர்களுக்கு வழங்கப்படும் கமிஷன் தொகையை உயர்த்தித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4006, திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3159, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2255, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முத்திரைத் தாள்கள் விற்பனையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத்தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 98, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "முத்திரைத் தாள்கள் விற்பனை செய்ய நியமிக்கப்படுகின்ற விற்பனையாளர்களின் எண்ணிக்கையை ஒழுங்குபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1510, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதியில் முத்திரைத் தாள்கள் விற்பனையாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2929, திரு. ந. கருப்பண்ண உடையார்.

*** திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள சார்-பதிவாளர் அலுவலகங்களில் மக்களுக்குப் போதிய முத்திரைத் தாள்கள் எளிதில் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 450, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் பகுதியில் அரசாங்க வழிகாட்டி மதிப்பைவிட (guideline value) குறைந்த விலையில் நிலம் விற்கப்படுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3839, திரு. அ.வ. அப்துல் நாசர்.



**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் அதிக எண்ணிக்கையில் முத்திரைத் தாள் விற்பனையாளர்களை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2455, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முத்திரைத் தாள் விற்பனையாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3749, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் முத்திரைத் தாள்களில் குறிப்பிடப்பட்டுள்ள விலையைவிட அதிக விலைக்கு விற்கப்படுவதைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4168, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் முத்திரைத் தாள் விற்பனையாளர்களின் எண்ணிக்கையினை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்கை, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்] [1999 ஏப்ரல் 28

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2853. திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடல் ஊனமுற்றோர் முத்திரைத் தாள்கள் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3138, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பல மாவட்டங்களில் போதிய முத்திரைத் தாள்கள் விநியோகம் இல்லாததால் முத்திரைத்தாள் கருப்புச் சந்தையில் விற்கப்படுவதை உடன் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4142, திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள் - நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,55,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



1999 ஏப்ரல் 28]

**(ஆ) கோரிக்கை எண் 6 - ஆவணப் பதிவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6 - ஆவணப் பதிவு. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ. 43,84,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2741, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்ட பத்திரப் பதிவு அலுவலகம் தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்குச் சொந்தமான வேலூர் கோட்டைக்குள் தற்காலிகமாக இயங்குவதால் சத்துவாச்சாரியில் நிரந்தரக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2627, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பின் அந்த சொத்தின் புதிய உரிமையாளர் மீது பட்டா மாற்றம் செய்ய அரசே ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3057, திரு. நா. பெரியசாமி.

[1999 ஏப்ரல் 28

*திரு. நா. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை வட்டம்-திங்களூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குத் தேவையான இடத்தை இலவசமாக ஒருவர் தருவதற்கு முன்வந்துள்ள நிலையில் அங்கு ஒரு சார்பதிவாளர் அலுவலகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2258, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்கு உட்பட்ட ஓலகடத்தில் புதிதாகச் சார்பதிவாளர் அலுவலகம் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,84,41,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 96, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி தொகுதி, உள்ளிக்கோட்டையில் சார்பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.43,84,41,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.** வெட்டுத் தீர்மானம் எண் 1490 திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதி ஆர்.எஸ். மாத்தூரில் பத்திரப் பதிவு அலுவலகம் திறப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



1999 ஏப்ரல் 28] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2998, திரு. ந. கருப்பண்ண உடையார்.

*திரு. ந. கருப்பண்ண உடையார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் சட்டமன்றத் தொகுதி சுவாமிமலை சார்பதிவாளர் அலுவலகத்தைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 451, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3840, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் உள்ள புவனகிரி மற்றும் புதுசத்திரம் பத்திரப் பதிவு அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2457, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆவணங்கள் பதிவு செய்வதைக் கணிப்பொறியாக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3752, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்காசி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4177, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேராவூரணி சட்டமன்றத் தொகுதியில் உள்ள இடையாத்தி ஊராட்சியில் சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2854, திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி நகரத்தில் ஆவணப் பதிவு அலுவலகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3131, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைகக வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4143, திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு ஊழியர்கள் கடன் உதவி வழங்கும் திட்டங்களின் கீழ் நிலம் மற்றும் வீட்டினைப் பதிவு செய்யும்போது அவர்களுக்கு முத்திரைத்தாள் பதிவு செலவில் சலுகை வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3637, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY**: Hon. Speaker Sir, ``To discuss the need to open a Registrar Office at Berikai in Hosur Taluk", I move—

``That the sum of Rs. 43,84,41,000/- allocated under Demand No.6 Registration, be reduced by Rs. 100/-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2843, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிப்பட்டு வட்டம், பொதட்டூர்பேட்டையில் புதிதாகச் சார்பதிவாளர் அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2711, திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, தக்கலை சார்பதிவாளர் அலுவலகத்தை மேம்படுத்துவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 43,84,41,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**(இ) கோரிக்கை எண் 47—ஊரகத் தொழில்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 88,68,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 4673, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகாவில் ஒடுகத்தூரில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 88,68,60,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2120, திரு. ஐ. கணேசன்:

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, ஆடையூர் பக்கநாடு பகுதியில்



தேங்காய் நாரில் இருந்து கயிறு திரிக்கும் தொழிற்கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 88,68,60,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4360, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறையில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் கிளை ஒன்றைத் தொடங்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 88,68,60,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2412, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் வேளாண்மைப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 88,68,60,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1488, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதி, மிகவும் பின் தங்கிய பகுதியாக உள்ளதால், அங்கு வாழும் மக்களின் வருமானத்தைப் பெருக்க முந்திரி மற்றும் கிராமியத் தொழில்கள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1999 ஏப்ரல் 28

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 88,68,60,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2932, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் தேங்காய், கொட்டாங்கச்சியிலிருந்து கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் தொழில் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 88,68,60,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2211, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 88,68,60,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3904, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 88,68,60,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



1999 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 46, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பூசாரிப்பட்டியில் வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 88,68,60,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3734, திரு. கே. ரவி அருணன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்காசியில் தொழிற்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 88,68,60,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4303, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதியில் உள்ள படித்த மாணவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் பயன்படுகின்ற வகையில் பேராவூரணியில் தொழிற்பேட்டை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 88,68,60,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4524, Thiru B. Venkatasamy.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, "To discuss the need to start Small Scale Industries in every block headquarters in the State with the available raw material in the concerned areas of the Tamil Nadu State", I move—

" That the sum of Rs. 88,68,60,000/- allocated under Demand No.47 Rural Industries, be reduced by Rs.100/-"

**(ஈ) கோரிக்கை எண் 59 – ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 59- ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1,26,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 2162, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி ஆடையூர், பக்கநாடு பகுதியிலும், அதை அடுத்துள்ள பகுதியிலும் தென்னை நாரிலிருந்து கயிறு திரிக்கும் தொழிலைத் தொடங்க மானியத்துடன் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,26,27,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4373, திரு. நா. பெரியசாமி.



***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,26,27,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2444, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில், தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்குப் புதிய தொழில் தொடங்க, விரைவாக மானியத்துடன் கடன் உதவிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,26,27,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4402, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,26,27,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3033, திரு. ந. கருப்பண்ணை உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. ந. கருப்பண்ண உடையார்] [1999 ஏப்ரல் 28

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,26,27,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2239, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,26,27,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3910, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,26,27,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4246, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,26,27,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கென வைக்கப் பட்டுள்ளன.



1999 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள் - நிருவாகம், ஆவணப் பதிவு, ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பெற்று, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 10 பேர் இதில் பேச இருக்கின்றார்கள். ஒவ்வொருவருக்கும் பத்து நிமிடங்கள் ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, விவாதத்தை திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களைத் தொடங்கி வைக்குமாறு அழைக்கின்றேன்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடரில், பத்திரப் பதிவு மற்றும் ஊரகத் தொழில்கள் பற்றிய மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் காஞ்சனா கமலநாதன்) தலைமை]

மனிதன் பிறப்பது முதல் இறப்பது வரை வாழ்க்கையோடு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ள துறை பதிவுத் துறையாகும். இத்துறையில் பொதுமக்களுக்கு மேன்மேலும் நன்மை பயக்கும் புதிய முறைகளை எல்லாம் நாம் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னைக்கு அருகிலே இருக்கின்ற மறைமலை நகரில் 15

@ 149 முதல் 256 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

ஆண்டுகளுக்கு முன்பு வீட்டு வசதி வாரியம் மூலமும், எம்.எம்.டி.ஏ. மூலமும் மனைகளும், LIG வீடுகளும், பக்கத்து பக்கத்து வீடுகளாக ஒதுக்கீடு செய்யப்பட்டன. அப்போதே ஒரு வீட்டின் விலை ஏறத்தாழ ரூ.36,000 ஆகும். வீட்டுக்குச் சொந்தக்காரர்கள் தவணைகளைக் கட்டி முடித்து கிரயப் பத்திரம் கேட்டபோது, வீட்டுவசதி வாரிய LIG வீடுகளுக்கு அன்றைய தரை மதிப்பீட்டின்படி ரூ.2000-க்கு முத்திரைக் கட்டணம் கட்டப்பட்டு, அவர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்கப்பட்டது. அதேநேரத்தில், எம்.எம்.டி.ஏ. வீடுகளுக்கு அது வழங்கப்படவில்லை. தற்போது அந்த வீடு மற்றும் தரை மதிப்பீட்டுக்கு ஏற்றவாறு 40,000 ரூபாய் முத்திரைக் கட்டணம் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். அதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அவ்வீடுகளுக்கு வீட்டுவசதி வாரியத்தின் வீடுகளுக்கு கொடுத்ததைப்போல, ரூ. 2000 முத்திரைக் கட்டணம் பெற்றுக்கொண்டு அவர்களுக்கும் எம்.எம்.டி.ஏ. வீடுகளுக்கு கிரயப்பத்திரம் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவு அலுவலகங்களில் பத்திரப் பதிவுக்குச் செல்கிறபோது, அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை விவசாயிகள், படிக்காதவர்கள் எல்லாம் செல்கிறபோது, அவர்களிடம் அங்கே இருக்கிற அதிகாரிகள், வழிகாட்டு மதிப்பீட்டைக் கூடுதலாகச் சொல்லி, 'நான் குறைத்துத் தருகிறேன்' என்று சொல்லி, ஆயிரக்கணக்கான ரூபாயை லஞ்சமாகப் பெறுகிற சூழ்நிலை எல்லாம் இருந்துகொண்டிருக்கிறது. அவற்றைப் போக்குகிற வண்ணம், ஆண்டுதோறும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட நிலங்கள் எந்தெந்தப் பகுதிகளில் என்னென்ன மதிப்பு என்பதை மதிப்பிட்டு, அந்த அலுவலகத்தில் இருக்கின்ற செய்திப் பலகையில் அதை எழுதிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, பத்திரப் பதிவு நகல்கள் எல்லாம் இப்போது எழுத்து மூலமாகவும், தட்டச்சு மூலமாகவும் எடுக்கப்படுகின்றன. அவற்றையெல்லாம் மாற்றி, நவீன காலத்திற்கேற்ப ஜெராக்ஸ் முறையில் அந்த நகல்கள் எல்லாம் எடுக்கப்பட்டால், எப்போது யார் கேட்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் உரிய நேரத்தில் அவற்றைக் கொடுப்பதற்கும், விவசாயிகள் கடன் வாங்குவதற்கும், மற்றும் அவர்களுடைய பல்வேறு தேவைகளுக்கும் அது பயன்படுவதாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, ஒவ்வொரு பத்திரப் பதிவு அலுவலகத்திலும் பத்திரப்



பதிவுக்கு என்று ஒரு கணிப்பொறி வழங்கவேண்டும். அப்படி கணிப்பொறி வழங்கப்பட்டால், பத்திரம் பதிவு செய்யப்படுகின்ற நிலத்தினுடைய வில்லங்கம் மற்றும் அதற்கான கருத்துக்களை எல்லாம் உடனடியாகப் பெற முடியும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, சர்வே செய்கிறபோது, வழிகாட்டிப் புத்தகத்தில் செண்ட் ஒன்றுக்கு ரூ.500 என்று இருக்கும், அதே சர்வே எண்ணில் வேண்டுமென்றே ஒருவர், செண்ட் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபாய் என்று பதிவு செய்கின்றார். மற்றொருவர் அங்கே வேறு ஓர் இடத்தைப் பதிவு செய்கிறபோது, பத்தாயிரம் ரூபாய் என்று கணக்கிட்டு, அதற்குத் தக்கவாறு முத்திரைத்தாள் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, வழிகாட்டிப் பதிவேட்டில் ஒரு செண்ட் 500 ரூபாய் என்று இருந்தால், அந்த மதிப்பையே நிர்ணயித்து அதற்கான மதிப்பீட்டை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த முறை கேரளாவில் பின்பற்றப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல், முத்திரைச் சட்டம் பிரிவு 47-ஏ/1ன் படி முத்திரைக் கட்டண ஆய்வுக்காக தனித் துணை ஆட்சியருக்கு அனுப்பியுள்ள ஆவணங்களை, 50 விழுக்காடு செலுத்தினால் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்ற சலுகை 30-6-1999 வரை இருக்கிறது. அதை ஓராண்டு காலத்திற்கு நீட்டித்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு ஒரு குடும்பத்தில் பாகப் பிரிவினைப் பத்திரத்துக்கு இரண்டு சதவிகித முத்திரைத் தீர்வை செலுத்தினால் போதும் என்று சொல்கிறார்கள். இதனால் அந்தக் குடும்பத்தில் இருக்கிற ஒருசிலர் மட்டும்தான் பயன் அடையமுடியும். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் பயன்பெறக்கூடிய வகையில் அனைவருக்கும் இச்சலுகை வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் 2 சதவிகிதம் என்று இருப்பதை மாற்றி ஒரு சதவிகிதம் தீர்வை என்று ஆணை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திருமணப் பதிவு செய்யும்போது மணமக்களின் வயதுச் சான்றுக்குத் தற்போது நடைமுறையில் உள்ள பள்ளிச் சான்று, பிறப்புச் சான்று, பாஸ்போர்ட் சான்று ஆகியவற்றுடன், மருத்துவச் சான்றும் கேட்டு திருமணப் பதிவினைச் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்] [1999 ஏப்ரல் 28 முற்பகல் 10-40

தமிழகத்தில் உள்ள, ஏறக்குறைய ஆண்டுக்கு ரூ.800 கோடி வருவாயை ஈட்டித் தருகின்ற, பதிவு அலுவலகங்கள் எல்லாம் வாடகைக் கட்டடங்களிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, எனது பேராவூரணி தொகுதியிலே இருக்கின்ற இரண்டாம்புலிக்காடு, திருச்சிற்றம்பலம், பெருமகளூர் போன்ற பகுதிகளிலே இருக்கின்ற சார் பதிவகங்கள், திறக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், இதுவரையில் வாடகைக் கட்டடங்களில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

அதுபோல, பேராவூரணியில் இருக்கின்ற சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு, 60 ஆண்டுகள் ஆகின்றது. அது இடிந்து விழும் தருவாயில் இருக்கின்ற காரணத்தினால், அங்கே இருக்கின்ற ஆவணங்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், இந்த ஆண்டு அங்கு ஒரு புதிய கட்டடம் கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, சார்-பதிவாளர் அலுவலகங்களில் எல்லாம் தற்போது மேஜை, நாற்காலி இல்லாத நிலை இருக்கிறது. அவற்றை எல்லாம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, அங்கே இருக்கின்ற பத்திர நகல் எழுத்தர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊரகத் தொழில்கள் முன்னேற்றத்திற்கு, நாட்டினுடைய கிராமப் பகுதியிலே கிடைக்கின்ற பொருட்களை மூலப்பொருளாகக் கொண்டு, அந்தப் பகுதியிலே சிறிய, பெரிய தொழிற்சாலைகளை எல்லாம் தொடங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் ஏறக்குறைய 28 மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழில் முனைவோர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்கப் பலவிதமான நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. குறிப்பாக, விண்ணப்பங்களைக் கொடுத்த தொழில் முனைவோர்கள், உரிமங்களைப் பெறவும், அதேபோல, தொழில் தொடங்குவதற்குக் கடன் பெறவும் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால்,



1999 ஏப்ரல் 28] [திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்]

தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முடியாமல் போய்விடுகிறது. இதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் நிர்ணயிக்கப்படுகின்ற தொகையும் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. எனவே, விரும்புகின்ற தொழிலைத் தொடங்க முடியாமல், பதிந்தவர்கள் அவதிப்படுகின்றார்கள்.

தொழில் பயிற்சி படித்து வேலையற்ற ஆடவர், மகளிருக்கென தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்திலே அவர்கள் கலந்துகொண்டு பயன்பெறுகின்ற வகையிலே சென்னை கிண்டியில் தொழில் முனைவோர் வளர்ச்சி நிலையம் ஒன்றை அரசு அமைத்துள்ளது. இதுபோன்ற வளர்ச்சி நிலையங்கள் மாவட்டங்களில் உள்ள தொழில் மையங்களில் தொடங்கப்பட்டால், அந்தப் பகுதியிலே படித்துள்ள பட்டதாரிகள் பயன் அடைவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோல, பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் படித்த பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குகின்ற வகையிலே சென்ற ஆண்டு 1998-99-க்காக தமிழக அரசு 18,500 பேர்களுக்கு பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் கடன் வழங்குவதாகச் சொன்ன இந்த அரசு, தேர்வு செய்தது 45,092 பேர்கள். ஆனால், வங்கிகள் ஏறக்குறைய 11,175 பேர்களுக்கு இக்கடன்களை வழங்கியது. எனவே, அரசு முழுமையான அளவிலே அனைவருக்கும், அவர்கள் எந்த வங்கியிலே தொடர்பு கொள்கிறார்களோ, அங்கே முழுமையாக, இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுகின்ற வகையிலே, வங்கிகள் கடன் வழங்குவதற்கு அரசு உத்தரவாதம் தரவேண்டும். தற்போது ஒருசில வங்கிகளில் கடன்கள் வழங்கப்பட்டாலும், ஓர் இலட்சம் ரூபாய் கேட்கின்ற நிலையில் 50 ஆயிரம் ரூபாய்தான் கொடுக்கின்றார்கள். 50 ஆயிரம் ரூபாய் கேட்கின்ற நிலையில் 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கின்றார்கள். எனவே, அந்த இளைஞர்கள் என்ன தொழில் தொடங்க வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அது முடியாமல் போகிறது. வாங்கிய கடனைக் கட்ட முடியாமல் போய்விடுகின்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலே, அரசு, வங்கிகளுக்கு முழு அளவிலே உத்தரவு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, சுய வேலைவாய்ப்புத் திட்டத்திலே அவர்களுக்கான வயது வரம்பு 18 லிருந்து 35 ஆக இருக்கிறது. அதை 45 ஆக உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு 200 கோடி ரூபாய் நிதி ஆதாரத்தைத் தருவதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். நன்றி. அதே நேரத்தில், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் கடன் பெற விண்ணப்பித்தவர்களுக்கு அந்த மாதத்திலேயே கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதோடு, தற்போது வட்டி விகிதத்தை 20 சதவிகிதத்திலிருந்து 17½ சதவிகிதமாகக் குறைத்திருக்கின்றீர்கள். அதை 15 சதவிகிதமாகவும், அபராத வட்டியினை 2½ சதவிகிதத்திலிருந்து 1½ சதவிகிதமாகவும், குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், முழுமையான அளவிலே சோயா மொச்சை அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, சோயா மொச்சையை மூலப்பொருளாகக் கொண்டு, அங்கே சோயா எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திலே முழுமையான அளவு நெல் விவசாயம் செய்யப்படுகிறது. அதனால் அதிகப்படியான வைக்கோல் கிடைக்கிறது. கால்நடைகள் எண்ணிக்கை குறைந்து வருகின்ற இந்தக் காலத்தில், தஞ்சை மாவட்டத்திலே கிடைக்கின்ற வைக்கோலையும், அதேபோல, கரும்பு ஆலைகளிலிருந்து கிடைக்கின்ற கரும்புச் சக்கையையும் ஆதாரமாகக் கொண்டு, தொகுதிகள்தோறும் சிறு, சிறு காகித ஆலைகள், காகிதப் பெட்டிகள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு செகண்டில் முடித்துவிடுகிறேன்.

அடுத்து, எனது தொகுதியில் முழுமையான அளவிலே தென்னையை நம்பியிருக்கின்ற பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதிகளில், அதிகமான அளவு தென்னையை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த அரசு தென்னையை முழுமையாகப் பயன்படுத்தி இதுவரையில் எந்தத் தொழிற்சாலையையும் தொடங்கவில்லை. குறிப்பாக, தென்னையைப் பொறுத்தவரையில், தென்னை நார், தேங்காய் பவுடர், அதோடல்லாமல், அழகு சாதனப் பொருட்களை எல்லாம் அதிகமாக உற்பத்தி செய்யலாம். அவற்றை அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியைக்கூடப் பெருக்கலாம். அந்த வகையிலே பேராவூரணி தொகுதியிலே தென்னையை ஆதாரமாகக்



கொண்ட ஒரு தொழிற்சாலையைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

பேராவூரணி தொகுதி முற்றிலும் பின்தங்கிய தொகுதியாகும். அங்குள்ள எல்லோரும் விவசாயத்தையே நம்பி இருக்கிற காரணத்தாலே, பேராவூரணி தொகுதியை தொழிலிலே பின்தங்கிய தொகுதியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஆயிரக்கணக்கான, எண்ணற்ற படித்த பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குகின்ற வகையிலே அங்கே ஒரு தொழிற்பேட்டையைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பெரிய தொழில்களுக்கு இணையாக தற்போது சிறிய தொழில்களை வளர்க்கின்ற நோக்கத்தோடு மின்சாரக் கட்டணச் சலுகையிலே பதிவு பெற்றிருக்கிற குறுந்தொழில்களுக்கு எல்லாம் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, தற்போது தமிழகத்திலே உள்ள Mini Cement Plant - களுக்கு எல்லாம் 16% வரி விதிக்கப்படுகிறது. ஆனால், அருகிலே இருக்கின்ற கர்நாடக மாநிலத்திலும், மற்ற பிற மாநிலங்களிலும் வரி 6%-ஆக இருக்கிற காரணத்தாலே Mini Cement Plant Owner-களெல்லாம் அந்தப் பகுதிக்குச் செல்லவிருக்கிறார்கள். எனவே, 6 சதவிகிதமாக வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன. வணக்கம்.

**திரு.சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருஞானசம்பந்தம் பேசுகிறபோது மறைமலை நகரில் இருக்கக்கூடிய வீட்டுவசதி வாரிய வீடுகள், எல்.ஐ.சி. வீடுகள் என்று சொல்லிவிட்டார். அதை எல்.ஐ.ஜி. வீடுகள் என்று மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மறைமலை நகரிலே ஏற்கெனவே வீட்டுவசதி வாரிய எல்.ஐ.ஜி. வீடுகள் இருக்கின்றன; அதேபோல MMDA-யும் எல்.ஐ.ஜி வீடுகளை ஒதுக்கியிருக்கிறது. வீட்டுவசதி வாரியம் ஒதுக்கிய வீடுகளுக்கு மட்டும் 2,000 ரூபாயை முத்திரைக் கட்டணமாக வாங்கிக் கொண்டு Sale deed-ஐக் கொடுத்து விடுகிறார்கள். ஆனால், நம்முடைய MMDA வீடுகளுக்கு மட்டும் இப்போது 40,000 ரூபாய் முத்திரைக் கட்டணமாகக் கேட்கிறார்கள் என்ற காரணத்தாலே Sale deed கொடுக்கப்படாமல் இருக்கிறது. அந்த Sale deed-ஐக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர்

[திரு. சி. ஞானசேகரன்] [1999 ஏப்ரல் 28

அவர்கள் ஆவன செய்வார்களா என்ற அர்த்தத்தில்தான் அவர் கேள்வி கேட்கிறார் Not LIC, only LIG வீடுகள் என்று மாற்றித் திருத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் காஞ்சனா கமலநாதன்):** திரு. ப. பாலசுப்பிரமணியன்.

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் மற்றும் பத்திரப் பதிவு மானியக் கோரிக்கையில் என்னைப் பேச அனுமதித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஊரகத் தொழில் துறையானது, கிராமப்புற மக்களுடைய தொழில் வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்ட துறையாகும்.

கிராமப்புற மக்களை பொருளாதார ரீதியாகவும், நகரவாசிகள் பெற்றிருப்பதுபோல, அவர்களை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்திலும் திட்டங்களைத் தீட்டுவது நமது கலைஞர் அரசாகும். அந்த வகையில் கணினிமயமாகும் உலகத்தோடு போட்டியிடுகின்ற தமிழர்களை கலைஞர் அரசு உருவாக்கும் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அளவில் நல்ல கல்வித் தகுதியுடன், தலைவர் கலைஞர் அவர்கள் விரும்புவதுபோல, வெளிவரும் மாணவர்களுக்கு ஊரகத் தொழில் துறைதான் முக்கியமாக நல்வழி காட்டவேண்டும். கிராமத் தொழில்களை வளர்ச்சியுறச் செய்வதற்கு மேலும் புதிய சேவைகளை அளித்து பெரியார் கனவையும், பேரறிஞர் அண்ணாவுடைய எண்ணத்தையும், தலைவர் கலைஞருடைய விருப்பத்தையும் நிறைவேற்றிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி பட்டுக்கோட்டையாகும். அந்த நகருக்கு பெருமை சேர்க்கின்ற அளவில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனார் அவர்களுடைய நினைவு மண்டபத்தைக் கட்டித் தருகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், இந்தியாவினுடைய முதல் குடிமகனாகவும், இந்திய நாட்டினுடைய தொழில் அமைச்சராகவும் பொறுப்பேற்றுக்கொண்ட மனிதர்களெல்லாம் பட்டுக்கோட்டையில் பிறந்தவர்கள்தான். ஆனால், பட்டுக்கோட்டையை எடுத்துக் கொண்டால் அங்கு ஒரு தொழிற்சாலைகூட இல்லாத அளவிற்கு மிகச் சிரமமான சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய அரசு பட்டுக்கோட்டை தொகுதியிலே சிட்கோ மூலம் தொழிற்பேட்டை ஒன்றை அமைத்துத் தர



1999 ஏப்ரல் 28] [திரு. ப. பாலசுப்பிரமணியன்]

வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, பட்டுக்கோட்டையைப் பொறுத்தவரையில், சார் பதிவாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, பட்டுக்கோட்டை, மதுக்கூர், அதிராம்பட்டினம் போன்ற இடங்களில் அவை வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

சிறு தொழில் செய்வதற்கான கடன் பெற அலுவலகங்களுக்குப் பலமுறை செல்ல வேண்டிய நிலைமையை மாற்றி, குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கடன் பெறுவதற்கு ஓர் ஏற்பாட்டினைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, முத்திரைத் தாள்களைப் பொறுத்தவரையில் முகவர்களை அதிகமாக்கினால் தவறுகள் நடக்காது என்ற அளவிலே, முகவர்களை அதிகமான அளவிலே நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், துணை வட்டாரப் போக்குவரத்துக் கழக அலுவலகம் ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, தாமரங்கோட்டை வடக்கு ஊராட்சியில் சார் பதிவாளர் அலுவலகம் ஒன்றை அமைத்துத் தரவேண்டும். பொது மக்களே அதற்குண்டான இடவசதியை செய்து கொடுப்பதாக உறுதியளித்திருக்கிறார்கள். அந்த வகையில் பதிவாளர் அலுவலகம் ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

முற்பகல் 10-50

என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில், மதுக்கூர் ஒன்றியத்திலிருந்து, பழவேற்காடு, கல்யாணஓடை, கெங்கனாசமுத்திரம், சொக்கனாவூர், புளியக்கோடு போன்ற கிராமங்களிலிருந்து, திருவாரூர் மாவட்டத்தில் இருக்கின்ற முத்துப்பேட்டைக்கு, பத்திரப் பதிவு செய்வதற்குச் செல்கிறார்கள். பத்திரப் பதிவு செய்ய மேற்கண்ட கிராமங்களிலிருந்து முத்துப்பேட்டைக்குச் செல்கிறார்கள். ஆகவே, மதுக்கூரிலே பத்திரப் பதிவைச் செய்வதற்கான ஏற்பாட்டினைச் செய்து கொடுக்க வேண்டுமென்று, கேட்டுக்கொள்கிறேன். இப்படியெல்லாம் சிறப்பாகச் செயல்பட்டு வரும் இந்த அரசை சிலர் குறை கூறிக்கொண்டு, மக்களை ஏமாற்றி, காதிலே பூ வைக்கும் வேலை

பார்க்கிறார்கள். எவ்வளவு பூ வைத்தாலும், பூகம்பங்களை உருவாக்கினாலும், முதல்வர் கலைஞர் என்ற உழைப்பின் சின்னத்தை தமிழர்களுடைய எண்ணத்திலிருந்து அழிக்க முடியாது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பட்டுக்கோட்டை தொகுதிக்குத் தனிப் பெருமை சேர்த்த பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டிவருகின்ற தலைவர் அவர்களுக்கு தொகுதி மக்கள் சார்பாக, மீண்டும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தினமும் தொடரும் சூரிய வரலாற்றில் நானும் ஓர் எழுத்தாக இடம்பெற காரணமாக இருக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். இந்த மானியக் கோரிக்கையை முழுவதுமாக வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** எங்கள் கட்சித் தலைவர் பேச இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் பெயர்தான் பட்டியலில் இருக்கிறது. (குறுக்கீடு) சரி. திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்கள். பத்திரப் பதிவுத் துறை, சிறு தொழில்கள் மேம்பாட்டுத் துறை போன்றவைகளுக்கு மானியங்கள் கோரிக்கைகளாக வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மானியத்தில் ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்குத் தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, தமிழகத்தில் இன்றைக்கு சிறு தொழில்கள் ஒரு பக்கத்தில் வளர்ந்து வருவதை நம்மால் மறுக்க முடியாது. அதேநேரத்திலே ஏற்கெனவே பாரம்பரியமாக இருக்கக்கூடிய சிறு தொழில்கள் போதிய ஊக்கத்தைப் பெறமுடியாமல் பல்வேறு காரணங்களால் நலிந்து வருகின்றன, பலவீனமடைந்து வருகின்றன. அதனால், இந்தச் சிறு தொழில்களினாலேயே ஏற்றம் பெற்று வந்த மாவட்டங்கள் பொருளாதாரச் சிக்கலில் தவித்து வருகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன், அதற்குக் காரணம், அண்மைக் காலத்தில் தொழில் தொடர்பான நம்முடைய கொள்கைகள், தொழில் தொடர்பாக ஏற்படுகின்ற விளைவுகளைச் சமாளிப்பதற்காக நாம்





ஏற்றுக்கொண்டிருக்கின்ற தேசியக் கொள்கை அல்லது வட்டாரக் கொள்கை என்ற அடிப்படையில் நாம் வகுத்திருக்கிற நெறிமுறைகள், தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்காமல் அதனைப் பலவீனப்படுத்துவதற்குக் காரணமாக அமைந்துவிட்டன என்பதை நாம் எல்லோரும் கவலையோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டம், திருச்சி மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம் போன்ற பகுதிகளில், அங்கிருக்கக்கூடிய பொருளாதாரத்திற்கு அச்சாணியாக, ஆதார சுருதியாக தோல் தொழில் இருந்து வருகிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே இருந்துதான் வருகிறார்கள். அந்தத் தொழில் சந்தித்துக்கொண்டிருக்கிற பிரச்சினைகள் குறித்து, என்னைவிட அன்றாடம் அங்கு அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்களோடு இணைந்து வாழ்ந்துகொண்டிருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். குறிப்பாக ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். தனியார்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டு, அந்த மாவட்டங்களில் வேலை செய்கின்ற மக்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வருமானச் சாதனங்களை அளித்துகொண்டிப்பவர்கள். இன்றைக்கு அவர்களே வருமானம் இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிற பரிதாபமான நிலையை நம்மால் பார்க்க முடிகிறது. அரசு நடத்துகிற தொழிற்சாலைகள்கூட, — தனியார்கள் எவ்வளவோ இன்னல்களுக்கு இடையே தொழிற்சாலைகளை ஓரளவுக்கு நடத்தினாலும் — அரசு நடத்துகிற தொழிற்சாலை— மிகப் பரிதாபத்திற்குரிய நிலையில், இன்றைக்கு வேலை நடக்கிறதா, இல்லையா என்ற கேள்வியோடு வெறும் கட்டடங்களாகக் காட்சி தருகின்ற காட்சிகளையெல்லாம் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 10-55

உதாரணமாக, என்னுடைய தொகுதியிலுள்ள விண்ணமங்கலத்தில் தோல் தொழிற்சாலை ஒன்று அரசுத் துறையால் நடத்தப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக, ஏறக்குறைய 600 பேர் வேலை செய்துகொண்டிருந்த அந்தத் தொழிற்சாலையில் இன்றைக்கு வேலையே இல்லை. ஆட்களே இல்லையென்ற நிலை மட்டுமல்ல, அந்தத் தொழிற்சாலையை நிர்வாகம் செய்யக்கூடிய நிர்வாகிகள்கூட — நான் இரண்டு தினங்களுக்கு முன்பு சென்று பார்த்ததில் ஓரே ஒரு அலுவலர்தான் அங்கே இருக்கிறார். அந்தத் தொழிற்சாலையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற கொள்முதல் கொள்கை, விற்பனைக் கொள்கை, உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களை ஏற்றுமதி

செய்வதற்காக அவர்கள் மேற்கொண்டிருக்கின்ற முயற்சிகள், இவையெல்லாம் பார்க்கின்றபோது, பொறுப்புணர்ச்சியோடு அங்கே செயல்படுகின்றார்களா, திட்டமிட்டுச் செயல்படுகின்றார்களா, நாம் செய்திருக்கின்ற மூலதனத்திற்கேற்ப அங்கே செயல் திட்டங்கள் வகுக்கப்படுகின்றனவா என்பதெல்லாம் நீண்ட நாட்களுக்கு முன்பே கேள்விக் குறியாக ஆக்கப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரியது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன், நம்முடைய நிர்வாகத்தில், அரசின் நேரடி நிர்வாகத்தில் இருக்கக்கூடிய இந்த அமைப்புகள் யாருக்காக நடத்தப்படுகின்றன என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். முக்கியமாக, அடிப்படையாக இருக்க வேண்டியது வேலைவாய்ப்பு. சில இடங்களில் வேலைவாய்ப்பினுடைய வாய்ப்பைப் பெருக்க வேண்டும் என்பதற்காகத்தான், அரசே மூலதனம் செய்து, தொழிற்சாலைகளை உருவாக்குகின்றது. அப்பேற்பட்ட தொழிற்சாலைகளிலே கணிக்கப்பட வேண்டிய ஒன்றுதான் விண்ணமங்கலத்திலே இருக்கக்கூடிய தோல் தொழிற்சாலையாகும். அதிலே எப்படி நீங்கள் கொள்முதல் செய்கிறீர்கள்? யாரிடத்திலே நீங்கள் வாங்குகின்றீர்கள்? வாங்கும்போது முறையாக வாங்குகிறார்களா? எந்தவகையில் நாம் கொள்முதல் கொள்கையை வகுத்து, எப்படி வாங்க வேண்டும் என்பதெல்லாம் இல்லாமல், தொழிற்சாலை நடக்க வேண்டும், இலாபமாக நடக்க வேண்டும், இலாபமாக நடக்காவிட்டாலும், இருக்கின்ற வேலையை நிலைநிறுத்துகின்ற வகையிலே தொழிற்சாலைகள் நடைபெற வேண்டும் என்பதையெல்லாம் மறந்து, அங்கேயிருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு வேட்டைக்காடாக ஒரு தொழிற்சாலை நடக்கிறது, அதை அரசு பார்த்துக்கொண்டிருக்கிறதென்றால்......

* **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விண்ணமங்கலத்தில் இருக்கின்ற தோல் பதனிடும் தொழிற்சாலை இயங்காமல் இருப்பதைச் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், நம்முடைய அரசினுடைய பொதுத் துறை நிறுவனமான 'டால்கோ' மூலமாக எடுக்கப்படுகின்ற பல்வேறு நடவடிக்கைகளிலே, மூடுகின்ற நிலையிலே இருந்த அந்தத் தோல் வளர்ச்சிக் கழகத்தை முறையாக டெண்டர் கொடுத்து, அதிலே அரசுக்குக் கட்டுப்படியான விலையிலே தோல் கொள்முதல் செய்து, அதன்மூலமாக இலாபம் ஈட்டுகின்ற பணியை இன்றைக்கு இந்த நிறுவனம் செய்து வருகிறது. அதிலே அவர்கள் சொன்னதைப்போல,



விண்ணமங்கலத்தைப் பொறுத்த அளவில், ஏற்கெனவே இந்த அரசு டால்கோவிலே இருக்கின்ற தொழிலாளர்கள் யாருக்குமே வேலை இழப்பு ஏற்படாமல் தொடர்ந்து அரசுத் துறையிலே இருக்கின்ற, காவல் துறையிலே இருக்கின்ற காவலர்கள் மற்றும் இன்னும் பிற துறையிலே இருக்கின்றவர்களுக்கு Shoe, பைகள், தோல் பைகள் தயாரிப்பதிலே இந்த நிறுவனம் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இந்த நிறுவனம் அப்படி ஈடுபட்டதோடு மட்டுமல்லாமல், பழைய முறையைவிட, இன்றைக்கு காவல் துறையிலே முழு அளவிலே ஆர்டர் பெற்று, பல கோடி ரூபாய்க்கு ஆர்டர் பெற்று, அதன் மூலமாக ஒரு குறைந்தபட்ச இலாபத்தையாவது ஈட்டி, பழைய அளவிற்கு இல்லாமல் - ஏற்கெனவே தெரியும்— மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் Free chappal என்று ஒன்று இருந்தது. கடந்த ஆட்சியிலே Free chappal—பள்ளி மாணவி - மாணவர்களுக்கு இலவசமாக கொடுத்த காலணிகளால் என்னென்ன தவறுகள் நடந்தன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். ஆனால், இன்றைய தினத்திலே டால்கோ மற்றவர்களைப்போல போட்டி போட்டு, சந்தையிலே பொதுவாக போட்டி போட்டு வியாபாரம் செய்து அதன்மூலம் இலாபத்தை ஈட்டி வருகிறது. விண்ணமங்கலம் தொழிற் சாலையைப் பொறுத்த அளவில், இப்போது அது இயங்க முடியாமல் இருக்கின்ற காரணத்தினால், அதை லீஸுக்கு விடலாம் என்று முடிவு செய்து, அதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் எல்லாம் கோரப்பட்டு, அதிகமான ஒப்பந்தப்புள்ளி கோரியவருக்கு வழங்குவதற்கு அரசு அதற்குரிய ஏற்பாட்டினைச் செய்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. லீஸுக்கு விடப் போகிறார்கள் என்பது எனக்கும் சொல்லப்பட்டு இருக்கிறது. லீஸுக்கு அரசு விடுவதற்கான கட்டாயச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே திட்டமிட்டு எல்லோரும் சேர்ந்துகொண்டு செய்த சதியின் விளைவாகத்தான் லீஸுக்கு விட வேண்டுமென்ற நிலைக்கு அரசு வந்து இருக்கிறது. அதைக் கேட்டு நான் மிகவும் வேதனை அடைகிறேன். அரசு செய்ய வேண்டியது, அரசுத் துறையில் உருவாக்கப்பட்ட ஒரு தொழிற்சாலை, அதுவும் வளர்ச்சிக் கழகம், வளர்ச்சிக்காக திட்டம் வகுக்காமல், பல ஆண்டுகள் தளர்ச்சிக்காகவே

வேலை செய்து, அது தளர்ந்து, தளர்ந்து தனியாரிடத்திலே விட வேண்டுமென்ற திட்டமிட்ட செயலில் அவர்கள் வெற்றி பெற்று இருக்கிறார்களே என்றுதான் நான் வேதனை அடைகிறேன்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, இந்த அரசு தனியாருக்கு எதையும் தாரை வார்த்துக் கொடுக்காது, ஓர் அடி இடத்தைக்கூட சிறு தொழில் துறையிலே நிச்சயமாக தாரை வார்த்துக் கொடுக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டாவதாக, இதை லீஸுக்கு விட வேண்டுமென்று அரசுக்கு அவசியம் இல்லை. அவர்கள் கவலை அளிப்பதாகச் சொன்னார்கள். ஏதோ திட்டமிட்டு இந்தத் துறையிலே இருக்கின்ற அரசு அதிகாரிகள், விண்ணமங்கலத்தினுடைய தொழிற் சாலையைத் தனியாருக்கு லீஸுக்கு விடுவதற்காக முயற்சித்ததாகச் சொல்கின்றார்கள். நிச்சயமாக விடமாட்டோம். அரசு கொள்கையளவிலே லீஸுக்கு விட வேண்டுமென்று சொல்வதற்குக் காரணம், ஒரு மாதத்திற்கு 2 லட்சம் ரூபாய் வருமானம் வந்தால், வருடத்திற்கு 24 இலட்சம் அந்த தொழிற்சாலையை இயக்குவதற்கு, போதுமான தொழிலாளர்களை நியமித்தால் அதற்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும்; ஓராண்டு காலத்திற்கு தொடர்ந்து அவர்கள் வேலையில் அமர்த்தப்பட்டால், அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும். இப்படி அரசுக்கு இலாபம் இல்லாமல் இருக்கின்ற அந்த டால்கோ மீண்டும் மீண்டும் தொழிலாளர்களை நியமனம் செய்து, அதற்குப் போதுமான வாய்ப்புகள் கிடைக்காமல் போய்விட்டால், அரசுக்கு சுமைதான் அதிகமாகும். ஏற்கெனவே மூடுவதாகத்தான் இருந்தார்கள். மூடாமல் இருப்பதற்குக் காரணமே, இந்த அரசினுடைய முயற்சிதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். 3 ஆண்டுக்காலமாக டால்கோ மூடாமல் இருப்பதற்குக் காரணம் எங்களுடைய விடாமுயற்சிதான். நிச்சயமாக, இந்தத் துறையின்கீழ் டான்சியாக இருந்தாலும்சரி, டால்கோவாக இருந்தாலும் சரி சிட்கோவாக இருந்தாலும் சரி, அத்தனையும் நஷ்டத்தில்தான் இருந்தன, ஆனால், அத்தனையையும், நஷ்டத்தில் இருந்த அந்த நிறுவனங்களை மூடக் கூடாது என்று பெருமுயற்சி எடுத்து, இன்று உயிர்ப்பித்துக் கொண்டிருக்கிறது கலைஞர் ஆட்சி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.





**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தந்த விளக்கம் எனக்கும் புரியும். 3 ஆண்டுகளாக தனியாருக்கு வழங்கக்கூடாது என்று அரசு கொண்டிருந்த எண்ணத்தையும் அறிவேன். அதேநேரத்தில், அரசு இறுதியாக இதை தாரை வார்த்துக் கொடுக்கக்கூடிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட வேண்டும் என்ற திட்டமிட்ட சதியையும் நான் அறிவேன். நாம் செய்ய வேண்டியது என்ன? பலவீனம் அடைந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு தொழிற்சாலையை ஊக்கப்படுத்தி மீண்டும் உயிர்ப்பித்து optimum level of production என்று சொல்லக்கூடிய அளவுக்கு, செய்யப்பட்டு இருக்கிற மூலதனம், கொடுக்கப்பட்டு இருக்கிற வேலைகள், செய்யப்படுகிற கொள்முதல்கள் போன்றவற்றுக்கு ஏற்ப அங்கு வேலை தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று எடுக்க வேண்டிய முயற்சிகளை நாம் எடுக்கவில்லையோ என்றுதான் நான் கேள்வி கேட்கிறேனே தவிர....

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களே, ஏற்கெனவே பேச்சினுடைய தொடக்கத்திலே சொன்னார்கள். மாண்புமிகு துறை அமைச்சர், இந்தத் தோல் தொழில் திண்டுக்கல்லில் இருக்கின்ற காரணத்தால், முழுவதுமாகப் புரிந்தவர் என்பதைத் தெளிவாக அவைக்கு எடுத்துச் சொன்னார்கள். நான் சொல்வது, ஏற்கெனவே டான்சி, டால்கோ ஆகியவற்றில் இருக்கின்ற பணியாளர்களைக் குறைக்க வேண்டும்; voluntary retirement—ல் போக வேண்டுமென்று சொல்லி பல பேர் எழுதிக் கொடுத்து போய்க் கொண்டிருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், எதிர்காலம் இல்லை என்று. ஏற்கெனவே இருந்த ஆட்சி பல பேரை அனுப்பிவிட்டது. நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு 1996-ல் வந்த உடனே, ஒருவரைக்கூட வீட்டுக்கு அனுப்பவில்லை; எப்படியாவது, கண்டிப்பாக இதை வெற்றிகரமாக நடத்தி இலாபத்திற்கு கொண்டுவர வேண்டும் என்று முயற்சித்தோம். இன்னொரு உதாரணத்தையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஒருவரை வேலைக்குச் சேர்த்தால், ஓராண்டுகாலம் தொடர்ந்து தற்காலிகப் பணியில் நியமிக்கப்பட்டாலும், பிறகு அவர்களை அரசு நிரந்தரமாக்க வேண்டும் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாதது அல்ல. பிறகு சம்பள உயர்வு கொடுக்க வேண்டும்; எல்லா சலுகைகளையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். ஆனால், அதற்குரிய வாய்ப்புகள்— Sources — இருக்கின்றனவா

[திரு. இ. பெரியசாமி] [1999 ஏப்ரல் 28

என்றால், இப்போது சந்தையில்— அவருக்கே தெரியும்— Bata கம்பெனி இருக்கிறது; இன்னும் பிற கம்பெனிகள் எல்லாம் இருக்கின்றன.

முற்பகல் 11-05

இப்போது போட்டி போடக்கூடிய அளவிற்கு நவீனமயமான இயந்திரங்கள் தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிந்துகொள்ள வேண்டும். தனியாரோடு போட்டி போடுகின்ற அளவிற்கு நம்முடைய இயந்திரங்களினுடைய அமைப்பு, தொழிற்சாலைகளினுடைய அமைப்பு, தனியார் அளவிற்கு உயர்த்தப்படுகிற அளவிற்கு, அரசிற்கு இன்றைய பொருளாதார நிலை இல்லை. அதை அவர்களே அறிவார்கள். இப்போது தனியார்கள் சிறப்பான, நவீன முறையில் நடத்துகிற தொழிற்சாலைகளே நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதையும் அவர்கள் அறிவார்கள். ஆகவே, ஒருவரைச் சேர்த்தோம் என்றால் அவரை நிரந்தரம் செய்ய வேண்டும். அதற்கு அரசினுடைய முதலீட்டைப் போட வேண்டியிருக்கிறது. தொழிற்சாலையை நவீனப்படுத்த வேண்டும், அங்கேயிருக்கக்கூடிய இயந்திரங்களை நவீனப்படுத்த வேண்டும். இப்படிப் பல்வேறு சுமைகள் அரசிற்கு வருகின்ற காரணத்தால்தான் அதை நாங்கள் லீஸுக்கு விட வேண்டுமென்று சொன்னோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிலே தவறு இருப்பதாக நினைத்தால், நிச்சயமாக நான் இங்கேயே அறிவிக்கிறேன், கண்டிப்பாக அரசு லீசுக்கே விடாது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** துணைத் தலைவர் அவர்களே, இதைப்போன்று ஒரேயொரு தொழிற்சாலையை வைத்து என்னுடைய முழு பேச்சையும் நான் அமைத்துக்கொள்ள விரும்பாத காரணத்தால்— எவ்வளவோ விஷயங்கள் நமக்குத் தெரிகின்றன. (மணியடிக்கப்பெற்றது) பொது நிலையிலே. ஆனால் சிறப்பு நிலையிலே, தெரியாத விஷயங்களையும் தெரியும் என்று காட்டிக் கொள்கின்ற நிலையும் நாட்டிலே இருக்கிறது என்பதையும் நான் அறிவேன். எனவே நான் கேட்டுக்கொள்வது, இந்தத் தொழிற்சாலை தொடங்கியபோது 650 தொழிலாளர்கள் அங்கே வேலை செய்து கொண்டிருந்தார்கள். இப்போது 650 பேர்களும் வேலையில்லாமல் நிர்கதியாக, நடு வீதியிலே நிற்கிறார்கள். அதற்கு நாம் எடுத்த நடவடிக்கை என்ன?

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல 650 தொழிலாளர்கள், நிரந்தரத் தொழிலாளர்கள் அல்ல. அவர்கள்



1999 ஏப்ரல் 28] [திரு. இ. பெரியசாமி]

எல்லோரையும் பணியிருக்கும்போது தற்காலிகமாக அழைத்துவிட்டு, பின்னால் வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். ஆனால் நிரந்தரமாக இருக்கக்கூடிய தொழிலாளர்கள் எவரையும் வீட்டிற்கு அனுப்பவில்லை இந்த அரசு என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** துணைத் தலைவர் அவர்கள், இதிலே நமக்கு சிக்கல் இருக்கிறது. நிரந்தரத் தற்காலிகத் தொழிலாளர்கள் நாட்டிலே இப்போது இருந்து கொண்டிருக்கிறார்கள். நான் பேசுவது தற்காலிகங்களுக்காக அல்ல; தற்குறிகளுக்காகவும் அல்ல. நிரந்தரமாக நித்தம், நித்தம் தற்காலிகமானவர்கள் என்றே அவர்கள் தொடர்கிறார்களே, அந்த நிரந்தரத் தற்காலிகங்கள் எத்தனை நாட்கள் தற்காலிகமாகத் தொழில் செய்வது? அந்தத் தொழிற்சாலை எத்தனை ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்டது? தொடக்கம் முதல் தற்காலிகம், அடுத்தடுத்துத் தற்காலிகம், நிரந்தரத் தற்காலிகம். அதையும் மாற்றி தயவுசெய்து தொடக்கத்தில் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்களோ, இன்றைக்கும் தற்காலிகங்களாக தொடர்கிறார்களோ அவர்களைத் தயவுசெய்து நிரந்தரமாக ஆக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** இல்லை, இல்லை. துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல சட்டத்திற்கு உட்பட்டு, தற்காலிகமாகப் பணியாற்றியவர்களை நாங்கள் நிரந்தரமாக்கி இருக்கிறோம். அதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்னிடத்திலே இப்போது புள்ளிவிவரம் இல்லை. நான் பொறுப்பேற்றதற்குப் பின்னால் ஏற்கெனவே தற்காலிகமாக இருந்தவர்களை நிரந்தரமாகப் பணியாற்றுவதற்கு இந்த அரசு அனுமதித்து இருக்கிறது. ஆனால், பணி அதிகமாக வருகின்ற காலக்கட்டத்திலே 5 கோடி, 6 கோடி என்று ஆர்டர் கிடைத்தால் 1 மாதம், 2 மாதம் பணி செய்யக்கூடிய பணியாளர்களை, நிரந்தரமாக்க முடியாது. அதுதான் உண்மையான நிலை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நிரந்தரமில்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். யாருமே நிரந்தரமில்லை. அதுவும் எனக்குத் தெரியும். ஆனால், வாழும் காலத்திலே ஒழுங்காக, நிம்மதியாக வாழ வேண்டும். அதற்காகத்தான் நம்முடைய முயற்சி. எல்லோரும்

வருகிறோம், போகிறோம். அது விதிக்கப்பட்ட ஒன்று. நிரந்தரம் என்பது யாருக்கும் இல்லை. ஆனால் இருக்கும்போது ஒவ்வொரு நாளும் அவன் தற்காலிகம் என்று இருக்காமல், ஓரளவிற்கு வருங்காலம் இருக்கிறது என்று எண்ணி அவன் வாழ வேண்டும். அதற்கு அரசு உத்தரவாதம் தர வேண்டும். அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதான் என்னுடைய கோரிக்கை.

அடுத்து, பத்திரப் பதிவுத் துறை. பத்திரப் பதிவுத் துறை விரிவாகப் பேசப்பட வேண்டிய ஒன்று. மாண்புமிகு உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். அந்த விவரங்களுக்குள் எல்லாம் நான் போக விரும்பவில்லை. ஆனால், பத்திரப் பதிவுத்துறை, ஒரு பொருள், ஒரு சொத்து, அதற்கான உரிமை நிரந்தரமாக்கப்படுவது அல்லது குடும்பத்திலேயே நிரந்தரமாக்கப்படுவதற்கு நாம் செய்திருக்கிற ஒரு ஏற்பாடாகும், எழுத்து மூலமாக. (மணியடிக்கப்பெற்றது) ஆனால் அதிலே என்ன நடக்கிறது? தயவு செய்து மாண்புமிகு அமைச்சரை நான் கேட்கிறேன். வக்ஃபு சொத்துக்கள், தரும சொத்துக்கள் நிரந்தரமாக, ஒரு நிலையான நன்மாறாயம் செய்யப்பட வேண்டுமென்று, தானமாக வழங்கப்பட்டு, அவற்றை விற்பனை செய்யக் கூடாது, வில்லங்கம் செய்யக்கூடாது என்பதற்காக ஓர் ஏற்பாட்டை முன்னோர்கள் செய்திருக்கிறார்கள். ஆனால், தெருவிலே போகின்றவர்கள்கூட, கோயில் சொத்தோ, மசூதி சொத்தோ அல்லது தர்கா சொத்தோ, என்னுடைய சொத்து என்று சொல்லிவிட்டால் அந்தச் சொத்தைப் பதிவு செய்து விடுகிறார்கள். அவர்களுக்குத் தேவையானது பதிவு செய்ய வேண்டும். பதிவுக் கட்டணத்தை வசூலிக்க வேண்டும். அது எனக்குத் தெரியும். ஆனால் சில ஏற்பாடுகள் இருக்கின்றன. வக்ஃபு சொத்தாக இருந்தால் அதை அவர்கள் பதிவு செய்யக்கூடாது. அதற்குப் பிறகு.....

முற்பகல் 11-10

* **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவேண்டும். வக்ஃபு சொத்தையோ அல்லது அரசாங்கச் சொத்தையோ அல்லது கோயில் சொத்தையோ பதிவு செய்யவேண்டுமென்றால், அதற்கு சார்-பதிவாளர்கள், அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பவேண்டுமென்று ஏற்கெனவே இந்த அவையிலேயே அறிவிக்கப்பட்டு, அது நடைமுறைப்படுத்தப்பட்டு இப்போது கடைபிடிக்கப்பட்டு வருகிறது. நாங்கள் எல்லா சார்-பதிவாளர் அலுவலகங்களுக்கும் அதற்காகவே,





'எந்த அரசு நிறுவன நிலமாக இருந்தாலும், வக்ஃபு நிலமாக இருந்தாலும் ,சரி, கோயில் நிலமாக இருந்தாலும் சரி, இனிமேல் பதிவு செய்வதாக இருந்தால், சார்-பதிவாளர் அலுவலகத்திலிருந்து சம்பந்தப்பட்ட துறைக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பப்படும்' என்று இந்த அவையிலேயே அறிவிக்கப்பட்டு, அந்த நடைமுறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** அரசு வெளியிட்டிருக்கிற உத்தரவு எனக்கும் தெரியும். காகிதத்தில் இருக்கிறது. ஆனால் காரியத்தில் இல்லை. எஸ்.ஆர்.ஓ.-க்களில் அப்படி நடப்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள்கூட அன்றைக்கு எழுப்பினார்கள். வேலூரிலே ஒரு மசூதி இருக்கிறது. மசூதிக்கு எதிராக House என்று சொல்லக்கூடிய குளம் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. அதைப் பத்திரப் பதிவுத் துறையினர் பதிவு செய்துவிட்டார்கள். பதிவு செய்யப்பட்டுவிட்ட காரணத்தினால், மசூதிக்காரர்களோடு சண்டையிட்டு அந்தக் குளத்தைத் தூர்த்து பெரிய கட்டடத்தையே உருவாக்கிவிட்டார்கள். ஏறக்குறைய பல கோடி ரூபாய் மதிப்புள்ள 9 ஏக்கர் நிலம் வேலூரிலே சாயி காலனி என்று சொல்லப்படுகின்ற சாயிநாதபுரத்திலே ரிஜிஸ்தர் செய்துவிட்டார்கள். (மணியடிக்கப்பெற்றது) இப்படி உங்களுடைய கட்டளைகள் மீறப்படுகின்றன. அதற்குப் பிறகு நாங்கள் வல்லடி வழக்குகளிலே ஈடுபடவேண்டும். வசதி இருப்பவர்கள் வழக்கு மன்றங்களுக்குச் செல்லலாம். வசதி இல்லாதவர்கள் வழக்குமன்றங்களுக்குச் செல்ல முடியுமா? பேசாமல் இருந்துவிடுகிறார்கள். எனவே அதை . . . .

* **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, எந்தச் சார்-பதிவாளராவது அதை மீறியிருந்தால், அதை எங்களுக்கு இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் தகவல் கொடுத்திருப்பதைப் போல, அதன் அடிப்படையில் எழுதிக் கொடுப்பாரானால், உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** துணைத் தலைவர் அவர்களே, பொதுவான ஓர் உத்தரவைத் துறையினர் போடவேண்டும். அப்படி நீங்கள் செய்வீர்கள் என்று சொன்னால், பெரிய கட்டுக்களாக நான் கொண்டு வந்து சேர்ப்பித்து விடுவேன். அதையெல்லாம் பார்ப்பதற்குக்கூட உங்களுக்கு நேரம் இருக்காது. பொதுவாக இந்தச் சூழ்நிலையில் இப்போது அது அதிகம் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால்,

தயவுசெய்து மாண்புமிகு அமைச்சரை நான் மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்வது—ஒரு பொது ஜி.ஓ.-வைப் போடுங்கள். அப்படிப் போட்டு, அதையெல்லாம் தடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், 1984-லே ஒரு ஜி.ஓ. இருந்தது. மிகப் பெரிய குளறுபடிகள் செய்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் ஆய்வு செய்து புதிய ஜி.ஓ. போட்டு, தருமச் சொத்துக்கள் இப்படி பாராதீனம் ஆகக்கூடாது; எஸ்.ஆர்.ஓ.-க்களில் மிகக் கவனமாக நடந்துகொள்ள வேண்டுமென்று ஓர் உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் என்னுடைய பேச்சை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.எம். ராமசாமி.

**திரு. ஏ.எம். ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டுக்கான ஊரகத் தொழில் துறை மற்றும் பத்திரப் பதிவுத் துறை பற்றிய மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தமிழக முதல்வர், தமிழினத் தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாநில அளவில் சிறுதொழில் மேம்பாட்டுக்காகத் தமிழக அரசு பல்வேறு நிதியுதவி கொடுத்து, தொழில்களை ஊக்கப்படுத்தியுள்ளது. அதுபோலவே, ஒவ்வொரு வட்டத்திலும் தொழிற்பேட்டை என்ற வகையில், சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்க வேண்டுமென்று கடந்த 3 ஆண்டுகளாகவே கேட்டுக்கொண்டிருக்கிறேன். இந்த நிதியாண்டிலாவது எங்கள் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டையை அமைக்க ஆவன செய்யும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஏழை எளிய, நடுத்தர, சாதாரண சாமானியவாழ் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த, இதுவரையில் தமிழக வரலாற்றிலேயே யாரும் செய்யாத புதிய திட்டமான அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, சாலை வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி மற்றும் பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள் ஆகிய வசதிகளை தமிழக அரசு செய்துள்ளது.

முற்பகல் 11-15

அதுபோலவே, ஆத்தூர் தொகுதியிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு ஏதுவாக, பைத்தூர் கிராமத்தில்,



பைத்தூர் ஆற்றில் எப்போதுமே வடியாமல் இருக்கின்ற நீர்வீழ்ச்சி அமைந்துள்ளதால், அந்தக் கிராமத்தை மையமாக வைத்து, பைத்தூரிலிருந்து ஐயனார்பாளையம், பாய்கடை, பைத்தூர், பைத்தூர் புதூர், புங்கவாடி புதூர், புங்கவாடி, மஞ்சனி, மஞ்சனி ஏரிக்காடு, வளையமாதேவி, செக்காரமேடு, அம்மன் நகர், காந்திபுரம் ஆகிய இடங்களுக்கு, இந்த 12 கிராமங்களைச் சேர்த்து, இந்தத் திட்டத்தை அமல்படுத்தினால் அனைத்துக் கிராமங்களிலும் குடிநீர்ப் பிரச்சினை எப்போதுமே இல்லாத நிலை ஏற்படும் என்பதால் இந்த நிதியாண்டிலேயே இதனை அமல்படுத்த ஆவன செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எங்கள் தொகுதியில் அமைந்துள்ள மற்றொரு கிராமமான முட்டல் கிராமத்திலே கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அமல்படுத்த ஏதுவாக, அங்கே எப்போதும் வற்றாத ஏரி அமைந்துள்ளது. அந்த ஏரியின் அருகில் ஒரு கிணறு அமைத்து, அதிலிருந்து தொடர்ச்சியாக உள்ள நரிக்குறவன் காலனி, அம்மன்பாளையம், அம்மன்பாளையம் தாழ்த்தப்பட்ட பகுதி, கல்லாநத்தம், துளுக்கானூர், துளுக்கானூர் தாழ்த்தப்பட்ட பகுதி ஆகிய இடங்களில் எப்போதுமே குடிநீர்ப் பிரச்சினை ஏற்படாமல் இருக்க, அந்தத் திட்டத்தை இந்த நிதியாண்டிலே அமல்படுத்த ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி) தலைமை]

அதுமட்டுமல்லாமல், எங்களுடைய தொகுதியைச் சேர்ந்த இராமநாயக்கன்பாளையம் கல்லாற்றில், கல்லாறு அணைத் திட்டம் ஒன்று கடந்த 1989-90 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டும், இதுவரையில் அந்த அணையை அமைப்பதற்கான அனுமதி வழங்கப்படாமல் உள்ளது. நடப்பு ஆண்டிலே அதற்காக 9 கோடியே 60 இலட்சம் ரூபாயில் மதிப்பீடு செய்யப்பட்டு, திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த அணையின் மூலம் சுமார் 1100 ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறும். அதுமட்டுமின்றி, ஆத்தூர் நகராட்சிக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை எப்போதுமே ஏற்படாது. அதுமட்டுமல்லாமல் அந்தப் பகுதியிலுள்ள தென்னங்குடிபாளையம் ஏரி, ஐயனார் கோயில் ஏரி, கல்லாநத்தம் ஏரி, துளுக்கானூர் ஏரி ஆகிய 4 ஏரிகளில் தண்ணீர் நிரம்புவதற்கு வசதியாக இருக்கும்.

[திரு. ஏ.எம். ராமசாமி] [1999 ஏப்ரல் 28

அதுமட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளின் கிணறுகளில் நீர்மட்டம் உயரும்.

மேலும், எனது தொகுதியைச் சேர்ந்த பெரியகல்ராயன் மலையில், மேல்நாடு, கீழ்நாடு என்ற பகுதியில் சுமார் 32 கிராமங்கள் உள்ளன. மலைவாழ் மக்கள் அங்கே வசித்து வருகிறார்கள். அந்தக் கிராமங்களுக்குச் சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி ஆகிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சேலம் மாவட்டம், நாமக்கல் மாவட்டம், தருமபுரி மாவட்டம் ஆகிய 3 மாவட்டங்களிலும் சுமார் 900 ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் தயாரிக்கும் ஆலைகள் உள்ளன. அவற்றின் கழிவுநீர் வெளியே போவதற்கு, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் சுத்திகரிப்பு ஆலை அமைத்து, கழிவுநீரை வெளியேற்ற வேண்டுமென்று சொல்லி நீதிமன்றம் தடை விதித்துள்ளது. அதனுடைய கட்டுமானப் பணிக்கு சுமார் 10 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆகவே, அந்தக் கட்டுமானப் பணிக்கு ஆகும் செலவினத்தை அரசு மானியமாக வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு எனது உரையை முடிக்கின்றேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி)**: திரு. கே. தங்கமணி.

***திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள்—நிருவாகம், ஆவணப் பதிவு, ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எனது கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ 40 இலட்சம் பேர் படித்துவிட்டு வேலைவேண்டி வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்கிறார்கள். வேலை வழங்கப்பட வேண்டியோர் 40 இலட்சம் பேர் இருக்கின்ற இந்த மாநிலத்தில் ஊரகத் தொழில் துறையின் வளர்ச்சி குறித்து முழு அளவில் கவனம் செலுத்த வேண்டியது நம்முடைய மாநில அரசின் பொறுப்பும், கடமையும் ஆகும். ஊரகத் தொழில் துறையில் எது முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஆய்கின்றபோது, குறுந்தொழிலில் ஈடுபட்டுள்ள இரண்டு இலட்சத்திற்கும் மேல் உள்ள தொழிற்சாலைகள் 90 சதவிகிதத்தைப் பெற்றுள்ளன.



1999 ஏப்ரல் 28] [திரு. கே. தங்கமணி]

தமிழ்நாட்டில் சிறு தொழில்கள் சுமார் 22 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்திருக்கின்றன. அதில் குறுந்தொழில்கள் 83 சதவிகித வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுத்திருக்கின்றன. எனவே, இந்தக் குறுந்தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதில் அதிகக் கவனத்தைச் செலுத்தி, தொழில் முனைவோர்களுக்கான இடர்பாடுகளைப் போக்க, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து மாநில அரசு தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சிறுதொழில் மற்றும் குறுந்தொழில்களைப் பொறுத்தவரையில், தொழில் முனைவோர்கள் நிதியுதவியைப் பெறுவதில் பெரும் இடர்பாடுகளை அடைகின்றனர். மாநில அரசு, நிதியுதவி பெறுவதிலுள்ள நிபந்தனைகளைத் தளர்த்தி, காலம் அதிகரிக்காமல், நிதியுதவி வேகமாகக் கிடைப்பதற்கான வழிமுறைகளை உருவாக்க வேண்டும்.

முற்பகல் 11-20

அடுத்து, ஊரகத் தொழில் துறை மூலமாக உருவாக்கப்படும் தொழிற்சாலைகளை, மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகளில்தான் உருவாக்க வேண்டும். குறிப்பாக, என்னுடைய மானாமதுரை தொகுதியில், திருபுவனம் பகுதியில் ஏராளமான தேங்காய் உற்பத்தி இருக்கிறது. தேங்காய் உற்பத்தியைக் கொண்டு தேங்காய் எண்ணெய் தொழிற்சாலை ஏற்படுத்தித்தரக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மேற்படி தேங்காய் மட்டையிலிருந்து, தேங்காய் நார் மூலம் கயிறு தொழிற்சாலையும் ஊரகத் தொழில் துறை மூலமாக ஏற்படுத்தித்தரக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தொழில் முதலீட்டுக் கழகத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு அரசு சார்பு நிறுவனமாகும். ஏறத்தாழ 50 ஆண்டுகள் பணியாற்றி பொன்விழா ஆண்டில் நுழைந்து இருக்கிற பெருமைமிகு நிறுவனமாகும். இந்த நிறுவனத்தின் பணியானது, வங்கி சார்புப் பணி என்கிற காரணத்தால், 1988 ஆம் ஆண்டுக்கு முன்னர் வரை, வங்கி ஊழியருக்கான ஊதிய விகிதம் நடைமுறையில் இருந்தது. 1988 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் ஊதிய விகிதம் அரசால் நிர்ணயிக்கப்பட்டது. அவ்வாறு நிர்ணயிக்கப்பட்டபோது, உதவி மேலாளர் மற்றும் அதற்கு மேலான உயர்நிலை அலுவலர்களுக்கு ஊதிய விகிதம் குறைத்து

நிர்ணயிக்கப்பட்டது. டிட்கோ மற்றும் சிட்கோ போன்ற அரசு சார்ந்த சகோதர நிறுவனங்களில் உள்ளதைவிடக் குறைவான சம்பள விகிதம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மேலே குறித்த ஊதிய விகிதக் குறைபாட்டை எடுத்துச் சொல்லி, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக உயர்நிலை அலுவலர்கள், இயக்குநர் குழுவிடம் முறையிட்டனர். அக்கோரிக்கையில் உள்ள நியாயத்தை ஏற்று, டிட்கோ மற்றும் சிட்கோ ஆகியவற்றில் பணிபுரிகின்ற உயர்நிலை அலுவலர்களுக்கு இணையான ஊதிய விகிதத்தை 1-1-1988 ஆம் தேதியிலிருந்து அமல்படுத்துவதற்கான முடிவை 1994 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இயக்குநர் குழு செயல்படுத்தியது. இந்நிலையில் 5-வது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலான ஊதிய விகிதத்தை நிறைவேற்றுகிறபோது, 1988 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அரசு நிர்ணயித்த சம்பள விகித அடிப்படையிலேயே நிர்ணயிக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது. இதன் விளைவாக, தற்சமயம் பெறுகின்ற சம்பள விகிதம், குறைந்த சம்பள விகிதமாக நிர்ணயிக்கப்படுகிறது. மேலும், டிட்கோ, சிட்கோ ஆகியவற்றில் உள்ள உயர்நிலை அலுவலர்கள் பெறுகின்ற சம்பள விகிதத்தைவிடக் குறைவாக நிர்ணயிக்கப்படுகின்ற இந்தக் குறைபாடும் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக உயர்நிலை அலுவலர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று, டிட்கோ, சிட்கோ போன்ற அரசு நிறுவனங்களில் உள்ள உயர்நிலை அலுவலர்களுக்கு வழங்கப்படுவதற்கு இணையான ஊதிய விகிதத்தை வழங்க வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றையதினம் சீட்டுக் கம்பெனிகள் தமிழ்நாட்டில் புற்றீசல்கள்போல வளர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சீட்டுக் கம்பெனிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் மக்கள் பல இலட்சக்கணக்கான ரூபாய்களைப் போட்டு, இன்று ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். சீட்டுக் கம்பெனிகள் மக்களைப் பரவலாக ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன. தமிழக அரசு அந்த மோசடிக் கம்பெனிகள் மீதும், நிதி நிறுவனங்களின் மீதும் நடவடிக்கை எடுத்து, அவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஏமாற்றப்பட்ட மக்களின் பணத்தை மீட்டுத் தரவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆவணப் பதிவுத் துறை என்பது ஒரு மூத்த துறையாகும். பழமையானது. அதனால்தானோ என்னவோ, ஆவணப் பதிவு அலுவலகங்கள் மிகவும் பழமையானதாக உள்ளன எனக் கருதுகிறேன். அந்தக் கட்டடங்களைப் புதுப்பிக்கவும், புதிதாக உருவாக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலத்தின் மதிப்பு நகர்ப்புறங்களில் உயர்கிறது. கிராமப்புறங்களிலே நிலத்தின் மதிப்பு அந்த அளவுக்கு உயர்வதில்லை. ஆனால் அதிகாரிகள், பதிவுக்கு வருகின்றபோது, அதிக அளவு உயர்த்திவிடுகிறார்கள். நிலத்தின் மதிப்பைவிட பதியக்கூடிய மதிப்பு கூடுகிறது. (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். குறிப்பாக, குடியிருப்பிற்கு அருகாமையிலுள்ள விளை நிலங்களின் மதிப்பைக்கூட சதுர அடிக்கணக்கில் மாற்றி, பதிவு செய்யும் நிலை உள்ளது. இந்த நிலை அமல்படுத்தப்படுவதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

என்னுடைய மானாமதுரை தொகுதியிலே மானாமதுரையிலும், திருபுவனத்திலும் உள்ள சார்-பதிவாளர் அலுவலகங்கள் மிகவும் பழமையானவை. போதுமான இடவசதி இல்லை. அவற்றிற்குப் புதிய கட்டடங்கள் வழங்க வேண்டும்.

முத்திரைத் தாள் விற்பனை செய்கின்ற ஏஜெண்டுகள் குறைந்த விலையில் உள்ள முத்திரைத் தாள்களின் கட்டணத்தை, கமிஷனாக அதே அளவு தொகையைச் சேர்த்து அதிகமான தொகையை வசூல் செய்கிறார்கள். எனவே, முத்திரைத் தாள்களின் விலையோடு சேர்த்து விற்பனைக் கமிஷனையும் இணைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, 5 ரூபாய் முத்திரைத் தாளை 10 ரூபாய் என்று விற்கிறார்கள். அதனால், இப்போது முத்திரைத் தாள்களினுடைய விலை கூடுகிறது. எனவே, ஏஜெண்டுகளுக்கு அதிகமான கமிஷன் கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. எனவே, பத்திரத்தோடு கமிஷன் தொகையையும் சேர்த்து வசூலிக்க வேண்டும், அப்படிச் செய்வதன் மூலமாகச் சாதாரண மக்கள் அதிக விலை கொடுத்து முத்திரைத் தாள்களை வாங்குவது தடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, முடிக்கின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி**: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும், என்னுடைய இதய நாயகன் முருகனுக்கும், ஐயா மூப்பனாருக்கும் நன்றியைச் சொல்லி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். பத்திரப் பதிவைப்பற்றி பல நண்பர்கள் இங்கே பேசினார்கள். ஒரே ஒரு குறிப்பை மட்டும் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். நம்முடைய மாநிலத்தில் பத்திரத் தாள் விலை மற்ற மாநிலங்களைக் காட்டிலும் சற்றுக் கூடுதலாக இருக்கிறது என்பதன் காரணமாகத்தான் அண்டை மாநிலங்களான கேரளா போன்ற இடங்களுக்குச் சென்று பதிவு செய்வதாகச் சொல்கிறார்கள். ஆகவே, அரசு அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சிறு மற்றும் குறுந்தொழில் பற்றிய என்னுடைய சில கருத்துக்களை இங்கே வைக்க நான் ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, தமிழகத்திலே சுமார் 3 இலட்சத்திற்கும் அதிகமான சிறு மற்றும் குறுந்தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கு மேல், பதிவு செய்யப்படாத சிறு மற்றும் குறுந்தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன கிட்டத்தட்ட மொத்தம் 5 இலட்சம் சிறு மற்றும் குறுந்தொழிற்கூடங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

கிட்டத்தட்ட 50 இலட்சம் பேருக்கு இங்கே வேலைவாய்ப்பை இந்தச் சிறு மற்றும் குறுந்தொழிற்சாலைகள் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. குறைந்த முதலீட்டிலே அதிகமான பேருக்கு வேலைவாய்ப்பு வேண்டுமென்று சொன்னால் அது இந்தச் சிறு தொழிலதிபர்களால்தான் முடியும் என்பதை பல்வேறு காலகட்டங்களிலே நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம். இங்கேயிருக்கின்ற தொழிலதிபர்கள் எல்லாம் சிறிய சிறிய சங்கங்களாகப் பிரிந்து, இருப்பதால் அவர்களுக்கென்று ஒரு 'லாபி' இல்லை. ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியிலே அதிகமாகப் பங்கு கொண்டிருக்கின்ற சிறு தொழிலதிபர்கள், அவர்களுடைய குறைகளைச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் அதற்கு இயலவில்லை என்ற ஏக்கத்தோடு இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற மாதம் வரிவிதிப்பு சம்பந்தமாக அத்தனை பேர்களையும், அதிகாரிகளையும், வியாபாரிகளையும், வர்த்தகர்களையும் அழைத்துப் பேசியதைப் போல, நமது தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும், முதல்வர் அவர்களும் தொழில் வாரியக் கூட்டத்தை S.S.I.Board-ஐக் கூட்டி சிறு தொழிலதிபர்களையும் வைத்துக் கொண்டு





பேசி, அதற்கென ஒரு நிவாரணத்தைக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கிட்டத்தட்ட 350 பொருள்கள் இந்தச் சிறு தொழில்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இங்கே மற்ற தொழிலதிபர்களெல்லாம் சொல்வது– இந்த 350 பொருள்களிலே 25 பொருள்களை மட்டுமே அரசு வாங்குகிறது. மற்ற பொருள்களை வாங்குவதில்லை என்று சொல்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் மின்சார வாரியத்திலே ஆந்திராவிலேயிருந்துதான் அதிகமான பொருள்களை வாங்குகிறார்கள். Wire மற்றும் அத்தனையும். ஆனால், இங்கே செய்யக்கூடிய இந்தத் தொழிலதிபர்களிடமிருந்து வாங்குவதில்லை. இங்கே India Meters என்ற நிறுவனம் இருக்கிறது. மிக அருமையான ஜெனரேட்டர்களை எல்லாம் செய்கிறார்கள். ஆனால் அவர்களிடம் வாங்காமல், ஆந்திர மாநிலத்திலிருந்து வாங்குகிறார்கள். அதேபோல, பி.வி.சி. பைப். இங்கே தரமான பைப்புகளை நாம் தயாரிக்கிறோம். பி.வி.சி. பைப்பை அண்டை மாநிலங்களிலே இருந்துதான் நம்முடைய அரசு ஸ்தாபனங்கள் வாங்கிக் கொண்டிருக்கின்றன. டெல்லியிலிருந்து ஏராளமான transformer-களை வாங்குகிறார்கள். டெல்லியிலே கணக்கிட்டால் 30% மின்சார இழப்பு இருக்கிறது. ஆனால், தமிழ்நாட்டிலே 16% தான் இருக்கிறது. அதற்குக் காரணம் நம்முடைய transformer-களும் இங்கே தயாரிக்கக்கூடிய மின்சார சாதனங்களும் மிக அற்புதமான தரத்திலே இருக்கின்றன என்பதுதான். ஆனால் அதை இங்கே வாங்காமல் அண்டை மாநிலங்களில் இருந்து வாங்குவதால் சிறு தொழிலதிபர்களை, குறுந்தொழிலை அது மிகவும் பாதிக்கிறது.

முற்பகல் 11-30

அரசு தயாரிக்கும் இதுமாதிரியான பல்வேறு பொருள்கள், தரமாக இருந்தாலும்கூட, அண்டை மாநிலங்களிலே இருந்துதான் வாங்குகிறார்கள். காரணம், இங்கே வரி அதிகம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், தரமான பொருள்கள், இங்கே தயாரிக்கின்ற மோட்டார் வாகன உதிரிப் பாகங்களை, இங்கே இருந்துதான் அங்கே அதிகமாகக் கொள்முதல் செய்கிறார்கள். நம்முடைய அரசு தயாரிக்கின்ற பொருள்களை, நம்முடைய தயாரிப்பாளர்கள் வாங்காமல், ஆந்திர மாநிலத்திலே இருந்து அதிகமாக வாங்குகிறார்கள். காரணம், வரிக் கொள்கைதான். எனவேதான், சென்ற முறையே நான் பேசினேன்; இந்த வரிக் கொள்கையைப் பொறுத்த அளவிலே, எந்தெந்த

[திரு. ப. மோகன் கந்தசாமி] [1999 ஏப்ரல் 28

மாநிலங்களிலே என்னென்ன வரி இருக்கின்றன என்பதை உட்கார்ந்து தீர்மானித்து, நம்முடைய மாநிலத்திற்கு எந்த அளவுக்கு அந்த வரியைக் குறைக்கலாம் என்பதை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். எல்லாப் பொருள்களையும் கிட்டத்தட்ட ஏகதேசமாக நான் பார்த்தேன். மற்ற மாநிலங்களிலே இருப்பதைக் காட்டிலும் நம்முடைய மாநிலத்திலே வரி அதிகம். 16% இருக்கிறது. ஆனால், மற்ற மாநிலங்களிலே கிட்டத்தட்ட 3% தான் இருக்கிறது. செப்புக் கம்பி அல்லது மற்ற பொருள்களை வாங்க வேண்டுமென்று சொன்னால், ஹைதராபாத்திலே போய் வாங்குகிறோம். ஆனால், தயாரிப்பது இங்கேதான். ஸ்டெர்லைட் ஆலையும் மற்ற ஆலைகளும் இங்கே தயாரிக்கின்றன. அவர்களுடைய கிடங்கு — டிப்போ — ஹைதராபாத்திலே இருக்கிறது. அங்கே போய் நாம் வாங்க வேண்டியிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன்.

அதேபோல், இப்போது தொழில் துறையைப் பொறுத்த அளவிலே, கொஞ்சம், கொஞ்சமாக நம்முடைய தொழில் சீரழிந்து கொண்டிருப்பதற்கு இரண்டொரு உதாரணங்களை நான் சொல்ல விரும்புகிறேன். தொழில் முதலீட்டுக் கழகம், 1996-97-இல், 345 கோடி ரூபாய் கடன் உதவி செய்தது. ஆனால், இந்த ஆண்டு நாம் பார்த்தால், 100 கோடி ரூபாய்தான். இதிலிருந்து என்ன தெரிகிறது. தொழில் குறைந்து வருகிறது என்பதற்கு உதாரணமாக இது இருக்கிறது.

அதேபோல், சிட்கோ, நடப்பாண்டிலே 12 ஆயிரம் டன் இரும்புதான் விற்பனை செய்தது. ஆனால், ஐந்தாண்டுகளுக்கு முன்னால், கிட்டத்தட்ட 42 ஆயிரம் டன் விற்பனை செய்து வந்தது. ஆகவே, இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு, இதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை ஆராய்ந்து, செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

TIIC-ஐப் பொறுத்தவரையில், ஓர் அற்புதமான திடடத்தை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். தொழில் தொடங்குவதற்கு உதவி செய்யும் திட்டமாகும் அது. அப்படித் தொடங்கும்போது, வட்டி குறைவாக இருக்க வேண்டும். பாரத ஸ்டேட் வங்கி குறைந்த வட்டியிலே பணம் கொடுக்கிறார்கள். அந்த அளவுக்கு. அவர்கள் தொழிலை ஆரம்பிக்கிற அந்தத் தருணத்திலே வட்டியைக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வசதிபடைத்த



1999 ஏப்ரல் 28] [திரு. ப. மோகன் கந்தசாமி]

பொது மக்கள் TIIC-இலே பணம் வாங்கி, ஏராளமான சலுகைகளைப் பெறுகிறார்கள். சாதாரண, சின்ன, சிறு, குறு தொழில்களுக்காக, கிராமங்களிலே இருக்கிற தொழில்களுக்காகச் சாதாரணமானவர்கள் அதைப் பெற முடியாமல் மிகவும் சிரமப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதை ஆராய்ந்து சாதாரண, கிராமத்திலே இருக்கின்ற தொழில்களுக்கும் அதைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிட்கோவைப் பொறுத்த அளவிலே, நம்முடைய கலைஞர் அவர்கள்தான் அதைத் தொடங்கி வைத்தார்கள். ஓர் அற்புதமான அமைப்பு. சிறு, குறு தொழிலதிபர்கள் தயாரிக்கக்கூடிய பொருள்களை மார்க்கெட்டிங் செய்ய முடியாமல் — ஏராளமாக வெளிநாட்டிலே கேட்கிறார்கள் — நம்முடைய தொழிலதிபர்கள் அதை விற்கமுடியவில்லை. ஆகவே, சிட்கோவினுடைய பணி என்னவாக இருக்க வேண்டுமென்று சொன்னால், ஏதோ ரியல் எஸ்டேட் போன்று நிலத்தை வாங்கி அவர்களுக்குக் கொடுப்பதைப்போலச் செய்வதைக் காட்டிலும், அதுவே மார்க்கெட்டிங் செய்து கொடுப்பதற்கான அமைப்புகளை ஆங்காங்கே அமைத்து, அவற்றை விற்பனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைப் பார்க்கலாம். ஆப்பிள் பழங்களை— ஏராளமாக ஹிமாச்சலப்பிரதேசத்திலே விளைகின்ற அவற்றை— அங்கே இருக்கின்ற அந்தத் தொழில் முனைவோர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், அந்த ஆப்பிளை ஸ்டாக் வைக்க முடியாது; அதை அரசாங்கமே வாங்கி, ஒவ்வோர் இரயில்வே ஸ்டேஷனிலும் ஸ்டாலிலே வைத்திருக்கிறார்கள். ஆகவே, இதுபோன்று நம்முடைய சிட்கோவும் மார்க்கெட்டிங் அமைப்பை அமைக்கவேண்டும்.

கோவை மாநகரை எடுத்துக்கொண்டால், ஏராளமான மோட்டார் பம்புகளைத் தயாரிக்கிறார்கள்; கிரைண்டர் தயாரிக்கிறார்கள். திருப்பூரிலே பனியன், உள்ளாடை; சிவகாசியிலே பட்டாசு. சேலத்திலே சேகோ, ஆட்டோமொபைல் பாகங்கள் போன்றவற்றைத் தயாரிக்கிறார்கள். ஆட்டோமொபைல் போன்ற பொருள்களை மிகத் தரமாகத் தயாரிக்கிறோம். அவற்றை வெளிநாட்டிலே மார்க்கெட்டிங் செய்ய முடியாமல் அவர்கள் திணறிக் கொண்டிருக்கிறார்கள். சிட்கோ அந்த வேலைகளைச் செய்யலாம். நிச்சயமாக ஏராளமாக ஏற்றுமதி enquiry வருகிறது. அதற்கு வேண்டிய முன்பணம் கட்ட முடியாமல்

[திரு. ப. மோகன் கந்தசாமி] [1999 ஏப்ரல் 28

மற்றவர்கள் திணறிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதை சிட்கோ செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

டான்சியைப் பொறுத்தவரையில், டான்சி எதற்காக ஆரம்பிக்கப்பட்டது என்றால், சிறு தொழில்களுக்கு உதவுவதற்காக. ஆனால், சிறு வணிகர்களுக்குப் போட்டியாக இருக்கிறார்களோ என்று கருதக்கூடிய அளவுக்கு அவர்கள், சாதாரண, சின்னச் சின்ன உபகரணங்களை, பரமக்குடியிலே, கோவில்பட்டியிலே செய்து கொண்டிருக்கிறார்கள். முதன்முதலிலே டான்சி ஆரம்பித்த காலத்திலே, அருமையான மயூரா ஸ்கூட்டர்கள் எல்லாம் செய்தார்கள். ஆனால், அதிலே என்ன கொடுமை என்றால், டான்சியில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் 400 பேர்கள்; ஆனால், அங்கே அலுவலர்களைப் பார்த்தீர்கள் என்றால், 850 பேர். வீணாக நம்முடைய அரசினுடைய பணம் போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே, இதை மாற்றி, ஆரம்பத்திலே எப்படி டவர்— மின்சாரத்திற்காகக் கோபுரம் போன்றவற்றைச் செய்தார்களோ, அதைச் செய்ய வேண்டுமேயொழிய, சிறு தொழிலதிபர்களிடம் போட்டி போட்டுக்கொண்டு, டான்சி அதைச் செய்யக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

வணிக வரியில் வித்தியாசம் இருப்பதால் சிறு தொழில்கள் இந்த அளவிற்கு மோசமான நிலையில் இருக்கின்றன. செல்லையா கமிட்டி பற்றி போன தடவையும் பேசினேன். எனவே, வணிக வரியைப் பொறுத்த வரையில் மற்ற மாநிலங்களில் எப்படி இருக்கிறது, நம்முடைய மாநிலத்தில் எப்படி இருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். நம்முடைய மாநிலத்தில் 16% என்றும், 8% என்றும் அதிகமாக இருப்பதை நான் பார்க்கிறேன். ஆனால், மற்ற மாநிலங்களிலே ஒரே அளவாக 4%, 2%, 3% என்று இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து, வணிக வரியைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களோடு கலந்து பேசி நம்முடைய மாநிலத்திலும் அது மாதிரிச் செய்தால்தான் சரியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு, பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி கூறி, இந்தத் துறை வளர்வதற்கு நம்முடைய அரசு எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.



1999 ஏப்ரல் 28]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. பி.என். வல்லரசு.

***திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் மற்றும் பத்திரப் பதிவுத் துறை மானியங்கள் மீது நான் சார்ந்துள்ள அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தொழில் துறையைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே முதல் இடத்தை எட்டிப் பிடிக்கின்ற அளவிற்கு கலைஞர் அவர்களுடைய அரசு விஸ்வரூபம் எடுத்து, செயல்பட்டு வருவதை இந்த நேரத்திலே பாராட்டாமல் இருக்க முடியாது. அதேபோல, ஊரகத் தொழில் துறையானது கிராமப்புற மக்களை, தொழில்ரீதியாக மேம்படுத்துவதற்காகவும், சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில்களை வளர்ச்சியடையச் செய்வதற்காகவும் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு துறையாகும். இந்தத் துறையில் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள், கிராமப்புறத்திலே தோன்றிய ஓர் அமைச்சராக இருக்கிற காரணத்தினால், கிராமப்புற மக்களுக்கு தொழில்ரீதியான முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று, தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய உணர்வினைப் புரிந்துகொண்டு, பம்பரம் போலச் சுழன்று இந்தத் துறையில் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. எனவே, இன்றையதினம் ஒரு மாநிலத்தில் கிராம மக்களுடைய தொழில் ரீதியான மேம்பாடுதான் ஓர் உண்மையான மேம்பாடாக அமையும் என்ற காரணத்தினால், இன்று கிராம மக்களுடைய தொழில்ரீதியான மேம்பாட்டிற்குப் பாடுபடுகின்ற இந்த ஊரகத் தொழில் துறைக்கு அரசு கூடுதல் நிதி ஒதுக்கிட வேண்டும். கூடுதல் கவனத்தையும் செலுத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதற்குக் காரணம் எல்லாம், கிராமப்புற முன்னேற்றத்தில்தான் ஒரு மாநிலத்தினுடைய முன்னேற்றம் இருக்கிறது என்பதால் அரசு அதற்குக் கூடுதல் கவனத்தைச் செலுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாவட்டங்கள்தோறும் மாவட்டத் தொழில் மையங்கள், தொழில் முனைவோருக்குச் சிறு தொழில் தொடங்குவதற்கு நிதி உதவி செய்கிறது; மற்றும் மூலப் பொருட்களை ஒதுக்கீடு செய்கிறது, மூலதன மானியம்

தருகிறது. இத்தனை உதவிகள் செய்த போதிலும், மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் தொடங்கப்படுகின்ற, அந்தச் சிறு தொழில்கள் சிறப்பாக நடைபெறுகின்றனவா என்றால், இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். மகிழ்ச்சித்தரத்தக்க அளவில் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். எனவே, இன்றையதினம் அவற்றை மாற்றியமைத்து, கிராமப்புறங்களிலே இருக்கின்ற இந்தச் சிறு தொழில்கள் இலாபத்தோடு இயங்குவதற்கு அரசு பெரு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அதற்குரிய தொழில்நுட்பக் கமிட்டி அமைத்து, நஷ்டத்திலே இயங்கக்கூடிய காரணங்களைக் கண்டறிந்து, இலாபத்திலே அந்தத் தொழில்கள் இயங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமாய் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை மாவட்டத்தில், என்னுடைய உசிலம்பட்டியைப் பொறுத்தவரையில், தொழில்ரீதியாக மிகவும் பிற்பட்ட ஒரு பகுதியாகும். அங்கே எந்தவிதமான தொழில்களும், தொழிற்கூடங்களும் அமைக்கப்படவில்லை. எனவே, கலைஞர் அரசு உசிலம்பட்டி தொகுதியில் தொழில்களைத் தொடங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில்முனைவோரை, அரசு உசிலம்பட்டி தொகுதிக்குப் பரிந்துரை செய்து, அவர்களை அனுப்பி தொழிற்சாலைகளை ஏற்படுத்திட வேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உசிலம்பட்டி தொகுதியில் ஊரகத் தொழில் துறை மூலம் தொழில் பேட்டைகளை அமைத்துத்தர வேண்டுமென்று கடந்த மூன்று வருட காலமாக, இந்தச் சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். எனவே, எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லாத உசிலம்பட்டி தொகுதியில், ஊரகத் தொழில் துறை மூலமாக தொழிற்பேட்டைகளை, இந்த ஆண்டு அமைச்சர் அவர்கள் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக 40 ஏக்கர் நிலம் ஏற்கெனவே தயார் செய்யப்பட்டு உள்ளது என்பதையும் நான் அரசுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1989 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற நமது முதல்வர் கலைஞர் அவர்கள் உசிலம்பட்டி தொகுதி முழுவதையுமே தொழில்



ரீதியாக மிகவும் பிற்பட்ட தொகுதியாக அறிவித்தார்கள். ஆனால், அதற்குப் பின்பாக ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. ஆட்சி, கலைஞர் அவர்கள் அறிவித்த அறிவிப்பை அப்படியே ரத்து செய்துவிட்டார்கள். அதனால், என்னுடைய தொகுதி தொடர்ந்து தொழில்ரீதியாக மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கிற காரணத்தினால், டாக்டர் கலைஞர் அவர்கள் மீண்டும் என்னுடைய உசிலம்பட்டி தொகுதியிலுள்ள அனைத்துப் பகுதிகளையும் மிகவும் பிற்பட்ட பகுதிகளாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-40

அதேபோல உசிலம்பட்டி தொகுதியில், விக்கிரமங்கலத்தில் அதைச் சுற்றியுள்ள 60 கிராம மக்களுக்குப் பயன்படுகிற அளவிற்கு அங்கே ஒரு பத்திரப் பதிவு சார்பு அலுவலகம் தொடங்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உறுதிமொழியைத் தந்திருக்கிறார்கள். அதேபோன்று இந்தச் சட்டமன்றத்தில் ஏறக்குறைய 1/4 நூற்றாண்டு காலம் சட்டமன்ற உறுப்பினராக இருந்து, 5 வருடம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எங்கள் தலைவர் பி.கே. மூக்கையா தேவர் அவர்கள் பிறந்த ஊரான பாப்பாபட்டியிலும் ஒரு பத்திரப் பதிவு சார்பு அலுவலகம் தொடங்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்துகின்றேன். இரண்டையும் நிறைவேற்றித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். உசிலம்பட்டியிலும், சிந்துப்பட்டியிலும் பத்திரப் பதிவு சார்பு அலுவலகங்களுக்குச், சொந்தக் கட்டடங்கள் இல்லாத சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும்கூட, கேரளாவில் பத்திரப் பதிவு செய்யப்படுகிற சூழ்நிலை இருந்துகொண்டு இருக்கிறது. எனவே, நிலங்களைக் கேரளாவில் பதிவு செய்யக்கூடிய நிலையை மாற்றி அமைத்துத்தர வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் ஊழல் எது என்றால், அதுதான் டான்சி நில பேர ஊழல் ஆகும். அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா குறைந்த விலைக்கு வாங்கிய அந்த டான்சி நில ஊழல் வழக்கு எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தமிழக மக்கள் இன்றையதினம் கேள்வியாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். காரணம், அந்த ஊழல் பணத்தை

வைத்து வாய்தா வாங்கியே எங்கள் காலத்தை கடத்திவிடுவோம் என்று அவர்கள் சவால் விட்டுக்கொண்டிருக்கிற காரணத்தினால், அந்த டான்சி நில பேர ஊழலை இந்த அரசு உடனடியாக விசாரித்துத், தண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். காரணம், அதைத் தமிழக மக்கள் விரும்புகிறார்கள். அதுமட்டுமல்ல, அந்த ஊழல் பணத்தை எல்லாம் இன்னும் வைத்துக்கொண்டு, சென்னையிலே இருந்து டெல்லிக்கு 48 சூட்கேஸ்களில் எடுத்துச் சென்று, மத்திய பி.ஜே.பி. அரசை வீழ்த்துவதற்கு, அந்த ஊழல் பணமே பயன்பட்டிருக்கிறது என்ற பேச்சு இருக்கின்ற காரணத்தினாலே, இங்கே இருக்கின்ற மத்திய மாநில அரசுகளுடைய காவல் துறை, உளவுத் துறை, அந்த 48 சூட்கேஸ்களில் ஊழல் பணம் சென்றதா, மத்திய அரசை வீழ்த்துவதற்கு அந்தப் பணம் பயன்பட்டதா என்பதைக் கண்டறிய வேண்டுமெனக் கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஆர். சிவானந்தம்.

***திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நடைபெறுகின்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்திலே ஊரகத் தொழில்கள், முத்திரைத் தாள்கள்— நிர்வாகம், பட்டு வளர்ச்சித் துறை ஆகிய மானியங்களிலே பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, என் உரையைத் தொடங்குகின்றேன்.

கலைஞர் ஆட்சியிலேதான்— இந்தியாவிலேயே தமிழகம் தொழில் துறையிலே இன்று முதலிடத்தைப் பெற்றிருக்கிற ஒரு நிலையை அடைந்திருக்கிறது என்றால், அதற்கு தமிழக முதல்வர் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெருமுயற்சி என்பதை நாட்டு மக்கள் போற்றுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறையினுடைய அமைச்சராக இருக்கின்ற அமைச்சர் அவர்கள், சிட்கோ, டால்கோ, டான்சி போன்ற நிறுவனங்கள் எல்லாம் கடந்த கால ஆட்சியின் தவறுதல் காரணமாக நட்டத்திலே நடைபெற்றிருக்கின்ற நிர்வாகத்தை, இன்று முறையாக, சீரான அமைப்பின் காரணமாக, அவர்களுடைய பெருமுயற்சியின் காரணமாக, அவை அத்தனையும் சீரான முறையில் நடைபெறுகிறது என்பதை நான் இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.





என்னுடைய ஆரணி தொகுதி, பட்டுத் தொழிலிலே மிகப் பழைய நகரமாக விளங்கி வருகிறது. எங்கள் பகுதியிலே சுமார் 35,000 பட்டுக் கைத்தறிகளும், 120 பட்டு முறுக்காலைகளும் இருக்கின்ற காரணத்தினால், பட்டுத் தொழிலிலே இன்று மக்கள் எல்லாம் மிகவும் பின்தங்கி, அந்தத் தொழிலே சீரழிந்து விடுகின்ற நிலை இருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். காரணம், கடந்தகால அ.தி.மு.க. ஆட்சியிலே ஆரம்பிக்கப்பட்ட பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களை எல்லாம் அவர்களாகவே ஆரம்பித்து, அவர்களாகவே மூடிவிட்ட காரணத்தினால், அவர்கள் கொள்ளையடித்துச் சென்றுவிட்ட காரணத்தினால், கூட்டுறவுச் சங்கங்களில் எல்லாம் கைத்தறி நெசவாளர்கள் உறுப்பினர்களாக ஆவதற்குப் பயப்படுகிற நிலை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிக் கொள்ளை அடிக்கப்பட்டு, மூடப்பட்ட பட்டுக் கூட்டுறவுக் கைத்தறிச் சங்கங்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல், விட்டுவிட்ட காரணத்தினால், பட்டுக் கூட்டுறவுக் கைத்தறிச் சங்கங்கள் புதிதாக ஆரம்பிக்கப்படுவதற்கும், அதிலே உறுப்பினர்கள் ஆவதற்கும் நெசவாளர்கள் எல்லாம் பயப்படுகிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதேபோல, மாநிலத்திலே 97 பட்டுக் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களும், 60,000 தறிகளும் கொண்ட சங்கங்கள் இயங்கி வருகின்றன. ஆனால், கூட்டுறவுச் சங்கங்கள் அல்லாத தறிகள் — சுமார் 2 இலட்சம் தறிகள்— இருப்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அவை அனைத்திற்கும் — சுமார் 10 இலட்சம் கிலோ பட்டு தேவை. ஆனால் நம் மாநிலத்திலே உற்பத்தியாகின்ற பட்டு 25 சதவீதம்தான் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு, பட்டு உற்பத்தியை நம் மாநிலத்திலேயே அதிகமாகச் செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-45

அதற்கு ஏற்றாற்போல், எங்கள் பகுதியிலே ஆரணியிலே ஒரு பட்டு வளர்ச்சி மையத்தை ஏற்படுத்தி, அதன் மூலமாகப் பட்டு உற்பத்தி செய்வதற்காக மல்பரிச் செடிகளை வளர்த்து, பட்டுப்புழு வளர்ப்பதற்கும் நீங்கள் பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, நீங்கள் மல்பரிச் செடி வாங்குவதற்காக ரூபாய்

750 மானியமாக வழங்குவதையும் அந்தப் பட்டுப் பூச்சி வளர்ப்பதற்காக 2,500 ரூபாய்க்கு ஈடான அந்தத் தளவாடங்களைத் தருவதையும் உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன். பட்டு வளர்ச்சிக்காகப் பாடுபடுகின்ற விவசாயிகளெல்லாம் இதைப் பெரிதும் பாராட்டுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். எனவே, ஒரு பட்டு வளர்ச்சி மையத்தை ஆரணியில் தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் உங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தனியார் உற்பத்தி செய்கிற பட்டுச் சேலைகளையெல்லாம் இன்று அரசாங்கம் கொள்முதல் செய்வதில்லை. அதனால் தனியார் உற்பத்தி செய்கின்ற சேலைகளையெல்லாம் விற்பனை செய்ய முடியாமல் மிகவும் பாதிக்கப்படுகின்ற காரணத்தினால், உற்பத்தி செய்த சேலைகளை விற்க முடியாத நிலை இருக்கிற காரணத்தினால், தொழிலாளர்கள் வேலைபெறுகின்ற வாய்ப்பில்லாமல் இன்று தறி வேலை செய்கின்றவர்களெல்லாம் கூலி வேலைகளுக்கும், கட்டட தொழில் வேலைகளுக்கும் செல்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றதை நான் உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, ஒரு குழுவை அமைத்தாவது அந்தப் பகுதியிலேயுள்ள மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்றுதான், பட்டு முறுக்கேற்றும் ஆலைகள் 120 இருந்தாலும்கூட, இன்று தொழிலே இல்லாமல் இந்தப் பட்டு முறுக்கேற்று ஆலைகளெல்லாம் மூடுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அந்தப் பகுதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு குழுவை அனுப்பி, அந்தக் குழுவின் மூலமாக அந்தப் பட்டுத் தொழிலை, நலிவடைந்து வருகின்ற பட்டுத் தொழிலை மீண்டும் சீர்செய்வதற்காக நீங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் உங்களை வேண்டிக் கேட்டுகொள்கிறேன்.

அதேபோன்று, கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தி செய்கின்ற சேலைகளை மட்டும் அரசாங்கத்தில் கொள்முதல் செய்கிறார்கள். தனியார்கள் உற்பத்தி செய்கின்ற சேலைகளையும் அரசாங்கமே கொள்முதல் செய்து வெளி மாநிலங்களிலோ, வெளி நாட்டிற்கோ விற்பனை செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்றுதான், நம்முடைய மாநிலத்திலே நடைபெறுகின்ற பட்டுத் தறிகளுக்கெல்லாம் ஜரிகை இரண்டு இலட்சம் கிலோ தேவைப்படுகிறது. ஆனால், நம்முடைய மாநிலத்திலே 3,000 கிலோ மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, மீதி தேவையான ஜரிகைகளையும் நம் மாநிலத்திலேயே உற்பத்தி செய்தால் வேலைவாய்ப்பும் பெருகும், நம்முடைய தேவையும் நிறைவேறும் என்கிற காரணத்தினால் பட்டு ஜரிகை ஆலைகளை நம் மாநிலத்திலேயே நிறுவ வேண்டும். அதிலும், ஆரணியிலே ஒரு பட்டு ஜரிகை ஆலை நிறுவ வேண்டுமென்று நான் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஆரணி தொகுதியிலே, ஆரணி நகரமும், இரண்டு ஒன்றியங்களும் இருக்கின்றன. இந்தத் தொகுதியிலேயே ஆரணி நகரமும் மேற்களஞ்சி ஒன்றியம் மட்டும் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டு, அங்கே தொழில் தொடங்குபவர்களுக்கு 30 சதவிகிதம் மானியம் கிடைக்கிறது. ஆனால், ஆரணி ஒன்றியத்திலே இருக்கின்றவர்கள் தொழிற்சாலை தொடங்குவார்களேயானால் அவர்களுக்கு அந்தப் பகுதியிலே மானியம் கிடைக்காமல் இருக்கிறது. அதற்குக் காரணம், 300 பேருக்கு மேலும், ஒரு கோடி ரூபாய்க்கு முதலீடும் அதிகமாக இருந்து தொழில் நடத்துகிற தொழிற்சாலையாக இருந்தால், அந்த ஒன்றியம் முன்னேறிய ஒன்றியமாக அறிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் அந்த நிலை இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதற்குக் காரணம், எங்கள் பகுதியிலே ஒரு பெரிய நூற்பாலை — எஸ்.எல்.எஸ். மில் என்ற ஒரு நூற்பாலை இருக்கிறது. அந்த நூற்பாலையை அமைத்திருப்பவர்கள் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அந்த நூற்பாலையிலே பணிபுரிகின்றவர்களும், கோவில்பட்டி போன்ற வெளி மாவட்டங்களிலேயிருந்து வந்து வேலை செய்கிறார்கள். அந்த ஒன்றியத்திலே உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படவில்லை. இந்தக் காரணத்தால் அங்கே தொடங்கப்படுகிற தொழிற்சாலைகளுக்கெல்லாம் மானியம் கிடைக்காமல் இருக்கிறது. எனவே, தனியார் ஒரு நபர் ஏற்படுத்துகின்ற தொழிற்சாலையால் அந்தப் பகுதியில் ஆரம்பிக்கிற தொழிலதிபர்களுக்கெல்லாம் எந்தவிதமான மானியமும் கிடைக்காத நிலையை மாற்ற வேண்டியதற்காக ஆரணி ஒன்றியத்தைப் பின்தங்கிய ஒன்றியமாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, எங்கள் பகுதியிலே ஆரணி தொகுதியிலே ஆற்காடு சாலைக்கு அடுத்தாற்போல 150 ஏக்கர் அரசு தரிசாக இருக்கிறது. இந்தப் பகுதியைப் பயன்படுத்தி ஒரு தொழிற்பேட்டையை ஆரணியிலே அமைத்துத்தர வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அதேபோல, பத்திரப் பதிவுத் துறை. எங்களுடைய மாவட்டத்திலேயே அதிக வருவாய் தரக்கூடிய ஒரு பத்திரப் பதிவு அலுவலமாக ஆரணி அலுவலகம் இருக்கிறது. ஆனால், அந்த பத்திரப் பதிவு அலுவலகம் ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பு இருந்த ஜாகிர் காலத்திய குதிரை லாயத்திலே செயல்பட்டு வருகின்றது. அங்கே இருக்கக்கூடிய பத்திர ஆவணங்கள் எல்லாம் மழைக்காலங்களில் நனைந்து, சீரழிந்து போகிற நிலை இருக்கிறது என்று ஏற்கெனவே அமைச்சர் அவர்களிடத்திலே மனுக் கொடுத்திருக்கிறேன். அதை இந்த நேரத்திலே இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, உடனடியாக அந்த அலுவலகத்திற்குப் புதிய கட்டடத்தை உருவாக்கித் தரவேண்டும். அந்த ஆவணங்களைக் காப்பாற்றுவதற்காகப் புதிய கட்டடத்தை அதற்கு அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று ஆரணி தொகுதியில் சீனிவாச உத்தியாவனம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. ஆரணிக்கும், அந்தக் கிராமத்திற்கும் சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவு இருக்கிறது. ஆனால், அந்தக் கிராமத்தினுடைய பத்திரப் பதிவு எல்லை தேவிகாபுரம் என்ற ஊர். இது ஆரணியைத் தாண்டி 30 கிலோ மீட்டர் தள்ளி இருக்கிறது. ஆகவே, அந்த மக்கள் 50 கிலோ மீட்டர் தூரம் சென்று அந்தப் பத்திரப் பதிவு அலுவலகத்திற்குச் செல்லவேண்டிய நிலையில் இருக்கிற காரணத்தால், அதைச் சுற்றி இருக்கிற கிராமங்கள் எல்லாம் ஆரணியில் இருக்கிற பத்திரப் பதிவு அலுவலகத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்பதால், இந்த ஒரு கிராம மக்கள் மட்டும் 50 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ள காரணத்தால், இந்தப் பகுதி மக்களுடைய நீண்டகால 30 ஆண்டுகாலக் கோரிக்கையான அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுகிற வகையில் அந்தக் கிராமத்தை ஆரணி பத்திரப் பதிவு எல்லையாக மாற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.



எங்கள் மாவட்டத்தில், சேத்துப்பட்டு, பெரணமல்லூர் ஆகிய பகுதியை தனி வருவாய்ப் பகுதியாகப் பிரித்து பெரிய கொழப்பலூரில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகத்தைத் தொடங்கவேண்டுமென்று நான் வேண்டி கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, இறுதியாக ஒன்றை நான் குறிப்பிட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஓர் ஆக்கும் சக்தி. அவர் நாட்டிற்காக வளர்ச்சிப் பணிகளைக் கண்ணயராது செய்து வருகின்றார். ஆனால், சில சக்திகள் அழிப்பதையும் கலைப்பதையுமே தங்களுடைய தொழிலாகக்கொண்டு நாட்டு மக்களுக்கும், நாட்டு பொருளாதாரத்திற்கும் பெரும்பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. இந்தப் பாதகர்களை இந்நாட்டு மக்கள் இனம் கண்டு, தக்க நேரத்தில் அவர்களைத் தண்டிப்பார்கள். மத்தியிலே ஆட்சியைக் கவிழ்த்த அடுத்த நிமிடமே புதிய ஆட்சியைக் கொண்டுவருவோம் என்று சூளுரைத்தவர்கள் இன்றையதினம் ஆட்சியைக் கவிழ்த்து, மாற்று ஆட்சி அமைக்க முடியாமல் அவர்கள் நாமம் போட்டுக்கொண்டு தமிழகத்திற்குத் திரும்பியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இவற்றையெல்லாம் ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு, நாட்டுமக்கள் அவர்களுக்குச் சாட்டையடி கொடுப்பார்கள் என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY**: Hon. temporary Speaker, Sir, I thank you for giving me this opportunity to speak on the subjects of Small Scale Industries, Rural Industries, Sericulture, etc.

Tamil Nadu Government is giving lot of incentives like State Capital Subsidy, Low Tension Power Tariff, exemption from Sales Tax and Tax Deferral, etc. to develop Small Scale Industires. All these concessions are being utilised by the Small Scale Industries properly and lot of Small Scale Industries are coming up in the entire State. You are extending the aid of technocrats to help the industrialists to start Small Industries, Self-employment scheme, promotion of Rural Industries and small Industries through Rural Industrial Co-operatives.

You are doing lot of industrial development and you have reserved some items for the Small Scale Industries sector. But, inspite of that, lot of Small Scale Industries in Tamil Nadu are in depression now. Almost all big industries have become dormant. They are not in a position to get orders from Small Scale Industries. Big Industries are depending on Small Scale Industries. I cannot say that this situation exists in Tamil Nadu alone. But, it is in the entire nation.

Industrial depression is there. For example, Leyland, T.V.S. Suzuki, are not in a position to sell their products. They are not in a position to take orders from the Small Scale Industries. I cannot say that you are responsible for this depression. Lot of Small Scale Industries are closed in Tamil Nadu because of financial problem and labour trouble. Small Scale Industries give lot of employment opportunities in rural areas. You must develop big Industries. Some crores of rupees is invested. What is the potential of workmen? If you invest 500 crores in Small Scale Industries, we should give employment to 20000 people.

முற்பகல் 11-55

So, I request the Hon. Minister to see that small scale industries are opened in every block Headquarters in the entire State. You must have a SIDCO Industrial Estate in every block so that people who are interested, can start industries by using the local raw-materials. There is no use in simply starting industries in towns like Chennai and Coimbatore, as there is already lot of congestion in such places. So, I request the Hon. Minister to see that small scale industries are developed in such a way that every block should have a SIDCO estate so that people who are interested, may start industries in their own village by using the local raw-material. I request the Hon. Minister to see that it is done.

Last week, I have represented to the Hon. Minister about the suffering of small scale industrialists in Hosur. They are paying nearly Rs.1000 per acre; but they are not having light, road facilities. Even shrubs have grown up on the roads and they are not at all maintained. Hon. Minister was kind enough . . . (Interruption)

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்கள்



அங்கே இருக்கின்ற SIDCO Industrial Estate-ஐ, உள்ளாட்சித் துறையில் நிர்வகிப்பதற்காக ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக அதை அரசு பரிசீலிக்கும்.

**THIRU B. VENKATASAMY:** I thank the Hon. Minister for giving the assurance. He had already told me that he would discuss the issue with the Officers and I request him to see that it is done. I think both the Hon. Minister for Rural Industries and Hon. Thiru V. Mullaivendan, who is also the local MLA will come and sort out the problem.

As far as Sericulture is concerned, it is one of the major industries which is giving lot of employment opportunities in Tamil Nadu. Actually, I was the person who had first raised a question about Sericulture in this House when I was MLA in 1967. The then Hon. Minister did not know what sericulture was and he came and visited the entire farm and gave a reply to my question. But this Hon. Minister knows . . .

* **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பட்டு வளர்ச்சித் துறையைப் பொறுத்த அளவில் நான் முழுமையாக ஆய்வு செய்ததில், பட்டு வளர்ச்சியிலே தருமபுரி மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. அது முழுமையாக என்னுடைய ஆய்விலே இருந்து பல இடங்களில் — ஓசூருக்கு நான் பொருட்காட்சி திறப்பு விழாவுக்கு வந்தேன் — தருமபுரி மாவட்டத்திலே மிகச் சிறப்பாக பட்டு வளர்ச்சித் துறை செயல்பட்டு வருகிறது என்பது தெரிய வந்திருக்கிறது. எதிர்காலத்திலேயும் இன்னும் அதன் வளர்ச்சிக்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளைக் கண்டிப்பாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**THIRU B. VENKATASAMY:** I am aware that the Hon. Minister knows the subject. What I want to say is that I am the person who had first highlighted the subject in this House and I am very happy about it. Previously, sericulture was started at Hosur and only cocoons were grown. But afterwards, Mulberry was grown in Coimbatore, Madurai and Ramanathapuram and it was extended throughout the State. If we undertake cultivation in one acre of land, 5 to 6 persons will get employment and will get nearly about Rs.30,000/- to Rs.40,000/- in one

year. It is a good cattle feed also. Sericulture development came down drastically three years back and it is now slowly improving. Now, the Hon. Minister has taken steps to improve the situation. World Bank has given some money by way of subsidy for development of sericulture and for infrastructural facilities like building, purchase of jeeps, machines, etc. But they are not properly given to ryots and they have been provided only with infrastructural facilities and people are not at all benifitted. Subsidy has not been given since two years. Previously, for construction of house 25% subsidy was given to producers; but now there is no subsidy. Lot of ryots are interested to grow cocoons. If they want to construct a House they have to spend Rs.50,000/-. It is not possible for small farmers to spend fifty thousand rupees. I request the Hon. Minister to give more money under this scheme as it is creating more employment opportunities to the rural people.

நண்பகல் 12-00

After studying S.S.L.C., they have all become extremists. So, divert them. I request you to see that more money is given to rural industries. (Gong was sounded)

Under D.P.A.P. 25% subsidy is given for buildings, purchase of rearing equipments and plantation. B1 is an improved mulberry variety. It is one of the best varieties. For plantation, they are giving 25% subsidy. I request you to see that this is extended to all areas. In certain places, hill area development programme is undertaken. It should be extended to all. In China, lot of good races producing good silk are there. I came to know that here is only one variety - one race viz. MB 4 D2 variety. This is not suitable for all climate in Tamil Nadu.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'சைனா சில்க்'குக்கு சமமாக தமிழகத்திலே பட்டு நூல் உற்பத்தி செய்யப்படவில்லை என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு இணையாக Multi end என்று இப்போது ஒரு கிலோ பட்டிற்கு 100 ரூபாய் incentive கொடுக்கிற

221805



அளவிலே அரசாங்கம் அறிவித்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

**THIRU B. VENKATASAMY**: Thank you very much, Sir. You must introduce new races. Hosur climate is equal to Bangalore. We can't expect the same race to come up nicely in Thanjavur and Coimbatore. This is the reason for the failure of crops in the entire State.

I request the Hon. Minister to see that some research is done. Regarding my Constituency, I have requested in my cut motion to open a Registration Office in Berikai.

Thank you very much for giving me this opportunity. Regarding sericulture, there is no time to speak much. This is very important. We will discuss about this with the experts.

One agriculturist having four members in his family, in Karnataka, is cultivating four acres. All mechanisation—they are using drip irrigation, they are rearing the worms by putting the leaf in centralised A.C. room. He is getting 100% benefit. From four acres, for six crops, he is getting 12 lakhs. This is being done in Karnataka just near my border. Some of our officers can go there and we can encourage this practice here also. This is a modern method. That agriculturist went twice to Japan. He has adopted this method. Some of our people have also started, but did not succeed. We must give extensive publicity and see that this kind of cultivation is done so that more agriculturists could be benefitted.... (Gong was sounded)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. பா. வேல்துரை.

***திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஊரகத் தொழில்கள் மற்றும் பதிவுத் துறை மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு காலத்திலே தமிழகத்திலே தெற்கு தேய்கிறது, வடக்கு வாழ்கிறது என்று சொன்னார்கள். ஆனால், இப்போது தமிழகத்திலேயே தெற்கு தேய்கிறது, வடக்கு வாழ்கிறது, தொழில் ரீதியாக. சென்னையைச்

VB 11,31 N99 N99.7641

[திரு. பா. வேல்துரை] [1999 ஏப்ரல் 28

சுற்றி பெரிய, பெரிய அந்நிய முதலீடுகளுடன் பெரிய, பெரிய தொழில்களையெல்லாம் இங்கே உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதேசமயத்தில் தென் மாவட்டங்களில் அப்படிப்பட்ட தொழில்களை உருவாக்காத காரணத்தாலே, அங்கே படித்த இளைஞர்கள் வேலையற்றிருக்கிறார்கள். இங்கே தொழில் துறையிலே ஆரம்பிக்கின்ற இந்தப் பெரிய தொழில்களிலே, தென் மாவட்டத்தினுடைய இளைஞர்களுக்கு நீங்கள் வேலைவாய்ப்பிலே முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களிலே, கிராமங்களிலே, பொதுவாக, ஊரகத் தொழில்களிலே செங்கல் தொழில் மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், செங்கல் தொழிலைச் செய்வதிலே பலவிதமான கஷ்டத்தை அந்தத் தொழிலாளர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். செங்கல் தொழில் செய்கின்ற முதலாளிகள் எல்லாம் சிறந்த வசதியான சூழ்நிலையிலே இல்லை. அவர்களிடத்திலே வேலை செய்பவர்கள் ரூபாய் 5,000, 10,000, 20,000 என்று வாங்கிக் கொண்டு திடீரென்று ஓடிவிடுகிறார்கள்.

பிற்பகல் 12-05

அதேபோன்று, அவர்கள் மண் அள்ளுவதிலே ஏகப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன. மண் அள்ள முடியவில்லை. மண் அள்ளுவதற்குச் சரியான சட்ட முறைகள், சரியான வகையிலே அவர்களுக்குச் செய்து கொடுக்கப்படவில்லை. அதனால் மண் அள்ளுபவர்கள் திருட்டுத்தனமாகத்தான் அள்ள வேண்டியிருக்கிறது. அரசுக்கு வருகின்ற வருவாயும் கெடுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவர்கள் செங்கல் தொழில், மண்பாண்டம் செய்வதற்கான தொழில்களுக்கு மண் அள்ளுவதற்கு எளிதான ஒரு முறையை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கல் உடைக்கும் தொழில், கிராமங்களில் நடந்து வருகிறது. அங்கே இருக்கின்ற கல் குவாரிகளில், சில குவாரிகள் முறையாக ஏலம் விடப்படவில்லை. ஏலம் விடப்படாத சில குவாரிகளிலே—அரசு திட்டங்களைத் தீட்டும்போது, சாலை போடுகின்றபோது, ஏலம் விடப்படாத குவாரிகளிலிருந்து கல் எடுக்க வேண்டும் என்பதுபோல் மதிப்பீடு தயார் செய்யப்படுகிறது. நெல்லை மாவட்டத்தில் இது அதிகமாக நடப்பதால் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. கல்குவாரிகளில், கல் உடைக்கும் தொழில் நடைபெறுவதில்லை. ஆனால்,



1999 ஏப்ரல் 28] [திரு. பா. வேல்துரை]

இதுதான் குவாரி என்று ஏலம் விடுகிறார்கள். அதிலே 4 கிலோ மீட்டர் லீடு கொடுத்தால், அவர்கள் உண்மையிலேயே ஜல்லி 50 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து கொண்டுவருகிறார்கள். இதனால் ஒப்பந்தக்காரர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தரமான வேலை செய்வதற்கான சூழ்நிலை இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். பல இடங்களில், அதுபோன்று, மணல் குவாரிகளில் முன்பெல்லாம் மண் அள்ளுவதற்கு அனுமதி இருந்தது, இப்போது மணல் அள்ளுவதற்கு முறையாக வாய்ப்பு இல்லை. ஆகவே, திருட்டுத்தனமாக அள்ளுகிறார்கள். அப்படி அள்ளும்போது லாரி பிடிபட்டால் 10,000, 15,000 ரூபாய்–மணல் அள்ளினாலும் சரி, கல் எடுத்தாலும் சரி, அவர்கள் நஷ்ட ஈடாக 15,000 ரூபாய் கட்டினால்தான் லாரியை மீட்கமுடியும் என்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, மண் அள்ளுவதற்கும், கல் எடுப்பதற்கும், கல் குவாரிகள், மணல் குவாரிகளை முறையாக ஏலம் விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில், மண்பாண்டம் செய்தல், கைத்தறி நெசவு, பாய் நெசவு போன்ற தொழில்கள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால், அவர்கள் எல்லாம் எங்களுடைய தொழில்களை ஊக்குவிப்பதற்கு •அரசு கடனோ அல்லது அரசு மானியமோ கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அந்த வகையில் மண்பாண்டத் தொழில், பாய் நெசவுத் தொழில், கைத்தறி நெசவுத் தொழில் போன்ற தொழில்கள் எல்லாம் என்னுடைய தொகுதியில் மட்டுமல்லாமல், மாநில முழுவதுமே நசிந்தே வருகின்றன. மண்பாண்டத் தொழில்களுக்கு எல்லாம் ஐ.ஆர்.டி.பி. கடன்கள் வழங்குகின்றபோது, கண்டிப்பாக உரியவர்களைத் தேர்ந்தெடுத்து, முறையாக அவர்களுக்குக் கடன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, மினி சிமெண்ட் தொழிற்சாலைக்கு 16 சதவிகிதம் வரி என்று சொல்கிறார்கள். எங்கள் பகுதியிலே அதுபோன்ற தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்றன. மற்ற மாநிலங்களில், குறிப்பாக கர்நாடகத்திலே 6 சதவிகிதம்தான். எனவே, இங்கு அந்தத் தொழிலை அதிகமாகச் செய்வதற்கு, மினி சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு குறைவாக இருக்கிறது. எனவே, அந்த வரியை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பா. வேல்துரை] [1999 ஏப்ரல் 28

அதுபோன்று, பத்திரப்பதிவுத் துறையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில், சேரன்மகாதேவியின் மாவட்டப் பதிவு அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு இடம் இருக்கிறது. கட்டடம் கட்டுவதற்கான கோரிக்கைகளும் அரசுக்கு வந்திருக்கின்றன. ஆனால், கட்டடம் கட்டுவதற்கு காலதாமதம் ஆகின்றது. ஆகவே, அந்தக் கட்டடத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் வாங்குவதற்கு 3 ஆண்டுகள் தாண்டிவிட்டால், கோர்ட்டுக்குச் சென்று வாங்க வேண்டியிருக்கிறது. அது பெரிய மோசமான ஒரு நடைமுறை. எனவே, பத்திரப் பதிவு அலுவலகத்தில் கணினி அமைத்து அங்கே உடனடியாக பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் வாங்குவதற்கான ஒரு வசதி வாய்ப்பினை நீங்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, சில இடங்களில் சொத்து மதிப்பு அரசாங்கத்திலே குறைவாக இருக்கிறது. வெளியிலே மார்க்கெட் ரேட் அதிகமாக இருக்கிறது. இங்கே பத்திரப் பதிவு செய்ய வருகின்றபோது, நீங்கள் உண்மையிலேயே அதிகமாக விலை கொடுத்து வாங்குகிறீர்கள், பத்திர மதிப்பு உங்களுக்குக் குறைவாகச் செய்து, இப்போது நிர்ணயித்து இருக்கிறபடி பத்திரப் பதிவைச் செய்துதர வேண்டுமென்று சொன்னால், நீங்கள் இவ்வளவு தொகை தாருங்கள் என்று கேட்கிறார்கள். பெரிய அளவில் ஊழல் நடைபெறுகிறது. புரோக்கர்கள் வைத்துத்தான் அரசு அதிகாரிகள் இந்த மாதிரித் தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில் என்ன பண்ணுகிறார்கள் என்று சொன்னால், வங்கியிலே கடன் வாங்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டு, ஒன்றுக்குமே ஆகாத நிலங்களை, அதிகமான மதிப்பு வைத்து, அதிக முத்திரைத் தாள்கள் வாங்கி, அதிகமான மதிப்பிலே பத்திரத்தை வாங்கிக் கிரயம் செய்துவிடுகிறார்கள். அங்கே வங்கியிலே கொடுக்கிறபோது சொத்தினுடைய மதிப்பு அதிகமாக இருக்கிறது. அந்த வகையில் அவர்கள் சொத்தின் மதிப்பை அதிகமாக்கி, அங்கே கடனை அதிகமாகப் பெற்று வங்கியை ஏமாற்றுகிறார்கள். அதேபோன்று, அவர்கள் இப்படிச் செய்வதால், அந்தப் பகுதியிலே உள்ள ஏழை, எளிய மக்கள் சொத்தினை வாங்க முடியாத ஒரு நிலை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.



1999 ஏப்ரல் 28]

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான பிரச்சினை. அதனால்தான் விரிவாகப் பேசுகிறேன். சீக்கிரம் முடித்துவிடுகிறேன். இந்த மாதிரித் தவறுகள் சில இடங்களில் நடக்கின்றன. கூடுதலாக பத்திரப்பதிவு செய்யும்போது, மீண்டும் அந்த விலையையே நிர்ணயிக்கத் தீர்மானிக்க கூடாது. இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், சிறு விவசாயிகள் நிலம் வாங்க முடியாது. ஒரு ஏழை ஒரு வீட்டுமனை அல்லது நிலம் வாங்க முடியாது. யாராவது ஒருவர் அதிகமாகப் பத்திரம் போட்டார்கள் என்று சொன்னால் அது அத்தோடு முடிந்துபோகிறது. மீண்டும் புதிய விலை நிர்ணயம் செய்கின்ற இந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டுதோறும் அரசு, அந்தப் பத்திரப்பதிவினுடைய மதிப்பைக் கூட்டிக்கொண்டே செல்வது சரியாக இருக்காது என்று எண்ணுகின்றேன். குறிப்பாக, இப்போதெல்லாம் நிறையப் பத்திரங்கள், பதிவு செய்த பத்திரங்களைக்கூட வாங்க முடியாத அளவுக்கு பத்திர அலுவலகங்களிலே இருக்கின்றன. எனவே, இரண்டு ஆண்டுகளுக்காவது, அதிகமாக சொத்து மதிப்பைக் கூட்டி நிர்ணயிப்பதை நீங்கள் தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

அதுபோல,, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் சொத்துக்களை வாங்கும்போது, 12 சதவிகிதம் என்று இருப்பதை, 6 சதவிகிதமாக, உண்மையாக வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு பத்திரப்பதிவிலே நீங்கள் ஒரு சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, சில நேரங்களில் இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்பினுடைய சொத்தை ஒருவர் வாங்குகிறார், ஒரு இலட்சம் ரூபாய்க்குப் பத்திரம் போட்டுவிட்டு வாங்கினார் என்று சொன்னால், அந்தப் பத்திரம் அவருக்குக் கொடுக்கப்படுவதில்லை. அவர் விதி 47(ஏ)-ன்கீழ் அந்தப் பத்திரத்தைக் கேட்டு விண்ணப்பித்தார் என்று சொன்னால், அங்கே மீண்டும் நேரடியாகப்போய் அந்த நிலத்தைப் பார்க்கின்றார்கள். பார்த்துவிட்டு இது 1¼ இலட்சம் ரூபாய் மதிப்பு என்று சொல்கிறார்கள். ஆனால், பத்திரப்பதிவு நேரத்தில் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு பத்திரப்பதிவு கட்டணம் வாங்கிவிடுகிறார்கள்.

[திரு. பா. வேல்துரை] [1999 ஏப்ரல் 28

ஆனால், பத்திரத்தை ஆய்வு செய்தவர்கள் 1¼ இலட்சம் ரூபாய் அந்த இடத்தினுடைய மதிப்பு என்று சொன்னபோது, மீதி 75 ஆயிரம் ரூபாய்க்குப் பத்திரப் பதிவுக் கட்டணம் வாங்கியிருக்கின்ற பதிவுக் கட்டணத்தை அட்ஜெஸ்ட் பண்ணுகின்ற ஒரு வாய்ப்பை நீங்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இரண்டாவது, கண்டிப்பாக ஒரே ஒரு விஷயம். திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த ஆட்சிக் காலத்தில் நிலம் யாருக்கு என்றே தெரியாது, ஆனால், நிலத்தை விற்றுவிட்டார்கள். சொத்தை விற்றுவிட்டார்கள். நிறைய ஏழைகள் சொத்து இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால், பத்திரப்பதிவின்போது, சொத்தை விற்கின்றவர், வாங்குகின்றவர் கண்டிப்பாக அவர்களுடைய படத்தை, போட்டோவை ஒட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த முறை இல்லையென்று சொன்னால், யார் நிலத்தையும் யாரும் விற்கலாம். அப்படிப்பட்ட ஒரு தவறான முறை தமிழ்நாட்டிலே இருக்கிறது. அதனால் 3 ஆயிரம், 4 ஆயிரம் ஏக்கர், கடந்த ஆட்சிக் காலத்திலே சசிகலா அவர்கள் வாங்கிவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். அந்தச் சொத்தையெல்லாம் அந்த நிலச் சொந்தக்காரர்களுக்கு நீங்கள் மீட்டுக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

*** மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போல அந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பினாமியாகப் பதியப்பட்டிருக்கின்ற நிலத்தின் மீது அரசு Revenue Recovery Act R.R. Act-லே போட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரைவில் பேசி முடியுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** Revenue Recovery Act-லே போட்டதற்கு நன்றி, இருந்தாலும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.



1999 ஏப்ரல் 28]

**திரு. பா. வேல்துரை:** இருந்தாலும் அந்த நிலத்தின் சொந்தக்காரர் திடீரென்று போய்ப் பார்க்கிறார், அவர் நிலமாக இல்லை, போய்ப் பார்த்தால் அதற்காக நீதிமன்றத்திற்குப் போகின்ற அளவுக்கு அவருக்கு வசதி கிடையாது. அதனால் அரசே ஒரு சட்டத்தை உருவாக்கி, தவறாகப் பத்திரப்பதிவு செய்த நிலங்களை, அந்த நிலத்தின் சொந்தக்காரர்களுக்கே திரும்ப நீங்கள் வாங்கிக் கொடுப்பதற்கான சட்டத் திருத்தத்தை கொண்டுவந்து, அந்த ஏழை விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள், சிறு தொழில்கள் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவு அலுவலகங்களிலே வழிகாட்டி மதிப்புப் புத்தகங்களை பொதுமக்களின் நேரடிப் பார்வைக்கு வைக்க வேண்டும் அல்லது கிராம நிர்வாக அலுவலர்களிடத்திலே இருந்தால்தான் மக்கள் பத்திரப் பதிவு செய்வதற்குத் தகுந்தாற்போல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வழிகாட்டி மதிப்புப் புத்தகங்களை ஒழுங்கான முறையில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்காததால் பத்திரப்பதிவு அலுவலகங்களில் நிறைந்த அளவிற்கு ஊழல் நடைபெறுகிறது. லஞ்சம் பெருக்கெடுத்து, அந்த அலுவலகங்களில் அதிகாரிகள் லஞ்சத்தைப் பெற்றுக்கொண்டு பத்திரப்பதிவுகளைச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஒரு பத்திரம் பதிவு செய்ய வேண்டுமென்றால் மதிப்புக்கு சுமார் 18 சதவிகிதம் செலவாகின்றது. எழுத்துக் கூலி, புரோக்கர் கமிஷன், பத்திரப் பதிவுக்குண்டான முத்திரைத் தாள்கள், தீர்வை போன்றவை எல்லாம் 18 சதவீதம் செலவாவதால் மக்கள் அதனால் பத்திரப் பதிவு முழுவதும் செய்ய முடியாமல், மதிப்புக்குத் தகுந்தாற்போல் செய்ய முடியாத நிலை உள்ளது என்பதை அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பத்திரம் எழுதுபவர்களுக்கும், பத்திரம் பதிவு செய்பவர்களுக்கும் ஒப்பந்த அடிப்படையிலே ஒரு சொத்தின் மதிப்பைக் கூடுதலாகச் சொல்லி, அந்தச் சொத்தின் மதிப்பு எந்த அளவிற்கு உண்மையான மதிப்போ, அதைவிடக் கூடுதலாகச் சொல்லி, பத்திரம் எழுதுபவர்களிடத்திலே கூடுதலாகப் பணத்தைப் பெற்றுக்கொண்டு,

லஞ்சம் பெற்றுக்கொண்டு, மிகுந்த ஊழல் பத்திரப் பதிவு அலுவலகங்களிலே நடைபெறுகிறது. இதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைத் தடுத்து நிறுத்துவதற்கு, தீவிரக் கண்காணிப்புக் குழுவை நியமித்து அதன் மூலம் பத்திரப்பதிவு அலுவலகங்களில் முறைகேடுகள், லஞ்ச ஊழல்கள் நடைபெறுவதை அமைச்சர் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

பத்திரப் பதிவுத் துறையிலே உயர் அதிகாரிகள் நேர்மையாக இருந்தாலும், கீழ்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் முழுவதுமாக நேர்மையாகச் செயல்படாத நிலை உள்ளது என்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன். நான்கு காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் ஆய்வுப் பணியில் இருப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. அவர்கள் எந்த அளவிலே பணியாற்றுகிறார்கள் என்பதைத் தெரியப்படுத்த வேண்டும். மேலும், இன்னும் கூடுதலாக கண்காணிப்பு அதிகாரிகளை நியமித்தால்தான் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று, அவர்கள் ஆய்வு செய்து ஊழலைத் தடுப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கூடுதலான அதிகாரிகள் அடங்கிய கண்காணிப்புப் படையை நியமிக்க வேண்டும் என்பதோடு, அரசு தக்க நடவடிக்கை எடுத்து, ஊழல் செய்பவர்களைத் தடுத்து நிறுத்தி, பொதுமக்களுக்கு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதுள்ள முத்திரைத் தாள்களுக்குத் தீர்வை 12 சதவிகிதமாக இருப்பதால், விவசாயப் பெருங்குடி மக்கள் பத்திரப்பதிவு செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போகின்றது. 300, 400 ரூபாய் மதிப்புள்ள சென்ட் நிலங்களை, சாதாரணமாக கிராமப்புறங்களில் விளைச்சல் இல்லாத பகுதிகளாக இருந்தால், அவர்கள் 100 ரூபாய்க்கு வாங்கிவிடுவார்கள். ஆனால், 400 ரூபாய் மதிப்பீடு செய்து அந்த விவசாய நிலங்களைப் பத்திரப்பதிவு செய்ய வேண்டும் என்றால் ரூ.100 பத்திரத்திற்கே, செலவு 20 ரூபாய் ஆகிறது என்பதை அரசின் கவனத்திற்குத் தெரிவித்து விவசாய விளை நிலங்களில் மானாவாரி பூமிகளுக்கு எல்லாம் விவசாயிகளுக்கு 8 சதவிகிதமாக முத்திரைத்தாள் தீர்வையை நீங்கள் குறைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





இந்தக் குறிப்பேட்டில், ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் உள்ள பத்திரங்களுக்கு தீர்வையை 50 சதவீதமாகக் குறைத்து, வருகின்ற ஜூலை மாதத்தற்குள்ளாக பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம் என்று இருப்பதை நான் வரவேற்கிறேன். மேலும், அதைக் கூடுதலாக இன்னும் 3 மாதங்களுக்கு—முழுமையாகப் பணம் கட்ட இயலாதவர்களுக்கு வாய்ப்புத் தருகின்ற வகையிலே 3 மாதம் கூடுதலாக அவகாசம் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

100 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கின்ற பழைய கால பத்திரப் பதிவு அலுவலகங்களுக்கு எல்லாம் புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். அதன்மூலம் பொதுமக்களுடைய ஆவணங்கள் பாதுகாக்கப்படுவதற்கு வசதியாக இருக்கும். பழைய கட்டடங்கள் என்பதால், மழை, காற்று, வெள்ளம்—இவற்றால் அந்த ஆவணங்கள் அழிந்து விடுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், அனைத்து பத்திரப்பதிவு அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

படித்த இளைஞர்கள் ஆவண எழுத்தர் பதவிக்கு மனுச் செய்தால், அவர்களுக்கு எந்தவிதமான தங்குதடையுமின்றி உரிமங்கள் வழங்க வேண்டும். அதன்மூலம் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கும், சுய தொழில் செய்வதற்கும் வாய்ப்பாக இருக்கும்.

பத்திரப் பதிவு அலுவலகங்களைக் கம்ப்யூட்டரில் தொகுத்து வைக்க வேண்டும். இன்றைக்குப் பல்வேறு துறைகளிலே கணினிமயமாக்கி இருக்கின்ற இந்த அரசு பத்திரப்பதிவு அலுவலகங்களிலேயும் ஆவணங்களைக் கணினியில் தொகுத்து பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முத்திரைத் தாள்களைப் பொறுத்தவரையில் 5 ரூபாய், 10 ரூபாய், ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய்க்கான முத்திரைத் தாள்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த ஓராணடு காலமாக இந்தப் பத்திரங்கள் எல்லாம் கிடைக்காமல் மக்கள் அவதிப்படுகின்றார்கள். இதனால் பத்திரங்களை அதிக விலைக்கு வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, பத்திரங்களைத் தாராளமாக ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைநகருக்கும் அனுப்பி, அனைத்து வகையான பத்திரங்களும் தாராளமாகக் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. மணிவர்மா] [1999 ஏப்ரல் 28

குறிப்பாக, பாகப் பிரிவினையைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டு 2 சதவிகிதமாக இருந்த முத்திரைத் தாள்கள் தீர்வை குறைக்கப்பட்டது; அது சில பகுதிகளிலே இன்றுவரை அமலுக்கு வராமல் இருக்கிறது. அதன்மூலம் பெரும் தொகை செலுத்த வேண்டி இருக்கிறது. ஒரு பெரிய குடும்பத்தை எடுத்துக்கொண்டால், 100 ஏக்கர், 200 ஏக்கர் நிலங்களை 4 பேர், 5 பேருக்கு பாகப் பிரிவினை எழுதுகின்றபோது, பெரும் தொகை அரசுக்குச் செலுத்துகின்ற காரணத்தினால், அவர்கள் பாகப் பிரிவினைப் பத்திரங்களை ஒழுங்காக எழுதாமல், கூறுசீட்டு என்ற முறையிலே எழுதி, அதனால் குடும்பத்தில் ஏகப்பட்ட தகராறுகள் வருகின்ற காரணத்தால், 2 சதவிகிதம் தீர்வையை 1 சதவீதமாகக் குறைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே இருக்கின்ற தச்சம்பட்டு பகுதியிலே வாழ்கின்ற மக்கள் பத்திரப்பதிவு அலுவலகம் செல்ல வேண்டுமென்றால், சுமார் 25 கிலோமீட்டர் சென்றுதான் பத்திரப்பதிவு செய்கின்ற நிலை இருக்கிறது.

தச்சம்பட்டில் பத்திரப்பதிவு அலுவலகம் தொடங்குவதற்கான செயற்குறிப்பு அரசுக்கு வரப்பெற்றிருப்பதாகத் தெரிகிறது. தச்சம்பட்டில் பத்திரப்பதிவு அலுவலகம் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தண்டராம்பட்டு, தாணிப்பாடி பத்திரப்பதிவு அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றிற்குப் புதிய கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

தண்டராம்பட்டு தொகுதி மிகவும் பின்தங்கிய, விவசாயத்தை நம்பியிருக்கிற தொகுதி என்பதால், கொளமஞ்சனூர் அருகே கடந்த கால அரசு சிறு தொழில் தொழிற்பேட்டை தொடங்குவதற்கான அறிவிப்பைச் செய்தார்கள். ஆனால், இன்றைய வரையிலே, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த அரசு அங்கே தொழிற்பேட்டை அமைப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தந்த மாவட்டங்களுக்குண்டான முத்திரைத் தாள்களை அந்தந்த மாவட்டங்களிலே அதிகமான அளவில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். மற்ற மாவட்டங்களுக்குப்போய் முத்திரைத்



1999 ஏப்ரல் 28] [திரு. க. மணிவர்மா]

தாள்களை வாங்குவதற்குக் கூடுதலான பணம் கொடுக்கின்ற வாய்ப்பிருக்கிறது. இதனால், போலி முத்திரைத் தாள்கள் வருவதற்கான வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, அந்தந்த மாவட்டங்களுக்குத் தேவையான முத்திரைத் தாள்களை அந்தந்த மாவட்டங்களிலேயே விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்ற மாவட்டங்களிலிருந்து பெறுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு ஊழியர்களைப் பொறுத்தவரையில், வாரத்திற்கு ஒரு நாள் மட்டும் சென்று, உணவுப் பொருள்களை எடுத்துக் கொடுத்து விட்டுச் சென்று விடுகிறார்கள். உணவினைக் குழந்தைகளுக்குச் சரியாகக் கொடுப்பதில்லை. அவர்கள் பகுதி நேர ஊழியர்களாக இருக்கின்ற காரணத்தால், மற்ற வேலைகளுக்குச் சென்று விடுகிறார்கள். இந்தப் பகுதி நேர ஊழியர்களை முழு நேரமும் பணியாற்றக்கூடிய அளவிற்கு, மற்ற நேரங்களில் பள்ளி மாணவர்களுக்குப் பாடம் சொல்லித் தருகின்ற அளவிலே, முழு நேர ஊழியர்களாக்கி தொகுப்பூதியம் கொடுத்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும். அவர்களுக்குக் குறைவான சம்பளம் தரப்படுவதால், சத்துணவுப் பொருட்களை அவர்கள் கையாடல் செய்தல், மற்றவைகளுக்கு வாய்ப்பிருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சிட்கோ ஊழியர்களின் குறைகளைப் போக்கவேண்டும். குறிப்பாக, ஒரு நபர் கமிஷன் திரு. சுப்பிரமணியன் அவர்களின் பரிந்துரைகளை ஏற்று செயல்படுத்த வேண்டும். 15-12-1998 இல் சிறு தொழில் துறை செயலாளர் பிறப்பித்த உத்தரவினைச் செயல்படுத்த வேண்டும். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்துடன் சிப்காட் நிறுவனம் இணைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மிகவும், நலிந்து, கஷ்டப்பட்ட நிலையில் இருக்கும் தொழிற்சாலைகளுக்கு, சிறு தொழில்களைத் தொடங்குவதற்கு நடைமுறை மூலதனம் கொடுக்கப்பட வேண்டும்.

சீனா, ஜப்பான் போன்ற மேலை நாடுகளில் தரமான முட்டைகளைக் கொண்டு, தரமான நல்ல பட்டை உற்பத்திச் செய்கிறார்கள். மேலை நாடுகளில் இருக்கின்ற தரம் வாய்ந்த பட்டுப்புழு முட்டைகளை இறக்குமதி செய்து, தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்குக் கொடுத்து, நல்ல தரமான பட்டை உற்பத்தி செய்ய வேண்டும். 4,5, ஆண்டுகளுக்கு முன்னால் திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி போன்ற மாவட்டங்களில் சிறந்த முறையிலே விவசாயிகள்

பட்டு உற்பத்தி செய்து கொண்டிருந்தார்கள். 2,3 ஆண்டு காலமாக பட்டு உற்பத்தியைப் பார்ப்பதே அரிதாக இருக்கிறது. பட்டு உற்பத்திக்குத் தேவையான தளவாடச் சாமான்களை, தளவாடப் பொருட்களை எல்லாம் முழுவதும் அரசு மானியமாகக் கொடுத்தால்தான், ஏழையெளிய, சிறு விவசாயிகள் பட்டு உற்பத்தியைப் பெருக்கி, தமிழ்நாட்டிலே பட்டு உற்பத்திச் சிறப்பாகப் பெருகுவதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

சத்துணவு ஊழியர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. க. மணிவர்மா:** சத்துணவு ஊழியர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு சின்ன கோரிக்கை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சிறு தொழில் சம்பந்தப்பட்ட சாதனைப் பட்டியலை இன்றைக்குத்தான் கொடுத்திருக்கிறார்கள். 3 நாட்கள் விடுமுறை வந்தது. நன்றாகப் படித்து, பல விஷயங்களைச் சொல்வதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. அதேபோல, 1996-97-க்கான 'சிட்கோ' ஆண்டறிக்கை 1997 ஆம் ஆண்டுக்குப் பதிலாக, 1999 ஆம் ஆண்டு 7-2-1999-ல் கொடுத்திருக்கிறார்கள் அதேபோல, 1997-98 ஆம் ஆண்டு அறிக்கை இன்றைக்கும் கொடுக்கப்படவில்லை. நாளைக்கு தொழில் மானியம் வருகிறது. மிகப் பெரிய மானியம். அதற்கான அந்தக் குறிப்புப் புத்தகம் இதுவரை கொடுக்கப்படவில்லை. 4 நாட்களுக்கு முன்னால் கொடுத்திருந்தால், நன்றாகத் தயார் பண்ணி, பல விஷயங்களைச் சொல்வதற்கு உறுப்பினர்களுக்கு வாய்ப்பிருந்திருக்கும். தயவுசெய்து, மதியமாவது இந்தத் தொழில் மானியம் குறித்த குறிப்புகளைக் கொடுக்குமாறு நம்முடைய சபாநாயகர் மூலம் அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில்கள் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.





* **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில்கள் மற்றும் பத்திரப்பதிவுத் துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகள்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் திருஞானசம்பந்தம், பாலசுப்பிரமணியன், ராமசாமி, தங்கமணி, வேல்துரை, வல்லரசு, சிவானந்தம், வெங்கடசாமி, மணிவர்மா, மோகன் கந்தசாமி ஆகியோர் தங்களுடைய மேலான கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கைகள்மீது பதிலுரையாக சில கருத்துக்களை வழங்குவதற்கு முன்னால், இந்த மன்றத்திலே 4-ஆவது முறையாக இந்த மானியக் கோரிக்கைகள்மீது விவாதிப்பதற்கு வாய்ப்பினை நல்கிய என்னுடைய உரியினும் மேலான தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய திக்கு நோக்கி வணங்கி, அதேபோல, மாண்புமிகு இனமானப் பேராசிரியர் அவர்களையும் வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

ஊரகத் தொழில் துறை மானியக் கோரிக்கையின்மீது கடந்த ஆண்டு இதே அவையிலே அறிவிக்கப்பட்டு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்டு, திருச்சியிலே செயற்கைமுறை வைரம் தீட்டும் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் பயிற்சி ஆராய்ச்சி வளர்ச்சி மையம் சுமார் 89 இலட்சம் ரூபாய் செலவிலே ஆரம்பிக்கப்பட்டது, கடந்த ஓராண்டு காலத்திலே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்த ஏழை எளிய அதுவும் கிராமப்புறத்தைச் சார்ந்த மகளிருக்காக ஏற்கெனவே 1989-90 ஆம் ஆண்டுக்குப் பின்னால் இந்தத் தொழில் நசிவடைந்து மீண்டும் 1996 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, அதற்கு மீண்டும் உயிரூட்டப்பட்டு, அந்தத் தொழிலுக்குண்டான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, அது தொடங்கப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சுட்டிக்காட்டியதைப் போல, தொழில் துறையிலே ஏற்பட்டிருக்கின்ற மந்தத்தைப் போக்குவதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றையதினம தமிழகத்தில் 'தொழில்நுட்பக் குழுமம்' என்ற ஒரு குழுமத்தை பல்வேறு உறுப்பினர்களைக்கொண்டு நிருவாக இயக்குநர், தொழில் துறை, தலைமைச் செயலாளர், பொருளாதார வல்லுநர்கள், இன்னும் சிறுதொழில் சங்கத்தைச் சார்ந்த தலைவர்கள் ஆகிய அனைவரும் சேர்ந்த ஒரு தொழில்நுட்பக் குழுமத்தை அமைப்பதற்காக 3 இலட்சம்

[திரு. இ. பெரியசாமி] [1999 ஏப்ரல் 28

ரூபாய் வழங்கி, நலிவடைந்திருக்கின்ற தொழில்களுக்கெல்லாம் மேலான அறிவுரைகளை வழங்கி, ஏற்றுமதி, இறக்குமதி இவற்றில் ஒரு புதிய திருப்பம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சுமார் 200 பேருக்கு அறிவுரை வழங்குவதற்காக 8 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அதிலே 180 பேருக்கு இன்றுவரை பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் இந்த அவைக்குத் தொரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் பூட்டுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களை மேம்படுத்துவதற்காக, அரசின் சார்பாக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, கூட்டுறவு வங்கியின் மூலமாக 20 இலட்சம் ரூபாய் கடனும் வழங்கி, அலிகாரிலே தயாரிக்கப்படுகின்ற நவதால் பூட்டு அளவுக்குத் தரத்தை உயர்த்துவதற்கு இன்றைக்கு உற்பத்தியை இந்தச் சிறுதொழில் கழகம் தொடங்கியிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்தப் பொருட்களின் தரத்தை ஆய்வு செய்வதற்காக, சுமார் 40 இலட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவையெல்லாம் இன்றையதினத்திலே முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பிற்பகல் 12-30

தொழில் வணிக இயக்கத்தில் இருக்கின்ற அலுவலர்களுக்கெல்லாம் கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின்படி பயிற்சி அளிக்கவேண்டுமென்று சுமார் 19.35 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆங்காங்கே தொழிற்பேட்டைகள், ஒன்றிய அளவிலே, வட்டங்கள் அளவிலே அமைக்கப்பட வேண்டுமென்றெல்லாம் கோரிக்கை வைத்தார்கள். நான் கடந்த மானியக் கோரிக்கையின்போது, வருகின்ற 3 ஆண்டு காலத்திலே 50 தொழிற்பேட்டைகள் 'சிட்கோ' மூலமாக ஆரம்பிக்கப்படும் என்ற செய்தியை இந்த அவையிலே



1999 ஏப்ரல் 28] [திரு. இ. பெரியசாமி]

அறிவித்தேன். இதற்காக 17 இடங்களிலே அரசு நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலங்களைக் கையகப்படுத்தும்போது, இந்த அரசு எடுத்திருக்கின்ற அடிப்படைக் கொள்கை பெரும்பாலும் சிட்கோவினால் தனியாரிடத்திலிருந்து நிலம் வாங்குகின்றபோது அதிக விலை கொடுத்து வாங்கக்கூடாது, பேச்சு வார்த்தை மூலமாகவோ அல்லது தனியாரிடத்திலோ ஓர் இடத்தைக்கூட, ஒரு நிலத்தைக்கூட இந்த அரசு வாங்குவதற்கு முன்வரவில்லை. அதற்குக் காரணம் அரசின் நிலங்களைத்தான் அங்கே இருக்கினற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிர்ணயிக்கின்ற விலைக்குத்தான் வாங்க வேண்டும்—கோயில் நிலங்களாக இருந்தாலும் சரி, வக்ஃப் போர்டு நிலங்களாக இருந்தாலும் சரி, அரசு (மாவட்ட ஆட்சித் தலைவர்கள்) நிர்ணயிக்கின்ற விலையிலே வாங்கவேண்டும் என்று கொள்கை அளவிலே முடிவெடுத்து, சிறந்த நோக்கத்தோடு, லஞ்சலாவண்யத்திற்கு அப்பாற்பட்டு, எந்தத் தவறும் நடக்காத அளவுக்கு இவை அமைக்கப்பட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் இப்போது இந்தத் துறை 50 இடங்களிலே தொழிற்பேட்டைகள் அமைக்கின்ற நடவடிக்கையை எடுதது, 17 இடங்களிலே இடங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இன்றையதினம் Commissioner of Land Administration அவர்களிடத்திலே நாங்கள் தொழிற்பேட்டை அமைப்பதற்கு பல இடையூறுகள் ஏற்படுகின்ற காரணத்தினால், அதிலே சிறுதடங்கல் ஏற்பட்டாலும் முதலிலே எங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கவேண்டுமென்று கேட்ட நேரத்தில், கடந்த பிப்ரவரி மாதத்திலே அவர்கள் எங்களுக்கு ஒப்புதல் வழங்கியிருக்கின்ற காரணத்தால், அத்தனை தொழிற்பேட்டைகளும் விரைவிலே அமைக்கப்படும் என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் இன்னொன்றையும் நான் சொல்லாமல் இருக்க முடியாது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வக்ஃப் போர்டு வாரியத்தினுடைய தலைவர் அவர்கள் கீழக்காவத்துக்குடியிலே இருக்கின்ற நிலத்தை நாங்கள் எங்களுக்கு ஒப்படைக்கும்படி கடந்த ஆண்டு கேட்ட நேரத்திலே உடனடியாக அரசு வழிகாட்டி மதிப்புப்படி நாங்கள் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று கடிதம் அனுப்பினோம். அவர்கள் சொன்னார்கள், அதிக விலை கொடுக்க வேண்டும், ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று எங்களிடத்திலே கேட்டார்கள். நாங்களும் ஒப்புதல் கடிதம் கொடுத்த உடனே, அதற்குப் பிறகு அதை ஏலத்திலேதான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று

சொன்னார்கள். அரசும் ஏலத்திலே எடுப்பதற்கு, சிட்கோ நிர்வாகம் எடுப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃப் வாரியம் சொல்லவில்லை. சட்டம் அப்படித் திட்டம் வகுத்திருக்கிறது. சில இடங்களில் நம்முடைய மின்சாரத் துறைகூட வக்ஃப் வாரியத்தைக் கலந்துகொள்ளாமல் அவர்களாகவே அதை எடுத்துப் பயன்படுத்தப் பெரும் பணத்தைச் செலவழித்த பிறகு சட்டம் ஏலத்திலேதான் விற்கவேண்டுமென்று சொல்லுகின்ற காரணத்தால், எங்களுக்குச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. 6 கோடி ரூபாயை குடியாத்தத்திலே செலவழித்து இருக்கிறார்கள். அதைக் கையகப்படுத்தியும் விட்டார்கள். இப்போது சட்டம் இப்படிச் சொல்லுகிறது. என்ன செய்வதென்று நாங்கள் நிலைகுலைந்து நிற்கின்றோம். அதனால்தான், இதை முன்னெச்சரிக்கையாகச் சொல்லுகிறோமே தவிர, வேறு அல்ல. சட்டம்தான் சொல்லுகிறது, நாங்கள் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சட்டம் சொல்லுகிறது என்று சொன்னார்கள். நான் விவாதத்திற்குச் செல்லவில்லை. ஏற்கெனவே சட்டத்திற்குட்பட்டு, அவர்கள் அனுப்பிய கடிதத்திற்கு நாங்கள் ஒத்துக்கொண்டோம், ஆயிரம் ரூபாய்க்கு நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்று சொன்னதற்குப் பிறகுதான் அவர்கள் இந்தக் கடிதத்தை அனுப்பினார்கள். இருந்தாலும் அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அடுத்து, சென்னையில், அம்பத்தூரிலும், கிண்டியிலும், 20, 25 ஆண்டுகாலம் கேட்பாரற்ற நிலையிலே கிடந்த சாலைகளை மேம்படுத்துவதற்காக கடந்த முறை, கிட்டத்தட்ட 39 கிலோ மீட்டர் தூரத்திற்கு 3.80 கோடி ரூபாய் செலவில் ஒரு கிலோ மீட்டருக்கு 10 இலட்சம் ரூபாய் வீதம் செலவு செய்து அந்தச் சாலைகள் எல்லாம் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். கிண்டியிலே, ஒரு கோடி ரூபாயிலே இந்த மேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 70 இலட்சம் ரூபாய் செலவு செய்து இப்போது பணிகள் பூர்த்தியாகின்ற அளவிலே இருந்துகொண்டிருக்கின்றன.



இதுபோக, இப்போது சிட்கோவிற்கு யார் சென்றாலும், அங்கே அவர்கள் கேட்கின்ற கோரிக்கைகளுக்கு உடனே பதில் சொல்கின்ற வகையிலே ஒரு முகவரும் அமர்த்தப்பட்டிருக்கின்றார்.

*பிற்பகல் 12-35*

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், சிறுதொழில் செய்கின்றவர்களுக்கு, இந்த அரசு, ஏற்கெனவே கடந்த காலத்திலே கொள்முதல் கொள்கையிலே purchase preference என்று சொல்வார்களே. அந்தச் சலுகையை மின்சார வாரியத்திற்கு, போக்குவரத்துத் துறைக்கெல்லாம் அளித்து சிறுதொழில் செய்கின்றவர்கள் நிர்ணயிக்கின்ற விலைக்குக் கட்டாயமாக வாங்க வேண்டிய சூழ்நிலை அரசுக்கு ஏற்பட்ட காரணத்தால், பல கோடி ரூபாய் நஷ்டம் ஆகியிருக்கின்ற காரணத்தால், அவையும் சந்தையிலே போட்டியிட்டுத்தான் வாங்கவேண்டும் என்ற நிலையை இந்த அரசு அறிவித்த நேரத்திலே, மீண்டும் சிறுதொழில் துறையைச் சேர்ந்த சங்கங்கள் அனைத்தும் நம்முடைய மாண்புமிகு முதல்வரிடத்திலே கோரிக்கை வைத்தார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் உடனே அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, இன்றைக்கு அறிவித்து, சிறுதொழில் செய்கின்றவர்களுக்கெல்லாம் அந்த purchase preference-ஐ கொள்முதலுக்கு, அந்தச் சலுகைகையை-இந்த அரசு தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கேகூட பேசுகின்றபோது சொன்னார்கள், கிட்டத்தட்ட 350 பொருள்களில் ஒருசில பொருள்கள்தான்– 25 பொருள்கள்தான்– வாங்கப்படுகின்றன; மீதிப்பொருட்கள் வாங்கப்படுவதில்லை என்று உறுப்பினர் மோகன் கந்தசாமி அவர்கள் தெரிவித்தார்கள்.

அது சம்பந்தமாக எந்தெந்தப் பொருள்கள் வாங்கவில்லை; என்ன காரணத்திற்காக வாங்கவில்லை என்று. தெரிவிப்பார்களேயானால் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்தநேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுபோல, தொழில் நகரங்கள் வெளிநாடுகளிலிருந்து வருகின்றவர்களுக்கு, இன்றையதினத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறந்த தொழிற் கொள்கைகளை வகுத்து, மிகச் சிறப்பாக பெரிய தொழிற்சாலைகளை நிறுவுகின்ற, இந்தக்

[திரு. இ. பெரியசாமி] [1999 ஏப்ரல் 28

காலகட்டத்திலே தொழில் நகரங்களையும் உருவாக்க வேண்டும் என்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவை முடிவடைகின்ற தருவாயிலே இருக்கின்றன என்ற செய்தியையும் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டு, தேனியிலே தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக ஒரு கிளை உருவாக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, இன்றைக்குப் பத்திரப்பதிவுத் துறையைப் பொறுத்தவரையில், வழிகாட்டி மதிப்பு. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓராண்டுக் காலத்திற்கு, இங்கே பேசியவர்கள் சொன்னார்கள், பக்கத்திலே இருக்கின்றவர் ஒரு சென்ட் நிலத்தைக் கூடுதலான விலைக்கு, கடன் வாங்குவதற்காகப் பதிந்துவிட்டால், அந்தப் பதிவைத்தான், அங்கே பத்திரப்பதிவுத் துறையிலே இருக்கின்ற சார்பதிவாளர்கள் கணக்கிலே எடுத்துக்கொள்கின்றார்கள். அதனால், ஏழையெளிய மக்கள் இன்னலுக்கு ஆளாகிறார்கள் என்று சொன்னார்கள். கடந்த ஆண்டே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள், ஓராண்டு நிர்ணயிக்கப்படுகின்ற அந்த மதிப்பு ஓராண்டுக் காலத்திற்குத் தொடரவேண்டுமென்று அறிவிக்கப்பட்டு, அதுவும் நடைமுறையில் இருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல், கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்றைக்கும் இல்லாத அளவிற்கு 10 இடங்களிலே புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக அனுமதித்து, அதற்குரிய ஆணைகளெல்லாம் பிறப்பிக்கப்பட்டு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன; இங்கே பேசுகின்றபோதுகூட, பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர், தனக்கு ஓர் அலுவலகம் வேண்டுமென்று கேட்டார். கேட்காமலேயே கொடுக்கின்ற முதல்வர்தான் தமிழகத்தினுடைய முதல்வர் என்பதற்கேற்ப, ஏற்கெனவே வழங்கிவிட்டார்கள் என்ற செய்தியை இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, புதிய ஐந்து சார்பதிவகங்கள் திறக்கப்பட்டு விட்டன. அதோடுமட்டுமல்லாமல், மூன்று மாவட்டப் பதிவு அலுவலகங்கள், கும்பகோணத்திலே, கள்ளக்குறிச்சியிலே, விருதாச்சலத்திலே. சேலத்திலே வடக்கு, மேற்கு என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது.

இதுபோக, இன்னும் பல செய்திகளை இங்கே இருக்கின்ற தோழர்கள் சொன்னார்கள். மானியத்தைப் பற்றி, சிறுதொழில் மானியத்தைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் ஒரு விளக்கத்தை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். 1993-94, 1994-95, 1995-96 ஆகிய மூன்று ஆண்டுகளில் மொத்தமாக, அன்றையதினத்திலே, வழங்கிய மானியம்; முதலீட்டு மானியம், குறைந்த மின் அழுத்த மானியம், ஜெனரேட்டர் மானியம், விற்பனை வரி ஒத்திவைப்பு, தள்ளுபடி ஆகியவற்றை மொத்தமாகச் சேர்த்து, வழங்கியது 116.50 கோடி ரூபாய் மூன்று ஆண்டுகளிலே. தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே, 1996-97, 1997-98, 1998-99 ஆகிய மூன்று ஆண்டுகளில் வழங்கிய மொத்த மானியம் 213.55 கோடி ரூபாய்; இரண்டு மடங்கு அளவிற்கு மானியம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் காலத்திலே கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



1999 ஏப்ரல் 28] [திரு. இ. பெரியசாமி]

அடுத்தது, பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டம். பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்திலே, நம்முடைய முதல்வர் அவர்கள் தனிப்பட்ட அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு படித்த இளைஞருக்கும் இங்கே - நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், திருநாவுக்கரசு அவர்கள் பேசுகின்றபோதுகூடச் சொன்னார்கள். இதற்காக ஒரு தனி அமைப்பை உருவாக்க வேண்டும், படித்த இளைஞர்களுக்கு, பட்டதாரிகளுக்கு அவர்கள்—தொழில் தொடங்குவதற்கு, சுயவேலைவாய்ப்புத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று தெரிவித்தார்கள். ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள் பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்திலே அந்தஅளவுக்கு அவர்கள் எங்களுக்குக் கொடுத்த ஊக்கத்தின் காரணமாக, தமிழகத்தினுடைய நிலை எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 1993-94, 1994-95, 1995-96 ஆம் ஆண்டுகளிலே மொத்தம் சாதனை விழுக்காடு 83.30%. ஆனால், 1996-97, 1997-98, 1998-99-ல் சாதனை விழுக்காடு 91% என்பதை இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-40

இந்த ஆண்டு மட்டும் சுயவேலைவாய்ப்புத் திட்டத்திலே வேலையில்லாத இளைஞர்களுக்கு 17 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 100 விழுக்காடு ஒப்புதல் அனுமதி அளித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்னொன்று, இங்கே ஒருசில உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். Subsidy சில தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கவில்லை

என்று சொல்லியிருக்கிறார்கள். சிமெண்ட் தொழிற்சாலை, Sugar, textiles, mining & quarries, flour mills, hotels, edible oils, rice mills, distilleries, Iron & Steel belting, Aluminium metalling, Calcium Carbide. இவையெல்லாம் conventional and resource based institutions என்று சொல்லுவார்கள். இந்தத் தொழிற்சாலைகளுக்கு ஏற்கெனவே subsidy வழங்கக் கூடாது என்றும் ஒருசில சிறுதொழில் செய்கிற நிறுவனங்களுக்கு 60 இலட்சம் என்றும் வைத்திருக்கிறார்கள். அவர்கள் பழைய மிஷின் வாங்கி வந்து மாட்டிவிட்டு subsidy-க்கு eligibility-க்கு வருகிறார்கள். அதனால் அரசுக்கு அதிகமான செலவு. குறுக்கு வழியிலே 60 இலட்சம் ரூபாய் கிடைக்கிறது என்பதற்காகப் பழைய இயந்திரங்களை வாங்கிப் பொருத்திக் கொண்டுவிடுகிறார்கள். அதனால் அரசுக்கு இழப்பீடு சுமை அதிகமாக வருகிற காரணத்தால் இந்த அரசு கடந்த ஆண்டு ஒரு முடிவெடுத்து அவர்களுக்கெல்லாம் மானியம் வழங்குவதை நிறுத்தினோம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெக்ஸ்டைல் என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிற காரணத்தால் டெக்ஸ்டைலில் பனியனையும் சேர்த்து திருப்பூரிலே சிட்கோவிற்கு மானியம் வழங்க மறுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதோடு, டெக்ஸ்டைல் என்ற பெயரால் பனியன் தொழிலுக்கு இத்தகைய மானியம் மறுக்கப்படுவது சரியாக இருக்காது, அதை மறுபரிசீலனை செய்து மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, டெக்ஸ்டைல் என்பதிலே spinning and knitting இருக்கிறது. அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக மாண்புமிகு முன்னாள் சட்டத் துறை அமைச்சர், மாதவன் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்தார்கள். இருக்கக்கூடிய ரைஸ் மில் என்று சொன்னால், மாடர்ன் ரைஸ் மில்லா? ரைஸ் மில்லா? சிறிய அளவிலே போட்டிருக்கிற ரைஸ் மில்லுக்கும் இது பொருந்துமா? 25 இலட்சம் ரூபாய்க்குக் கீழே முதலீட்டில் ஒருவர் ரைஸ் மில் போட்டிருக்கிறார். 25 இலட்சத்திற்கு கீழே என்றால் அது Tiny Sector-ல் வருகிறது. குறுந்தொழிலில் வருகிறது. ஆக, குறுந்தொழில் செய்பவர்களுக்கும் subsidy கிடைக்காமல் போகிறது என்ற ஒரு கோரிக்கை



வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை ஒரு குழு அமைத்து இந்த அரசு பரிசீலித்து வருகிறது. அதற்கு ஒரு நல்ல முடிவை இந்த அரசு எடுக்கும் என்பதை இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல, சிறுதொழில் வாரியம். தமிழகத்தைப் பொறுத்த அளவில் இந்திய அளவிலே இல்லாத அளவுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறுதொழில் வாரியத்தை அமைத்திருக்கிறார்கள். அதனுடைய கூட்டம் இரண்டு முறை என்னுடைய தலைமையிலே நடந்து அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுப் பல்வேறு குறைபாடுகள் நீக்கித் தீர்க்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குறைபாடுகளில் மிகவும் முக்கியமானது பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்திலே colateral security. ஒரு இலட்சம் ரூபாய் கடன் வாங்குபவர்களுக்கு கண்டிப்பாக colateral security வேண்டும் என்று வங்கிகள் கேட்பதை உறுப்பினர்கள் கடந்த முறை எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பின்னால் நான் S.S.I. Board Meeting-ல் Reserve Bank of India-விலிருந்து வந்த அதிகாரிகளிடம் யாரும் கண்டிப்பாக colateral security கேட்கக்கூடாது என்று வலியுறுத்தி இருக்கிறேன். பல மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதை நடைமுறைப்படுத்துவோம் என்பதை இந்தநேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய உறுப்பினர் மோகன் கந்தசாமி அவர்கள்கூடச் சொன்னார்கள். சிட்கோவினுடைய நிலையை எந்தஅளவுக்கு உயர்த்தியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்றபோது சிட்கோவிலே 3 கோடி ரூபாய்க்கு மேலே நஷ்டம் இருந்தது. அவர்களுக்கே தெரியும். 327.18 இலட்சம் ரூபாய் நஷ்டத்தில் இருந்தது. இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால் கடந்த ஆண்டு 1997-லே கப்பலூரிலே காலியாக இருந்த இடத்தில் 123 ஏக்கர் நிலத்தை, ஏக்கர் ஒன்றுக்கு 7.6 இலட்சம் ரூபாய் வீதம் Indian Oil Corporation, Bharat Petroleum, Hindustan Petroleum ஆகியவற்றிற்கு 9.34 கோடி ரூபாய்க்கு விற்று இந்த அரசு இலாபத்தை ஈட்டியிருக்கிறது.

பிற்பகல் 12-45

அதேபோல், இந்த ஆண்டு ஹவுசிங் போர்டுக்குச் சொந்தமான நிலத்தை 230 ஏக்கர் நிலத்தை, வாழவந்தான் கோட்டையிலே

[திரு. இ. பெரியசாமி] [1999 ஏப்ரல் 28

2.96 கோடி ரூபாய்க்கு ஆறு மாதத்திற்கு முன்னால் வாங்கினோம். ரூ. 2.96 கோடி ரூபாய்க்கு வாங்கி, அதையே திரும்ப இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுக்கு 65 ஏக்கர் நிலம் — வாங்கிய நிலம் 230 ஏக்கர்; அதிலே 65 ஏக்கர் நிலத்தை மட்டும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனுக்கு ரூ. 3.9 கோடி ரூபாய்க்கு விற்பதற்கு நாங்கள் சம்மதித்துள்ளோம். அவர்களும் வாங்குவதற்குச் சம்மதித்திருக்கிறார்கள். ஆக 165 ஏக்கர் நிலம் மிச்சம். அதற்கு மேலே இலாபமும் சிட்கோவிற்குக் கிடைத்திருக்கிறது என்கிற செய்தியை இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது சிட்கோவினுடைய செயல்பாடு. 1996-97-லே இதற்காக வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் துறைக்கு வழங்கியமைக்காக நாங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

1996-97-லே ஈட்டிய இலாபம் 55 இலட்சம் ரூபாய்; 1997-98-லே ஈட்டிய இலாபம் 186.39 இலட்சம் ரூபாய்; 1998-99-இல் ஈட்டிய இலாபம் ரூ. 84.44 இலட்சம் ரூபாய். ரூ.84.44 இலட்சம் ரூபாய் குறைந்திருக்கிறதே என்று நீங்கள் கேட்பீர்கள். குறைந்ததற்குக் காரணம், அப்போது இருந்த சம்பள விகிதம்; முழுமையாக நாங்கள் வழங்கியிருக்கிறோம். ஆகையினாலேதான், 1999-2000-லே வரக்கூடிய இலாபம் ரூ. 540 இலட்சம் ரூபாய் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிற தொழிற்பேட்டையில்—304 தொழிற்கூடங்கள் விற்காமல் இருக்கின்றன. இதன் மதிப்பு 26 கோடி ரூபாய். இதற்காக ஒரு குழு அமைத்து—இங்கே பேசிய நண்பர்கள்கூடச் சொன்னார்கள்; ஏன் அதிக விலை இருக்கிறது என்று சொன்னார்கள். நம்முடைய பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுகவனம் அவர்கள் சொன்னதைப்போல, அரசாங்கத்திற்கு அது எந்த விலையில் கட்டுமோ, அந்த விலைக்குக் கட்டிக் கொடுப்பதற்கு சிட்கோ நிறுவனம் தயாராக இருக்கிறது. 6 இலட்சம் ரூபாய் அதைக் கட்டுவதற்கான செலவு ஆகியிருக்கிறது. ஆனால், ஏலத்தில், ஒப்பந்தத்திலே ரூ. 3-3/4 இலட்சத்திற்குத்தான் கேட்டிருக்கிறார்கள். ஆகவே, கட்டிய விலையைவிட குறைவாக விற்கப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிவதற்காகத்தான் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதிக விலைக்கு விற்க வேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்கு இல்லை என்பதை இந்தநேரத்திலே தெரிவித்து, வட்டி நட்டம் ஆகாமல் இருப்பதற்கு உடனே குழு அமைத்து, இந்த ஷெட்டுகள் எல்லாவற்றையும் விற்பதற்கு உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுத்து வருகிறது.



1999 ஏப்ரல் 28] [திரு. இ. பெரியசாமி]

TIIC—ஐப் பற்றி இங்கே சொன்னார்கள். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்—இங்கே மாமன்றத்திலே இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். நான் அமைச்சராகப் பொறுப்பேற்றபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபோது '2 per cent TIIC' என்று மக்களால் அழைக்கப்பட்ட 'TIIC' இப்போது மக்களுக்குத் தானாக முன்வந்து செயல்படுகிற, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமாகத் திகழ்கிறது என்பதை நான் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம், எங்களுடைய நிர்வாக இயக்குநர், ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று, நசிந்திருக்கின்ற தொழில்களுக்கு, என்ன உதவி செய்ய வேண்டும்; என்ன கடன் கொடுக்க வேண்டும் என்பதையெல்லாம் கேட்டறிந்து, ஒவ்வொரு மாவட்டத்திலே தொழிலிலே நசிந்திருக்கின்ற தொழில் அதிபர்களுக்கும், சிறுதொழில் செய்கின்ற அத்தனை பேர்களுக்கும், உதவி செய்வதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அதிலே குறிப்பாக, மனு கொடுத்தால், ஒரு மாதத்திற்குள்ளாக மனுவின் முடிவைச் சொல்ல வேண்டும் கடன் கொடுக்க முடியுமா, இல்லையா என்று. பணம் பட்டுவாடா 3 1/2 மாதத்திற்குள்ளாகக் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு, இந்த நடைமுறை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திலே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்கிற செய்தியை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வட்டி விகிதம் 20 சதவிகிதமாக இருந்ததை, 17 சதவிகிதம் ஆக்கினோம். இப்போது 16 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அபராத வட்டி 5 சதவிகிதத்திலிருந்து 2.5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; வாடிக்கையாளர்கள் ஏற்கெனவே வாங்கிய கடனை ஒழுங்காகச் செலுத்துகிறார்கள் என்றால், தவணைத் தொகையை உரிய காலத்திற்குள் செலுத்தினால், 16 சதவிகிதம் என்பதை 15 சதவிகிதமாகக் குறைப்பதற்கு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தயாராக இருக்கிறது என்கிற செய்தியை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1-4-1997-லே சுமார் 37 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலே, நமது பட்டுவளர்ச்சித் துறையினுடைய சார்பாக மல்பெரி பயிரிடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். பட்டுவளர்ச்சித் துறை சம்பந்தமாக இந்த மன்றத்திலே பேசிய உறுப்பினர்கள் திரு. வெங்கடசாமி, திரு. சிவானந்தம் ஆகியோருக்கு நன்றாகத் தெரியும். 37 ஆயிரம் ஏக்கர் இங்கே பயிரிடப்படவில்லை. அன்றைக்கே நான் ஆணையிட்டேன். தமிழ்நாடு முழுக்க எவ்வளவு பயிரிடப்பட்டிருக்கிறது

[திரு. இ. பெரியசாமி] [1999 ஏப்ரல் 28

என்பதை நான் அதிகாரிகளை அனுப்பி, நேரடியாக ஆய்வு செய்ததிலே, 18 ஆயிரம் ஏக்கர் தான் இருக்கிறது. தமிழ்நாட்டில் மொத்தத் தேவையிலே பாதிதான். 1200 மெட்ரிக் டன் நமக்குத் தேவை என்றால், 600 மெட்ரிக் டன் தான் தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்கிறோம். பாக்கியை கர்நாடக மாநிலத்திலே இருந்துதான் வாங்குகிறோம். ஆகவே, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அதிலே இருக்கின்ற குறைபாடுகளைப் போக்குவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

'கீ லோன்' (Key Loan) கொடுக்கப்பட்டு வருகிறது. எல்லா நடவடிக்கைகளும் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. பட்டுவளர்ச்சித் துறையைப் பொறுத்தவரையில், உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்கள், அரசு சலுகைகளை வழங்க வேண்டுமென்று சொன்னார். அதற்காகத் தீட்டப்பட்ட திட்டத்தினுடைய முழுப் பலன், இன்றையதினம் முடிவுபெற்று அரசாங்கத்தினுடைய செலவிலேதான். இப்போது பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-50

பதிவுத் துறையைப் பொறுத்தவரையில், இங்கே ஒருசில செய்திகளைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். பதிவுத் துறையினுடைய வருவாய் 1993-94, 1994-95, 1995-96 ஆகிய மூன்று வருடங்களிலே, மொத்த வருவாய் 1746.82 கோடி ரூபாய். இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பின்னால், 1996-97, 1997-98, 1998-99 ஆகிய வருடங்களிலே இந்த அரசு ஈட்டியிருக்கின்ற வருவாய் 2409.14 கோடி ரூபாய். நமது ஆட்சியிலே அதிகமாகப் பெற்ற வருவாய் 662.32 கோடி ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மன்றத்திலே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். பணப்புழக்கம் குறைவாக இருக்கிறது. பணத்தட்டுப்பாடு இருக்கிறது என்பதையெல்லாம் ற்றி அறிவுறுத்தியிருந்தார்கள். இருந்தாலும், பதிவுத் துறை 662 கோடி ரூபாயைக் கூடுதலாக ஈட்டிருக்கிறது. 47-ஏ-இன்கீழ் இந்த அரசு ஈட்டியிருக்கின்ற வருவாயைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் திருப்தி தெரிவித்தார்கள். 1997-98 ஆம் ஆண்டிலே மொத்தம் முடிக்கப்பட்ட ஆவணங்கள் 77,713, ஈட்டியிருக்கின்ற வருவாய் 41.73 கோடி ரூபாய். 1998-99 ஆம் ஆண்டிலே மொத்தம் முடிக்கப்பட்ட ஆவணங்கள்-61,492, ஈட்டியிருக்கின்ற வருவாய் ரூபாய் 37.02 கோடி.



1999 ஏப்ரல் 28] [திரு. இ. பெரியசாமி]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டு, 9 தனித் துணை ஆட்சியர்களைக் கூடுதலாக நியமித்து, இதிலே இன்னும் வருவாயைக் கூட்ட வேண்டுமென்று அறிவுறுத்தியதற்கு ஏற்றவாறு, 9 கூடுதல் தனித் துணை ஆட்சியர்களை நியமித்து 30,470 ஆவணங்களை முடித்து அதன் மூலமாக வந்த வருமானம், 8 மாதத்திற்கு 16.45 கோடி ரூபாய். ஆக மொத்தம், கிட்டத்தட்ட 53.47 கோடி ரூபாய், கடந்த ஆண்டு 1998-99 ஆண்டிலே மட்டும், 47-ஏ மூலம் வருவாய் வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒரு சலுகைத் திட்டம்—சமாதான் திட்டம்—அறிவிக்கப்பட்டு, அதன்மூலம் 1-3-1999 இலிருந்து 22-4-1999 வரை 7293 ஆவணங்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. 30,000 ஆவணங்கள் முடிக்கப்பட்டு இதிலே 7.14 கோடி ரூபாய் இதுவரை வருவாய் வந்திருக்கிறது. இதிலே அதற்கு எவ்வளவு பணம் கட்ட வேண்டுமென்று நேரிடையாகக் கேட்டுச் சென்றிருக்கிறார்கள். என்குயர் (Enquire) செய்து சென்றிருக்கிறார்கள். நாங்கள் அதனையும் ஃபாலோ (Follow) பண்ணுகிறோம். எத்தனை ஆயிரம் ஆவணங்களை ஒவ்வொரு சென்டரிலேயும் கேட்கிறார்கள், பணம் கட்டுகிறார்கள், எத்தனை பேர் விசாரணை செய்கிறார்கள் என்ற விவரத்தைக் கேட்டதிலே சுமார் 30,000 ஆவணங்களுக்கு மேல் விசாரணை செய்து சென்றிருக்கிற காரணத்தினால் நாங்கள் எதிர்பார்க்கின்ற வருவாய் 30-6-1999 இலே குறைந்தபட்சம் 30 கோடியிலிருந்து 35 கோடி வரும் என்பதை, இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பதிவுத் துறை பயிற்சி நிலையம். இது இந்தியாவிலேயே வேறு எங்கும் கிடையாது. சார் பதிவாளர்களுக்கு, மாவட்டப் பதிவாளர்களுக்கு பயிற்சி நிலையம். பயிற்சி கொடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டு, பயிற்சிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

வழிகாட்டி மதிப்பைப் பொறுத்தவரையில் 1989-இலேதான் கைட்-லைன் வேல்யு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டது. அது, இன்றைக்கு இந்தியத் திருநாட்டிற்கே ஒரு மாடல் லெஜிஸ்லேஷனாக (Model Legislation) என்ற அளவில் உயர்ந்திருக்கிறது. இதுகுறித்து எல்லா மாநிலங்களிலிருந்தும் வந்து பார்த்துவிட்டுப் போய் இருக்கிறார்கள் என்பதை இந்தநேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, சந்தை மதிப்பு. சந்தை மதிப்பு என்பது மார்கெட் வேல்யு. விற்பனை ஆவணங்களிலே சந்தை மதிப்பு எனும் கோட்பாட்டை, நம்முடைய இந்தியத் துணைக் கண்டத்திலே கழக அரசுதான் 1968-இலே அறிவித்தது. அன்றைக்கு எந்த ஒரு சொத்துக்கும் அவரவர்கள் இஷ்டம் போல, அவர்களே, குத்துமதிப்பாக ஒரு விலையைப் போட்டு நிர்ணயம் செய்துகொள்வார்கள். இது குறித்து இங்கே பேசிய உறுப்பினர்கள்கூடச் சொன்னார்கள். பகட்டு விலையை சில பேர் கடன் பெறுவதற்காகப் போட்டுக்கொண்டால், பக்கத்திலே இருக்கின்ற ஏழையெளியவர்கள் கஷ்டப்படுவார்கள் என்று சொன்னார்கள். அதற்காகத்தான் நான் ஆரம்பக் கட்டத்திலேயே சொன்னேன். ஓர் ஆண்டிற்கு இது நீடிக்கும் என்று சொன்னேன். இங்கே பல்வேறு உறுப்பினர்கள், பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கைகளுக்கு எல்லாம் நான் முழுமையாகப் பதில் சொல்ல இயலவில்லை என்றாலும்-முக்கியமான ஒருசில கோரிக்கைகளுக்கு—மாண்புமிகு திரு. லத்திப் அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். வக்ஃப் போர்டுக்குச் சொந்தமான நிலங்களை, தனியார்கள் விற்று விடுகிறார்கள், அரசுக்குச் சொந்தமான நிலங்களை விற்றுவிடுகின்றார்கள், அதற்காக அரசு பிறப்பித்த உத்தரவு நடைமுறையிலே இல்லை என்று சொன்னார்கள். வக்ஃப் போர்டு துறை, அறநிலையத் துறை ஆகிய எல்லா துறைகளிடமிருந்தும், உங்களுக்கு என்னென்ன சொத்து இருக்கிறது என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். சம்பந்தப்பட்ட எல்லா துறைகளுமே, பதிவுத் துறை அலுவலகத்திற்கு அதனை அனுப்பி வைத்திருக்கிறார்கள். எல்லா துறைகளைச் சார்ந்தவர்களும் அதனை அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஆனால் அப்படி அனுப்பி வைக்கப்பட்டவர்களிலிருந்து, நம்முடைய வக்ஃப் போர்டு துறையிலிருந்து மட்டும்தான், கேட்கப்பட்ட அந்தச் சொத்துகளுடைய முழு விவரம் பதிவுத் துறைக்கு வரவில்லை என்ற செய்தியை எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பிற்பகல் 12-55

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தலைவர் அவர்களே, வக்ஃப் வாரியம் இதற்கான முழு முயற்சியும் எடுத்துக் கொண்டிருக்கிறது. வக்ஃப்





சொத்துகள் சரியாகக் கணக்கிடப்படாததுதான் அதற்குரிய அடிப்படையான தொல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் முயற்சி செய்தாலும், எந்தெந்த இடத்தில் வக்ஃப் வாரியத்தினுடைய நேரடி அதிகாரத்தில் இப்பொழுது நிலங்களோ அல்லது சொத்துகளோ இருக்கின்றன என்பது எங்களுக்குக்கூடத் தெரியவில்லை. அந்த விவரங்களை வருவாய்த் துறை நமக்கு வழங்க வேண்டும். வருவாய்த் துறை கொடுக்க வேண்டும். அதற்காக நியமிக்கப்பட்ட கமிஷனர்கள் அதைக் குறித்து வைத்திருக்க வேண்டும். 1954 லிருந்தே இந்தக் காரியம் நடைபெறவில்லை, சரியான குறிப்புகள் இல்லை. அதைத்தான் இப்பொழுது நாங்கள் தேடிக் கொண்டு இருக்கிறோம். கிடைத்தவுடனே எவ்வளவு விவரங்கள் கிடைக்கிறதோ அவ்வளவு விவரங்களை துறைக்கு அனுப்புவோம்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர், திருஞானசம்பந்தம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, எல்.ஐ.ஜி. (L.I.G.) குடியிருப்பிலே இருக்கின்றவர்கள் எம்.எம்.டி.ஏ. அவர்களுக்கு பத்திரப்பதிவு முத்திரைத்தாள் கட்டணம் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அது அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது என்ற செய்தியை இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதுபோக, இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்கள், இங்கே நம்முடைய வல்லரசு அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். ஆண்டாண்டு பத்திரப்பதிவுத் துறையிலே கூடுதலாக மதிப்பை உயர்த்துவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். வழிகாட்டி மதிப்பு கூட்டப்படுவதாக இல்லை. கிராமங்களுக்கெல்லாம் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் உயர்த்தப்படுகிறது. பிற மாநிலங்களிலே பதிவு செய்கின்ற நடவடிக்கையைத் தடுப்பதற்குச் சட்டம் இயற்றப்பட்டு, அந்தச் சட்டத்தின் வாயிலாக சுமார் 25 கோடி ரூபாய்க்கு இங்கே இந்த அரசு வருமானம் ஈட்டியிருக்கிறது என்ற செய்தியை நான் இந்தநேரத்திலே இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோக, இந்த அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளிலே, பல்வேறு நடவடிக்கைகளிலே நான் சில அறிவிப்புகளை இங்கே செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேனி மாவட்டத்திலே-இங்கே கேள்வி நேரத்திலேகூட திராட்சை உற்பத்தியைப்பற்றி இங்கே பல்வேறு கேள்விகளை எழுப்பினார்கள். அதிலே உலர் திராட்சை,

[திரு. இ. பெரியசாமி] [1999 ஏப்ரல் 28

இந்தியத் திருநாட்டைப் பொறுத்தவரையில், மொத்த தேவை 4,000 மெட்ரிக் டன். அதிலே இந்தியாவிலே உற்பத்தி ஆகக்கூடிய உலர் திராட்சை-உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகள் 500 மெட்ரிக் டன்தான் உற்பத்தி செய்கின்றன, மற்றவை எல்லாம் ஈரான், துருக்கி போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. எனவே, நம்முடைய நாட்டினுடைய தேவைக்கு ஏற்றாற்போல், நம்முடைய தமிழகத்திலே இந்த உலர் திராட்சை உற்பத்தி செய்வதிலே தேனி மாவட்டத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கே சமத்துவபுரத்தைத் திறந்து வைக்கின்ற நேரத்திலே, அதற்கான அறிவிப்பைச் செய்தார்கள், நிச்சயமாக இங்கே தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று. அந்த அடிப்படையிலே சுமார் 125 இலட்சம் ரூபாய் செலவிலே கூட்டுறவுத் தொழிற்சங்கத்தின் மூலமாக உலர் திராட்சை தயாரிக்கப்படுகின்ற தொழிற்சாலை தேனியிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகராஜா, அவர்களுடைய கோரிக்கையை ஏற்றும், நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. மூக்கையா அவர்களுடைய கோரிக்கையை ஏற்றும், தேனி மாவட்டத்திலே நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் நிலத்திலே நிலம் எல்லாம் வாங்கப்பட்டு விட்டது. 125 இலட்சம் ரூபாய் செலவிலே அங்கே 1250 ஏக்கர் நிலப்பரப்பிலே உலர் திராட்சை சாகுபடி செய்கின்ற தொழிற்சாலை உருவாக்கப்படும் என்பதை இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதுபோக, இன்றைக்கு விருத்தாசலத்திலே இருக்கின்ற பீங்கான் தொழிற்சாலையில் புதிய இயந்திரங்களை மாற்றுவதற்கு நடப்பு ஆண்டிலே கிட்டத்தட்ட 5.10 இலட்சம் ரூபாய் செலவிலே நவீன இயந்திரங்கள் வாங்கி பொருத்த இந்த அரசு அறிவித்திருக்கிறது என்பதை இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நடப்பு ஆண்டிலே கோயம்புத்தூரிலே 250 இலட்சம் ரூபாய் செலவிலே திட்ட மதிப்பீட்டிலே தகவல் தொழில்நுட்ப காப்பு மையம் (Information Technology Incubator) ஒன்று தன்னாட்சி நிறுவனமாகவும், மதுரையில் 300 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டிலே மற்றொரு மையமும், அங்கே தொழில் முனைவர் வளர்ச்சி மையத்தோடு இணைந்து நிறுவப்பட உள்ளது என்ற செய்தியை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோக, தமிழக அரசினுடைய தொழில்நுட்பக் கொள்கையின் முக்கிய குறிக்கோள்கள் மாநிலத்தினுடைய வன்பொருள் மற்றும் மென்பொருள் தொழிலுக்கு, அதைச் சார்ந்த சேவை பொருட்களை ஊக்குவித்து வளர்ச்சியை விரிவுபடுத்தவும் தமிழகத்தில் அத்தொழில் நிறுவனங்களை நிறுவி, அவை



1999 ஏப்ரல் 28] [திரு. இ. பெரியசாமி]

நிலைத்திருப்பதற்குத் தடையாக உள்ள தடைக் கற்களை அகற்றுவதற்கும், இதனைச் செயல்படுத்துவதற்குக் காப்பகங்கள் தொடங்கப்படுகின்றன என்ற செய்தியை இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

குறிப்பாக, இந்த அவையிலே ஜவ்வரிசி தொழிலைப்பற்றி—SAGOSERVE, ஜவ்வரிசி தொழிற்சாலையில் ஏற்பட்டிருக்கின்ற விலை வீழ்ச்சியை—குச்சி வள்ளிக் கிழங்கு மூலமாக விலை வீழ்ச்சி. அந்தத் தொழிற்சாலையில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினுடைய அடிப்படையில் 100க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் மூடப்பட்ட காரணத்தினால், அங்கே Common Effluent Treatment Plant—CETP பொதுவாக அமைக்க முடியாது. தனியாக அமைப்பது என்றால் பொருளாதார ரீதியாக அவர்களுக்குச் சங்கடங்கள் இருக்கின்றன என்ற செய்தியை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், ஆத்தூர் ராமசாமி இன்னும் பல்வேறு உறுப்பினர்கள் வருத்தத்தோடு தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலே SAGOSERVE நிறுவனமானது அதனுடைய சொந்தப் பணத்திலிருந்து ஒரு சதவிகிதமும், அங்கே SAGOSERVE-லே supply செய்கின்ற உறுப்பினர்களின் மூலமாக செஸ் ஆக ஒரு சதவிகிதமும், அரசினுடைய நிதியாக ஒரு சதவிகிதமும், இன்னும் இருக்கக்கூடிய வங்கிகளினுடைய கடனாக ஒரு சதவிகிதமும், அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிற்சாலைகளை நடத்துகின்றவர்கள் ஒரு சதவிகிதமுமாக அவர்களுடைய பங்கினுடைய அடிப்படையிலே அவர்கள் Common Effluent Treatment Plant—சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு இந்த அரசு உதவி செய்யத் தயாராக இருக்கிறது என்பதை இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-00

குறிப்பாக, சுவாமிமலையைப் பொறுத்த அளவில், அங்கே ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்று (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர் சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஜவ்வரிசித் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் Common Effluent Treatment Plant போடுவதற்காக அரசு மானியம், பங்குத்தொகை கொடுப்பதாக

அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தைப் பொறுத்தவரையில் அந்த பிளான்ட் எப்படி அமைக்கப்பட வேண்டுமென்ற நடைமுறையை இதுவரை அவர்கள் கொடுக்கவில்லை. ஆகவே, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அந்தத் தொழிற்சாலையில் Treatment Plant போடுவதற்குரிய அந்தச் செயல்முறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைப்போல தொழில் நுட்ப ஆலோசனையை இந்த அரசு பெற்று அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சுவாமிமலையைப் பொறுத்த அளவில், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய உலோகச் சிற்பங்கள் அங்கே பெரும்பாலான வெண்கலத்தாலான சிலைகள் செய்வது, நாச்சியார் கோயிலிலே குத்துவிளக்கு செய்வது, ஆக, புராதன நம்முடைய கலாச்சாரம், கலை, பண்பாடு, இவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய முன்னாள் மத்திய தொழில் துறை அமைச்சரும் எம்.பி.யுமான நம்முடைய அண்ணன் முரசொலி மாறன் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருந்தார்கள். இந்தப் புராதனச் சின்னங்களுக்கு அங்கே தொழிற்சாலை அமைக்க வேண்டும். அதற்கு அறநிலையத் துறைக்குச் சொந்தமான சுமார் 4 ஏக்கர் நிலம் சிட்கோவினால் கையகப்படுத்தப்பட்டு அங்கே இருக்கின்றவர்களெல்லாம் அந்தத் தொழிலிலே தொடர்ந்து ஈடுபட்டு அந்தத் தொழில் நசியாமல் இருப்பதற்கு, தமிழகத்தினுடைய கலாச்சாரம் பாதுகாக்கப்படுவதற்கு அங்கே ஒரு 50 குறுந்தொழிற்கூடங்கள் அமைக்கப்படும் என்ற செய்தியை இந்த அவைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதோடுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஒரு புதிய கிளையை விழுப்புரம் மாவட்டத்திலே தொடங்கும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினுடைய சார்பாக கிளைகளிலே இதுவரை அவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்



20 இலட்சம் ரூபாய் தான், ஒவ்வொரு பிரான்ஞ்சிலும் கொடுக்கப்பட்ட கடன் 20 இலட்சம் ரூபாய் தான். இந்த ஆண்டிலேயிலிருந்து 30 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்ற செய்தியை, உச்சவரம்பை 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தி 30 இலட்சமாக வழங்கப்படும் என்ற செய்தியை இந்தநேரத்திலே அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக கடன் பெறுகின்ற, கிட்டத்தட்ட கடனைத் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு, இரண்டு இலட்சம் ரூபாய் கடன் வாங்கியிருந்தார்கள் என்றால், அவர்கள் 4 இலட்சம் ரூபாய் செலுத்தினால் ஒரு மடங்கு கூடுதல் செலுத்தினால் அவர்களுக்கு, அங்கே இருக்கக்கூடிய கூடுதல் வட்டி எல்லாமே தள்ளுபடி செய்யப்படும் என்று இருந்தது. இந்த இரண்டு இலட்சம் என்கிற வரம்பை 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி, 5 இலட்சம் ரூபாய் கடன் வாங்கியவர்கள் 10 இலட்சம் ரூபாய் செலுத்தியிருந்தால் அவர்களுக்குக் கடனிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும் என்ற செய்தியை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோக, இங்கே தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் பொறுத்த அளவில் கட்டடம் கட்டுவதற்கும் இயந்திரங்கள் வாங்குவதற்கும் கடன் வழங்குகின்றோம். ஆனால், ஒரு தொழிற்சாலை கூடியவுடன் நடைமுறை மூலதனம் கிடைக்காமல் வங்கிகளுக்குத்தான் நாம் tie-up செய்கின்றோம். வங்கிகளிலே கடன் பெறுவதற்கு நாம் சிபாரிசு செய்கின்றோம். ஆனால் வங்கிகள் கொடுக்க மறுக்கின்றன. பல தொழில்கள் இதனால் தேங்கிக் கிடக்கின்றன. தேங்கிக் கிடக்கின்ற தொழில்களை நடத்துவதற்காக நடைமுறை மூலதனம் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாகக் கொடுப்பதற்காக, நம்முடைய தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக ஒரு வங்கியை ஒரு கமர்ஷியல் வங்கியை உருவாக்குவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்தாலோசித்து விரைவிலே அந்த அறிவிப்பு வெளியிடப்படும் என்ற செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தநேரத்திலே அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

[திரு. இ. பெரியசாமி] [1999 ஏப்ரல் 28

நம்முடைய கைத்திறத் தொழில் handicrafts மூலமாகப் பாண்டிச்சேரியிலே ஒரு கிளை—வருகின்ற காலத்திலே, 30 இலட்சம் ரூபாய் செலவிலே அமைக்கப்படும்.

இதிலே குறிப்பாக, மிக முக்கியமாக, சுவாமிமலையிலே உலோக வடிவமைப்பு மற்றும் பயிற்சி நிலையம், உலோகச் சிற்பங்கள் உற்பத்தி செய்வதிலே அரசு அங்கீகாரம் பெற்ற 3 வருடப் பட்டயப் படிப்பு, எப்படி மகாபலிபுரத்திலே இருக்கின்றதோ, அதேபோல 3 வருட பட்டயப் படிப்பு, 8-வது படித்தவர்களுக்கு, முதல் ஆண்டு, மாதத்திற்கு 500 ரூபாய் உதவித் தொகையும், இரண்டாம் ஆண்டு, மாதத்திற்கு 750 ரூபாய் உதவித் தொகையும், 3 ஆம் ஆண்டு, மாதத்திற்கு 1000 ரூபாய் உதவித் தொகையும், அளிக்கப்பட்டு semester முறையிலே பயிற்சி அளிக்கப்படுகின்றது. அதிலே 15 மாணவர்கள் கிராமப்புறத்திலே இருக்கின்ற மாணவர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் 3 ஆண்டு பட்டயப் படிப்பு முடித்தவுடன் அவர்களுக்குத் தொழில் தொடங்குவதற்கு வேண்டிய வசதிகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 1-05

பட்டு வளர்ச்சித் துறையின் மூலமாக 500 பட்டு விவசாயிகளுக்கு 10 ஆயிரம் ரூபாய் மானியமாக சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதை இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதுபோக, இந்த ஆண்டிலே நம்முடைய பத்திரப்பதிவுத் துறையிலே இருக்கக்கூடிய வழிகாட்டி மதிப்பை மற்ற மாநிலங்களில் எல்லாம் கடந்த ஆண்டு உயர்த்தாமல் இருக்கிறார்கள். அதேபோல் நம்முடைய மாநிலத்தில் உயர்த்தாமல் இருப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கேட்டு மற்ற மாநிலத்தைப்போல நம்முடைய மாநிலத்திலேயும் இந்த ஆண்டு, ஓர் ஆண்டுக்கு நிறுத்தி வைக்கலாம், வழிகாட்டி மதிப்பை உயர்த்துவதை நிறுத்தி வைக்கலாம் என்ற ஆலோசனையை மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே தெரிவித்து அதுபற்றி ஆவன செய்யப்படும் என்பதை இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, இங்கே சொன்னார்கள். பாகப் பிரிவினைபற்றி. பாகப் பிரிவினையிலே, பாகப் பிரிவினை செய்வதற்கு சென்ற ஆண்டு 2 சதவிகிதம் குறைத்தோம். அதிலே சில உறுப்பினர்கள் சொன்னார்கள் brothers and sisters சகோதர, சகோதரிகளுக்கு அந்த



1999 ஏப்ரல் 28] [திரு. இ. பெரியசாமி]

வாய்ப்புக் கிடைக்கவில்லை. குடும்பம் என்றால் தாய், தகப்பன் மற்றவர்கள் சேர்ந்ததுதான் குடும்பம். சகோதர சகோதரிகள் குடும்பத்திலே அடங்காது என்று சொன்னார்கள். ஆக, சகோதர சகோதரிகளும் பாகப் பிரிவினையிலே இடம் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Settlement, release deed-விடுதலைப் பத்திரம்-செட்டில்மெண்ட் பத்திரம் பதிவிற்கு முத்திரைக் கட்டணம் 4 சதவிகிதம் இருக்கின்றது. இந்த அரசு அதனைக் குறைக்க வேண்டும் என்று பல்வேறு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவற்றைப்பற்றி எதிர்காலத்திலே முடிவு செய்யப்படும் என்பதை இந்தநேரத்திலே தெரிவித்து, இந்த நல்லதொரு வாய்ப்புக்கு, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பல்வேறு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை முழுமையாகப் படித்திருக்கின்றேன். அவர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்கள் புதிய அலுவலகம் வேண்டும்; புதிய சார்பதிவகங்கள் வேண்டும். இன்னும் பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் வைத்திருக்கின்றார்கள். அவற்றையும் மனதிலே நிறுத்தி அந்தக் குறைகளையெல்லாம் களைந்து அவர்கள் கொடுத்திருக்கின்ற கோரிக்கைகளை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்து வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, கோரிய மானியத் தொகையை வழங்குமாறும், மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறும் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது சிட்கோவிலே கட்டப்படுகின்ற ஷெட்டுகள் எல்லாம் இன்னும் கிரயம் செய்யப்படாமல் இருக்கின்றன. காலியாக இருக்கின்றன என்று சொன்னார்கள். தொழில் முனைவோர்கள் விரும்பினால் அந்த ஷெட்டுகளை எல்லாம் 5 ஆண்டுகளுக்கு வாடகையைக் கொடுத்து அதன் மூலம் அவர்கள் ஈட்டிய பொருளை வைத்து அவர்களுக்கே கிரயம் செய்து கொடுக்கலாம் என்ற யோசனையை அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் ஒரு குழு அமைக்கப்பட்டு இருக்கின்றது. எந்த அடிப்படையிலே அவற்றை குறைந்த விலைக்குக் கொடுப்பது என்பதற்காக ஒரு மேல்மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கின்றது அந்தக் குழுவின் முடிவின்படி செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்றபோது தேனி மாவட்டத்திலே — dry fruits தயாரிப்பதற்கு— உலர் திராட்சை தயாரிப்பதற்கு 125 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு தொழிற்சாலை அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தேனி மாவட்ட மக்களின் சார்பாக, என் சார்பாக, சட்டமன்ற உறுப்பினர் திரு. மூக்கையா அவர்கள் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தேனியிலே உலர் திராட்சைத் தொழிற்சாலை அமைப்பதுபற்றி சொன்னது வரவேற்கக்கூடியது. இருந்தாலும்கூட, நிலக்கோட்டை பகுதி, திண்டுக்கல் பகுதியிலே நிறைய seedless பச்சை, ப்ளு, போன்ற திராட்சைகளை உற்பத்தி செய்யக்கூடிய சிறு சிறு விவசாயிகள் இருக்கிறார்கள். அவற்றிற்குப் போதுமான அளவிற்கு விலையும் கிடைப்பதில்லை. நாங்கள் அங்கே ஒரு கிலோவிற்கு 3 ரூபாய், 4 ரூபாய்க்குக் கொடுக்கிறோம். இங்கே 30 ரூபாய், 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆகையினாலே, அந்த உலர் திராட்சையை உற்பத்தி செய்வதற்கு நிலக்கோட்டை பகுதியையும் எடுத்துக்கொள்ள முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டையிலே ஏற்கெனவே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த அம்மா கோரிக்கைகளுக்கெல்லாம் நீங்கள் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. (சிரிப்பு). மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.



**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, TIIC—ல் கடன் வாங்கியிருக்கிற அளவிற்கு வட்டி செலுத்திவிட்டால் அந்த முதலை இரத்து செய்வோம் என்பதைப் போலச் சொன்னார்கள். அதைக் கொஞ்சம் தெளிவாக விளக்கமாகச் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் இரண்டு இலட்சம் ரூபாய் கடன் வாங்கியிருந்தால், வட்டி 2 இலட்சம் ரூபாய் செலுத்தியாகிவிட்டது என்றால், வாங்கிய முதல் போக ஒரு மடங்கு செலுத்தியாயிற்று என்றால், அது தள்ளுபடி செய்யப்படும் என்று ஏற்கெனவே கடந்த ஆண்டு அறிவித்தேன். 2 இலட்சம் ரூபாய்க்கு 4 இலட்சம் ரூபாய் கட்டினால் 2 இலட்சம் ரூபாய் பிளஸ் வட்டி 2 இலட்சம் ரூபாய் கட்டியிருந்தால் முழு விலக்கு. அதுபோல வட்டி இருந்தாலும் தள்ளுபடி செய்திட வேண்டும். இப்பொழுது அந்த 2 இலட்சம் ரூபாய் என்கிற சீலிங்கை 5 இலட்சமாக்கி இருக்கிறோம். 5 இலட்சம் ரூபாய் கடன் வாங்கிய ஒருவர் 5 இலட்சம் ரூபாய் வட்டி செலுத்தியிருந்தார் என்றால் முழு விலக்கு அளிக்கப்படும். (குறுக்கீடு) அதற்கு மேலே வாங்கியவர்களுக்குக் கிடையாது.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவரவர்களே, subsidy மறுக்கப்படுகிற பட்டியலில் Knitting Companies இருப்பதை விலக்கு அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னதைப்போல, அதற்கு ஒரு குழு அமைத்திருக்கின்றோம். அது ஒரு துணைக் குழு அமைத்து இப்பொழுது ஆய்வு செய்து கொண்டிருக்கின்றது. அது எந்தவகையிலே சேருகிறது. ரைஸ் மில்

என்று சொன்னால், மாடர்ன் ரைஸ் மில்லா, சாதாரண ரைஸ் மில்லா, குறுந்தொழிலா என்று பிரித்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே நீங்கள் சொன்னமாதிரி பனியன் தொழில், அது சின்னத் தொழிலிலே வந்துவிட்டது என்று சொன்னால் 60 இலட்சம் ரூபாய்க்குக் கீழே வந்து விட்டது என்றால் ஒருவேளை அதுபற்றி மாண்புமிகு முதல்வரவர்களிடத்தில் கேட்டு அது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இந்த மானியக் கோரிக்கையில் அமைச்சரவர்கள் பேசும்பொழுது தமிழகத்தில் மொத்தம் 50 இடங்களில் தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று கூறினார்கள். அப்பொழுது நான் இராசிபுரத்தில் ஒன்று கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டேன். அவரும் அப்பொழுது உறுதிமொழி கொடுத்தார்கள். தற்போது 17 இடங்களில் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கின்றார்கள். ஆனால், இராசிபுரம் தொகுதி அதிலே ஆய்வுக்கே எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, இந்த ஆண்டு அமைச்சரவர்கள் இராசிபுரத்தில் தொழிற்பேட்டை ஒன்றை அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும், உத்தரவிட வேண்டும் ஏன்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். இடம் என்பது அரசினுடைய நிலங்கள் அல்லது அரசு சம்பந்தப்பட்ட நிலங்கள் இதுபோன்ற நிலங்களைத்தான் சிட்கோவிற்குக் கையகப்படுத்துகிறோம். தனியாரிடத்திலே நாங்கள் எந்த நிலமும் வாங்குவது இல்லை. அப்படி மாண்புமிகு உறுப்பினரவர்கள் அங்கே தொழில் செய்ய முனைகின்றவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி எந்தத் தொழிலை ஆரம்பிக்கவிருக்கின்றார்கள், அதற்கு ஆர்வமுள்ளவர்கள் எத்தனை பேர், எவ்வளவு தொழில் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்தால் நிச்சயமாக அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எவ்வளவு நேரம் பேசியிருக்கிறீர்கள்? நீங்கள் இப்பொழுதும் கையைத் தூக்கினால், இது நியாயமா? (சிரிப்பு) திரு. சாமிநாதன்.

***திரு. மு.பெ. சாமிநாதன்:** கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது ஈரோடு மாவட்டம் எனது வெள்ளக்கோவில் தொகுதியில் ஆள் நடமாட்டமேயில்லாத பகுதியில் ஒரு சிட்கோவை அமைத்து அந்தத் துறையினுடைய முன்னாள் அமைச்சர் துரை ராமசாமி, தன்னுடைய பினாமி நிலங்களையெல்லாம் சிட்கோவிற்காகக் கையகப்படுத்தினார்கள். அதில் ஒரு நபர்கூட தொழில் தொடங்க முன்வரவில்லை. அங்கே 100 ஏக்கர் நிலம் பயனற்றுக் கிடக்கிறது. அதை நல்லமுறையில் பயன்படுத்த அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்-சாமிநாதன் அவர்கள் சொன்னதில் அங்கே தொழில் வாய்ப்புகள் இருக்கின்றவா என்பதைப் பார்த்துத்தான் தொழிற்பேட்டை அமைக்க முடியும். ஏற்கெனவே இந்த அரசு சிட்கோ நஷ்டத்திலே இயங்கிக்கொண்டிருந்த காரணத்தால்-இலாபம் வருவதற்காக ரியல் எஸ்டேட் செய்யவில்லை-ரொம்பக் குறைந்த விலையிலே தொழில் செய்ய முன்வருபவர்களுக்கு ஷெட் கொடுக்க வேண்டும், இடம் கொடுக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை. குறைந்த விலையிலே கொடுக்க வேண்டுமென்பதுதான் இப்பொழுது அரசினுடைய குறிக்கோளாக இருக்கிறது. அதிக விலையிலே வந்துவிட்டது என்று சொன்னால் நிச்சயமாக அதை அரசு பரிசீலிக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்திப.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் தலைவரவர்களே, கடந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் அளிக்கும்போதும், இந்த ஆண்டு ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போதும ஆலங்காயத்தில் சார்பதிவாளர் அலுவலகம் திறக்கப்படும் என்று சொன்னார்கள். அது குறிப்புப் புத்தகத்திலும் இல்லை. மாண்புமிகு அமைச்சருடைய பதிலிலும் இல்லை. அது உறுதி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். தயவுசெய்து அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மிகுந்த அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கு நிதிநிலையைப் பொறுத்து பரிசீலிக்கப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருக்கிறேன். அதேபோல நிச்சயமாக அவருடைய கோரிக்கை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் இன்னும் கொஞ்ச நேரம் பேசியிருந்தால் இந்தக் கேள்விகளையெல்லாம் அனுமதிக்க மாட்டேன். அமைச்சர் ஒன்றேகால் மணிக்குள்ளே முடித்துவிட்டார்கள். அதனாலே அனுமதிக்க வேண்டியதாக இருக்கிறது. திரு. எடப்பாடி கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக அமைச்சரை மிக அன்போடு கேட்டுக்கொண்டிருக்கிறேன். மகுடஞ்சாவடி சார் பதிவாளர் அலுவலகம் மிக மோசமான நிலையில் இருக்கிறது. அதற்கு அரசு, புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க இந்த நிதியாண்டில் முடிவு எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன மகுடஞ்சாவடியில் இருக்கக்கூடிய அந்தச் சார்பதிவாளர் அலுவலகத்தைப் புதுப்பிப்பதற்காக ஏற்கெனவே ஆணையிடப் பட்டிருக்கிறது. அதற்கு எவ்வளவு பணம் என்ற புள்ளி விவரம் என்னிடத்திலே இல்லை. அதுபற்றி நான் பின்னர் உறுப்பினருக்குத் தெரிவிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்-நிருவாகம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்-நிருவாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

[பேரவைத் தலைவர்] [1999 ஏப்ரல் 28

திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

பிற்பகல் 1-15

**திரு. ஆர்.ஆர். சேகரன்**: இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞான சம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ்.எஸ் மணி நாடார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



1999 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.10,19,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஆ) கோரிக்கை எண் 6 — ஆவணப் பதிவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6 — ஆவணப் பதிவு, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சி. வேலாயுதன், இருக்கையில் இல்லை. திரு. சி. வேலாயுதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.43,84,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1999 ஏப்ரல் 28

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(இ) கோரிக்கை எண் 47 — ஊரகத் தொழில்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47—ஊரகத் தொழில்கள், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.



1999 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை. திரு. கே. ரவி அருணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

**"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.88,68,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.**

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஈ) கோரிக்கை எண் 59 — ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 59—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 1,26,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும், நாளை (29-4-1999) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 1-18 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

142. மானியக் கோரிக்கை எண் 47 மற்றும் 59—ஊரகத் தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000. (தமிழ், ஆங்கிலம்)

---



## இணைப்பு-I

*(59 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**கோரிக்கை எண் 5 முத்திரைத் தாள் நிர்வாகம்**

**மற்றும்**

**கோரிக்கை எண் 6 பத்திரப் பதிவு**

## கொள்கை விளக்கக் குறிப்பு 1999–2000

பதிவுத் துறை 1864 முதல் இயங்கி வருகின்ற தொன்மையான துறைகளுள் ஒன்றாகும். மாநிலத்திற்குக் கணிசமான வருவாயினை ஈட்டித் தருவதில் இத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. இத்துறை வணிகவரி மற்றும் கலால் துறைகளுக்கு அடுத்து மாநிலத்திற்கு அதிக வருவாயினை ஈட்டித் தருகின்ற மூன்றாவது துறையாகும். பதிவுத் துறை மக்களுக்கு சேவை செய்வதோடு 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் (மத்திய சட்டம் 2/1899) கீழ் முத்திரைத் தீர்வை மற்றும் 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் (மத்திய சட்டம் 16/1908) கீழ் பதிவுக் கட்டணம் மற்றும் பல சட்டங்களின் மூலம் அரசுக்கு வருவாயினை ஈட்டித் தருகின்ற துறையாகும்.

### 02. நிர்வாக அமைப்பு

*அ. தலைமை நிர்வாகம்*

இந்திய ஆட்சிப் பணித்தரத்தில் உள்ள அலுவலர் பத்திரப் பதிவுத் துறைத் தலைவராக நியமிக்கப்படுகிறார். இவர் பிறப்பு, இறப்பு, திருமணத் தலைமைப் பதிவாளராகவும், 1982 ஆம் ஆண்டு மத்திய சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் (மத்திய சட்டம் 40/1982) சீட்டு நிதிகள் பதிவாளராகவும், 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவாளராகவும் செயல்படுகிறார். மேலும் இவர் 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிகமற்ற மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் பதிவாளராகவும் செயல்படுகிறார். இவருக்கு உதவியாகப் பின்வரும் அலுவலர்கள் தலைமையிடத்தில் பணியாற்றி வருகின்றனர்:

1. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி)
2. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு)

[1999 ஏப்ரல் 28

3. கூடுதல் சீட்டு மற்றும் சங்கங்களின் பதிவாளர் (கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்)

4. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (சட்டம் மற்றும் மக்கள் தொடர்பு)

5. பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) (துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்)

6. பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சீட்டு) (மாவட்டப் பதிவாளர் நிலையில்)

7. மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி)

8. மாவட்டப் பதிவாளர் (ஆய்வு)

9. கணக்கு அலுவலர்

10. காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தலைமையின்கீழ் இயங்கும் நான்கு காவல் துறை ஆய்வாளர்கள் அடங்கிய விழிப்புப் பணிக்குழு.

ஆ. மண்டல அலுவலகங்கள்

தமிழ்நாடு முழுவதும் சென்னை, வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு, ஒன்பது பதிவு மண்டலங்கள் செயல்படுகின்றன. இந்த மண்டலங்கள் ஒவ்வொன்றும் துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையிலுள்ள ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மண்டலம் முழுவதையும் நிர்வகித்தல், ஆய்வு செய்தல், அவருடைய மண்டலத்திற்குள் உள்ள வட்டார பதிவுத் துறை அலுவலகங்கள், மாவட்டப் பதிவகங்கள் மற்றும் சார்பதிவாளர் அலுவலகங்களின் பணிகளை மேற்பார்வையிடுதல், திடீராய்வு செய்தல், விசாரணை மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் மண்டலத் தலைவரின் பணிகளாகும். மண்டலத்தின் மாதாந்திர வருவாய் இலக்கை எட்டுதல் அவரின் தலையாய பொறுப்பாகும். இவர் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் இணைப் பதிவாளராவார்.



1999 ஏப்ரல் 28]

இ. வட்டார அலுவலகங்கள்

சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு ஐந்து உதவி பதிவுத் துறைத் தலைவர்கள் செயல்படுகின்றனர். சார்பதிவாளர் அலுவலகங்களை ஆய்வு செய்தல், புகார்கள் தொடர்பாக விசாரணை செய்தல், தணிக்கைக் குழுவின் பணிகளை ஆய்வு செய்தல் ஆகியவை உதவி பதிவுத் துறைத் தலைவரின் முக்கிய பணிகளாகும். மேலும், அவர்கள் சங்கங்கள் மற்றும் சீட்டு நிதி நிறுவனங்களையும் ஆய்வு செய்கின்றனர்.

ஈ. மாவட்ட அலுவலகங்கள்

மாநிலம், 50 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பதிவு மாவட்டமும் ஒரு நிர்வாக மாவட்டப் பதிவாளர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றது. நிர்வாக மாவட்டப் பதிவாளர் சங்கங்களின் பதிவாளராகவும், சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ் துணைச் சீட்டுப் பதிவாளராகவும், திருமணங்கள், கூட்டு வணிக நிறுவனங்கள் ஆகியவற்றின் பதிவாளராகவும் செயல்படுகிறார். சார்பதிவாளர் அலுவலகங்களை ஆய்வு செய்தல், பதிவுச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மேல்முறையீடுகளை விசாரித்தல், பத்திரங்களின் தன்மை தொடர்பாக சார்பதிவாளர்கள் எழுப்பும் ஐயங்களுக்கு விளக்கம் அளித்தல், புகார்கள் ஏதேனும் வரப்பெற்றால் அவற்றை விசாரித்தல், சொத்துக்களின் மதிப்பைக் குறைவாகக் குறிப்பிட்டுள்ள பத்திரங்கள் அடங்கிய சொத்துக்களை கள ஆய்வு செய்து சரியான மதிப்பை நிர்ணயித்தல் ஆகியவை அவருடைய முக்கியமான பணிகளாகும். பணியின் தன்மை மற்றும் முக்கியத்துவம் கருதி சென்னை (வடக்கு), மத்திய சென்னை, சென்னை (தெற்கு), வேலூர், திருச்சிராப்பள்ளி, சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு) மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில், நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் உதவிப் பதிவுத் துறைத் தலைவர்கள் நிலையில் உள்ளனர்.

உ. தணிக்கைக் குழுக்கள்

மாநிலத்திலுள்ள எல்லா சார்பதிவாளர் அலுவலகங்களையும், நூறு சதவீதம் உள் தணிக்கை செய்ய 38 தணிக்கைக் குழுக்கள் செயல்படுகின்றன. ஒவ்வொன்றும் ஒரு மாவட்டப் பதிவாளர்

தலைமையில் இயங்குகின்றது. ஆவணங்களில் குறிப்பிடப்படும் கட்டடங்கள் போன்ற அசையாச் சொத்துக்கள், முத்திரைத் தீர்வை ஏய்ப்பு செய்யும் நோக்குடன் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளனவா எனக் கள ஆய்வு செய்யும் பணியையும் தணிக்கைக் குழு மேற்கொள்கின்றது.

### ஊ. சார்பதிவகங்கள்

மாநிலம் முழுவதும் 598 சார்பதிவகங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு சார்பதிவாளர் தலைமையில் செயல்படுகின்றது. விற்பனை, பரிவர்த்தனை, தானம், விடுதலை, குத்தகை, அடமானம் போன்ற பல்வேறு வகை ஆவணங்களைப் பதிவு செய்தல், வில்லங்கச் சான்றிதழ்கள், ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் வழங்குதல் ஆகியவை சார்பதிவாளரின் பணிகளாகும். இந்துத் திருமணச் சட்டம் மற்றும் சிறப்புத் திருமணச் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் திருமணப் பதிவாளராகவும் இவர் செயல்படுகிறார்.

(1) சென்னை (வடக்கு), மத்திய சென்னை, சென்னை (தெற்கு), கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு) போன்ற பெருநகர்களைப் பொறுத்தவரையில் பதிவுக்கு வரும் சிக்கலானதும் மதிப்பு அதிகமானதுமான ஆவணங்களை விரைவாகவும், சரியாகவும் பதிவு செய்ய அப்பெருநகர்களிலுள்ள சார்பதிவகங்கள் மாவட்டப் பதிவாளர் நிலையிலுள்ள சார்பதிவாளர்கள் தலைமையில் இயங்குகின்றன. மேற்கண்ட இடங்களிலும், காஞ்சிபுரம், வேலூர், கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், கரூர், நாமக்கல், சேலம், ஈரோடு, திருப்பூர், பழனி, உதகமண்டலம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் மாவட்டப் பதிவாளர் நிலையில் 1நிர் இணைச் சார்பதிவாளர்களாகப் பணியாற்றுகின்றனர்.

(2) அரியலூர் பதிவு மாவட்டம், இரும்புலிக்குறிச்சியில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் 24-11-1997 முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், சிதம்பரம் பதிவு மாவட்டத்தில் தொழுதூரில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் 30-4-1998 முதல் செயல்பட்டு வருகிறது. தற்பொழுது அது விருத்தாசலம் பதிவு மாவட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் புதிய சார்பதிவகங்கள் திறக்கப்பட வேண்டும் என்று சட்டப்பேரவை உறுப்பினர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் கோரிக்கைகள் பெறப்பட்டுள்ள நிலையிலும், பதிவுக்கு வரும் ஆவணங்கள் மிக





அதிகமாக உள்ள இடங்களிலும் புதிதாக சார்பதிவகங்கள் திறக்க வேண்டிய அவசியம் குறித்து அரசு ஆய்வு செய்து முடிவெடுக்கிறது.

(3) அதிக எண்ணிக்கையில் சார்பதிவகங்கள் உள்ள சிதம்பரம், தஞ்சாவூர், சேலம் ஆகிய பதிவு மாவட்டப் பதிவகங்களைப் பிரித்து விருத்தாசலம், கும்பகோணம், மற்றும் சேலம் (கிழக்கு) ஆகிய இடங்களில் புதிய மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள் ஏற்படுத்தியும், இதைத் தவிர புதிதாக கள்ளிமந்தயம் (பழனி), கே.வி. குப்பம் (வேலூர்) மணச்சநல்லூர் (திருச்சி), மாரண்டஹள்ளி (தர்மபுரி) மற்றும் திருக்குவளை (மயிலாடுதுறை) ஆகிய இடங்களில் சார்பதிவாளர் அலுவலகங்கள் திறப்பதற்கான ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(4) ஒவ்வொரு சார்பதிவகத்திலும், பொதுமக்கள் தங்கள் ஆவணங்களைப் பதிவு செய்வதில் உள்ள இடர்பாடுகளையும், அவர்களுடைய ஆலோசனைகளையும், எழுதிக் கொடுக்கும் மனுக்களைப் பெற வசதியாக ஆலோசனை பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

### எ. புலனாய்வுக் குழு

இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 27-ன்படி, கைமாறும் சொத்தின் உண்மை விவரங்கள் முழுமையாகக் கொடுக்கப்பட வேண்டும். அசையாச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் கட்டட அளவுகளை மறைத்து, மதிப்புகுறைவாக எழுதப்பட்டிருக்கும் சொத்துக்களின் மதிப்பை நிர்ணயிக்கும் பொருட்டும் முத்திரைத் தீர்வைத் ஏய்ப்பைத் தடுக்கும்பொருட்டும் 'புலனாய்வுக் குழு' என்ற பிரிவு ஒன்று, கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் ஒருவர் தலைமையின் கீழ் 8 மாவட்டப் பதிவாளர்களையும், 2 உதவி செயற் பொறியாளர்களையும் கொண்டு 1989 ஆம் ஆண்டு முதல் பதிவுத் துறையில் செயல்பட்டு வருகிறது. இவர்களுடன் நிர்வாக மாவட்டப் பதிவாளர்களும், தணிக்கை மாவட்டப் பதிவாளர்களும், கட்டட கள ஆய்வுகள் செய்து, வருவாய் இழப்பைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர். புலனாய்வு மாவட்டப் பதிவாளர்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ளனர்.

இப்பிரிவால் கட்டடங்கள் கள ஆய்வில் 17,317 வழக்குகளில் முத்திரைத் தீர்வை ஏய்ப்பு கண்டுபிடிக்கப்பட்டு, 31-12-1998 முடிய 9,365 ஆவணங்களில் ரூ. 6.08 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இதில் கடந்த வருடங்களின் தொகையும் அடங்கும்.

[1999 ஏப்ரல் 28

31-12-1998-ல் 7,952 ஆவணங்களில் ரூ.9.18 கோடி வருவாய் நிலுவையில் உள்ளது. இதில் கணிசமான தொகை அடுக்குமாடிக் குடியிருப்பு விற்பனைகள்மீது விதிக்கப்பட்ட முத்திரைத் தீர்வை குறித்த வழக்கில், சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக, அரசு, உச்சநீதிமன்றத்தில் வழக்கு கோர்வை செய்ததன்மீது, முடிவான தீர்ப்பாணையை எதிர்நோக்கி வசூலிக்க முடியாத நிலையில் உள்ளது.

*ஏ. வழிகாட்டி மதிப்பு*

சொத்துரிமை மாற்றம், சொத்துப் பரிமாற்றம், தானம், விடுதலை, செட்டில்மெண்ட், நிலையான குத்தகை, உடைமை உரிமையிலுள்ள அடமானம் போன்ற அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள், பரிமாற்ற ஆவணங்கள் மூலம் கிடைக்கும் வருவாய் முத்திரைத் தீர்வை வருமானத்தில் கணிசமான அளவாகும். சொத்து விற்பனை, பரிமாற்றம், தானம், குடும்ப உறுப்பினர் அல்லாத நபர்கள் சம்பந்தப்பட்ட செட்டில்மெண்ட் குறித்த பரிவர்த்தனைகளில் சம்பந்தப்பட்ட சொத்தில், சந்தை மதிப்பு அடிப்படையில் முத்திரைத் தீர்வை விதிக்கப்பட்டு வருகிறது. ஆவணத்தில் சந்தை மதிப்பு சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள வசதியாக பத்திரப் பதிவு அலுவலர்களுக்கு அவர்களது அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கிராமப் புல எண்கள் மற்றும் நகர எல்லையில் இருக்கும் தெருக்களில் உள்ள சொத்துக்களின் தோராய மதிப்புகள் அடங்கிய வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

வளர்ச்சி சதவிகிதம், விற்பனைப் புள்ளிவிவரங்கள், நிலத்தின் உபயோகம், பூகோள அமைப்பு, சுற்றுப்புறச்சூழல், தெருக்களின் அகலம் மற்றும் விசாரணையின் மூலம் அறியப்படும் மதிப்பு ஆகிய விவரங்களைக் கொண்டு சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புகள் திருத்தி அமைக்கப்படுவதற்குக் கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரின்கீழ் 'வழிகாட்டி மதிப்புக்குழு' இயங்கி வருகிறது. இக்குழு வழிகாட்டிப் பதிவேடுகளில் உள்ள சொத்துக்கள் மதிப்பு விவரங்களில் உள்ள முரண்பாடுகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் முறையீடுகளின் அடிப்படையில் கள ஆய்வும் விசாரணையும் மேற்கொண்டு முரண்பாடுகளைக் களைகிறது.



1999 ஏப்ரல் 28]

வழிகாட்டி மதிப்பு ஒரு முறை நிர்ணயித்தபின் அடுத்த திருத்தியமைத்தல் வரை நிலையாக இருக்குமெனவும், இடைப்பட்ட காலத்தில் பதிவு செய்யப்படும் உயர்மதிப்பு அதன் பின் பதிவுகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது எனவும், அடுத்த திருத்தியமைத்தலின்போது கருத்தில் கொள்ளப்படும் எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. பொதுச்சொத்து பதிவை தடை செய்திட புறம்போக்கு நிலங்களின் புல எண்களுக்கு மதிப்பு நிர்ணயம் செய்யவோ மாற்றவோ கூடாது என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. நகரங்களுக்கு அருகாமையிலுள்ள நிலங்களும், பயன்படாமல் உள்ள விவசாய நிலங்களும், தரிசு நிலங்களும் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இவ்வழிகாட்டிக்குழு, துறையிலுள்ள களப்பணி அலுவலர்களுடன் சேர்ந்து மனைப்பிரிவுகளையும் மனையிடங்களையும் ஆய்வு செய்தும், விசாரணையின் மூலமும், பதிவுப் புள்ளி விவரங்கள் அடிப்படையிலும் சொத்துக்களின் சரியான மதிப்பை நிர்ணயம் செய்கிறது.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுக்கும், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சி மற்றும் இதர நகராட்சிகளின் 1971 ஆம் ஆண்டு கிராம மற்றும் நகர்ப்புற திட்ட சட்டத்தின் பிரிவு 10(1)ன் கீழ் உள்ளாட்சி திட்டப்பகுதி என அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும் உள்ள சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பு ஆண்டுதோறும் திருத்தியமைக்கப்படவும், இதர கிராமப்புறங்களிலுள்ள சொத்துக்களின் மதிப்பு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படவும் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பு குறிப்பிட்ட பதிவேட்டின் நகல் ஒன்று அந்தந்த பகுதிகளில் உள்ள வர்த்தகர் சங்கம் அல்லது விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளுக்கு மக்களின் தகவலுக்காகக் கொடுக்கப்பட்டுள்ளது.

நீதியரசர் திரு. ஜி. ராமானுஜம் தலைமையில் அமைக்கப்பட்ட நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் ஊழல் தடுப்பு உயர்மட்டக்குழுவின் பரிந்துரை அடிப்படையில் வழிகாட்டி மதிப்பினை சரியாகவும், விஞ்ஞான பூர்வமாகவும் நிர்ணயித்திட மதிப்பு நிர்ணய நடவடிக்கையில் வழிகாட்டி மதிப்புப் பிரிவில் ஆலோசனை வழங்க வருவாய்த் துறை அலுவலர் ஒருவரை உறுப்பினராக சேர்த்துக்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.

[1999 ஏப்ரல் 28

ஐ. பதிவுத்துறை பயிற்சி நிலையம்

பதிவுத் துறையால் நிர்வகிக்கப்படும் முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் மற்றும் பல்வேறு சட்டங்கள் குறித்து பதிவு அலுவலர்களுக்கும் ஏனைய அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்க பயிற்சி நிலையம் ஒன்றினை, பதிவுத் துறைத் தலைமை அலுவலகத்தில் அரசு நிறுவியுள்ளது. இப்பயிற்சி நிலையம் துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையிலுள்ள இயக்குநர் தலைமையில் இயங்கி வருகின்றது. இப்பயிற்சி நிலையம் கடந்த டிசம்பர் 1996 முதல் தொடங்கி 31-1-1999 முடிய 712 சார் பதிவாளர்களுக்கும், 72 மாவட்டப் பதிவாளர்களுக்கும், பயிற்சி அளித்துள்ளது.

**03. பதிவுத் துறை நிர்வகிக்கும் பல்வேறு சட்டங்கள்**

1. 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 16/1908)

2. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)

3. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் (40/1982)

4. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம்.

5. 1932 ஆம் ஆண்டு இந்தியக் கூட்டுப் பங்காண்மைச் சட்டம்.

6. 1972 ஆம் ஆண்டு வர்த்தகம் அல்லாத கம்பெனிகள் சட்டம்.

7. 1886 ஆம் ஆண்டு பிறப்பு இறப்புச் சட்டம்.

8. (அ) 1938 ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம்.

(ஆ) 1869 ஆம் ஆண்டு பிறப்பு இறப்புச் சட்டம்.

(இ) 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம்.

(ஈ) 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்.

(உ) 1872 ஆம் ஆண்டு இந்திய கிறிஸ்துவத் திருமணச் சட்டம்.

(ஊ) 1961 ஆம் ஆண்டு வரதட்சிணை தடுப்புச் சட்டம்.



1999 ஏப்ரல் 28]

**04. இந்திய முத்திரைச் சட்டம்—நிர்வாகம்**

சொத்து விற்பனை, பரிவர்த்தனை, அடமானம், நன்கொடை, உடைமை, உரிமை, நிலவரி ஏற்பாடு முதலியவை குறித்த பத்திரங்கள் மீது முத்திரைத் தீர்வை விதிப்பதற்கு 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) மாநில அரசுக்கு அதிகாரமளிக்கிறது. வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்பு, பதிவுத் துறை தலைவர் 1-12-1980-லிருந்து வருவாய் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரியாக (முத்திரைத்தாள் வருவாய்) செயல்பட்டு வருகிறார். அவர் இந்திய முத்திரைச் சட்டத்தின் மூலம் வருவாய் வசூலிக்கும் பொறுப்பிலும் இருந்து வருகிறார். அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை மாற்றம் செய்வது குறித்த ஆவணங்களின் பேரில், முத்திரைத் தீர்வை விதிப்பதன் மூலம் கணிசமான வருவாய் அரசுக்குக் கிடைக்கிறது.

(1) பதிவுத் துறை வருவாய்

ஆவணங்கள்மீது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை, பத்திரப் பதிவுக்கட்டணம் மற்றும் சீட்டுகள், சங்கங்கள், திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்காக விதிக்கப்படும் கட்டணங்கள் ஆகியவை இத்துறைக்கு வருவாய் தரும் முக்கிய இனங்களாகும். ஆவணத்தில் குறிப்பிடப்படும் சொத்தின் விலைமதிப்பின்மீது முத்திரைத் தீர்வை விதிப்பதை மாற்றி ஆவணச்சொத்தின் சந்தை மதிப்பின்மீது தீர்வை விதிக்க வகை செய்து 1967 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் திருத்தப்பட்டது, பதிவுத் துறையில் சரித்திர முக்கியத்துவம் பெற்ற சாதனையாகும். அதன் அடிப்படையில் சொத்துக்களின் தோராயமான சந்தை மதிப்பைக் குறிக்கும் வழிகாட்டி மதிப்புப்பதிவேடுகளில் குறிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புகள் காலமுறையாக அவ்வப்போது திருத்தியமைக்கப்படுகின்றன. பதிவுத் துறை அலுவலர்களுக்கு வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் முத்திரைத் தீர்வை ஏய்ப்பு செய்யும் நோக்குடன் ஆவணங்களில் சொத்து மதிப்பு குறைத்து எழுதப்படுவது தடுக்கப்படுவதுடன் அரசின் முத்திரைத் தீர்வை வருவாய் இழப்பும் தடுக்கப்படுகிறது. பத்திரப் பதிவுக்கட்டணம், முத்திரைத் தீர்வை ஆகியவற்றின் மூலம் 1968-69-ல் ரூ. 40 கோடியாக இருந்த வருவாயானது இத்துறையின் தீவிரமான மேற்பார்வையினாலும், விழிப்புணர்வினாலும் 1997-98 ஆம் நிதியாண்டில் ரூ. 806.26 கோடி அளவு உயர்ந்துள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் 31-3-1999 முடிய இத்துறையின் வருவாய்

[1999 ஏப்ரல் 28

ரூ. 854.30 கோடியை எட்டியுள்ளது. அதே காலத்தில் 13,69,688 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இலாப நோக்கின்றி கட்டணம் வசூலிக்காமல் ஏழை மக்களுக்கு இலவச சேவை செய்யும் கல்வி, சமூக மற்றும் அற நிறுவனங்கள் வாங்கிய சொத்துக்களின் மீதும், பெரும் தொழில்கள் தொடங்கவும் தொழிற்பேட்டைகள் அமைக்கவும் நிலங்கள் வாங்கும்போது ஏற்கெனவே உள்ள சலுகைகளின்படி நடப்பு நிதியாண்டில் 31-12-1998 முடிய ரூ.6.78 கோடி அளவிற்கு முத்திரைத் தீர்வை சலுகை அரசால் வழங்கப்பட்டுள்ளது.

முத்திரை வருவாய்

| வருடம் | பத்திரப்பதிவு அதிகாரிகள் மூலம் (ஆவணப் பதிவின் மூலம்) (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1992-93 | 367.81 |
| 1993-94 | 411.98 |
| 1994-95 | 586.34 |
| 1995-96 | 748.50 |
| 1996-97 | 748.58 |
| 1997-98 | 806.26 |
| 1998-99 | 854.30 |

**(2) இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ) இன் கீழ் தனித் துணை ஆட்சியர்களுக்கு (முத்திரை) அனுப்பப்பட்ட ஆவணங்கள்**

முத்திரைச் சட்டத்தின்படி பத்திரங்களைப் பதிய வருபவர்கள் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் உண்மையான சந்தை மதிப்பைக் குறிப்பிடவேண்டும். சொத்தின் சரியான சந்தை மதிப்பு உண்மையில் பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள வழிகாட்டி மதிப்புப் பதிவேட்டை வைத்து சரி பார்க்கப்படுகிறது. பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும் வழிகாட்டிப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்குமிடையே வேறுபாடு ஏதுமிருந்து, பத்திரம் பதிய வருபவர் கூடுதல் முத்திரைத் தீர்வையைச் செலுத்த மறுத்தால், இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ) இன்கீழ், அச் சொத்தின் உண்மையான சந்தை மதிப்பை நிர்ணயிப்பதற்காக பத்திரப் பதிவு அதிகாரி, அந்தப் பத்திரத்தைத்



1999 ஏப்ரல் 28]

தனித் துணை ஆட்சியர் (முத்திரை)க்கு அனுப்பி வைப்பார். பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்து அதன்மீது செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையைத் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) நிர்ணயிக்கிறார். அவ்வாறு சட்டப்பிரிவு 47 (ஏ) இன்கீழ் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) மதிப்பு நிர்ணயம் செய்து வெளியிடும் ஆணையால் பாதிக்கப்பட்டவர்கள் துணை நீதிமன்றம், நகர உரிமையியல் நீதிமன்றம் ஆகியவற்றில் முறையீடு செய்யலாம்.

இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47 (ஏ) இன் கீழ் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) நிர்ணயிக்கும் முத்திரைத் தீர்வைக்கு ஏதுவாக மேல்முறையீடுகளை மண்டல அலுவலர்களுக்குச் செய்துகொள்ளவும் பதிவுத் துறைத் தலைவர் தன்னிச்சையாக சீராய்வு செய்யவும், வகை செய்யும் முத்திரைச் சட்டப் பிரிவு 47 (ஏ)க்கான சட்டத்திருத்தம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் இசைவுக்காக மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட இடங்களில் 11 தனித் துணை ஆட்சியர்கள் (முத்திரை) செயல்படுகின்றனர்:

1. சென்னை, 2. வேலூர், 3. கடலூர், 4. தஞ்சாவூர், 5. திருச்சிராப்பள்ளி, 6. சேலம், 7. கோயம்புத்தூர், 8. மதுரை, 9. தூத்துக்குடி, 10. விருதுநகர், 11. திருநெல்வேலி.

மேற்கண்ட அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட மாவட்டங்கள் தோறும் சுற்றுப்பயணம் செய்து, சொத்துக்களைப் பார்வையிட்டு செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை போதுமானதா அல்லது குறைவானதா என்பதைக் கண்டறிந்து சொத்துக்களின் மதிப்பை நிர்ணயம் செய்கின்றனர். இந்த அலுவலர்கள் 1998-99 ஆம் ஆண்டில், முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ) இன்கீழ் 90,092 ஆவணங்களை முடித்து குறைவு முத்திரைத் தீர்வையாக ரூ. 52.11 கோடி வசூல் செய்துள்ளனர்.

**(3) சமாதான் சலுகைத் திட்டம்**

முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ) இன்கீழ் பிப்ரவரி 1999 வரை சொத்து மதிப்பு நிர்ணயம் செய்ய அனுப்பப்பட்ட 73,027 ஆவணங்களில் சுமார் ரூ.220.58 கோடி முத்திரைத் தீர்வை வருவாய் முடங்கியுள்ளது. முத்திரை தனித் துணை ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டு நிலுவையிலுள்ள ஆவணங்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும், அதன் மூலம் முடங்கிக் கிடக்கும் வருவாயை ஈட்டவும், அரசு சமாதான்

சலுகைத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி வழிகாட்டி மதிப்புப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து மதிப்பின்மீது விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வை மற்றும் ஏற்கெனவே செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை ஆகிய இரண்டிற்கும் இடையிலான வேறுபாட்டுத் தொகையில் 50 சதவிகிதத்தை செலுத்தி ஆவணத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். 1-3-1999 அன்று முத்திரை தனித் துணை ஆட்சியரிடம் நிலுவையில் இருக்கும் ஆவணங்களுக்கு மட்டுமே இச்சலுகை பொருந்தும். இச்சலுகை 30-6-1999 வரை நடைமுறையில் இருக்கும்.

மேலும், முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ) இன்கீழ் அதிக அளவில் ஆவணங்கள் தேங்கிக் கிடக்கும் பகுதிகளில், நிலுவையில் உள்ள ஆவணங்களை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு, தற்போதுள்ள தனித் துணை ஆட்சியர்களுடன் கூடுதலாக 9 தனித் துணை ஆட்சியர் (முத்திரை) அலகுகளை அரசு ஏற்படுத்தி உள்ளது, நிலுவையில் இருக்கும் வருவாயை வசூலித்திட 11 வருவாய் அலுவலர்கள் பணியிடங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது.

**(4) முத்திரைத் தீர்வை மீதான மிகுவரி**

விற்பனை, பரிவர்த்தனை, நன்கொடை, உடைமை, உரிமையுடன் கூடிய அடமானம், அதன் மாற்றம், நிலையான குத்தகை தொடர்பாக ஆவணங்களைப் பொறுத்தவரையில் முத்திரைத் தீர்வையுடன் 5 சதவிகிதம் மிகுவரி கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைப் பொறுத்தவரை மிகுவரியாக வசூலிக்கப்படும் தொகையில் 10% தொகையை வசூல் கட்டணமாக பதிவுத் துறை எடுத்துக்கொண்டு, எஞ்சியுள்ள 90% தொகை மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் வழங்கப்படுகிறது.

அதேபோல் நகர பஞ்சாயத்துக்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றப்படும் மிகுவரி வசூலில், 3% இத்துறை வசூல் கட்டணமாக எடுத்துக்கொள்கிறது. மீதமுள்ள 97% மிகுவரி சம்பந்தப்பட்ட நகர பஞ்சாயத்துக்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படுகிறது.

**(5) ஏழை மக்கள் குறைந்த மதிப்புள்ள சொத்தை வாங்கி பதிவதற்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக்கட்டணத்தினின்றும் முழு விலக்கு**

ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.3,000/-க்கும் குறைவான மதிப்புள்ள சொத்தை வாங்கி ஆவணம் பதிவு செய்வோருக்கு அரசு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழு விலக்கு அளித்துள்ளது.



**(6) தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் ஒதுக்கீடு செய்யும் குடியிருப்பு/மனைகளுக்கு முத்திரைத் தீர்வை விலக்கு/சலுகை அளித்தல்**

(அ) தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், பொருளாதார ரீதியில் நலிவடைந்த பிரிவினருக்கென குடியிருப்பு/மனைகளை ஒதுக்கீடு செய்து 25-9-1970 முதல் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள கிரய ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை முழு விலக்களித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) மேலும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அதன் ஒதுக்கீடுதாரர்களுக்குக் குடியிருப்பு/மனையை குறைந்த வருவாய் பிரிவு, மத்திய வருவாய் பிரிவு மற்றும் உயர்ந்த வருவாய் பிரிவு ஆகிய திட்டங்களின்கீழ் ஒதுக்கீடு செய்து 25-9-1970 முதல் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள கிரய ஆவணங்களுக்கு சம்பந்தப்பட்ட சொத்தின் சந்தை மதிப்பினை விடுத்து, மேற்படி வாரியம் நிர்ணயம் செய்த கிரய தொகைக்கே முத்திரைத் தீர்வை செலுத்தினால் போதுமானது என்ற வகையில் முத்திரைத் தீர்வை சலுகையினை அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**(7) பதிவுச் சட்டத்திருத்தங்கள்**

(அ) பதிவுச்சட்டம் பிரிவு 28 இல் உள்ள உரிமையைப் பயன்படுத்திக்கொண்டு, அதிக அளவு முத்திரைத் தீர்வை செலுத்துவதை தவிர்க்க தமிழகச் சொத்துக்கள் குறித்து விற்பனை ஆவணங்கள் பெருமளவு அண்டை மாநிலமான கேரள சார்பதிவகங்களில் பதிவு செய்யப்படுகின்றன. இதைத் தடுக்க, தமிழ்நாடு சொத்துக்கள் குறித்த விற்பனை/பரிவர்த்தனை ஆவணங்கள் தமிழ்நாட்டில் சொத்து அமைந்துள்ள பகுதியின் எல்லை உரிமை உடைய சார்பதிவகத்தில் மட்டுமே பதியப்பட வேண்டும் என்றும், அதை மீறி வேறு மாநில சார்பதிவகத்தில் பதிவு செய்தால் அது செல்லாது என்றும் கடந்த, 31-1-1997 அன்று சட்டப்பேரவையில் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டு (சட்ட எண் 19/1997) 29-3-1997 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) பொதுக் கொள்கைக்கு எதிரான ஆவணங்களைப்பதிவு செய்ய மறுக்க அதிகாரமளிக்கும் வகையில் பதிவுச் சட்டம் பிரிவு 22-க்கு திருத்தம் ஒன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு (சட்ட எண் 48/1997) 22-8-1997 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தின்கீழ் பொதுக் கொள்கைக்கு மாறான நிகழ்வுகளை அறிவிக்கை வாயிலாக விரைவில் அரசு வெளியிடும்.

[1999 ஏப்ரல் 28

(இ) பதிவு செய்யும் நடைமுறைகளை முடித்திட வழிவகுக்கும் வரையறை இருப்பதைப் பயன்படுத்தி அரசுக்குச் செலுத்தவேண்டிய முத்திரைத் தீர்வையைத் தாமதப்படுத்தும் போக்கு உள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு ஆவணங்களில் குறிப்பிடப்படும் மதிப்புக்கு முத்திரைத் தீர்வை செலுத்தாத ஆவணங்களில் தீர்வை செலுத்திய பின்னரே பதிவு நடைமுறை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஈ) நீதியரசர் திரு. ஜி. இராமானுஜம் தலைமையில் அமைக்கப்பட்ட நிர்வாக சீர்த்திருத்தங்கள் மற்றும் ஊழல் தடுப்பு உயர்மட்டக்குழுவின் பரிந்துரைகளுக்கிணங்க,

(1) இல்லாத ஒரு நபர் பெயரிலோ, இரவல் பெயரிலோ நடைபெறும் சொத்து வாங்குதலை தடை செய்திட, ஆவணம் மற்றும் பதிவு அலுவலக பதிவுகளில் சொத்து வாங்குபவரின் கையொப்பம் பெற வழிவகை செய்யும் நடைமுறையை பதிவுச் சட்டத்தில் வகை செய்திட அரசு பரிசீலித்து வருகிறது.

(2) இந்தியாவில் எந்தப் பகுதியில் இருக்கும் சொத்துக்கள் குறித்த எந்தப் பதிவினையும், பெருநகரத்தில் உள்ள மாவட்டப் பதிவாளரால் பதிவு செய்திட வகைசெய்யும் பதிவுச் சட்டம் பிரிவு 30(2)-ஐ நீக்கிட அரசு பரிசீலித்து வருகின்றது.

(உ) ஆவணதாரர்கள் தங்கள் ஆவணங்களை விரைவாக பதிவு செய்து திரும்ப பெற ஏதுவாக ஆவணங்களுக்கு படிவம் ஒன்றை வரையறை செய்திட அரசு பரிசீலித்து வருகின்றது.

(ஊ) ஆவணப் பதிவுக்கு செலுத்தப்படும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக்கட்டணம் இவைகளை கேட்பு வரைவோலை வழியாகவும் செலுத்திட அனுமதி அளிக்கலாமா என்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

(எ) கடந்த ஆண்டு சட்டமன்ற நிதிநிலை கூட்டத்தொடரில், பொதுமக்கள் பயனுறும் வகையிலும், பதிவுத் துறையின் நிர்வாகத்தில் நம்பிக்கையூட்டும் வகையிலும் "பதிவு பொதுமக்கள் சாசனம்" வெளியிடப்பட்டது.



1999 ஏப்ரல் 28]

(ஏ) பதிவுத் துறை ஆற்றும் பணிவிபரங்களை பொது மக்கள் அறிந்து கொள்ள வசதியாக 'கையேடு' அரசால் வெளியிடப்பட்டது. இந்தக் கையேடு ரூ. 5/- விலையில் பொதுமக்களுக்கு கிடைக்கும்.

(ஐ) வாடகைக் கட்டடத்தில் இயங்கும் 10 சார்பதிவகங்களுக்குக் கட்டடங்கள் கட்டித்தர அரசு அனுமதி அளித்துள்ளது.

**(8) இந்திய முத்திரைச் சட்டத்திற்கு சட்டத்திருத்தங்கள்**

முத்திரைச் சட்ட சீர்த்திருத்தம் குறித்த மாநில நிதியமைச்சர்களின் குழுவில் தமிழகப் பதிவுத் துறை அமைச்சர் ஓர் உறுப்பினர் ஆவார். இந்திய முத்திரைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளையும், பல்வேறு வகை ஆவணங்கள்மீது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை விகிதங்களையும் ஆய்வு செய்து, பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை அக்குழு அரசுக்கு அளித்துள்ளது. முத்திரைத் தீர்வை ஏய்ப்பைத் தடுக்கவும், தீர்வை விகிதங்களைத் திருத்தியமைப்பது குறித்தும, ஆவணப்பதிவின்போது மக்கள் பயனடையும் வகையில், சேவையை நவீனப்படுத்துவது குறித்தும் அதன்படி, 'முத்திரைத் தீர்வை சீர்த்திருத்தக் குழு', ஆய்வு செய்து முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டத்திற்குத் தேவையான சட்டத்திருத்தங்கள் கொண்டு வரவும் பரிந்துரைத்துள்ளது. மேற்கண்ட குழு, இந்திய முத்திரைச் சட்டத்திற்குத் திருத்தங்கள் செய்வது குறித்து பல பரிந்துரைகளைச் செய்துள்ளது. தத்து ஆவணம். உறுதி ஆவணம், ஒப்பந்த ஆவணம், சீட்டு ஒப்பந்த ஆவணம், நகல் ஆவணம், படி ஆவணம், பங்கு நிறுவன ஆவணம், பங்கு நிறுவனக்கலைப்பு ஆவணம், பிணையபத்திரம், டிரஸ்ட் ஆவணம், டிரஸ்ட் முறிவு ஆவணம், உரிமை ஆவண ஒப்படைப்பு, அடகு அல்லது ஈட்டுறுதி ஆவணம் ஆகிய ஆவணங்கள்மீது தற்போது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை மிகக்குறைந்த அளவு உள்ளதாலும், சொத்துக்களின் மதிப்பு ஆண்டுதோறும் பெருமளவு உயர்ந்து வருவதாலும், பதிவுத் துறையின் செலவினை ஈடுக்கட்ட வேண்டியும், இந்தக் கட்டணங்களை நியாயமான அளவு திருத்தி நிர்ணயம் செய்ய பரிந்துரைத்துள்ளது. இது தொடர்பாக ஒரு சட்டமுன்வடிவு தமிழ்நாடு சட்டப் பேரவையில் 16-10-1997 அன்று நிறைவேற்றப்பட்டது. அதற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**(9) பத்திரப் பதிவுத் துறையை நவினமயமாக்குதல்**

பத்திரங்கள் பதிவு செய்வதில், பதிவுத் துறையில் நெடுங்காலமாகக் கையால் எழுதப்பட்டு பதிவு செய்யும் நடைமுறைகள் இருப்பதால்,

பதிவு செய்வதிலும், பத்திரங்களைத் திரும்ப அளிப்பதிலும் நீண்டகால தாமதம் ஏற்பட்டு பொதுமக்கள் இன்னல்களுக்கு ஆளாகின்றனர். பத்திரப்பதிவு முறை நவீனமயமாக்கப்படாததாலும், தானியங்கி முறை புகுத்தப்படாததாலும், தமிழ்நாட்டிலுள்ள 598 சார்பதிவகங்களில் ஆண்டொன்றுக்கு சுமார் 13 லட்சம் ஆவணங்கள் பதிவு செய்யும் வேலைப் பளுவைப் பதிவுத் துறை சமாளிக்க இயலாத நிலையில் உள்ளது.

(1) பத்திரப்பதிவு அலுவலகங்களின் அமைப்பு மற்றும் நடைமுறைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்து அறிக்கை அளிக்குமாறு ஆய்வு நிறுவனம் ஒன்றை அரசு நியமனம் செய்தது. பத்திரப்பதிவு அலுவலகங்களுக்குக் கட்டட வசதி, பயன்பாடுடைய அறைகலன்கள கணினிமயமாக்குதல் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களைப் பாதுகாத்தல், பாதுகாக்கப்பட்ட ஆவணங்களில் இருந்து தகவல்களை எளிதில் பெறுதல், ஆவணங்களின் நகல்கள், வில்லங்கச் சான்றுகள் ஆகியவற்றைக் காலதாமதமின்றி வழங்குதல், முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் போன்ற சட்டங்கள் குறித்து பதிவுத் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல், போன்ற பல்வேறு பரிந்துரைகள் கொண்ட ஆய்வு அறிக்கையை மேற்கண்ட நிறுவனம் அரசுக்கு அளித்துள்ளது. இந்த அறிக்கை அரசின் தீவிர பரிசிலனையில் உள்ளது.

(2) பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில 27-6-1994 அன்று 3 முனைகளுடன கூடிய ஒரு கணிப்பொறி நிறுவப்பட்டது. பதிவகங்களில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அட்டவணைகள் குறித்த விவரங்களைப் பதிவு செய்ய ஒவ்வொன்றும் 5 முனைகளுடைய 2 கணிப்பொறிகள் பின்னர் நிறுவப்பட்டுள்ளன. மயிலாப்பூர் சார் பதிவகத்தில் 1983 ஆம் ஆண்டிலிருந்து 1998 ஆம் ஆண்டு வரையிலான 16 ஆண்டு காலத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து ஆவணங்கள் குறித்த விவரங்கள் கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. பெரியமேடு மற்றும் மத்திய சென்னை 1 நிர், 2 நிர் இணைச்சார் பதிவகங்களிலும், மேற்படி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கணிப்பொறி மூலம் வில்லங்கச் சான்றுகள் 7-10-1998 முதல் உடனுக்குடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(3) மாநிலத்தில் உள்ள அனைத்து சார் பதிவகங்களையும் நவீனப்படுத்தும் பதிவுத் துறைத் தலைவரின் செயற்குறிப்பை அரசு பரிசீலித்து, எல்லா பதிவகங்களையும் கணிப்பொறி மூலம் இணைக்கும் திட்டம் ஒன்றை படிப்படியாக நிறைவேற்றுவது என்று அரசு முடிவு



செய்துள்ளது. அதனடிப்படையில் முதற்கட்டமாக 21 சார் பதிவகங்களைக் கணிப்பொறி மூலம் ரூ.1கோடி செலவில் இணைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்த அட்டவணை தயாரிப்பதும், நகல் எடுப்பதும், வில்லங்கச் சான்றுகள் வழங்குவதும், ஆவணப் பதிவு குறித்த விவரங்களைப் பொதுமக்களுக்கு எளிதாகவும், விரைவாகவும் அளிப்பதும் சாத்தியமாகும். கணிப்பொறிகள் நிறுவப்பட உள்ள 21 பதிவு அலுவலகங்களிலும் உள்ள அட்டவணை 2 பதிவுகள், கணிப்பொறியில் பதிவு செய்ய விலைப்புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளன. அட்டவணை 2 பதிவுகள் மேற்கொள்ளப்பட்டவுடன் இவை புதிதாக அமைக்கப்படவுள்ள கணிப்பொறிகளில் மாற்றப்பட்டு வில்லங்கச் சான்றுகள் கணிப்பொறி வழியாக வழங்கப்படும்.

(4) ஆவணங்கள் கணிப்பொறி வழி பதிவு செய்யும் நடைமுறை குறித்து பதிவுத் துறை பரிசீலித்து வருகின்றது. இதற்குத் தேவையான மென்பொருளை பதிவுத்துறை தேசீய தகவல் மைய உதவியுடன் தயாரித்து வருகின்றது. இப்பணி முடிவுற்றதும், ஆவண நகல்கள் எடுக்க தேவையான வன்பொருள் மற்றும் மென்பொருள் பெறப்பட்டு முதல் முறையாக, மயிலாப்பூர் சார் பதிவகத்தில் கணிப்பொறி வழி பதிவு செய்தல் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இச்சோதனை அறிமுகம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டபின் கணிப்பொறி வைக்கப்பட உள்ள 21 அலுவலகங்களுக்கும் இந்த முறை விரிவாக்கப்படும்.

பதிவுத் துறையில் கணிப்பொறியை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக செயல்படுத்த பதிவுத் துறை பணியாளர்கட்கு படிப்படியாக கணிப்பொறி பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

(5) பதிவு அலுவலகங்கள் அனைத்திற்கும் படிப்படியாக நகல் எடுக்கும் கருவிகள் வழங்க அரசு பரிசீலித்து வருகின்றது.

**(10) முத்திரைத் தாள்களின் தேவையைக் கணித்தலும், முத்திரைத் தாள்களை வழங்கலும்**

தமிழ்நாடு முழுவதற்கும் அஞ்சல் சாரா முத்திரைத் தாள்களான, நீதித் துறை முத்திரைத் தாள்கள், நீதித் துறை சாரா முத்திரைத் தாள்களின் தேவையை, முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் மதிப்பீடு செய்து, அதனை நாசிக்கிலுள்ள இந்தியப் பாதுகாப்பு அச்சக முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கிறார்.

சென்னையிலுள்ள கருவூலக் கணக்குகள் துறை, மண்டல துணை இயக்குநர், முத்திரைத் தாள் உதவிக் கண்காணிப்பாளர் ஒருவரின் உதவியுடன் அலுவல் முறையில் முத்திரைத்தாள் கண்காணிப்பாளராக செயல்படுகிறார்.

ஒவ்வோர் ஆண்டிற்கு மற்றும் காலாண்டிற்கான முத்திரைத் தாள்கள் தேவைப்பட்டியலை மாவட்ட கருவூல அதிகாரிகளும், முத்திரைத் தாள் உதவிக் கண்காணிப்பாளரும் தயாரிக்கின்றனர். அவற்றை முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைக்கிறார். வெவ்வேறு கருவூலகங்களில் முத்திரைத் தாள்களின் இருப்பு நிலவரப்படியும் பொதுமக்களுக்கு தேவைப்படும் அனைத்து விதமான முக மதிப்புகளைக் கொண்ட முத்திரைத் தாள்களை வழங்கும் நோக்குடனும், பொதுமக்களின் தேவை திடீரென அதிகரிக்கும்போது அத்தேவையை நிறைவுசெய்யும் வகையிலும், சென்னை முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைந்த முத்திரைத் தாள்கள் தேவைப்பட்டியலை தயாரிக்கிறார். குறிப்பிட்ட முக மதிப்புடைய முத்திரைத் தாள்கள் அவசரமாகத் தேவைப்படும்போதும், பற்றாக்குறை ஏற்படும்போதும், முத்திரைத் தாள்கள் இருப்பு வைத்துள்ள ஒரு மாவட்டத்திலிருந்து இருப்பு இல்லாத மற்ற மாவட்டங்களுக்குத் தேவையான முத்திரைத் தாள்களை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

**(11) ஃபிராங்கிங் கருவி** (Franking Machine) **மூலம் ஆவணங்களை முத்திரையிடுதல்**

ஆவணங்களின் மீதான முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதற்கு, முத்திரைத்தாள்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, வெற்றுத்தாளில் எழுதி பதிவுக்குக் கொடுக்கப்படும் ஆவணங்களின்மீது ஃபிராங்கிங் கருவி (Franking Machine) மூலம் முத்திரைத் தீர்வைத்தொகை செலுத்துவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. நடப்பாண்டில் 15 பதிவகங்களில் இந்தக் கருவி அமைக்கப்படும். மற்ற அலுவலகங்களுக்கும் படிப்படியாக ஃபிராங்கிங் கருவி மூலம் ஆவணங்களின் மீது முத்திரையிடுதல் அறிமுகப்படுத்தப்படும்.

**(12) உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள்**

உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் மூலமும், கருவூலங்கள், சார் பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றின்





வாயிலாகவும், பொதுமக்களுக்குத் தேவையான நீதிமன்ற மற்றும் நீதிசாரா முத்திரைத் தாள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் தற்போது 3,519 உரிமம் பெற்ற முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் உள்ளனர். 1996-97 ஆம் ஆண்டில் கூடுதலாக 2,472 முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு உரிமம் வழங்க அரசு அனுமதித்துள்ளது. இதுவரை 1,343 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 1998 ஆம் ஆண்டில் அரசு மேலும் 1,524 முத்திரைத் தாள் விற்பனையாளர்களுக்கு உரிமம் வழங்க அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான உரிமம் வழங்கும் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும்.

மொத்த முத்திரைத் தாள்கள் விற்பனையில், முத்திரை விதிகளில் குறிப்பிடப்பட்ட கழிவுத்தொகை விகிதம் விற்பனையாளர்களுக்கு அனுமதிக்கப்படுகிறது. தங்களின் சேவைக்கு ஈடுகட்டும் வகையிலும் முத்திரைத் தாள்கள் விற்பனையில் முறைகேடுகள் செய்வதைத் தடுக்கும் வகையிலும் முத்திரைத் தாள் விற்பனைக்கு நியாயமான விகிதம் கழிவுத்தொகை அளிக்க வேண்டும் என தமிழ்நாடு முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் சங்கம் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது. இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

முத்திரைத் தாள் விற்பனையாளர்களின் செயல்பாட்டினை மாவட்டப் பதிவாளர்களும், பதிவுத் துறை உயர் அதிகாரிகளும், இத்துறையிலுள்ள தனி விழிப்புக்குழுவும் மேற்பார்வை செய்து முறைப்படுத்துகின்றனர்.

**(13) முத்திரைத் தாள் விற்பனையாளர்களாக சார் பதிவாளர்கள்**

முத்திரைத் தாள்கள் மற்றும் சிறப்பு ஒட்டு வில்லைகள் விற்கும் முத்திரைத் தாள் விற்பனையாளர்களாக சார் பதிவாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். சிறப்பு ஒட்டு முத்திரை வில்லைகளில் ஒப்பமிடும் அதிகாரியாகவும், முத்திரைத்தாள்களுக்குப் பதிலாக இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 41-ன்கீழ் முத்திரைத் தீர்வையினை ரூ. 10,000/- வரை ரொக்கமாகப் பெற்றிடவும், சார் பதிவாளர்கள் அதிகாரம் பெற்றுள்ளனர். மேலும், மாவட்டப் பதிவாளர்கள் சார்

[1999 ஏப்ரல் 28

பதிவாளர்களாகச் செயல்படும் இடங்களில், உச்சவரம்பு இல்லாத வகையில், முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக ரொக்கம் பெற்று ஆவணத்தில் தீர்வை செலுத்தியதற்கான சான்று சேர்க்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முத்திரைத் தாள்கள் தடையின்றி பொதுமக்களுக்குக் கிடைக்கவும், மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து பதிவு அலுவலகங்களிலும் முத்திரைத் தாள் விற்பனைக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. பொதுமக்கள் அவர்களுடைய பத்திரங்களில் முத்திரை வில்லைகள் ஒட்ட உதவும் வகையில், அனைத்துச் சார் பதிவகங்களிலும் சிறப்பு ஒட்டு வில்லைகள் எப்போதும் கிடைக்கின்றன.

**(14) சென்னையில் முத்திரைத்தாள் விற்பனை மையம் திறத்தல்**

(அ) நீதிமன்ற முத்திரைத் தாள்கள், பத்திரப்பதிவிற்கான நீதிசாரா முத்திரைத்தாள்கள் மற்றும் முத்திரை வில்லைகள் ஆகியவை எளிதாகவும், தேவையான அளவு, இடர்பாடின்றி பொதுமக்களுக்குக் கிடைக்கச்செய்யும் நோக்குடன், சென்னை துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில், முத்திரைத்தாள் விற்பனை மையம் ஒன்றை திறக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கென ரூ.25 லட்சம் அனுமதிக்கப்பட்டு, பாதுகாப்பு அறை கட்டும் பணி நடந்து வருகிறது. இம்மையத்தில் பத்திரப்பதிவிற்குத் தேவையான படிவங்களும் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) மைய அரசின் இசைவு பெற்றபின், பதிவுச் சட்டம் மற்றும் இந்திய முத்திரைச் சட்டம் ஆகியவை தமிழில் வெளியிடப்படும். பதிவுச் சட்டம் தமிழில் வெளியிட குடியரசுத் தலைவரின் ஒப்புதல் அண்மையில் பெறப்பட்டுள்ளது. இந்திய முத்திரைச் சட்டம் தமிழில் வெளியிட குடியரசுத் தலைவரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) தகவல்களை விரைவாக அனுப்பிட ஏதுவாக சென்னை பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திலும், கோயம்புத்தூர் துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திலும் பேக்ஸ் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.



1999 ஏப்ரல் 28]

**(15) சென்னை உதவி முத்திரைத் தாள் கண்காணிப்பாளரால் விற்பனை செய்யப்பட்ட முத்திரைத் தாள்களில் அரசுக்கு கிடைக்கப்பெற்ற வருவாய்**

1997-98 ஆம் ஆண்டு முத்திரைத் தாள்கள் விற்பனையில் வரவு செலவு விபரம் பின்வருமாறு:--

| கணக்குத் தலைப்பு | 1997-98 (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| வரவு | |
| 1. நீதித்துறை சாரா முத்திரைத் தாள்கள் | 55,483.10 |
| 2. நீதித்துறை சார்ந்த முத்திரைத் தாள்கள் | 3,469.76 |
| 3. உண்டியல் முத்திரைத் தாள்கள் | 4.21 |
| 4. ஒட்டு முத்திரை வில்லைகள் | 1,332.71 |
| 5. பல்வகை வரவு | 16,737.39 |
| மொத்த வரவு | **77,027.17** |
| கழிப்பு-திருப்பி செலுத்தியவை | |
| 1. நீதித்துறை சாரா முத்திரைத் தாள்கள், மற்றும் உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுக்கப்படும் தொகை | 22,365.55 |
| 2. நீதித்துறை சார்ந்தவை | -- |
| மொத்தம் | **22,365.55** |
| கட்டணங்கள் | |
| 1. முத்திரைத் தாள் விற்பனையில் தள்ளுபடி | 152.18 |
| 2. பணியாளர் செலவு | 173.24 |
| 3. நாசிக் மற்றும் ஹைதராபாத்திலுள்ள முத்திரைத் தாள் அச்சகங்களுக்கு செலுத்தப்பட்ட கட்டணம் | 372.15 |
| 4. ஏற்ற இறக்கக் கூலியுடன் முத்திரைத் தாள் கொண்டு வருவதற்கான போக்குவரத்துச் செலவு | 6.34 |
| மொத்த செலவுகள் | **703.91** |
| மொத்த வரவுகள் | **77,027.17** |
| மொத்த செலவுகளும் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகையும் | **23,069.46** |
| நிகர வரவுகள் | **53,957.71** |

**05. ஆவண எழுத்தர் மற்றும் நகல் எழுத்தர் உரிமங்கள்**

**(1) நகல் எழுத்தர் உரிமம்**

இந்தியப் பதிவு (உண்மை நகல் கோர்வை) விதிகள் 1967 இன்படி, பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணத்துடன் அந்த ஆவணத்தின்

நகலையும் தாக்கல் செய்ய வேண்டும். இந்த நகல் தெளிவான கையெழுத்துடனோ, தட்டச்சு செய்தோ, சரியாக தயாரிக்கப்பட வேண்டும் என்பதால் 1971 ஆம் ஆண்டு 'தமிழ் நாடு நகல் எழுத்தர்கள் உரிமை விதிகள்' 2-4-1971-ல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டன. ஆவணங்களுக்கு நகல் எழுதவும், தட்டச்சு நகல் எடுக்கவும், ஆவண நகல் எழுத்தர் மற்றும் தட்டச்சர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது 31-12-1998-ஆம் தேதி வரை 20,298 நபர்கள் நகல் எழுத்தர் உரிமங்களும், 4,547 நபர்கள் நகல் தட்டச்சர் உரமங்களும் பெற்றுள்ளனர்.

**(2) ஆவண எழுத்தர் உரிமம்**

ஆவணங்கள் எழுதுபவர் உரிமம் பெற்றிருக்க வேண்டும் என்பதால், 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகள், 14-4-1982இல் அமல்படுத்தப்பட்டன. இந்த விதிகளின்படி முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டம், அவற்றின்கீழ் வகுக்கப்பட்ட விதிகள் குறித்த அரசு நடத்தும் அறிவுத்திறன் தேர்வில் தேர்ச்சி பெற்றவர் மட்டுமே உரிமம் பெறத்தகுதியுடைவர் ஆவர். மாநில அளவிலான உரிமம், பதிவு மாவட்ட அளவிலான உரிமம், சார்பதிவு அளவிலான உரிமம் என மூன்றுவகை உரிமங்கள் வழங்கப்படுகின்றன. தற்போது 22,745 நபர்கள் ஆவணம் எழுத உரிமம் பெற்றுள்ளனர்.

31-12-1998 அன்று உள்ளவாறு ஒவ்வொரு இனத்தின்கீழ், ஆவண நகல் எழுத்தர் மற்றும் ஆவண எழுத்தர் உரிமம் பெற்றவர்களின் விவரம் பின்வருமாறு:--

| உரிமத்தின் தன்மை | ஆவண எழுத்தர் உரிமம் | நகல் எழுத்தர் உரிமம் | நகல் தட்டச்சர் உரிமம் |
|---|---|---|---|
| 1. மாநில உரிமம் ('ஏ' உரிமம்) | 6,823 | 6,534 | 2,736 |
| 2. மாவட்ட உரிமம் ('பி' உரிமம்) | 8,309 | 6,612 | 1,012 |
| 3. உப மாவட்ட உரிமம் ('சி' உரிமம்) | 7,613 | 7,152 | 799 |
| மொத்தம் | 22,745 | 20,298 | 4,547 |



ஆவண எழுத்தர் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களின் மனுவின் பேரில் அரசு உரிமங்கள் வழங்குகிறது. இதுவரை பல்வேறு வகை ஆவணங்கள் எழுத, கட்டணங்கள் நிர்ணயிக்கப்படாமல் இருந்தன. இதனால் ஆவணம் எழுத அதிகமான கட்டணம் வசூலிக்கப்படுவதாக எழும் புகார்களுக்குத் தீர்வு காணும் வகையில், பல்வேறு வகை ஆவணங்கள் எழுத கட்டணம் வரையறை செய்யப்பட்டுள்ளது. ஆவண எழுத்தர், நகல் எழுத்தர், உரிமங்கள் வழங்குவதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான கட்டண விகிதங்களை மாற்றியமைக்கவும், உரிமங்களை இரண்டு ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குச் செல்லத்தக்கவாறு வழங்கிடவும் அரசு ஆணையிட்டுள்ளது.

மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தில் பட்டயப்படிப்பு சான்று பெற்றவர்களுக்கு ஆவணம் எழுத உரிமம் வழங்குவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

**06. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975**

1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பாகவே சங்கப் பதிவுச் சட்டம் 1860 (மத்திய சட்டம் 21/1860) தமிழ்நாட்டில் அமலில் இருந்து வந்தது. இந்தச் சட்டத்தில் உறுப்பினர் பட்டியல்கள் பராமரிக்கவும், துணை விதித்திருத்தங்கள் குறித்தும், இதுபோன்ற முக்கியமான வேறு பல இனங்கள் குறித்தும் சட்ட விதிமுறைகள் ஏதும் இல்லாததால், அந்தச் சட்டத்தை அமல்படுத்துவதில் குறைபாடுகள் தென்பட்டன. இந்தக் குறைகளைப் போக்கும் விதமாக, 'தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975' என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. கலை, இலக்கியம், அறிவியல், சமயம் மற்றும் தமிழக அரசால் சட்டம் இயற்றத்தக்க வேறெந்தப் பொருள் பற்றியும் சங்கம் அமைத்து பதிவு செய்துகொள்ள இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

பதிவுத் துறைத் தலைவர் மற்றும் அனைத்து நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் இந்தச் சட்டத்தின்கீழ் 'சங்கங்களின் பதிவாளர்கள்' ஆவர். பதிவுத் துறைத் தலைவருக்கு இச்சட்டத்தின் கீழான பணிகளைக் கண்காணிக்கும் அதிகாரமும், மேல்முறையீடுகளைத் தீர்வு செய்யும் அதிகாரமும் உள்ளன.

இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முக்கியமான அதிகாரங்கள், அதாவது சங்கம் பதிவு செய்யப்படுதல், ஆவணங்கள் கோர்வைக்கு ஏற்கப்படுதல், ஆய்வு செய்யப்படுதல், கலைப்பு நடவடிக்கை

[1999 ஏப்ரல் 28

ஏடுக்கப்படுதல் போன்ற அதிகாரங்கள் மாவட்டப் பதிவாளருக்கு உள்ளன. இச்சட்டப்பிரிவுகள் மற்றும் விதிகளிலிருந்து முழுமையாகவோ, அல்லது குறிப்பிட்ட சில பிரிவுகளுக்கோ விலக்களிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது.

தற்போது, காலதாமதமாக சங்கத்தின் ஆவணங்களைக் கோர்வைக்குத் தாக்கல் செய்வதை அறிவிக்கையின் மூலம் விலக்களிப்பதைத் தவிர்த்து, இத்தகைய காலதாமதங்களை மாவட்டப் பதிவாளர்களே ஏற்று ஆணையிட 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்க பதிவுச்சட்டப்பிரிவு 49-க்கு திருத்தம் செய்திட பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் 31-12-1998 முடிய 92,126 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

**07. சீட்டு நிதிகள் சட்டம், 1982 (மைய சட்டம் 40/1982)**

(1) 1982 ஆம் ஆண்டு மைய சீட்டு நிதிச் சட்டம் மற்றும் அதன்கீழ் வரையறுக்கப்பட்ட தமிழ்நாடு சீட்டு நிதி விதிகள் 13-4-1984 அன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பதிவுத் துறைத் தலைவர், சீட்டுப்பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில் ஒரு கூடுதல் சீட்டுப்பதிவாளரும், மாவட்டப் பதிவாளர் நிலையில் ஒரு நேர்முக உதவியாளரும் (சீட்டுகள்) சீட்டு நிதி பணிகளில் பதிவுத் துறைத் தலைவருக்கு உதவி புரிகின்றனர்.

துணைப் பதிவுத் துறைத் தலைவர், மாவட்டப் பதிவாளர், சார்பதிவாளர், சீட்டு நிதிச்சட்டத்தின்கீழ் முறையே இணைச் சீட்டுப் பதிவாளர், துணைச் சீட்டுப் பதிவாளர் மற்றும் உதவிச் சீட்டுப் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பதிவு மாவட்டத்திற்கும் ஒரு சீட்டு ஆய்வாளர் வீதம் 47 சீட்டு ஆய்வாளர்கள் பணிபுரிகிறார்கள். சீட்டுகள் தொடங்க அல்லது நடத்தத் தேவையான முன் அனுமதியை துணைச் சீட்டுப் பதிவாளர்கள் வழங்குகின்றனர். சீட்டுத்தொழில் சம்பந்தப்பட்ட தகராறுகளைத் தீர்த்திட மாவட்டப் பதிவாளர்கள் நடுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். கோயம்புத்தூர் மற்றும் சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு) மற்றும் மத்திய சென்னையில், சீட்டுநிதிச் சட்டத்தின் கீழான வழக்குகள் அதிகமிருப்பதால் அரசு இவ்விடங்களில் மாவட்டப் பதிவாளர் நிலையில் நடுவர்களை நியமித்துள்ளது. 31-12-1998 முடிய நடுவர் வழக்குகள் 2,437 முடிக்கப்பட்டுள்ளன.



1999 ஏப்ரல் 28]

31-12-1998 அன்று தமிழ்நாட்டில் 3,539 நிறுவனங்கள் சீட்டுத்தொழில் புரிகின்றன. இவைகளினால் நடத்தப்பெறும் சீட்டுக்களின் எண்ணிக்கை 29,625 ஆகும். சீட்டு நிறுவனங்களால் செலுத்தப்பட்டு பதிவாளர்கள் வைத்திருக்கும் வைப்பீட்டுத்தொகை 31-12-1998 முடிய ரூ.322 கோடி ஆகும்.

**(2) சீட்டு விழிப்புக்குழு**

பதிவு செய்யாமல் சீட்டு நடத்துதல் மற்றும் அதன் தொடர்பான முறைகேடுகளைக் கண்டுபிடிக்கக் கூடுதல் சீட்டுப் பதிவாளர் தலைமையில் ஒரு சீட்டு விழிப்புக்குழு செயல்படுகிறது. 31-12-1998 வரை 42 பதிவுறா சீட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளின் மதிப்பு ரூ.9.37 லட்சம். இவைகள் பதிவுறாமையால் அரசுக்கு ரூ.15,046/- வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து பொது மக்களிடமிருந்து அவ்வப்போது பெறப்படும் புகார்கள்மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

**08. தமிழ்நாடு சீட்டுக் கழகம்**

அரசின் கொள்கை முடிவின்படி, தமிழ்நாடு சீட்டுக் கழகம் கலைக்கப்பட ஆணையிடப்பட்டது. கழகத்திற்கு வரவேண்டிய ரூ.2.79 கோடியில் 31-12-1998 வரை ரூ.2.58 கோடி வசூலிக்கப்பட்டுவிட்டது. இதில் பரிசு பெற்ற சீட்டுத்தொகையும் அடங்கும். மீதமுள்ள ரூ.21.62 லட்சத்தை வசூலிக்க சீட்டு நடுவர் நீதிமன்றத்தில் 528 வழக்குகள் கோர்வை செய்யப்பட்டு சீட்டு நடுவர்களிடம் நிலுவையில் உள்ளன. 110 வழக்குகள் சென்னை நகர உரிமையியல் நீதிமன்றத்தில் நிறைவேற்றலுக்காக நிலுவையில் இருந்து வருகின்றன.

**09. இந்திய கூட்டு பங்காண்மைச் சட்டம், 1932**

இந்தியக் கூட்டு வணிகச் சட்டத்தில், மாவட்டப் பதிவாளர்கள் அனைவரும் பதிவாளர்கள் ஆவர். இச்சட்டத்தின்கீழ், படிவம் 1-ல் அறிக்கை தாக்கல் செய்து கூட்டு வணிக நிறுவனம் பதிவு செய்யப்பட வேண்டும். நிறுவனத்தில் நிலவும் எவ்வித மாற்றமும் பதிவாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இந்தச் சட்டத்தின்கீழ் பதியப்படும் நிறுவனங்கள், பதிவு செய்த பிறகு, தொடர்ந்து செயல்பட்டு வருவது குறித்து எவ்வித விவரங்களையும் அரசுக்குத் தெரிவிப்பதில்லை. இந்நிலையினைத் தவிர்க்கும் பொருட்டும், எத்தனை கூட்டு நிறுவனங்கள்

செயல்பாட்டு வருகின்றன என அறியவும், அவைகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் சரிதானா என்பதைக் கண்காணிக்கவும், உதவி புரியும் வகையில், 1932 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டு வணிக நிறுவனம் (கூட்டு வணிக நிறுவனங்கள் பதிவு) விதிகளுக்குத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 31-12-1998 முடிய தமிழகத்தில் 3,58,372 பதிவு செய்யப்பட்ட கூட்டு வணிக நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.





# இணைப்பு-II

[59 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## கொள்கை விளக்கக் குறிப்பு, 1999-2000

## ஊரக மற்றும் சிறு தொழில்கள்

**முன்னுரை**

நாட்டில், தொழில் துறை வகையில் வளர்ச்சியடைந்த மாநிலங்களிடையே தமிழ்நாடு, பெருமை கொள்ளத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. குறிப்பாக, சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில்களின் வளர்ச்சியில் மிக உன்னத இடத்தை வகிக்கின்றது. இத்துறை மாநிலத்தின் மொத்த வருவாயிலும், வேலை வாய்ப்பு வளத்திலும், கணிசமான பங்கினை வகிக்கிறது.

பொருளாதாரத் துறையில் தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் கொள்கைகளுக்கு இட்டுச் செல்வதும், வலுசேர்ப்பதும், சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில்கள் துறையில் மிகவும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திட இயலும்.

இத்துறையின் நலனைப் பாதுகாப்பதில் தான் ஆற்ற வேண்டிய பங்கு பணி என்ன என்பதை மாநில அரசு மிகவும் நன்கு அறிந்துள்ளது. அரசின் தொழில் கொள்கை, தொழில் வளர்ச்சிக்கும் குறிப்பாக தொழில் துறையில் பின் தங்கிய ஊரகப் பகுதிகளில் கூடுதல் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் பெரும் பங்கு வகிக்கிற சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில்களின் முக்கியத்துவத்தையும் பயனையும் வலியுறுத்தியுள்ளது. பெரிய மற்றும் சிறிய தொழில்களின் வளர்ச்சி குறித்து தமிழ்நாடு எப்போதும் வலியுறுத்தி உள்ளது. இது, துறைவாரியான நிரந்தரத் தன்மையில் உள்ள வேறுபாட்டை குறைப்பதையும், பொருளாதார மேம்பாட்டின் வட்டார அளவிலான வளர்ச்சியையும் உறுதி செய்வதற்குரிய முறையாகும்.

இதில் முதல் நடவடிக்கையாக, சிறிய, மிகச் சிறிய தொழில் துறைக்கு பொறுப்பாக உள்ள மாநில அரசின் அலுவலர்கள் அனைவருக்கும் நினைவுகூர் பயிற்சி அளிக்கப்படுகிறது. அப்போதுதான்

மிகப் பழமையான சட்டப்படியான ஒழுங்குமுறை அலுவல்கள்மீது கவனம் செலுத்துவதைவிட தொழில் துறை ஆலோசகர்களாகவும் வளர்ச்சி அலுவலர்களாகவும் தங்கள் பணியை அவர்கள் ஆற்றுவர். சிறிய, மிகச் சிறிய தொழில் முனைவோர்களுடன் மாவட்ட அளவில் தங்கள் பணியை ஆற்றுவதற்கு அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

சிறு தொழில் துறை தற்போது எதிர் நோக்கும் சில வித்தியாசமான பிரச்சினைகள் அதாவது, நலிந்த தொழில் பிரிவுகளைத் தக்க நேரத்தில் கண்டறிந்து நிதியுதவியளித்தல், தொழில் நுட்பங்களைப் பின்பற்றுதல், அரசுத் துறைகள் பின்பற்றுகிற சில சட்டப்படியான நடைமுறைகளைச் செயற்படுத்தும்போது எதிர்கொள்ளும் இடர்பாடுகள், குறிப்பாக விற்பனை வரித் துறை, மின்வாரியம், தொழிற்சாலைகள் துறை, தொழிலாளர் நலத் துறை முதலியவை எதிர்கொள்ளும் இடர்பாடுகள், கள நிலையில் உள்ள அரசு அலுவலர்கள் அளிக்கும் தொல்லைகள் போன்ற சில பிரச்சினைகளைக் களைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தக்க நேரத்தில் கடன் வசதியளித்தலுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறுதொழில்கள் குறித்த கொள்கை எதுவும் தொழில் முனைவோர் வளர்ச்சிக்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய அரசின் அறிவிப்பின்றி நிறைவுறாது. பொருளாதார மேம்பாடான தொழில் வளர்ச்சி, சமுதாய மற்றும் பண்பாட்டு அமைப்பில் மிகச் சீரிய முறையில் செயல்படுகிறது தொழில் மேம்பாட்டில் பண்பாடு மற்றும் ஆளுமைக்கூறுகளின் தாக்கம் உள்ளது. தொழில் மேம்பாட்டுக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள், திறமை வாய்ந்தவர்களைத் தெரிந்தெடுத்து பயனுள்ள பயிற்சியளிக்க வேண்டும் என்று கருதுகின்றன. தமிழ்நாட்டின் தயாரிப்பு, வணிகம் மற்றும் சேவைத் துறை போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சியளித்துள்ளது.

சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில்களைத் தொழில் நுட்ப வகையில் உயர்த்தி, தொழில் நுட்ப மாற்றம் செய்வதைக் கவனிப்பதற்கென்று தொழில் நுட்ப அமைப்பு ஒன்று இப்போது தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில்களையும், ஊரகத் தொழில் பிரிவையும் ஆதரித்து மேம்படுத்துவதில் தங்களை



அர்ப்பணித்துக் கொண்ட அரசுத் துறை நிறுவனங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

தொழில் - வணிக இயக்ககம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி)

தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ)

இந்நிறுவனங்களின் பணிகள் கீழே சுருக்கமாக விவாதிக்கப் பட்டுள்ளன..

## 2. தொழில் வணிக இயக்ககம்

2.1. தொழில் வணிக இயக்ககம், அரசின் தொடர்பு முகவர் அமைப்பாகும். இது, சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில்களுக்குரிய பல்வேறு திட்டங்களைத் திட்டமிட்டு செயற்படுத்துவதற்குப் பொறுப்பு வகிக்கிறது. கடந்த காலத்தில், இயக்ககத்தின் பங்கு மிகவும் சட்டப்படியானதாக அமைந்திருந்தது உரிமம் வழங்குதல், பற்றாக்குறை ஏற்படும்போது மூலப் பொருட்கள் வழங்குதல் போன்ற பணிகளையும், முறைப்படுத்துதல் போன்ற ஒழுங்குமுறைப் பணிகளையும் மேற்கொண்டது. தற்போது, வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. பெரும்பான்மையான இயக்கக அதிகாரங்கள், மாவட்டத் தொழில் மையங்களின் பொது மேலாளர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு தொழிலுக்குத் தேவையான பல்வேறு அரசு அனுமதிகளுக்கான காலவரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிறு தொழில் பிரிவுகளுக்கு உறுதுணையான பணிகளுக்கு வகை செய்ய மாவட்டத் தொழில் மையங்கள் மாற்றயமைக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திலும், வழிகாட்டும் உறுதுணை ஏற்பாடு தனியே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இயக்ககம் மேற்கொண்ட பல்வேறு பணிகள் குறித்த விவரம் வருமாறு:

1) சிறு தொழில், மிகவும் சிறிய தொழில் மற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வது மற்றும்

மேம்படுத்துவது.

2) மாநில மூலதன உதவி, மின்னாக்கி (ஜெனரேட்டர்) உதவித் தொகையில் கட்டண உதவித் தொகை, வட்டியில்லா விற்பனை வரிதள்ளி வைப்பு / தள்ளுபடி, நலிவுற்ற தொழில் பிரிவுகளுக்குத் தொடக்க உதவித் தொகை போன்ற பல்வேறு உதவித் தொகைகள் மற்றும் ஊக்க உதவித் தொகைகளை ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல்.

3) இரசாயனம், உலோகம், உலோகப் பொருட்கள், மின்சாதனம் மின்னணுப் பொருட்கள் போன்ற பல்வேறு பொருட்களுக்கும் பரிசோதனை வசதிகளை அளித்தல்.

4) பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் படித்து வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

5) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களைக் குறிப்பாக மகளிருக்கான சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

6) கருத்தரங்குகள் மற்றும் தகவல் கூட்டங்கள் நடத்துவதன் மூலம் அரசின் பல்வேறு கொள்கைகள் திட்டங்கள் ஆகியவற்றை மக்களிடையே பரப்பி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்.

7) தொழில் முனைவோருக்கு உறுதுணைப் பணிகளுக்கு வகை செய்தல்.

8) மின்சார மற்றும் மின்னணுத் தொழில்களுக்கு சிறப்புப் பயன்தரும் தொழிற்பேட்டைகளை பராமரித்தல்.

9) தகவல் வங்கி, பல்வேறு மாவட்டத் தொழில் மையங்களுடன் இணைக்கப்பட்ட தகவல் மையம் மற்றும் தொழில்நுட்பத் தகவல் பிரிவுகள் மூலமாகத் தொழில் முனைவோருக்கு வழிகாட்டுதல்.

10) தொழில் மேம்பாட்டு வள வாய்ப்புள்ள புதிய பகுதிகளைக் கண்டறிதல், தொழில் முனைவோருக்கு, தொழில் பிரபலமடைவதற்கும், வளர்ச்சியுறுவதற்குமான வசதிகளுக்கு வகை செய்தல்.

11) தொழில்நுட்பப் பொருளாதார கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.



12) மாதிரி மற்றும் அடங்கல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

13) குடிசைத் தொழில் மற்றும் கைத்திறத் தொழில்களை மேம்படுத்துதல்.

14) இலேசான ரக பொறியியல் தொழில்கள், கருவி மற்றும் அச்சு வடிவமைப்பு ஆகிய தொழில்களில் பயிற்சி வசதிகள் அளித்தல்.

15) நலிந்த தொழில் பிரிவுகளைக் கண்டறிந்து அறிவித்து, நிதியுதவி செய்தல்.

16) மூலதனப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் கிடைத்தற்கரிய மூலப் பொருட்களை இறக்குமதி செய்ய உதவி செய்தல்.

17) வீட்டுப் பயனுக்கான மின்சாதனங்களுக்குரிய தரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.

18) ஏற்றுமதியை மேம்படுத்துதல்.

19) சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில் பிரிவுகளுக்காக அரசு அறிவித்த சிறப்பு நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுதல்.

**2.2. மாவட்டத் தொழில் மையங்கள்**

தமிழ்நாட்டில் 28 மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் செயல்படுகின்றன. சென்னை மாவட்டத்தில் தொழில் முனைவோர்கள் சொந்தமாக சிறு தொழில்களைத் தொடங்குவதற்கு அனைத்து உதவிகளையும் அளிப்பதற்காக வட்டார அலுவலகம் ஒன்று செயல்படுகிறது. மாவட்டத் தொழில் மையங்கள், மூலதன மானியம், நிதியுதவி, மூலப்பொருள் ஒதுக்கீடு, மின்சார மானியம் போன்ற பல்வேறு ஊக்க மற்றும் உதவித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றன. மாவட்டத் தொழில் மையங்கள் உள்ளூர் தொழில் நிறுவனங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்காக பல்வேறு வழிகளிலிருந்து தகவல்களை அளிப்பதற்கான ஒரு பாலமாகச் செயல்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

தொழில் முனைவோர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்கும் பொருட்டு தொழில்நுட்ப இடு பொருட்கள் அனைத்தையும் பெறுவதில்

[1999 ஏப்ரல் 28

அவர்களுக்கு உதவி செய்ய அனைத்து மாவட்டத் தொழில் மையங்களிலும், சென்னை வட்டார அலுவலகத்திலும் வழிகாட்டும் சேவைப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டும் சேவைப் பிரிவு தொழில் முனைவோரின் தகுதியின்படி, தேவையான உதவித்தொகைகளைப் பெறுவதில் அவர்களுக்கு உதவி புரியும். இத்திட்டத்தின்கீழ், 6476 இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாண்டு 28-2-1999 வரையிலான கால அளவிற்கு 1956 இனங்களுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது.

நடைமுறைச் சிக்கல்களைக் குறைத்து எளிய முறையில் சிறு தொழில் மையங்கள் அமைப்பதற்கு வழி வகுக்கும்பொருட்டு ஒரே இடத்தில் அனுமதி வழங்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகள், நகர அமைப்புத் திட்டம், மாசு கட்டுப்பாட்டு வாரியம், பொதுச் சுகாதாரம், தொழிற்சாலைத் துறை மற்றும் ஏனைய துறைகளிடமிருந்து அனுமதிகள் பெறுவதற்கும், மின் இணைப்புப் பெறுவதற்கும் இதன் மூலம் தொழில் முனைவோர்களுக்கு உதவியளிக்கப்படுகிறது.

### அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல்

அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் எளிதானவராகவும் ஒருங்கிணைப்பாளராகவும் முறைப்படுத்துபவராகவும் தங்கள் கடமையை ஆற்றுவதற்குரிய திட்டம் ஒன்று 1998-99 ஆம் ஆண்டில் ரூ.19.32 இலட்சம் செலவில் மிகச் சிறந்த புகழ் பெற்ற தேசிய பயிற்சி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்டது. இது, வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 2.3 சிறு தொழில் பிரிவுகளைப் பதிவு செய்தல்

சிறு தொழில் பிரிவுகளின் வளர்ச்சிகளுக்குத் தடையாகவுள்ள இடர்பாடுகள் அனைத்தையும் அகற்றும் நோக்கத்துடனும், நடைமுறைகள் மற்றும் விதிமுறைகள், சிறு தொழில் மற்றும் ஊரகத் தொழில்களின் நலன்களைப் பாதிக்காதிருப்பதற்கு உதவி செய்யவும், தமிழ்நாடு அரசை அணுகுவதே, சிறு தொழில் பிரிவுகள் குறித்த கொள்கைக் குறிப்பின் முதன்மை நோக்கம் ஆகும். இச்செயல் நோக்கத்திற்காக, சிறு தொழில் பிரிவுகளைப் பதிவு செய்வதற்கான படிவங்களும் எளிமையாக்கப்பட்டுள்ளன. பதிவு செய்யும் நடைமுறை எளிமையாக்கப்பட்டுள்ளது. சில தேவையான குறைந்தபட்ச விவரங்கள்



1999 ஏப்ரல் 28]

அளிக்கப்படுவதன்பேரில், தற்காலிகமாக உடனுக்குடன் பதிவு செய்து கொள்ள இயலும். நிரந்தரமான பதிவுச் சான்றிதழ் வழங்குவதற்காக இதுவரையில் வலியுறுத்தப்பட்டு வந்த நீண்ட நடைமுறையும் சீரமைக்கப்பட்டுள்ளது.

தளவாடம் மற்றும் இயந்திரங்களில் செய்யப்படும் மொத்த முதலீடு ரூ.300.00 இலட்சத்திற்கு மேற்படாத தொழிற்சாலைகள் சிறு தொழில் பிரிவுகளில் அடங்கும்.

துணைத் தொழில் பிரிவுகளைப் பொறுத்தவரையில், அதாவது, இயந்திர பாகங்கள், துணைப் பாகங்கள் முதலியவற்றை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள அல்லது தங்களது உற்பத்தியில் 50 சதவீதத்திற்கும் குறையாத அளவுக்கு சேவைகளில் ஈடுபட்டுள்ள அல்லது ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு சேவைகள் அளிக்கும் துணைத் தொழில் பிரிவுகளைப் பொறுத்தவரையில் தளவாடம், இயந்திரங்களில் செய்யப்படும் முதலீட்டின் அளவும் ரூ.300/- இலட்சம் இருக்க வேண்டும்.

திருத்தியமைக்கப்பட்ட கொள்கை முடிவின்படி தளவாடம், இயந்திரங்களில் ரூ.25.00 இலட்சம் வரையில் (அசல் கொள்முதல் விலை) முதலீடுகளைக் கொண்டுள்ள சிறு தொழில் பிரிவுகள், மிகச் சிறிய தொழில் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1998-99 ஆம் ஆண்டிற்கு நிரந்தரமான பதிவுகள் குறித்த இலக்கு 30,000 தொழிற் பிரிவுகள் ஆகும். தற்காலிக பதிவுகள் குறித்த இலக்கு 50,000 தொழிற் பிரிவுகள் ஆகும். 28-2-1999 அன்றுள்ளபடி 25,526 நிரந்தரமான சிறு தொழிற் பிரிவுகள் சான்றிதழ்களும் 40,164 தற்காலிக சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

### இருபது அம்சத் திட்டம்

இந்திய அரசின் இருபது அம்சத் திட்டத்தின் 1 (ஜே) (ம) 11(ஏ) அம்சங்கள், தொழில் வணிக இயக்ககத்தால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அம்சம் 1(ஜே) படித்து வேலையில்லாத நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க புதிதாக சிறு தொழில் பிரிவுகள் ஏற்படுத்துவது பற்றி விவரிக்கிறது.

அம்சம் 11(ஏ) ஆதிதிராவிடர் தொழில் முனைவோர்களால் நிறுவப்பட்டுள்ள சிறு தொழில் பிரிவுகளின் மொத்த எண்ணிக்கை பற்றி விவரிக்கிறது.

இவ்விரு திட்டங்களும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

*தொடக்கநிலைப் புள்ளிவிவரப் பிரிவு*

இத்துறையின் தொடக்கநிலைப் புள்ளிவிவரப் பிரிவு பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் பிரிவுகளிடமிருந்து கணக்கெடுப்பின் மூலம் புள்ளி விவரங்களை சேகரிப்பதிலும் மாதிரி அளவைப் பணியின் மூலம் கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களை நாளது வரை பராமரிக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது.

சிறு தொழில் பிரிவுகள் குறித்த மூன்றாவது அனைத்திந்தியப் புள்ளி விவரங்கள் கணக்கெடுப்பு வசதியை மேம்படுத்த 1992, 1993-94, 1994-95 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் பிரிவுகள் பற்றிய பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் தமிழ்நாட்டில் 28-2-1999 வரையில் 3,19,926 சிறு மற்றும் மிகச் சிறிய தொழில் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**2.4 சிறு தொழில் பிரிவுகளுக்குக் கொள்முதல் முன்னுரிமை**

முன்பு, 1997ஆம் ஆண்டில் சிறு தொழில் பிரிவுகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்கென்று ஒதுக்கப்பட்ட 474 இனங்களைப் பொறுத்தவரையில், அரசு ஆணைகள் பிறப்பித்தது. இதன்படி தேவைகளில் 50 சதவீதம், மூடி முத்திரையிடப்படாத பொது ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் கொள்முதல் செய்யப்படவேண்டும். எஞ்சியவை, மூடி முத்திரையிடப்படாத பொது ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் குறைந்த விலைகளில் இம்மாநிலத்திற்குள் உள்ள சிறு தொழில் பிரிவுகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படவேண்டும். அதன் பின்னர், மத்திய அரசு சிறு தொழில் பிரிவுகளிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட 350 இனங்கள் அடங்கிய திருத்தப் பட்டியல் ஒன்றை வெளியிட்டது.

சிறு தொழில் பிரிவுகள் தற்போது எதிர்கொண்டு வருகிற கடினமான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, தனது முந்தைய ஆணைகளை மறு ஆய்வு செய்து 350 இனங்கள் குறித்த திருத்தப் பட்டியலைப் பொறுத்தவரையில் இம்மாநிலத்தில் 1997 பிப்ரவரிக்கு முன்பிருந்த சிறு தொழில் பிரிவுகளுக்கு, கொள்முதல் முன்னுரிமையை





மீண்டும் கொடுத்தது. (காண்க: நிதித்துறையின் (BPE) 4-5-1998-ஆம் நாளிட்ட 195 ஆம் எண் அரசாணை) இம்மாநிலம் முழுவதிலும் உள்ள சிறு தொழில் பிரிவுகள், இந்த நெருக்கடியான நேரத்தில் ஓர் ஆதரவு நடவடிக்கையாகக் கருதி, இக்கொள்கை முடிவை வரவேற்றுள்ளன.

**2.5 ஊக்கத் தொகைகளும் உதவித் தொகைகளும்**

**(i) உதவித் தொகைகள் மற்றும் ஊக்கத் தொகைகளின் அளவு**

மிகச் சிறிய தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்களை ஊக்குவிக்கும்பொருட்டு, இம்மாநிலத்தில் உள்ள 287 வட்டாரங்கள் தொழிலில் பின்தங்கிய மிகவும் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. அப்பகுதிகளில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகள், மாநில மூலதன உதவித்தொகை குறைந்தழுத்த மின் கட்டணச் சலுகை உதவித்தொகை, வட்டியில்லா விற்பனை வரி தள்ளி வைப்பு மற்றும் ஏனைய. சலுகைகள் பெறத் தகுதியுடையவையாகும் இந்த ஊக்கத் தொகைகளும் சலுகைகளும், அரசு/அரசு நிறுவனங்களின் ஆதரவு பெற்ற தொழிற்பேட்டைகளுக்கும் தொழில் வளாகங்களுக்கும் கிடைக்கின்றன.

பல்வேறு உதவித் தொகைகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வருமாறு:

(அ) பின்தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகள் உயரளவு ரூ. 15.00 இலட்சம் என்பதற்கு உட்பட்டு, 15 சதவீத மாநில மூலதன முதலீட்டு உதவித் தொகை பெறத் தகுதியுடையவையாகும்.

(ஆ) மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகள் உயரளவு ரூ.20.00 இலட்சம் என்பதற்குட்பட்டு 20 சதவீத மூலதன முதலீட்டு உதவித் தொகை பெறத் தகுதியுடையவையாகும்.

(இ) முக்கியத் தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு அதாவது மின்னணுத் தொழில்கள், தோல் தொழில்கள் ஆகியவற்றிற்கு உயரளவாக ரூ.20.00 இலட்சம் என்பதற்குட்பட்டு நிலையான சொத்துக்கள்மீது 20 சதவீத சிறப்பு முதலீட்டு உதவித்தொகை கிடைக்கிறது.

(ஈ) தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் பின்வரும் தயாரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு உயரளவாக

[1999 ஏப்ரல் 28

ரூ.15.00 இலட்சம் என்பதற்குட்பட்டு நிலையான சொத்துக்கள்மீது 20 சதவீத சிறப்பு மூலதன முதலீட்டு உதவித் தொகையும் கிடைக்கிறது.

(1) ஆட்டோ துணைப் பாகங்கள்

(2) மருந்து மற்றும் மருந்துப் பொருட்கள்

(3) உணவுப் பொருள் பதப்படுத்தும் தொழில்கள்

(4) சூரிய எரிசக்தி சாதனங்கள்

(5) ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள் மட்டும்

(6) சணல் பதப்படுத்தும் தொழில்கள் (தெரிவு செய்யப்பட்ட 6 வட்டங்களில் மட்டும்)

(7) மாசு கட்டுப்பாட்டுச் சாதனங்கள்

(8) விளையாட்டுப் பொருள்கள் மற்றும் உதிரி பாகங்கள்

(9) அலுமினியம் போன்ற செலவுச் சிக்கனமான கட்டடப் பொருட்கள்

(உ) பின்தங்கிய மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் 30 சதவீதத்திற்கும் மேற்பட்ட பெண் பணியாளர்களைக் கொண்டு இயங்கும் சிறு தொழில் பிரிவுகளுக்கு உயரளவாக ரூ.5.00 இலட்சம் என்பதற்குட்பட்டு 5 சதவீத கூடுதல் மூலதன முதலீட்டு உதவித் தொகை கிடைக்கிறது.

(ஊ) கழிவுகளை சுத்திகரிக்கும் தளவாடங்களை அமைத்துள்ள சிறு தொழில் பிரிவுகள், உயரளவாக ரூ.2.00 இலட்சம் என்பதற்குட்பட்டு, தளவாடங்களின் முதலீட்டின்மீது 10 சதவீத உதவித் தொகை பெறத் தகுதியுடையவை ஆகும்.

(எ) சிறு தொழில் பிரிவுகள், உயரளவாக ரூ.5.00 இலட்சத்துடன் சுய மின் உற்பத்தி சாதனத்தின் விலையில் 15 சதவீதம், சுய மின் உற்பத்தி சாதன உதவித் தொகை பெறத் தகுதியுடையவையாகும்.

(ஏ) சிறு தொழில் பிரிவுகளுக்கு, அவற்றின் அமைவிடங்களுக்கேற்ப, குறைந்தழுத்த மின் இணைப்பிகளுக்கு பயன்படுத்திய மின் கட்டணத்தில் முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 40%, 30%, 20%, என்ற அளவில் மின் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது.

(ஐ) பின்தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு, உருவாக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களின்



1999 ஏப்ரல் 28]

மதிப்பில் 100 சதவீத விற்பனை வரியை ஒன்பது ஆண்டுகளுக்கும், மிகவும் பின்தங்கிய பகுதிகளில் அமைந்துள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு, 5 ஆண்டுகளுக்கு தள்ளுபடி அல்லது 9 ஆண்டுகளுக்குத் தள்ளிவைப்பும், ஏனைய பகுதிகளில் அமைந்துள்ளவற்றிற்கு நிலையான சொத்துக்களின் மதிப்பில் 60 சதவீதமும் வட்டியில்லா விற்பனை வரித்தள்ளுபடி/தள்ளி வைப்பு உதவி அளிக்கப்படுகிறது.

அரசு நிதிகளை விடுவிப்பதன்பேரில் இந்த உதவித் தொகைத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. வெவ்வேறு உதவித் தொகைக் கணக்குத் தலைப்புகளின்கீழ் எய்திய சாதனைகள் குறித்து, பின்வரும் அட்டவணை தெளிவாகக் காட்டுகிறது.

உதவித்தொகை குறித்த வெவ்வேறு கணக்குத் தலைப்புகளின்கீழ் ஏற்பட்ட பணி முன்னேற்றம்.

**(28-2-1999 அன்றுள்ளபடி.)**

| திட்டத்தின் பெயர். | ஒதுக்கப்பட்ட தொகை. | வழங்கப்பட்ட தொகை. | பயன்பெற்ற சிறு தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| | ரூ. இலட்சத்தில் | | |
| மூலதன முதலீட்டு உதவித் தொகை | 2303.74 | 2249.29 | 902 |
| குறைந்தழுத்த மின் கட்டண உதவித் தொகை | 750.00 | 750.00 | 3153 |
| மின் உற்பத்தி சாதன உதவித் தொகை | 70.00 | 69.59 | 112 |
| வட்டியில்லா விற்பனை வரித் தள்ளி வைப்பு | 1058.10க்கு தகுதிச் சானறிதழ் வழங்கப்பட்டது. | | 55 |

**(ii) உதவித் தொகை விற்பனை வரிச் சலுகைகள்**

மாநில அரசின் திட்டங்களை நிறைவேற்றும் நிறுவனமான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நிதியுதவி பெற்ற தொழில் பிரிவுகளுக்கு

[1999 ஏப்ரல் 28

மாநில மூலதன உதவித் தொகை அனுமதிப்பதுடன் வட்டியில்லா விற்பனை வரித்தள்ளுபடி/ஒத்தி வைப்புத் திட்டத்திற்குத் தகுதிச் சான்றிதழையும் இக்கழகம் வழங்குகிறது.

**2.6 தொழில்களுக்குப் பரிசுகள்**

தமிழ்நாடு அரசு, ஒவ்வோர் ஆண்டும் நன்கு செயல்படுகின்ற சிறு தொழில்கள், நடுத்தர மற்றும் பெருந்தொழில்களுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

அ. சிறு தொழில்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகள்.

சிறப்புத் தகுதிச் சான்றிதழுடன் ரூ. 10,000 ரொக்கப் பரிசும், ரூ. 3,000 மதிப்புள்ள நினைவுப் பரிசும் மாநில அளவிலான பரிசுதாரர்களுக்கு அளிக்கப்படும். மாவட்ட அளவிலான ஒவ்வொரு பரிசுதாரருக்கும், நற்சான்றிதழுடன் கூடிய ரூ3,000 மதிப்புள்ள நினைவுப் பரிசு வழங்கப்படும்.

ஆ. மகளிர் தொழில் முனைவோருக்கு மாநில அளவிலான பரிசு.

நற்சான்றிதழ் மற்றும் ரூ. 3,000 மதிப்புள்ள நினைவுப் பரிசுடன் முதலாவது பரிசுக்கு ரூ. 25,000, இரண்டாவது பரிசுக்கு ரூ. 15,000, மூன்றாவது பரிசுக்கு ரூ. 10,000 ஆகிய ரொக்கப் பரிசும் வழங்கப்படும்.

இ. தரமிக்க பொருள்களுக்குரிய பரிசுகள்.

சிறு தொழில்கள், நடுத்தர மற்றும் பெரிய தொழில்களில் தரமிக்க பொருட்களை வெற்றிகரமாகத் தயாரிக்கும் தொழிலதிபர்களுக்கு நற்சான்றிதழ் மற்றும் ரூ. 3,000 மதிப்புள்ள நினைவுப் பரிசுடன் கூடிய முதல் பரிசுக்கு ரூ.25,000 ரொக்கமும், இரண்டாவது பரிசுக்கு ரூ.15,000 ரொக்கமும், மூன்றாவது பரிசுக்கு ரூ. 10,000 ரொக்கமும் அளிக்கப்படும்.

ஈ. பின்வருகின்ற மூன்று வகைகளின் கீழுள்ள தேர்ந்த தொழில் முனைவோர்களுக்குரிய ஏற்றுமதிப் பரிசு.

(1) 100 சதவீத ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழில்கள்.

(2) புதிய உற்பத்திப் பொருட்களைப் புதிய சந்தைகளில் விற்பனை செய்யும் ஏற்றுமதியில் கணிசமான முன்னேற்றம் காணும் தொழில் பிரிவுகள்.



1999 ஏப்ரல் 28]

(3) முந்தைய இரண்டாண்டுகளுக்குள் ஏற்றுமதியை தொடங்கியிருக்கும் தொழிற் பிரிவுகள்.

சிறு, நடுத்தர மற்றும் பெரிய தொழில்களின்கீழ் தேர்வு செய்யப்பட்ட ஒவ்வோர் ஏற்றுமதியாளருக்கும் நற்சான்றிதழுடன் கூடிய ரூ.4,000 மதிப்புள்ள நினைவுப் பரிசு வழங்கப்படும்.

**2.7 தொடர்பு கொள்ளுதல் மற்றும் தகவலளிப்பதில் உதவி புரிதல்**

1. நூலகங்களுடன் கூடிய தொழில்நுட்பத் தகவல் பிரிவுகள்.

தொழிலதிபர்கள், தொழில் முனைவோர் மற்றும் தொழில்நுட்பப் பணியிலுள்ளவர்களுக்குத் தேவையானவற்றை அளிப்பதற்காக நூலகங்களுடன் கூடிய தொழில்நுட்பத் தகவல் பிரிவுகள், கிண்டி, அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி மற்றும் காட்பாடி ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மிகச் சிறிய தொழில், சிறு தொழில் மற்றும் பெருந்தொழில்களை மேம்படுத்துவதற்கும் மற்றும் வளர்ச்சிக்கும் தேவையான தகவல், பல்வேறு உதவிகள் குறித்த ஆதரவான விளக்கங்களை மேற்சொன்ன நூலகங்களுடன் கூடிய தொழில்நுட்பத் தகவல் பிரிவு அளிக்கிறது.

இந்தத் தொழில்நுட்ப நூலகத்தைப் பயன்படுத்துவோருக்கு உடனடி பார்வைக் குறிப்புகள் மற்றும் விரிவான அளவிற்கான குறிப்பு அளிக்கும் வசதிகள், அறிவியல் புத்தகங்கள், சஞ்சிகைகள், நாளேடுகள் போன்றவை வகைப்படுத்தப்பட்டு, அட்டவணையிடப்பட்டு பெயர் அட்டையிடப்பட்ட வரிசைப்படி பராமரிக்கப்பட்டு வைக்கப்படுவதோடு படிப்பவர்களின் உடனடிப் பார்வைக்கென்று வழங்கப்படுகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட மையங்களில் படிப்பவர்களுக்கு நிழற்பட நகலெடுக்கும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

2. தொழில் தொடர்பு மற்றும் தகவல் உதவி, மின் மற்றும் மின்னணு தகவல் வங்கி.

இத்தகவல் வங்கி, மின்சாரம்/மின்னணுத் தொழில்களைத் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்குத் தேவையான முக்கியமான அடிப்படைத் தகவல்கள் மற்றும் வழிமுறைகளை வழங்குகிறது. இந்த வங்கி தகவல் வசதிக்கென சுமார் 1,400 புத்தகங்கள் மற்றும் 100 இந்திய மற்றும் அயல் நாட்டு சஞ்சிகைகளைக் கொண்டுள்ளது. இந்த மையம் வாங்குவோர் மற்றும் விற்போரைக் கண்டறிவதற்குரிய தகவல்களையும் அளிக்கிறது.

[1999 ஏப்ரல் 28

**3. இரசாயனத் தொழில்களுக்கான தகவல் வங்கி**

இத்தகவல் வங்கி, தமிழ்நாட்டிலுள்ள இரசாயனத் தொழில்கள் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பது, நாளது வரையில் பரிமரிப்பது, புள்ளி விவரங்கள் குறித்து ஆலோசனை வழங்குவது போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது. மேலும் தேர்வு செய்யப்பட்ட இரசாயனம் மற்றும் அது சார்ந்த தொழில்களின் திட்டத் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டு, நாளது வரையில் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. சிறு தொழில் துறையில், இரசாயனம் மற்றும் சார்புத் தொழில்களை அமைப்பதற்கு ஆர்வமாக உள்ள தொழில் முனைவோர்களுக்குத் தேவையான தொழில்நுட்பத் தகவல் வசதிகளையும் அளிக்கிறது.

**4. தொழில் தொடர்புப் பிரிவு**

அரசுத் திட்டங்களை நிறைவேற்றவும், சிறு தொழில் நிலையங்களைப் பதிவு செய்வதற்காக மைய அரசின் நிதி விநியோகம் மற்றும் வழங்கல் விற்பனை தலைமை இயக்குநருடன் தொடர்பு கொண்டு ஒருங்கிணைந்து பணியாற்றவும், இப்பிரிவு தொடங்கப்பட்டது. இப்பிரிவினால், சிறுதொழில் நிலையங்கள் அரசு ஒப்பந்தங்களில் கலந்து கொள்ளும்பொழுது பிணை வைப்புத் தொகை மற்றும் காப்பு வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசுத் துறைகளில் தொடர்ச்சியாக தேவைகளை அறிந்து, அவைபற்றிக் குறித்த காலத்துக்கு ஒரு முறை தகவல்கள் பெறவும் இதன்மூலம் இயலும்.

**5. தொழிலியல் சேவைப் பிரிவு**

மாநிலத்தில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களைப் புதியதாக அமைப்பதற்கு தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு நிலைகளில் உதவிடும்பொருட்டு தொழிலியல் சேவைப் பிரிவினை தொழில் வணிக இயக்ககத்தில் அரசு அமைத்துள்ளது. இது விரைந்த செயல்பாட்டிற்கு வழி வகுக்கிறது.

இத்தொழிலியல் சேவைப் பிரிவு பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களுக்குரிய தொழில் உரிமங்களை வழங்குவதற்காக தொழில் முனைவோர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்கிறது. மேலும் மாநிலத்தில் 100 விழுக்காடு ஏற்றுமதி செய்யும் தொழில் நிலையங்கள் அமைப்பதற்கும் அனுமதி அளிக்கிறது.



1999 ஏப்ரல் 28]

**2.8. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்**

1. படித்து வேலையற்ற ஆடவர்/ மகளிர் மற்றும் ஏனையோர், தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டு ஊக்குவிக்கப்பெறும் வகையில் கிண்டியில் தொழில் முனைவோர் வளர்ச்சி நிலையம் ஒன்றை அரசு அமைத்துள்ளது.

தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஆதார வாய்ப்புத் திறன் கொண்ட 1,500 மகளிர், தொழில் முனைவோராக தொழிலைத் தொடங்க வகை செய்யும் பொருட்டு, பயிற்சி அளிக்கப்படுவதற்காக, சென்னையிலுள்ள தொழில் முனைவோர் வளர்ச்சி மையத்தைத் தயார் நிலையில் வைக்கும் நோக்குடன் அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்காக, அரசு ரூ.25,00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இதுவரையில் 6,900 தொழில் முனைவோருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. இவர்களுள் 3,450 மகளிர் தொழில் முனைவோர் பல்வேறு வகைப்பாடுகளைச் சேர்ந்த தொழில்களைத் தொடங்கியுள்ளனர். பயிற்சியளிக்கப்பட்டவர்களில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் இம்மாநிலத்தில் தொழிலை சொந்தமாகத் தொடங்கியுள்ளார்கள் என்பது இதன் மூலம் தெரிகிறது.

**2. தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்திற்கான சிறப்புப் பயிற்சி**

ஆறு திங்கள் கால அளவிற்கு நடத்தப்படும் தொழில் முனைவோர் வளர்ச்சி சிறப்புத் திட்டம் ஒன்று 1998-99 ஆம் ஆண்டில் சோதனை அடிப்படையில் அரசால் தொடங்கி வைக்கப்பட்டது. பணி அனுபவம் மற்றும் விற்பனை நிலைமைகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல் போன்றவையே இத்திட்டப் பயிற்சியின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்திற்கென்று அரசு ரூ.8.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இப்புதிய திட்டத்தின்கீழ், பயிற்சி பெறுவதற்காக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 200 பயிற்சியாளர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**3. மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்**

மகளிர் தொழில் முனைவோர்கள், குறிப்பாக முதல் தலைமுறை மகளிர் தொழில் முனைவோர்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதில் குறிப்பாக தங்களது தொழில் நிலையங்களை தொடங்குவதற்கு ஈட்டுத் தொகை செலுத்த மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். இத்தொழில் முனைவோர்களுக்கு உள்ள

இடர்பாடுகளைக் களையும்பொருட்டு முதல் தலைமுறை மகளிர் தொழில் முனைவோர்களுக்குத் திட்ட செலவில் 10 விழுக்காடு (உயர் அளவு ரூ. 50,000 என்பதற்குட்பட்டு) தொகையை மானியமாக வழங்குவதற்கு அரசு வகை செய்துள்ளது.

**2.9 தொழில்நுட்ப நிலையங்கள்**

*1. கருவிகள் பொறியியல் பயிற்சி நிலையம், திண்டுக்கல்*

இந்த நிலையம் கருவிப் பொறியியலில் மூன்றாண்டு பட்டயப் படிப்பினை நடத்துகிறது. இந்தப் பாடமுறை சென்னையிலுள்ள தொழில்நுட்ப இயக்குநராலும், புதுடில்லியிலுள்ள அனைத்திந்தியத் தொழில்நுட்பக் கல்விக் குழுமத்தாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பட்டயத் தகுதிப் பாடமுறை நடத்துவதைத் தவிர கருவிகள் பழுது பார்ப்பு மற்றும் கருவிகள் தயாரிப்பது போன்ற பணி ஆணைகளையும் எடுத்துக்கொள்கிறது.

ஒவ்வோர் ஆண்டும் கருவிப் பொறியியல் பட்டய வகுப்பில் 30 பேர் இந்நிலையத்திலிருந்து பயிற்சி பெற்றுச் செல்கின்றனர். ஒவ்வோர் ஆண்டிலும் பயிற்சி முடிக்கப்பட்டவுடன் தேர்வு முடிவுகளுக்கு காத்திராமல் தமிழ்நாடு மற்றும் இதர மாநிலங்களில் வேலையளிப்பதற்கு கல்விவளாக நேர்முகத் தேர்வு மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். கருவிப் பொறியியலில் பயிற்சி பெற்றவர்களுக்கு நல்ல தேவை உள்ளது.

*2. அரசு தொழில்நுட்பப் பயிற்சி நிலையம், கிண்டி*

சிறு தொழில் நிலையங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தேவையான தொழில்நுட்பத் திறனை அளிக்கும் நோக்குடன் இந்நிலையம் ஏற்படுத்தப்பட்டது. சிறப்புப் பணிகளில் வேலை பெறுவதை நோக்கமாகக் கொண்ட பட்டயத் தகுதிப் பாட முறைகள் மற்றும் பட்டய மேற்படிப்பு ஆகியவற்றில் தென்னிந்தியாவிலேயே பயிற்சியளிக்கின்ற ஒரே நிலையம் இதுதான்.

இந்தப் பயிற்சி மையம் அச்சு மற்றும் கருவிகள் வடிவமைப்பில் பட்டயத் தகுதிப் பயிற்சியினை அளிக்கிறது. இந்த நிலையத்தினால்



அளிக்கப்படும் பயிற்சிகளுக்கும், கைவினைஞர்களுக்கும் தொழில் வணிக இயக்குநர் அவர்களால் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இவர்கள் பல்வேறு சிறு தொழில் நிலையங்களில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றனர்.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஒட்டி நடைபோடும் வகையில் கருவிகள் வடிவமைப்பு சான்றிதழ்ப் பாட முறை, அச்சு மற்றும் கருவிகள் வடிவமைப்புப் பட்டய மேற்படிப்பாக உயர்த்தப்பட்டுள்ளது. இயந்திரப் பொறியியலில் பட்டம்/தகுதிப் பட்டயம் பெற்றவர்கள், கருவிப் பொறியியலில் தகுதிப்பட்டம் பெற்றவர்கள், இந்தப் பட்டய மேற்படிப்புக்கு நுழைவு பெறத் தகுதி பெற்றவர்களாவர்.

அச்சு மற்றும் கருவிகள் தயாரிப்புச் சான்றிதழ் பாடமுறையானது கருவிப் பொறியியல் பட்டயமாக நிலை உயர்த்தப்பட்டது. குளிர் பதனவியல் சான்றிதழ் பாடமுறையும் பட்டயப் பாடமுறையாக நிலை உயர்த்தப்பட்டது. மேலும், இந்த நிலையம் மின்னணுவியல் பகுதியில் புதிய பட்டயப் பாடமுறையைத் தொடங்கியுள்ளது. பட்டயச் சான்றிதழ்கள் சென்னை, கிண்டியிலுள்ள மாநிலத் தொழில்நுட்பக் கல்விக் குழுமத்தினால் வழங்கப்படுகின்றன.

பயிற்சியின்போது, சிறப்புத் திறமை பெறுவதால் இந்த நிலையத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் வேலை பெறுவதில் எவ்வித இடையூறும் இல்லை. ஒவ்வோர் ஆண்டும், முன்னணியில் உள்ள தொழிலதிபர்கள் இந்நிலையத்தில் வளாக நேர்முகப் போட்டி நடத்தி மாணவர்களை வேலைக்குத் தெரிவு செய்கின்றனர்.

1997-98 ஆம் ஆண்டிலிருந்து குளிர்பதன சீர்வளி வசதி தொழில் நுட்பப் பயிற்சி வகுப்பு நடத்துவதற்காக, புதுடில்லியிலுள்ள அனைத்து இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுமம், அதன் 29-8-1997 ஆம் நாளிட்ட 730/B2/151(e)/97 ஆம் எண் கடிதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. 1998-99 ஆம் ஆண்டிற்கான குளிர்பதன சீர்வளி வசதி பட்டயப் படிப்பை, தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், ஒரே இடத்தில் அனைத்து அனுமதிகளையும் பெற வகைசெய்யும் "ஒற்றைச் சாளரமுறையில்" சேர்த்துள்ளார். இப்பட்டயப் படிப்பு, கிண்டியில் உள்ள அரசு தொழில் நுட்பப் பயிற்சி மையத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

[1999 ஏப்ரல் 28

**2.10 பயிற்சி வசதிகள்**

**1. அரசு அறிவியல் கண்ணாடித் தயாரிப்புப் பயிற்சி நிலையம், கிண்டி**

இந்த நிலையம் தனித்தன்மை வாய்ந்தது. இந்தியாவில் இதுபோன்ற நிலையம் இது ஒன்று மட்டுமேயாகும். அறிவியல் கண்ணாடிக் கருவிகளைத் தயாரிப்பதில் மாணவர்களுக்கு 2 ஆண்டு கால செய்முறைப் பயிற்சி அளிக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் 25 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.120 பயிற்சி உதவித்தொகை அளிக்கப்படுகிறது. இதுவரை 44 தொகுதிகளில் மாணவர்கள் பயிற்சியினை வெற்றிகரமாக முடித்துள்ளார்கள். பயிற்சி முடிவுற்றபின் மாணவர்கள் பல்வேறு அறிவியல் கண்ணாடிக் கருவிகள் தயாரிக்கும் தொழில் நிறுவனங்களில் வேலை பெறுகின்றனர்.

**2. அறிவியல் கண்ணாடிக் கருவிகள் தயாரிப்பு மையம், கோயம்புத்தூர்**

இந்த நிலையம் மாநிலம் முழுவதிலும் உள்ள கல்வி மற்றும் இதர நிலையங்களுக்குரிய அறிவியல் கண்ணாடிக் கருவிகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ. 4 இலட்சத்திற்கு மேல் மதிப்புள்ள கண்ணாடி உபகரணங்கள் தயாரிக்கப்பட்டு அரசுத் துறைகள், பல்வேறு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

**3. அரசு மட்பாண்டத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம், விருத்தாசலம்**

இந்த நிலையம், மட்பாண்டத் தொழில் நுட்பவியலில் பயிற்சி அளிக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவிலுள்ள சிறந்த பயிற்சி நிறுவனங்களில் இதுவும் ஒன்றென ஏற்பினைப் பெற்றுள்ளது. இந்நிலையத்தில் ஒவ்வோர் ஆண்டும் 30 மாணவர்கள் $3\frac{1}{2}$ ஆண்டு காலப் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பள்ளி இறுதி வகுப்பு (பத்தாம் வகுப்பு) தேறியவர்கள், இப்பயிற்சியில் சேரத்தகுதி உடையவர்களாவர். இதுவரை 605 மாணவர்கள் வெற்றிகரமாகப் பயிற்சியை முடித்துள்ளார்கள். வெற்றிகரமான பயிற்சிக்குப் பிறகு இந்த நிலையத்தின் மாணவர்கள் இந்தியாவிலுள்ள பல்வேறு மட்பாண்டத் தொழில் நிறுவனங்களில் வேலை செய்கின்றனர். மேலும்,



1999 ஏப்ரல் 28]

இந்தப் பயிற்சியை முடித்த மாணவர்கள் வளைகுடா நாடுகள், மலேசியா, கனடா போன்ற வெளிநாடுகளிலும் வேலை செய்கின்றனர்.

இது தவிர, இந்த நிலையத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஆய்வுக்கூடம் ஒன்று உள்ளது. இந்த ஆய்வுக்கூடம் மூலப்பொருட்கள், தொழிற்பேட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மட்பாண்டத்தொழில் நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்ற உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றை பரிசோதனை செய்கிறது. கட்டுமானத்திற்குரிய செங்கற்கள் மற்றும் சிவப்புக் களிமண் ஓடுகள் தயாரிப்பதற்குரிய சிவப்புக் களிமண் பரிசோதனையையும் இந்த நிலையம் மேற்கொள்கிறது.

**2.11 பரிசோதனை வசதிகள்**

**1. மின்பயன் பொருட்கள் பரிசோதனை வசதிகள்**

தரமுள்ள உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பதில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் பொருட்டு திருவள்ளூருக்கு அருகில் உள்ள காக்கலூர், கோயம்புத்தூர், ஓசூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் பரிசோதனை வசதிகள் அளிக்கப்படுகின்றன. காக்கலூரிலுள்ள மத்திய மின் ஆய்வுக்கூடம், இந்திய தர நிர்ணய நிறுவனம், இரயில்வே மற்றும் பொருள் வழங்கல் விற்பனைத் துறையின் தலைமை இயக்குநரகம் ஆகியவற்றினால், பல மின்சாரப் பொருட்களுக்கு பரிசோதனை வசதியளிக்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசு நிறுவனங்களுக்குத் தரக்கட்டுப்பாடு பற்றிய ஆலோசனை வழங்கும் நிலையமாக இந்த ஆய்வுக்கூடம் விளங்குகிறது. மின்சாரப் பொருட்கள், குறிப்பாக வீட்டு உபயோக மின் சாதனங்களுக்கு புதுடில்லியிலுள்ள தேசியப் பரிசோதனைக் கூடங்களின் அங்கீகாரக் குழுமத்தினர் (நாபில்) அங்கீகாரம் பெற்ற நிலையங்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்திய அரசின் வீட்டு உபயோக மின் சாதனங்களின் தரக்கட்டுப்பாடு ஆணையையும் இது செயல்படுத்துகிறது. இதற்கென சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தரக் கட்டுப்பாடு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**2. மின்மருத்துவக் கருவிகள் செப்பனிடும் நிலையங்கள்**

தொழில் வணிகத்துறை, மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடும் நிலையங்களை கிண்டி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நடத்தி வருகிறது. இந்த நிலையங்கள்

[1999 ஏப்ரல் 28

மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் இதர அரசு மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றிலுள்ள நவீன நுட்பத்திறம் மேம்பட்டவையல்லாத, மின் மருத்துவச் சாதனங்களை பழுது பார்க்கும் பணியை மேற்கொள்ளுமளவிற்கு வசதிகளைப் பெற்றுள்ளன.

### 3. இரசாயனப் பரிசோதனை வசதிகள்

பல்வேறு வகைத் தொழில்களுக்குத் தேவையான பலதிறப்பட்ட பரிசோதனை வசதிகளை வழங்கும்பொருட்டு தொழில் வணிக இயக்ககம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஆய்வுக் கூடங்களை அமைத்துள்ளது. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் கிண்டியில் அமைக்கப்பட்ட இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக்கூடம், பொது மக்கள், தொழில் முனைவோர்கள் குறிப்பாக சிறு தொழில் முனைவோர்கள் ஆகியோருக்கு உடனடியாக விற்பனையாகக் கூடிய தரமான பொருட்கள் தயாரிப்பதும் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பரிசோதனை வசதிகளை அளிக்கிறது.

இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக்கூடம் பின் வருகின்ற இரசாயன மற்றும் இயற்பியல் பரிசோதனையில் ஈடுபட்டுள்ளது.

1. இரும்பாலான உலோகம், மென்உருக்கு, கலவை உருக்கு, கருவி தயாரிப்பு உருக்கு போன்ற உலோகக் கலவை.

2. தாமிரம், அலுமினியம், துத்தநாகம், டின், ஈயம் போன்ற இரும்புக் கலவா உலோகங்கள் மற்றும் பித்தளை, வெண்கலம், கலவை உலோகம் போன்ற உலோகக் கலவைகளும், இதுபோன்ற வேறு உலோகங்களும்.

3. வண்ணப் பொருட்கள்

4. சிமெணட், செங்கல், உருக்குக் கம்பி கட்டுமானப்பணிக்குத் தேவைப்படும் நீர், மணல் பய்றும் இதுபோன்ற பொருட்கள், சிமெண்ட், கற்கலவையாலான கன சதுரங்கள்.

5. பெட்ரோல், டீசல், மின்மாற்றி எண்ணெய் மற்றும் இதுபோன்ற பெட்ரோலியப் பொருட்கள்.

6. தாதுப்பொருள் மற்றும் அனைத்துவகை கனிமங்கள்.



1999 ஏப்ரல் 28]

7. அனைத்து வகை உரங்கள் (இரசாயனம் மற்றும் இயற்கை)

8. பயிர்ப்பூச்சிக் கொல்லிகள், பூச்சிக் கொல்லி மருந்துகள்.

சிறு தொழில் நிறுவனங்களுக்கு மேம்பட்ட பணிவசதிகளை அளிப்பதற்காக இரசாயனத் தொழில்கள், மின்தொழில்கள், மின் அணுவியல் தொழில்களுக்குரிய பரிசோதனை வசதிகளை வலுப்படுத்துவது என்று அரசு முடிவு செய்து, 1998-99இல் நவீன சாதனங்களை வாங்குவதற்காக ரூ.56.65 இலட்சம் அனுமதியளித்தது. இச்சாதனங்கள் வாங்கப்பட்டு விட்டன.

### 4. மட்பாண்டத் தொழிலுதவி மையம், விருத்தாசலம்

விருத்தாசலம் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதியில் அமைந்துள்ள சிறு அளவில் மட்பாண்டம் தயாரிக்கும் சுமார் 100 தொழில் பிரிவுகளுக்குத் தேவைப்படும் பொருட்களை (Body Slip) தயாரிக்கும் பணியில் இம்மையம் ஈடுபட்டுள்ளது. மட்பாண்டத் தயாரிப்புப் பிரிவுகளுக்கு வழங்குவதற்காக, மாதந்தோறும், இம்மையம் சராசரியாக, சுமார் 120 மெட்ரிக் டன் அளவில் மட்பாண்டத் தொழிலுக்குத் தேவைப்படும் பொருட்களைத் (Body Slip) தயாரிக்கிறது. இம்மையம், சுரங்க வடிவுக்குழாய் சூளை (Tunnel Kiln) வழியாக, மட்பாண்டங்களைத் தீயினால் சுடுகின்ற வசதிகளையும் அளிக்கிறது. இச்சூளை 24 மணி நேரமும் இயங்குகிறது. இவ்வாறாக, விருத்தாசலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலுள்ள மட்பாண்டத் தயாரிப்புப் பிரிவுகளுக்கு, மூலப்பொருட்களும், சூளை வசதிகளும் அளிக்கப்படுகிறது. தயாரிக்கப்படும் மட்பாண்ட வகையில் குறைவழுத்த மின்காப்புப் பொருட்கள், கலைப்பொருட்கள், பீங்கான் பொருட்கள் முதலியன அடங்கும்.

## 2.12 சுய வேலைவாய்ப்புத் திட்டம்:

*பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டம்*

மத்திய அரசின் ஆணைப்படி படித்த வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கான பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டம் 1993 அக்டோபர் 2ஆம் நாள் தொடங்கப்பட்டது. ஆதி திராவிடர்கள்/ பழங்குடியினர்/முன்னாள் இராணுவத்தினர்/உடல் ஊனமுற்றோர்/ மகளிர் ஆகியோருக்கு வயது உச்ச வரம்பு 45 ஆகும். 18 முதல் 35 வரையிலான வயதுத் தொகுதியைச் சேர்ந்த படித்த வேலை வாய்ப்பு

[1999 ஏப்ரல் 28

இல்லாத இளைஞர்களுக்கு இத்திட்டம் பயனளிக்கிறது. குறைந்தது எட்டாம் வகுப்பு தேறிய வேலையற்ற இளைஞர்களுக்கு இத்திட்டம் செயற்படுத்தப்படும். மேலும் குறைந்தது ஆறு மாதகாலத்திற்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்கு மிகையாக இருக்கக்கூடாது. குறைந்தது மூன்றாண்டுகள் ஒரே இடத்தில் குடியிருப்பினர்களாக இருத்தல் வேண்டும். குடும்ப வருமானத்தின் உச்ச வரம்பைப் பொறுத்தவரை குடும்ப ஆண்டு வருமான வரம்பை 60,000 ரூபாயாக உயர்த்தும்படி கேட்டு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் படித்த வேலை வாய்ப்பு இல்லாத இளைஞர்கள் மேலும் பலர் பயன்பெற இயலுவதற்கு வகை செய்யும்.

இத்திட்டம், ஆதி திராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு 22.5% இட ஒதுக்கீடும், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு 27% இட ஒதுக்கீடும் அளிக்கிறது. மகளிர் உட்பட நலிவுற்ற பிரிவினருக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். 1998-99-ஆம் ஆண்டில் நம் மாநிலத்தில் 18,500 பேருக்கு பயிற்சி அளிக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டில் மொத்தம் 45,125 விண்ணப்பங்கள் (முந்தைய ஆண்டில் எஞ்சியவை உட்பட) வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டன. 1998-99 ஆம் ஆண்டில் 28-2-1999 வரை 11,707 பேருக்கு ரூ. 6037.17 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 7514 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 3982 பேருக்கு ரூ.2016.96 இலட்சம் நிதி உதவியை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1997-98ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 16,326 இனங்களில் 13,273 இனங்களுக்கு ரூ.7243.62 இலட்சம் கடன்தொகை வழங்கப்பட்டுள்ளது. 28-2-1999ஆம் நாள் வரை, 13,985 நபர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.

**2.13 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஊரக மற்றும் சிறுதொழில்களை மேம்படுத்துதல்**

**1. சேலம் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பாளர்கள் பணிக் கூட்டுறவுச் சங்கம்**

"சேகோசெர்வ்" என்றழைக்கப்படும் சேலம் மாவுப்பொருள் மற்றும்



1999 ஏப்ரல் 28]

சவ்வரிசி தயாரிப்பாளர்கள் பணிக் கூட்டுறவுச் சங்கம், சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்புப் பணியை மேற்கொள்கிறது. இச்சங்கத்தின் உறுப்பினர்கள், மரவள்ளிக் கிழங்கிலிருந்து சவ்வரிசி மற்றும் மாவுப் பொருளை தயாரிப்பவர்களாவர்.

மாவுப் பொருள் மற்றும் சவ்வரிசி தொழில் கடந்த 40 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகின்றபோதிலும், மேற்சொன்ன பொருள்களின் தயாரிப்பாளர்கள் மற்றும் பயனீட்டாளர்களின் நலனைப் பாதுகாக்கக்கூடிய வகையில் அமைப்பு ரீதியிலான விற்பனை முறை ஏதும் இல்லாமலிருந்தது. இத்தகைய உற்பத்திப் பொருள்களுக்கான நுகர்வோர் மையங்கள் தமிழ்நாட்டிற்கு வெளியே அமைந்துள்ளதால் விரிவான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் சூழ்நிலையும், அவ்வப்போது ஏற்படக்கூடிய நுகர்வோரின் தேவையளவைக் கண்காணித்து வருதல் போன்றவற்றைச் சிறு அளவு உற்பத்தியாளர் செய்ய இயலாத காரணத்தால் அவர்களால் நேரடியாக விற்பனை செய்ய இயலவில்லை. நிதி வரையறைகள், மொழி அறியாமையால் ஏற்படும் தடை, இறுதி முறை விற்பனை அங்காடிகளை நிறுவுவதில் உள்ள இடையூறு, அலுவலக வசதியின்மை போன்ற இடர்பாடுகளைத் தயாரிப்பாளர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இது இடைத்தரகர்கள்/தரகர்கள் வளர்ச்சிக்கு வழிகோலுவதன்மூலம், சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் விற்பனை நடைமுறையில் அவர்களுடைய ஆதிக்கத்தைத் தோற்றுவிக்கிறது.

தற்போது செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ.4.75 கோடியுடன் 814 உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கம் ஏற்படுத்தப்பட்ட பின்னர், சவ்வரிசி, மாவுப் பொருள் மற்றும் மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது. விவசாயிகளும், செய்முறையாளர்களும், நியாய விலை பெறுகின்றனர். இம் மாநிலத்திலுள்ள சவ்வரிசி, மாவுப் பொருள் தயாரிப்புப் பிரிவுகள் மூலம் சுமார் ஒரு இலட்சம் நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் சுமார் ஐந்து இலட்சம் நபர்களுக்குத் தொடர்பான வேலைவாய்ப்பும் கிடைக்கிறது.

ஏனையோருக்கு விதிக்கப்படும் 5 சதவிகித விற்பனை வரிக்கு பதிலாக "சேகோசெர்வ்" மூலம் விற்பனை செய்யப்படும் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்களுக்கு, தமிழ்நாடு பொது விற்பனை வரியின்கீழ் சலுகை விதத்திலான 2 சதவீத விற்பன வரியை தமிழ்நாடு அரசு

விதிக்கிறது. இதைத்தவிர, பங்கு மூலதனத்தில் பங்கேற்பதுடன் கூடுதல் விற்பனை வரிச் சுமையைக் குறைக்கும்வகையில் உதவித் தொகைக்கும் அனுமதி வழங்கியுள்ளது.

**2. பாலிதீன் பணித் தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம்**

தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பெண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளித்தல் மற்றும் அவர்களுக்கு உயர்ந்த அளவு ஊதியங்கள் வழங்குதல் போன்றவற்றிற்காக பாலிதீன் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. தற்போது, பாலிதீன் பைகள், சிப்பமிடும் பொருட்கள் தயாரிப்புப் பணியில் 17 பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. இச்சங்கங்கள் வனத் துறை, வேளாண்மைத் துறை, கூட்டுறவுச் சிறப்பங்காடிகள், வேளாண் தொழில் கழகம் "ஆவின்" போன்ற பல அரசுத் துறைகளின் தேவைகளையும், தனியார் அமைப்புகளின தேவைகளையும் நிறைவு செய்து வருகின்றன. புதியதாகத் தொடங்கப்பட்டுள்ள "கரூர் மோனாபிலிம் யார்ன் அண்டு மஸ்கிடோ நெட்" (Karur Monofilm Yarn and Mosquito Net) உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், விரைவில் உற்பத்தியைத தொடங்கும். மற்றும் கூடுதலாக சுமார் 200 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும். பாலிதீன் சங்கங்களுக்கான தலைமையகம், சென்னையில் உள்ளது. அது தமிழ்நாடு பிளாஸ்டிக் தொழிற் கூட்டுறவுச் சங்கக் கூட்டமைப்பு என்ற பெயரில் இயங்கி வருகிறது. மூலப்பொருட்களை வாங்குதல், சேமித்து வைத்தல், விநியோகம் செய்தல், வேலை நிறைவு பெற்ற பொருள்களை விற்பனை செய்தல் மற்றும் தொழில் நுட்ப உத்திகளைத் தெரிவித்தல் போன்ற பணிவழிகளை இச்சங்கம் செய்து வருகிறது. உறுப்பினர் சங்கங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பாலிதீன் கழிவுப் பொருட்களை செய்முறைப்படுத்தி அவற்றை சிறு சிறு மணிகளாக மாற்றும் மறு செய்முறைப் பிரிவு ஒன்றையும் இச்சங்கம் வைத்துள்ளது.

**3. குடிசைத் தொழில், தீப்பெட்டி தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

தமிழ்நாட்டில், கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளின் உற்பத்தியளவு, நாட்டின் மொத்தத் தேவையில் சுமார் 85 சதவீதத்தை





நிறைவு செய்கிறது. ஊரகப் பகுதிகளில் உள்ள பொருளாதார ரீதியில் நலிவடைந்த பிரிவினருக்கு, குறிப்பாக திருநெல்வேலி, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி போன்ற வறட்சிப் பாங்கான மாவட்டங்களில் வாழும் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மகளிருக்கு, வேலை வாய்ப்பளிப்பதில் இத்துறை மிக முக்கியப் பங்காற்றுகிறது.

தரமுள்ள மூலப் பொருட்களை போட்டி விலை வீதத்தில் வாங்கி அவற்றை உறுப்பினர்களாகவுள்ள தொழிற் பிரிவுகளுக்கு வழங்குதல் போன்ற பணிகளை ஆற்றுவதன் மூலம், தீப்பெட்டிப் பணித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தலையாய பங்கை ஆற்றுகின்றன. உறுப்பினர் தொழிற் பிரிவுகள் தயாரிக்கும் தீப்பெட்டிகளின் தரத்தைக் கட்டுப்பாடுடன் வைப்பதோடு, அவற்றை இந்தியாவில் உள்ள ஏனைய பகுதிகளில் விற்பனை செய்யும் பணியையும் இச்சங்கங்கள் மேற்கொள்கின்றன. நாளது நிலவரப்படி 14 சிறு அளவிலான தீப்பெட்டி தயாரிப்புப் பணித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் 802 உறுப்பினர்கள் தொழிற் பிரிவுகளுக்காகப் பணியாற்றி வருகின்றன.

மேற்சொன்ன தீப்பெட்டிப் பணிச் சங்கங்களுடன் "பாரதிதாசன் குளோரேட் தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கமும்" ஏற்படுத்தப்பட்டு, தீப்பெட்டித் தொழிலுக்கு மிகவும் இன்றியமையாத மூலப்பொருளான "பொட்டாசியம் குளோரேட்"—டை தீப்பெட்டிப் பணிச் சங்கங்களுக்கு வழங்குவதன் மூலம் அவற்றின் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.

**4. செங்கல் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்**

செங்கல் தொழிலாளர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள், குறிப்பாக ஆதி திராவிடர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன. 17 செங்கல் தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மத்திய சிறப்பு நிதியுதவித் தொகையளிக்கும் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் (தாட்கோ), உதவித்தொகை, தொடக்க நிதியுதவி, கடன் போன்ற வகையில் மேற்சொன்ன செங்கல் தொழிலாளர் கூட்டுறவுச்

[1999 ஏப்ரல் 28

சங்கங்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது. இதுவரை அனுமதிக்கப்பட்ட/ வழங்கப்பட்ட தொகை பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

சிறப்பு உதவித் திட்டம்:

| | அனுமதிக்கப்பட்ட தொகை. | வழங்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| உதவித் தொகை | 102.77 | 76.30 |
| தொடக்க நிதியுதவி | 61.62 | 13.86 |

மேற்சொன்ன செங்கல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தரமான சூளை செங்கற்களைத் தயாரித்து வழங்குகின்றன.

**5. கயிறு தயாரிக்கும் தொழில் கூட்டுறவுகள்**

பழுப்பு நிற நாரைத் தயாரிப்பதில் தமிழ்நாடு மாநிலம் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது. இம்மாநிலத்தில் கிட்டத்தட்ட 85,000 டன் நார் தயாரிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 75 கயிறு தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை கயிறு நூலிழை மற்றும் கயிறுப் பொருள்களைத் தயாரிக்கின்றன. இவற்றின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.350.88 இலட்சம் ஆகும்; மற்றும் 11,842 உறுப்பினர்கள் இச்சங்கங்கள் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

மேற்சொன்ன கயிறு தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகளை நவீனப்படுத்துவதற்காக, ஒருங்கிணைந்த கயிறு தொழில் வளர்ச்சித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. முதல் கட்டத்தின்கீழ் ரூ.461.94 இலட்சம் செலவில் 21 கயிறு தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் ஊரகப்பகுதியிலுள்ள 1000 கயிறு தயாரிப்புத் தொழிலாளர்களுக்குக் கூடுதலாக வேலைவாய்ப்பு வழங்கக் கருதப்பட்டுள்ளது.

கயிறு விற்பனைக்குத் தள்ளுபடி வழங்கும் திட்டத்தின்கீழ் 20 சதவீதம் தள்ளுபடி வழங்குவதற்கு இயலும்வகையில் 1998-99 ஆம் ஆண்டில் ரூ.50.00 இலட்சம் மானியத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கயிறு



1999 ஏப்ரல் 28]

நாரிழை மற்றும் கயிறு தயாரிப்புப் பொருள் விற்பனைக்கு 20 சதவீதம் தள்ளுபடி வழங்க இயலும் பொருட்டு, கயிறு தயாரிப்பு தொழில் வாரியத்திடமிருந்து இதற்கு நிகரான தொகை மானியமாகப் பெறப்படும். இத்திட்டம் மாநிலத்தில் மும்முரமாக செயல்படுத்தப்படுகிறது.

சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநிலக் கயிறு தொழிற் கூட்டுறவு விற்பனை இணையம் "டான்கோபெட்" கயிறு தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் தயாரிப்புப் பொருள்களை விற்பனை செய்வதோடு கயிறு தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களால் தயாரிக்கப்படும் கயிறுப் பொருள்களின் விற்பனையை உயர்த்தும் பொருட்டு இந்தியா முழுவதிலும் நடைபெறும் பல்வேறு தொழிற் பொருட்காட்சிகளில் பங்கேற்கிறது. இம் மாநிலத்தில் கயிறு தயாரிப்புத் தொழிலை மேம்படுத்துவதற்காக கயிறு தயாரிப்பு மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டத்திற்காக அனுமதி வழங்கும்/ செயல்படுத்தும் முகவரமைப்பாக இந்த இணையம் செயல்படுகிறது.

**6. தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 40,000 ஏக்கர் பயிரிடும் நிலப் பரப்பைக் கொண்ட சிறு அளவில் தேயிலைப் பயிரிடுவோர் சுமார் 30,000 உறுப்பினர்கள் உள்ளனர். 33,872 ஏக்கர் பரப்பளவு தேயிலை பயிரிடும் நிலப் பரப்பையும், சிறு அளவில் தேயிலைப் பயிரிடுவோர் 21,269 உறுப்பினர்களையும் கொண்ட 17 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் முறையாக உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன.

இக்கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் மொத்த உற்பத்தி 171 இலட்சம் கி. கிராமுக்கு அதிகமாகும்.

''இன்ட்கோ'' தேயிலைத் தொழிற்சாலைகள் பின்வரும் குறிக்கோள்களுடன் அமைக்கப்பட்டன:

1. சிறிய அளவில் தேயிலைப் பயிரிடுவோருக்கு, பறித்த தேயிலைக்கு நல்ல விலை பெற்றுத் தருதல்.

2. தேவையான இடுபொருள்கள் வழங்குவதன் மூலம் தேயிலைத் தோட்டங்களின் விளைச்சல் திறனை மேம்படுத்துதல்.

3. தேயிலை உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு நவீன முறைகளில் பயிற்சி அளித்தல்.

எபநாடு தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை ரூ.238.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டது. பிதிர்காட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை ரூ.244.00 இலட்சம் செலவில் நிறுவப்பட்டது. இவை முறையே 1997 டிசம்பர் மற்றும் 1998 ஜூன் திங்கள் உற்பத்தியைத் தொடங்கின. தும்மனட்டியில் மற்றொரு தொழிற்சாலையை நிறுவுவது குறித்து கருதிப் பார்க்கப்பட்டு வருகிறது.

7. ஏனைய தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

(அ) "சிற்பி" (Sirpi) கைவினைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனையில் உதவி செய்ய சென்னையில், தமிழ்நாடு கைவினைத் தொழில் கூட்டுறவு விற்பனை இணையம் என்ற தலைமை அமைப்பு செயல்பட்டு வருகிறது. "சிற்பி" (Sirpi) என்ற பெயரில் பிரபலமான இந்தச் சங்கம் சுமார் 20 கைவினைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்கிறது.

தமிழ்நாட்டில் கைவினைப் பொருள்களின் விற்பனையை உயர்த்தும் நோக்குடன் இந்தியாவிலுள்ள முக்கியமான இடங்களில் இந்த இணையம் பொருட்காட்சிகளை நடத்துகிறது. கைவினைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 1000 கைவினைஞர்கள் இச்சங்கத்தின் மூலம் பெரும் பயனைப் பெறுகின்றனர்.

(ஆ) சென்னை தொழிற் கூட்டுறவுச் சங்கப் பகுப்பாய்வுக் கூடம்

தமிழ்நாடு அரசு மருந்துக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறை வாரியம், சென்னை தொழில் கூட்டுறவுச் சங்கப் பகுப்பாய்வுக் கூடத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இச்சங்கத்தில் சுமார் 305 உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கம் சுமார் 35 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் 1000 பேருக்கு மறைமுகமாக வேலைவாய்ப்பும் அளிக்கிறது. ஐ.பி.பி.பி., யூ.எஸ்.பி. ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட தரங்களின்படி மூலப் பொருட்களையும், வேலைநிறைவு பெற்ற மருந்துப் பொருள்களையும் பகுப்பாய்வு செய்வதே இச்சங்கத்தின் நோக்கமாகும்.

பகுப்பாய்வுக் கூடத்தின் தரத்தை உயர்த்தும் பொருட்டு, இச்சங்கம் ரூ.40.00 இலட்சம் செலவில் நவீனப்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டு உள்ளது. இதில் தமிழ்நாடு அரசு தனது பங்குத் தொகைக்கு ரூ.10.00





இலட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.30.00 இலட்சத்தை "தாய்கோ" வங்கி, குறித்தகால கடனாக அளிக்கும்.

(இ) திண்டுக்கல் பூட்டுத் தொழிலாளர்கள் சங்கம்

திண்டுக்கல் பூட்டுக்கள், பாரம்பரியமாகப் புகழ் பெற்றவையாகும். பூட்டுகள் தயாரிப்பதற்காக மாநிலத்தில் உள்ள ஒரே கூட்டுறவுச் சங்கம் இச்சங்கமே ஆகும். இச்சங்கத்தில் 50 தொழிலாளர்கள் / உறுப்பினர்கள் இருக்கின்றனர். உறுப்பினர்கள் தயாரிக்கும் பூட்டுகளை விற்பனை செய்வதில் இச்சங்கம் முக்கியமாக ஈடுபட்டுள்ளது. இச்சங்கம் இரயில்வே, துறைமுகப் பொறுப்புக் கழகம், மருத்துவமனைகள், உள்ளாட்சி அமைப்புகள் முதலிய அரசு அமைப்புகளுக்குப் பூட்டுகளை வழங்கிவருகிறது. தயாரிப்புப் பணிகளின் தரத்தை உயர்த்துவதற்கும், இவற்றை எந்திர மயமாக்கவும் ரூ.28.50 இலட்சம் செலவாகும் செயற் குறிப்புக்கு ஒப்புதலளிக்கப்பட்டது. அரசு, மாநிலத்தின் பங்காக ரூ.10.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. எஞ்சிய தொகை, தாய்கோ வங்கியிலிருந்து கடனாகப் பெறப்படவேண்டும் இச்செயற்குறிப்பின்படி, கீ பிட்டிங் எந்திரம் (Key Bitting Machine) கீ ஸ்லாட்டிங் எந்திரம் (Key slotting Machine) போன்ற பிற எந்திரங்கள் வாங்கப்பட்டு, தற்போதுள்ள வசதிகளுடன் கூடுதலாக நிறுவப்படும். இவை வெவ்வேறு வகை பூட்டுகளைத் தயாரிப்பதற்காக தன் உற்பத்தித் திறனை அதிகரிக்க இச்சங்கத்திற்கு உதவி புரியும்.

8. தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி

1961 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியில் தற்போது 450 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களாக உள்ளன. இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 417.37 இலட்சம் இதில் தமிழ்நாடு அரசின் பங்கு 268.30 இலட்சமாகும். ரூ. 500.00 இலட்சம் அளவுக்கு இவ்வங்கியிடமுள்ள குறித்தகால வைப்பீடுகளைத் திருப்பித்தர தமிழ்நாடு அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. அரசிடமிருந்து தாராளமான நிதியுதவி பெறுவதால் இவ்வங்கி, 28-2-1999 ஆம் நாள் நிலவரப்படி ரூ. 1568.25 இலட்சம் அளவுக்கு பல்வேறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளித்துள்ளது. இவ்வங்கி, தேயிலை, தீப்பெட்டிகள், நார், தோல், உலோகம் கைவினைப் பொருட்கள், ஆட்டோ, டாக்ஸி முதலிய வெவ்வேறு வகை தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது.

சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், நீலகிரி ஆகிய எட்டு மாவட்டங்களைப் பொறுத்தவரையில், தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நீண்டகாலக் கடன் வசதி அளிப்பதற்காக வேளாண்மை கிராம வளர்ச்சி தேசிய வங்கியின் மறு நிதியுதவி திட்டத்திற்காக "இந்திய ரிசர்வ் வங்கி" 1987ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலிருந்து இவ்வங்கியை அங்கீகரித்துள்ளது.

**2. சிறுதொழில்களுக்கு நிதியுதவி**

இம்மாநிலம் முழுவதிலும் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கிக்கு 21 கிளைகள் உள்ளன. இக்கிளைகள், உறுப்பினர் சங்கங்களுக்கு கடனுதவி அளிக்கின்றன. இவ்வங்கி, சிறிய, மிகச் சிறிய தொழிற்சாலைகளுக்குரிய திட்டங்களையும் செயல்படுத்துகிறது. இவ்வங்கி, நுகர்வோர் கடனும், நகைக்கடனும் அளிக்கின்றது.

**2.14 ஏனைய பணிகள்**

**1) தொழில் நுட்பக்குழு**

இந்திய சிறுதொழில், உண்மையில் புதுமையான தொழில் நுட்பம் எதையும் பின்பற்றாமலேயே தனது சொந்தப் பணித்திறன் அடிப்படையில், தானே முன்னேறியுள்ள போதிலும், மத்திய அரசின் தாராளமயமாக்கக் கொள்கையின் காரணமாக, இந்திய அங்காடி, அயல்நாட்டு வர்த்தகர்களுக்குத் திறந்து விடப்பட்டுள்ளபோது, உற்பத்தித்தரம், விலைப்போட்டி ஆகிய துறைகளில் சிறுதொழில்துறை தத்தளிப்பது உணரப்படுகிறது. எனவே, தரம் உயர்த்துவதன் மூலம் அல்லது மாற்றல் மூலம் தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதே சிறு தொழில் துறையின் இன்றைய தேவையாகும். சிறந்த தொழில் நுட்பத் தகவல்கள், ஆலோசனை மற்றும் நிதியுதவியுடன் தகவல் அளிப்புப் பணிகள் மற்றும் ஏனைய வசதிகள் இந்தியாவில் வலுவானதாக இல்லை.

நடப்பு தாராளமயமாக்கல் மற்றும் உயர் போட்டி சூழ்நிலையில் சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் வளர்வதற்கு ஏதுவாக, மத்திய அரசு, மாநில அரசு, சில சிறு தொழில் சங்கங்கள் ஆகியவற்றின் உதவியுடன் சென்னையில், தமிழ்நாடு சிறுதொழில் தொழில் நுட்பக்குழு ஒன்றை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. தொழில் நுட்பக்குழு, உலக





அளவிலும், தொடர்பான பொருள்களின் உற்பத்தியிலும், செய்முறையிலும் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்பு உணர்வுடன் கூடிய ஒரு மையமாகச் செயல்படும். பொருள் உற்பத்தித் தொழில் நுட்பத்தையும் செய்முறைத் தொழில் நுட்பத்தையும் அறிந்து பின்பற்றித் தரம் உயர்த்துவதிலும் சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் சுமூகமாகச் செயல்படவும் உறுதி செய்யும்.

சிறுதொழில் துறை, ஏனையவற்றிற்கிடையே, தொழில் நுட்பத்தைப் பெறுவதற்கு நிதி இடர்பாட்டை எதிர் நோக்குகிறது என்பதைக் கூறத் தேவையில்லை. சிறுதொழில் பிரிவுகள், உயரிய தொழில் நுட்பத்தை அடைவதற்கு முன், பல நிலைகளைக் கடக்க வேண்டியுள்ளதால், உரிய ஆதாரங்களிலிருந்து இடைநிலைத் தொழில் நுட்பம் வளர வகை செய்வதே இக்குழுவின் நோக்கமாகும். இதனால் சிறுதொழில் பிரிவுகள் தங்கள் தொழில் நுட்பத் தர உயர்வுக்கான தேவையை பூர்த்தி செய்து கொள்ள இயலும்.

**2) பொருட்காட்சிகள்**

இத்துறை, 26-1-1999 இல் சென்னையில் நடைபெற்ற குடியரசு தினவிழா தொடர்பான வண்ணமிகு ஊர்வலத்தில் பங்கு கொண்டு, இத்துறையின் பணிகள் மற்றும் சாதனைகளையும், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியையும் அலங்கார ஊர்திகள் உதவியுடன் எடுத்துக் காட்டியது.

இது தவிர, இத்துறை பின்வரும் பொருட்காட்சிகளிலும் பங்கு பெற்றது:

1. சென்னையில் 1998 ஆம் ஆண்டில் நடைபெற்ற 24ஆம் இந்திய சுற்றுலாத் தொழில் பொருட்காட்சி.

2. மதுரையில் 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசு சித்திரைப் பொருட்காட்சி.

3. திருநெல்வேலியில் 1998 ஆம ஆண்டு நடைபெற்ற அரசு பொருட்காட்சி.

4. சேலத்தில் 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசு பொருட்காட்சி.

5. புதுடில்லியில் 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி.

[1999 ஏப்ரல் 28

6. 1998 செப்டம்பர் 10 முதல் 14 வரை சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற ACMEE பன்னாட்டுத் தொழில் பொருட்காட்சி.

**2.15 எதிர்காலத் திட்டங்கள்**

***தகவல் தொழில் நுட்பம்***

1. சிறுதொழில் துறையில் தகவல் தொழில் நுட்பம் போன்று எதிர்காலத்தில் புதிய முயற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. 1999-2000ஆம் ஆண்டில் ரூ.100.00 இலட்சம் செலவில் தொழில் நுட்ப நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் உடனுழைப்புடன் மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் இளம் தொழில் நுட்ப வல்லுநர்களும், தொழில் நுட்பவியல் வல்லுநர்களும் முன்னேறுவதற்கு வசதிகளைத் துறை ஏற்படுத்தித் தரும்.

***செயற்கை வைரத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டல்***

2. இம்மாநிலத்தில் குறிப்பாக கைவினைஞர்களும், ஊரக மகளிரும் சுரண்டப்படுவதைக் கருத்தில் கொண்டு செயற்கை வைரத் தொழில் பற்றி விரிவாக ஆய்வு செய்த பின்னர் கைவினைஞர்களின், தொழிலாளர்களின் பயிற்சித் தரத்தை உயர்த்தவும், தொடர்ந்து விற்பனை வசதிகளை அளிக்கவும் இயலும்வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நோக்கத்திற்காக விற்பனைப் பணிச் சங்கம் ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தை அமைக்க தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

விற்பனைத் திட்டத்திற்கு மொத்தம் ரூ.123.5 இலட்சம் நிதி முதலீடு தேவைப்படுகிறது. இதில், அரசின் பங்கு ரூ.30.75 இலட்சமாகும். அரசு ரூ.31.25 இலட்சம் தொடரினச் செலவுக்கும், ரூ.19.5 இலட்சம் தொடராயினச் செலவுக்கும் ஒப்புதலளித்துள்ளது. இதில் ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தை அமைப்பதற்கான ரூ.7.00 இலட்சமும் அடங்கும்.

இத்திட்டம், தரம் உயர்த்துதல் மற்றும் விற்பனையில் தமிழ்நாட்டில் செயற்கை வைரத் தொழிலுக்கு உத்வேகம் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் செயற்கை வைரத் தொழிலில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான கிராம கைவினைஞர்கள் மற்றும் மகளிருக்கு நிலையான வாழ்க்கைப் பிழைப்பு அளிக்கவும், இடைத் தரகர்களை நீக்கவும் உறுதுணை புரியும்.



1999 ஏப்ரல் 28]

***தேனி மாவட்டத்தில் உலர்ந்த திராட்சை தயாரிப்பதற்கான புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கம்***

3. நம்நாட்டில் உலர்ந்த திராட்சையின் தேவை ஆண்டொன்றுக்கு 4,000 மெட்ரிக் டன் என்றிருக்க, உள்நாட்டு உற்பத்தி 500 மெட்ரிக் டன் மட்டும் என்பதால், தற்போது ஆப்கானிஸ்தான், ஈரான், துருக்கி போன்ற நாடுகளிலிருந்து உலர்ந்த திராட்சையை இந்தியா இறக்குமதி செய்கிறது. தமிழ்நாட்டில் இது தொடர்பாக தயாரிப்பு வசதி எதுவுமில்லை. இருப்பினும், தேனி மாவட்டத்திலுள்ள கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் திராட்சை அபரிமிதமாக விளைகிறது. போதுமான அடிப்படை வசதி இல்லாததாலும், அனுப்பி வைப்பதற்குரிய வசதிகளும் இல்லாமையாலும், விவசாயிகள் தங்கள் பொருட்களை இடைத் தரகர்களிடம் மிகக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகின்றனர். இந்நிலைமையைப் போக்க, தேனி மாவட்டத்தில் உலர்ந்த திராட்சையை உற்பத்தி செய்வதற்காக தொழில் கூட்டுறவுகளின்கீழ்,. திட்டம் ஒன்றை மேற்கொள்ளக் கருதப்படுகிறது.

இத்திட்டத்திற்கு மொத்தம் ரூ.125 இலட்சம் செலவாகும் என்று கருதப்படுகிறது. இதில் மாநில அரசின் பங்கு ரூ.12.5 இலட்சமாகும்.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள வேளாண்மை மாவட்டத்தில் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தயாரிப்பு வசதியை ஏற்படுத்த இத்திட்டம் கருதுகிறது. இத்திட்டம், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு இடுபொருள்களைப் பயன்படுத்தி தொழில் மயமாக்கல் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்குவதில் முன்மாதிரியாகச் செயல்படும்.

***தொழில்நுட்பத் தரம் உயர்த்துவதற்கு முக்கியத்துவம் அளித்தல்***

4. இவ்வாண்டு தொடங்கப்பட்டு வரும் தொழில்நுட்பக் குழு மூலமாக தமிழ்நாட்டில் சிறிய மற்றும் மிகச் சிறிய தொழில்களுக்கு தொழில்நுட்பக் கண்காணிப்பு, தொழில் நுட்ப தரம் உயர்த்துதல் தொழில்நுட்ப பரிமாற்றம் ஆகியவை எளிதாக கிடைக்கச் செய்யப்பெறும்.

[1999 ஏப்ரல் 28

தொழில் முனைவோருக்கான விரிவான பயிற்சி

5. 1999-2000ஆம் ஆண்டில் ரூ.6 இலட்சம் செலவில் மேலும் 150 பேர்களுக்கு (பட்டதாரிகள் மற்றும் பட்டயம் பெற்றவர்கள்) "இடிபி" தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சிறப்புப் பயிற்சி அளிக்கவும் கருதப்பட்டுள்ளது. மதுரை மற்றும் திருச்சி மாவட்டங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

6. வேலைவாய்ப்பற்ற ஆண்கள், பெண்கள் மற்றும் வேலை தேவைப்படுவோர் ஆகியோரை ஊக்குவிக்கும் பொருட்டு, கிண்டியில் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. ரூ.16.40 இலட்சம் செலவில் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1,000 மகளிருக்குப் பயிற்சி அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

அடிப்படை வசதிகளைப் பெருக்குதல்

7. திண்டுக்கல்லில் பயிற்றுவிப்பு நிறுவனத்தில் இன்றியமையாத வசதிகளைப் பெருக்கும் பொருட்டு ரூ.11.40 இலட்சம் செலவில் சிறிய கணினி மையம் ஒன்றை ஏற்படுத்தக் கருதப்படுகிறது. கிண்டி, அரசு தொழில்நுட்ப பயிற்சி மையத்தில் அடிப்படை வசதிகளை அளிக்கும் பொருட்டு, குளிர்பதன சீர்வளி வசதிகளுக்காக ரூ.5.38 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

8. விருதாசலத்திலுள்ள மட்பாண்டத் தொழில்நுட்ப மையத்தை வலுப்படுத்துவதற்காக ரூ.5.10 இலட்சம் செலவில் கூடுதல் சாதனங்களை வாங்கக் கருதப்படுகிறது.

9. தொழில் வணிக இயக்ககத்தின் தகவல் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, ரூ.4.75 இலட்சம் செலவில் கணினிகள் வாங்கக் கருதப்படுகின்றன.

10. வேதியியல் ஆய்வுக் கூடங்களில் சோதனை வசதிகளை வலுப்படுத்துவதற்காக ரூ.1.40 இலட்சம் செலவில் கூடுதல் சாதனங்கள் வாங்கக் கருதப்படுகிறது.

**3. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்**

மாநில அளவில் நிதி வழங்கும் முதன்மை நிறுவனமான, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், 1949ஆம் ஆண்டில், நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டது.



1999 ஏப்ரல் 28]

புதிய தொழில் பிரிவுகள் நிறுவுவதற்கும் ஏற்கெனவேயுள்ள சிறு நடுத்தரத் தொழில் பிரிவுகளை விரிவாக்குதல், நவீனப்படுத்துதல் மற்றும் பல்திறப்படுத்துதல் ஆகியவற்றிற்கும் தேவைப்படும் நிலம், கட்டடங்கள், இயந்திரமும், சாதனமும், தளவாடங்கள் மற்றும் மின்பொருட்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்காக இக்கழகம், ரூபாய் 300 இலட்சம் வரையில் நீண்டகாலக் கடனுக்கு அனுமதியளிக்கிறது.

**3.1 செயற்பாடுகள்**

கடந்த மூன்றாண்டுகளில் இக்கழகம் ஆற்றிய சாதனைப் பணிகளான, (கடனுதவி) அனுமதிக்கப்பட்ட தொகை, வழங்கப்பட்ட தொகை, வசூலிக்கப்பட்ட தொகை முதலியன தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு | அனுமதிக்கப் பட்ட தொகை | வழங்கப்பட்ட தொகை | வசூலிக்கப் பட்ட தொகை | அரசிடமிருந்து பெற்ற உதவித் தொகை |
|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடிகளில்) | | | |
| 1996-97 | 440.53 | 344.31 | 328.97 | 38.60 |
| 1997-98 | 242.08 | 192.89 | 326.40 | 25.00 |
| 1998-99 (பிப்ரவரி 99 வரையில்) | 131.51 | 100.57 | 203.70 | 21.00 |

சிறுதொழில் பிரிவுகள், குறைந்த முதலீட்டில் கூடுதல் வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்கி, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக நடவடிக்கைகளில் முதன்மை இடத்தைப் பெறுகின்றன. மொத்தம் அனுமதித்த தொகையில் 95 சதவீதத்திற்கும் மேற்பட்ட தொகையை சிறுதொழில் பிரிவுகள் பயன்படுத்திக் கொண்டன.

**3.2 இக்கழகம் மேம்பாட்டிற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள்**

**(1) நடைமுறைகளைச் சீரமைத்தல்:**

இக்கழகம், செய்முறைப்படுத்தும் முறைகளைச் சீரமைத்து, கடுமையான நிபந்தனைகளைத் தளர்த்தியதோடு, கடன் வழங்கு

[1999 ஏப்ரல் 28

நடைமுறைகளையும் சீரமைத்துள்ளது. இதனால் இக்கழகம், தன்னிடம் வரப்பெறும் கடன் மனுக்களை ஒரு மாதத்திற்குள் தீர்வு செய்து உயர்ந்த பட்சம் இரண்டு அல்லது மூன்று மாதத்திற்குள் கடன்தொகையை வழங்கிவிடுகிறது.

**(2) வட்டி வீதங்களைக் குறைத்தது:**

சிறு தொழில் பிரிவுகளின் நிதிச்சுமையை கருத்திற்கொண்டும், பல் வேறு சங்கங்களிடமிருந்து வரப்பெற்ற முறையீடுகளைக் கருத்திற்கொண்டும், இக்கழகம், தற்போதுள்ள வட்டிவீதத்தைப் படிப் படியாக 20 சதவீதத்திலிருந்து 17.5 சதவீதமாகக் குறைத்துள்ளதோடு, அபராத வட்டிவீதத்தையும் 5 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதமாகக் குறைத்துள்ளது.

**(3) புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துதல்:**

நம் நாட்டில் தற்போதுள்ள மாறிவரும் பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு, வளர்ச்சித் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய இன்றியமையாமையை ஏற்று, இன்றைய தொழில் முனைவோர் தேவைக்குத் தகுந்தவாறு பின்வரும் புதிய திட்டங்களை அறிவித்துள்ளது:

**(அ) தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனப்படுத்துதல் ஆகியவற்றுக்கு மறு நிதியுதவி அளித்தல்:**

தற்போதுள்ள தொழிலகங்கள் மேற்கொள்ளும் விரிவாக்கப்பணி/ நவீனப்படுத்தும் பணிக்கு ஏற்றாற்போல் தொழில் முனைவோர் சார்பில் குறைந்த அளவு பங்குத் தொகையை முதலீடு செய்ய அனுமதித்து, குறைந்த வட்டி வீதத்தில் அவற்றுக்கு இக்கழகம் கடன் வழங்குகிறது.

**(ஆ) விற்பனைக்கு உதவித் தொகை:**

சிறுதொழில் பிரிவுகள், தங்களுடைய உற்பத்திப் பொருட்களின் விற்பனை வசதிகளை மேம்படுத்துவதற்கு கடன் உதவித் தொகை வழங்கப்படுகிறது

**(இ) வணிக வளாகங்கள் முதலியவற்றுக்கு உதவித்தொகை வழங்குதல்:**

வணிக வளாகக் கட்டடங்களுக்கும் கடனுதவித் தொகை வழங்கப்படுகிறது.



1999 ஏப்ரல் 28]

**(ஈ) தகவல் தொழில் நுட்பத் தொழிலுக்கு முக்கியத்துவமளித்தல்:**

மென்பொருள் (சாஃப்ட்வேர்) உற்பத்தித் தொழிலில் புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்காக சலுகை வீத உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**(4) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகப் பொருட்காட்சி:**

இக்கழகத்தின் பொன்விழா ஆண்டு கொண்டாடுவதற்காக சென்னை, கோயம்புத்தூர், மதுரையில் உள்ள தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நிதியுதவி பெற்ற தொழில் பிரிவுகள், பயனடையும் வகையில் பொருட்காட்சிகள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3.3. 1999-2000-ஆம் ஆண்டிற்கான இலக்கு:**

இம்மாநிலத்தை தொழில் மயமாக்கும் முனைப்பு தொடர்ந்து செயல்படச் செய்யும் பொருட்டு, இக்கழகம் 1999-2000ஆம் ஆண்டிற்கு பின்வரும் இலக்கை நிர்ணயித்துள்ளது:

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| அனுமதிக்கப்படும் தொகை | 200.00 |
| வழங்கப்படும் தொகை | 160.00 |
| வசூலிக்கப்படும் தொகை | 320.00 |

**4. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)**

தமிழ்நாட்டில் சிறுதொழில்களை மேம்படுத்தி பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் சிறுதொழில்களைப் பரவலாக்கி சிறுதொழில் நிறுவனங்களைப் பெருக்கச் செய்ய வேண்டும் என்ற திட்டவட்டமான குறிக்கோளுடன் தமிழ்நாடு அரசு நிறுவனமான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் 1970 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தொடங்கப்பட்டது.

சிட்கோ நிறுவனம், சிறு தொழில்களின் மேம்பாட்டிற்கு, குறிப்பாக படித்து வேலையற்ற இளைஞர்களுக்கும், பொறியியல்

[1999 ஏப்ரல் 28

பட்டதாரிகளுக்கும், மகளிர் தொழில் முனைவோர்களுக்கும் சுயவேலை வாய்ப்பினை அளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், சிறு தொழில்களின் வளர்ச்சியினால் மாநிலத்தில் கூடுதலான வேலைவாய்ப்பினை நேரடியாகவும் மறைமுகமாகவும் அளிக்கிறது.

***4.1*** ***இந்நிறுவனத்தின் முதன்மை நோக்கம், பின்வரும் தொழில் ஆக்க நடவடிக்கைகளுடன், சிறுதொழில் பிரிவுகளின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதே ஆகும்.***

***(1) அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதலும், தொழிற் கொட்டகைகளுக்கு வகை செய்தலும்:***

தொழிற்பேட்டைகளில் சாலைகள், வடிகால் வசதிகள், மழைநீர் வடிகால் வசதிகள், மின்விளக்கு, குடிநீர் வழங்கல் முதலியன போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்குவதே "சிட்கோ" நிறுவனத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தொழிற்பேட்டைகளை அமைப்பதற்குரிய பல்வேறு இடங்களைக் கண்டறிந்து, அவற்றை மேமபடுத்துவதுடன், அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட மனைகளுடன் பல்வேறு அளவிலான தொழிற்கூடங்களையும் உருவாக்கித் தருகின்றது. மேலும், குறிப்பாக சிறுதொழில் தொடங்க விருப்பப்படும் தொழில் முனைவோருக்கு சுலபமான தவணை அடிப்படையில்/ஒட்டு மொத்த அடிப்படையில் சீர்செய்த மனைகள் ஒதுக்கப்படுகின்றன.

தொழில் கொட்டகைகள் கட்டுவதற்கு முன்னர், விளம்பரம் செய்வதன் மூலமும் மற்றும் தேவை குறித்த ஆய்வு நடத்துவதன் மூலமும், தொழில் தொடங்கும் வாய்ப்புடைய தொழில் முனைவோருக்குத் தேவைப்படும் பணிக் கொட்டகைகள் மற்றும் சீர்செய்த மனைகள் ஆகியவற்றின் தேவை அளவினை நிறுவனம் மதிப்பீடு செய்கிறது.

இம்மாநிலத்தில் "சிட்கோ"—வினால் பராமரிக்கப்பட்டுவரும் தொழிற்பேட்டைகளின் எண்ணிக்கை 76 ஆகும். அவற்றில் 32 தொழிற்பேட்டைகள் முதலில் அரசால் நிறுவப்பட்டு, பின்னர் "சிட்கோ" நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டன. ஊரக மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதிகள் உள்ளடங்கிய பல்வேறு இடங்களில்



1999 ஏப்ரல் 28]

"சிட்கோ" நிறுவனம், 44-க்கும் மேலான தொழிற்பேட்டைகளை நிறுவியுள்ளது.

இந்நிறுவனம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து இத்திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது.

மேற்சொன்ன திட்டம் தொடர்பாக 1998-99ஆம் ஆண்டில் இலக்கு மற்றும் எய்திய சாதனை பற்றிய விவரம் பின்வருமாறு:-

| தொ. எண். | விவரங்கள் | 1998-99 ஆம் ஆண்டிற்கான இலக்கு | | 1998 ஏப்ரல் முதல் 1999 பிப்ரவரி வரையில் எய்திய சாதனை | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | மதிப்பு | எண்ணிக்கை | மதிப்பு |
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | பணிக் கொட்டகைகள் கட்டுதல் | 20 | 134.00 | 20 | 101.78 |
| 2. | சீர்செய்த மனைகள் | 300 | 900.00 | 280 | 840.00 |
| 3. | சீர்செய்த மனையின் விற்பனை | 300 | 1000.00 | 206 | 900 91 |
| 4. | பணிக் கொட்டகைகளின் விற்பனை | 200 | 1700.00 | 84 | 879.89 |

**(2) முக்கிய/அரிய மூலப்பொருட்களை விநியோகித்தல்:**

கூடுதல் எண்ணிக்கையில் கிடங்குகளைத் தொடங்குவதுடன் அடிப்படை மூலப்பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதும் இந் நிறுவனத்தின் கொள்கையாகும்.

சிறுதொழில் பிரிவுகள், இந்நிறுவனக் கிடங்குகளிலிருந்து போட்டி விலைவீதத்தில் தொழிற்பிரிவுகளுக்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெற உறுதி செய்வதற்கு இந்நிறுவனம் முயலும், "சிட்கோ" நிறுவனம் பின்வரும் மூலப் பொருட்களையும் வழங்கி வருகின்றது.

| | |
|---|---|
| (1) இரும்பு எஃகு | (2) நிலக்கரி |
| (3) மெழுகு | (4) பொட்டாசியம் குளோரேட்டு |

(5) துத்தநாகம் (6) ஈயம்

(7) காகிதம் (8) பாலிதீன் குருணைகள்

ஏப்ரல் 1998 முதல் பிப்ரவரி 1999 வரையிலான கால அளவில் இத்திட்டத்தின் கீழ் 1998-99 ஆம் ஆண்டுக்கான இலக்கு மற்றும் எய்தப்பெற்ற சாதனை பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

| தொ. எண். | விவரங்கள் | 1998-99 ஆம் ஆண்டிற்கான இலக்கு எண்ணிக்கை | மதிப்பு | 1998 ஏப்ரல் முதல் 1999 பிப்ரவரி வரையில் எய்திய சாதனை எண்ணிக்கை | மதிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | இரும்பு-எஃகு | 20000 | 3850.00 | 11453 | 2118.00 |
| 2. | நிலக்கரி | 1000 | 51.00 | 1200 | 41.00 |
| 3. | மெழுகு | 6000 | 1560.00 | 2766 | 791.00 |
| 4. | பொட்டாசியம குளோரேட்டு | 40 | 18.00 | 30 | 13.00 |
| 5. | துத்தநாகம் | 1000 | 700.00 | 638 | 447.00 |
| 6. | ஈயம் | 200 | 80.00 | 142 | 60.00 |
| 7. | காகிதம் | 500 | 173.00 | 560 | 166.00 |
| 8. | பாலித்தீன் குருணைகள் | 123 | 68.00 | 95 | 48.00 |

**(3) விற்பனை வசதி உதவித் திட்டம்:**

சிறுதொழில் பிரிவுகளை வெற்றிகரமாக நடத்த சிறப்பான விற்பனை வசதி ஆதரவு அவசியமானதென்பதை உணர்ந்து, சிறுதொழில் பிரிவுகளின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்து அளிப்பதன் மூலம் இந்நிறுவனம் உதவியை நல்கி வருகிறது.

சிறுதொழில் பிரிவுகள், அவற்றின் உற்பத்திப் பொருட்களை, எவ்வித நடைமுதல் மூலதன இடர்பாடுகளும் இல்லாத நிலையில் போட்டி விலைகளில் விற்பனை செய்ய அவற்றிற்கு உதவ, இந்நிறுவனம்



இத்திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், மாநில அரசுத்துறைகளும், துணை நிறுவனங்களும், வழங்கல்-விற்பனைத் துணைத் தலைமை இயக்குநரும் வெளியிடும் ஒப்பந்தப்புள்ளிகளில் சிறுதொழில் பிரிவுகளின் சார்பாக இந்நிறுவனம் பங்கு கொண்டு, முன்பணத் தொகையுடன், வழங்கல் ஆணைகளைப் பெறுகிறது.

1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.500.00 இலட்சம் மதிப்பிற்கான வழங்கல் ஆணைகளை நிறைவேற்ற சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் கருதுகிறது.

இத்திட்டத்தின் கீழ் எய்தப் பெற்ற சாதனை வருமாறு:-

| தொ. எண் | விவரங்கள் | 1998-99 ஆம் ஆண்டிற்கான இலக்கு எண்ணிக்கை | மதிப்பு | 1998 ஏப்ரல் முதல் 1999 பிப்ரவரி வரையில் எய்திய சாதனை எண்ணிக்கை | மதிப்பு |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. | நிதியுதவி பெற்ற தொழில் பிரிவுகளின் எண்ணிக்கை/ நிறைவேற்றப்பட்ட பணி ஆணைகளின் மதிப்பு | 100 | 500.00 | 93 | 132.00 |

சிறுதொழில் பிரிவுகள், அவற்றின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில், இந்நிறுவனம், அடிக்கடி வாங்குவோர்-விற்பவர்கள் கூட்டங்கள் பலவற்றிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

**(4) முறி மாற்று உதவி:(Bill Discounting Assistance)**

சிறுதொழில் பிரிவுகள், அரசுத் துறைகளுக்கும் / நிறுவனங்களுக்கும் வழங்கும் அவற்றின் உற்பத்திப் பொருட்களுக்கு தொகை பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதன் காரணத்தால், சிறுதொழில் பிரிவுகளுக்கு ஏற்படக்கூடிய நிதிப் பிரச்சினைகளைக் குறைக்க இத்திட்டம் வகை செய்கிறது. சிறுதொழில் பிரிவுகள் அரசுத் துறைகளுக்கும் / நிறுவனங்களுக்கும் வழங்கும் பொருட்களுக்காக அவை கொடுக்கும் பட்டிகளுக்குத் தொகை வழங்க இத்திட்டம் வகை செய்கிறது. சிறுதொழில் பிரிவுகளுக்கு அளிக்கப்படும் கடன் கால அளவு 45 முதல் 90 நாள் வரை அல்லது கொள்முதல் ஆணையில் வகை

செய்துள்ளபடியான கடன் கால அளவாக இருக்கலாம். இத்திட்டத்தின்கீழ், சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், அரசுத் துறைகளுக்குப் பொருட்கள் வழங்கியுள்ள தொழில் பிரிவுகளுக்கு, ஏற்றுக் கொள்ளப்பட்ட வழங்கல் பட்டிகளின் பேரில், பட்டி மதிப்பில் 80 சதவீத அளவிற்குத் தொகைகளை வழங்குகிறது. எஞ்சிய தொகை அரசுத் துறைகளிடமிருந்து தொகை வரப்பெற்ற பிறகு அளிக்கப்படுகிறது. இதற்கு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் சிறு அளவு தரகுத் தொகையை விதித்து வசூலிக்கிறது. இந்தப் புதிய திட்டம், சிறுதொழில் பிரிவுகள் எதிர்கொள்ளும் கடும் நடைமுறை மூலதனப் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்று நம்பப்படுகிறது.

5) ஏற்றுமதி விற்பனை நிதியுதவி:

ஏற்றுமதி விற்பனைக்கான வாய்ப்பைக் கண்டறிய சிறுதொழில் நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்கு உதவ 2-11-1998 ஆம் நாளன்று ஒரு புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் "டான்ஸ்டியா எப்என்எப்" ஒத்துழைப்புடன், சிட்கோ நிறுவனத்திடம் பதிவு செய்து கொண்டுள்ள தொழில் பிரிவுகளுக்கு, "வெப் சைட்டுகளை" மேம்படுத்துவது, வெப் சைட்டுகளில் அவற்றின் உற்பத்திப் பொருட்களைக் காட்டி வைப்பது, பிறகு அப்பொருள்களைச் சிறப்பான முறையில் விற்பனை செய்வது ஆகிய வகைகளில் உதவும். இது சிறு அளவு ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான நிறுவன ஆதரவை நல்கும். சிறுதொழில் பிரிவுகளின் உற்பத்திப் பொருட்களை உலகிற்கு விற்பனை செய்ய பல்வேறு பணிகளை ஆற்றுவதன் மூலம் சிட்கோ, பொதுவான ஏற்றுமதி மேலாளராகச் செயல்படும்.

சிறுதொழில் பிரிவுகளின் பயனுக்காக ஏற்றுமதி விசாரணைகளைப் பெருக்க, ஒவ்வொர் ஆண்டும் புதுடில்லியில் நடத்தப்படும் இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் சிட்கோ நிறுவனமும் பங்கு கொண்டு வருகிறது. ஏற்றுமதிக்கான நடவடிக்கைகளை மிகப் பரந்த





அளவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், சிறு தொழில் பிரிவுகள், உள்நாட்டு விற்பனை வாய்ப்பை மட்டும் நம்பி இருக்க முடியாது. அவை அவற்றின் வளர்ச்சிக்காக, அவற்றின் உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வேண்டியுள்ளது.

(6) சொந்தப் பயனுக்கான மின் உற்பத்தி நிலையங்கள்:

தடையற்ற நல்ல தரமான முறையில் மின் வழங்கல் இருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து சிட்கோ பெரிய தொழில் பேட்டைகளில் சொந்தப் பயனுக்காக மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. பத்து தொழிற்பேட்டைகளில் சொந்தப் பயனுக்கான மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்யும் பணி ஏற்கெனவே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவை ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன.

4.2 1999-2000 ஆம் ஆண்டுக்கான கண்ணோட்டம்:

(1) அடிப்படை வசதிகள்:

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில், ஆண்டு ஒன்றுக்கு குறைந்தது 200 பணிக் கொட்டகைகளைக் கட்ட இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இப்போது இந்நிறுவனம், சிறுதொழில் பிரிவுகளிடமிருந்து வரக்கூடிய கோரிக்கைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, 1999-2000 ஆம் ஆண்டில் கூடுதலாக பணிக் கொட்டகைகளைக் கட்டவும், மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளது.

(2) மூலப் பொருட்களை வழங்குதல்:

தேவை, வழங்கல் ஆகியவற்றிற்கிடையேயான இடைவெளியை நிரப்ப, சிறுதொழில் பிரிவுகளின் தேவைகளை சமாளிக்க பாரபின் மெழுகு போன்ற இன்றியமையா மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய சிட்கோ கருதியுள்ளது.

[1999 ஏப்ரல் 28

1999-2000 ஆம் ஆண்டில், சிறுதொழில் பிரிவுகளுக்கு பின்வருமாறு மூலப்பொருட்களை வழங்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது:

| தொ. எண் | விவரங்கள் | 1999-2000 ஆம் ஆண்டுக்கான இலக்கு | |
|---|---|---|---|
| | | அளவு (மெட்ன்களில்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. | இரும்பு, உருக்கு | 25,000 | 4,320.00 |
| 2. | மெழுகு | 9,500 | 2,590.00 |
| 3. | காகிதம் | 600 | 207.00 |
| 4. | கல்கரி | - | - |
| | ஏஜென்சி இனங்கள்: | | |
| | துத்தநாகம், ஈயம், ஐ.பி.சி.எல். பொருள்கள் முதலியன | 1,500 | 8.00 |

(3) உருவாகும் நிலையில் உள்ள புதிய திட்டங்கள்:

கடந்த ஆண்டு 50 புதிய சிட்கோ தொழிற்பேட்டைகளை மூன்று ஆண்டுகளில் அமைக்கத் திட்டமிடப்பட்டது. அதற்கேற்ப, புதிய தொழிற்பேட்டைகள் அமைக்க அரசு புறம்போக்கு நிலங்களும், கையகப்படுத்தத் தக்க தகுந்த பட்டா நிலங்களும் கண்டறியப்பட்டு வருகின்றன.

(4) சிட்கோ நிறுவனம், அதனுடைய மத்திய அலுவலகத்தில் முன்னிலை அலுவலகத்தை (Front Office) ஏற்கெனவே அமைத்து உள்ளது. இது பொதுவான ஏற்றுமதி மேலாளராக செயல்படுவதுடன், சிறுதொழில் பிரிவுகளுக்காக, 'வெப் பேஜஸ்களை' மேம்படுத்துவதுடன், ஏற்றுமதி விற்பனை குறித்து சிறு தொழில் பிரிவுகளுக்குத் தேவைப்படக் கூடிய தகவல்களை பல்வேறு வாயில்களிலிருந்து சேகரித்து தேவைப்படக்கூடிய தொழில் பிரிவுகளுக்கு வழங்கும் பணியையும் புரிகிறது.

(5) திற மேம்பாட்டு மையம்:

தொழில்களுக்கும், பயிற்சிக்கும் திறன் வாய்ந்தவர்களைக் கிடைக்கச் செய்யவும், தற்போதுள்ள தொழிலாளர்களின் திறனை மேம்படுத்தவும்,



1999 ஏப்ரல் 28]

சிட்கோ நிறுவனம், பல்வேறு தொழில்பேட்டைகளில், திற மேம்பாட்டு மையங்களை அமைக்க உதவும்.

(6) சூரிய வெப்ப ஆற்றல் மையம்:

சிட்கோ தொழிற்பேட்டைகளில், சூரிய வெப்ப அடிப்படையிலான மின்உற்பத்தித் திட்டங்களை ஊக்குவிக்க அல்லது மேம்படுத்த சிட்கோ உதவும்.

(7) ஆலோசனைப் பிரிவு:

பின்வரும் வழிகளில் புதிய தொழில் முனைவோர்களுக்கு உதவி நல்க, சிட்கோ நிறுவனம் ஆலோசனைப் பிரிவை அமைத்துள்ளது:

(அ) இந்த அலுவலகத்தை அணுகும் புதிய தொழில் முனைவோர்களுக்கு எந்தத் துறைகளில் ஆலோசனை/உதவி தேவைப்படுகிறது என்பதைக் கண்டறிதல்.

(ஆ) படிவங்கள்/விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்ய உதவுதல்,

(இ) தமிழ்நாடு மின்வாரியத்திடமிருந்து மின் இணைப்பு பெறவும், வருங்கால வைப்புநிதி/தொழிலாளர் காப்புறுதித் திட்டத்தில் பதிவு செய்யவும், விற்பனை வரி பதிவு செய்யவும் உதவுதல்,

(ஈ) மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து அனுமதி பெற உதவுதல், மற்றும்;

(உ) விரைவில் அனுமதி பெற, மேலே சொன்ன (இ) (ஈ) இனங்கள் தொடர்பாக, பல்வேறு துறைகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளுதல்.

(8) பரவலான கட்டமைப்பு:

அண்மைக்காலம் வரை சிட்கோ மாவட்ட அளவில் மட்டும் கிளை அலுவலகங்களைப் பெற்றுள்ளது. தொழில் முனைவோர்களும் வளர்ந்து வரும் தொழில் அதிபர்களும் எளிதில் தொடர்பு கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தில், சிட்கோ நிறுவனம், முக்கியமான பெரும்பாலான தொழிற்பேட்டைகளில் கிளை அலுவலகங்களைத் திறந்துள்ளது.

[1999 ஏப்ரல் 28

5. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

தொடக்கத் திட்டக் காலத்தில் மாநிலம் முழுவதிலும் பரவலாகத் தொடங்கப்பட்ட சிறு தொழில் பிரிவுகளைக் கொண்ட நிறுவனம் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) ஆகும். டான்சி நிறுவனம், மாநில, மத்திய அரசு துறைகளுக்கும், பொதுத் துறை நிறுவனங்களுக்கும், பொதுமக்களுக்கும், பொருள்களையும் பணிகளையும் வழங்கி வந்துள்ளது.

தற்போது டான்சி அமைப்பில் 31 உற்பத்திப் பிரிவுகளும், 3 திட்டங்களும், 6 விற்பனை மையங்களும் உள்ளன.

மேற்சொன்ன தொழிற் பிரிவுகளுடன், டான்சி பின்வரும் இரண்டு துணை நிறுவனங்களைப் பெற்றுள்ளது. (1) தமிழ்நாடு பெயிண்ட்ஸ் அண்டு அலைய்டு ப்ராக்ட்ஸ் லிமிடெட் (டாபாப்), (2) தமிழ்நாடு மாநில பொறியியல் பணி நிறுவனம் (செஸ்காட்)

**5.1. உற்பத்திப் பொருட்கள்:**

டான்சி நிறுவனத்தின் உற்பத்திப் பணிகளை பின்வருமாறு தொகுக்கலாம்:

| தொகுதி | உற்பத்திப் பணிகள் |
|---|---|
| கட்டுமானம் | சர்க்கரை ஆலைகள், சிமெண்ட் தொழிற்சாலைகள், அனல் மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் கனரக கட்டுமானங்கள், உயர் அழுத்த மின்மாற்றித் தொடர்கள், நுண் அலைக் கோபுரங்கள் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் கோபுரத்துணைப் பாகங்கள் முதலியன. |
| பொறியியல் | தொழிற்சாலைக் கொட்டகைகள், திரையரங்குகள், பள்ளிக் கட்டடங்கள், கிடங்குகள் முதலியவற்றிற்கான இலகுவான கட்டுமானங்கள், ஆங்கிள்கிராஸ்ஆம், வீட மெட்டல், பேபரிகேஷன் போன்ற மின்வாரிய மின்கம்பித் தொடர் பொருட்கள், பங்குகள், ஸ்டால்கள், (Bunks, Stalls) ஆகியவற்றைத் தயாரித்தல் முதலியன. |
| வார்ப்படச்சாலை | இயந்திரத்துடன்கூடிய இயந்திரமில்லாத துணைப் பாகங்கள், ஜி.ஐ. குழாய்கள் ஸ்பெஷல்ஸ். |



1999 ஏப்ரல் 28]

| தொகுதி | உற்பத்திப் பணிகள் |
|---|---|
| அறைகலன்கள் | அறைகல மரப்பொருட்கள், அக அலங்காரப் பொருட்கள், பேனலிங் முதலியன. வீட்டு உபயோக, அலுவலக உபயோக, மருத்துவமனை உபயோகத்திற்கான உருக்கு அறைக் கலன்கள் முதலியன. |
| பல்வகை | இந்தியா மார்க் II ஆழ்கிணறு விஎல்டிஎம் கை பம்புகள் தயாரிப்பு, கேஸ்கட்ஷெலாக், பிக்சர் வார்னிஷ் போன்ற சாராவி அடிப்படையிலான பொருட்கள், டைட்டான் வாட்சுகளின் உதிரிப் பாகங்கள். |

**5.2 சாதனை**

1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ. 40.30 கோடி உற்பத்தி இலக்கிற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

28-2-1999 வரையிலான கால அளவில் எய்தப் பெற்ற சாதனை வருமாறு:

**சாதனை**

| | 28-2-1999 வரை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| மொத்த விற்று முதல் | 2899.59 |
| உற்பத்தி | 2982.05 |
| ஈட்டிய தொகை | 740.07 |
| ஆதாயம்(+)/இழப்பு(-) | (-)481.71 |

அண்மையில் தமிழ்நாடு மின்வாரியம், மின் கம்பித்தொடர் பொருள்களை வழங்க, டான்சி நிறுவனத்துடன் ஆண்டுக் கட்டண வீத ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளது. இந்தக் கட்டண வீத ஒப்பந்தத்தின்கீழ் வரப்பெற்ற அதிக அளவிலான வழங்கல் ஆணைகளும் பம்பு, பம்பு உதிரி பாகங்கள், அறைக்கலன்கள், கோபுர துணைப் பாகங்கள் ஆகியவற்றிற்கான ஏனைய வழங்கல் ஆணைகளும் இதன் சாதனையை மேம்படுத்த வழிவகுக்கும்.

இலக்கை எய்த டான்சி, அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

**5.3. தொழிலாளர் உறவுகள்**

தற்போது தொழிற்சாலை தொழிலாளிகள் உட்பட சுமார் 1,218 பணியாளர்கள் உள்ளனர். இணக்கமான தொழில் உறவு பராமரிக்கப்பட்டு வருகிறது.

**5.4. சீரமைப்பு**

நிருவாகத்தை முடுக்கிவிடவும், இந்த அமைப்பின் சாதனையை மேம்படுத்தவும், நிறுவன அலுவலகம், வட்டார அலுவலகம், உற்பத்திப் பிரிவுகள் ஆகியவற்றைச் சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**5.5. புதிய உற்பத்திப் பொருட்களைக் கண்டறிதலும், மேம்படுத்துதலும்**

பெருமளவில் உற்பத்தி செய்யவும், டான்சி மூலம் விற்பனை செய்யவும், புதிய தொடர்பான உற்பத்திப் பொருட்களைக் கண்டறிந்து மேம்படுத்தும்பணி, வடிவமைப்பு, உற்பத்திப் பொருள் மேம்பாட்டுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது அடுத்த நிதி ஆண்டில் தன் பணியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**5.6. துணை நிறுவனங்கள்**

(1) *தமிழ்நாடு மாநில பொறியியல் பணி நிறுவனம் (செஸ்காட்) (முன்னாள் தமிழ்நாடு மொப்பட்ஸ் லிமிடெட்)*

இந்தத் துணை நிறுவனம், மொப்பட்டுகளைத் தயாரிக்க 1977 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இயக்க இடர்பாடுகள் காரணமாக மொப்பட் தயாரிப்புப் பணி 1981 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டது. தொழிலாளர், இயந்திரத் திறனைப் பயன்படுத்த, பணி ஆணைகளுக்குப் பொருட்களை தயாரித்து வழங்க நிறுவனம் தொடங்கியது. துணை நிறுவனத்தில் இரண்டு தொழிற் பிரிவுகள், அதாவது அசெம்ளிஷாப் அண்டு மெஷின் ஷாப் உள்ளன.

செஸ்காட் நிறுவனம் டான்சி பிளேம் (Tansi Flame) என்ற துருவுறா எஃகு திரவ பெட்ரோலிய எரிவாயு அடுப்பினைத் தயாரித்து அதற்கு இந்தியத் தரககட்டுப்பாட்டுச் சான்றிதழையும் பெற்றுள்ளது. இந்த அடுப்பு அறிமுகம் செய்யப்பட்டு நன்கு விற்பனையாகி வருகிறது. இந்த அடுப்பைப் பெருமளவில் உற்பத்தி/விற்பனை செய்வதை மேம்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. சிறிய அளவில் ஒரு அடுப்பு மேடை கொண்ட பெட்ரோலிய எரிவாயு அடுப்பினைத் தயாரித்து சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது.





1996-97—லிருந்து இந்நிறுவனத்தின் உற்பத்தி, விற்பனை, ஆதாய இழப்பு ஆகிய விவரங்கள் வருமாறு:—

| ஆண்டு | உற்பத்தி | விற்பனை | ஆதாய-இழப்பு விவரங்கள் |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1996-97 | 227.12 | 225.38 | (—)33.37 |
| 1997-98 | 171.27 | 174.10 | (—)92.88 |
| 1998-99 (28-2-1999 வரையில்) | 235.05 | 241.05 | (—)54.99 |

*(2) தமிழ்நாடு வண்ணப் பூச்சுகள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் (டாபாப்)*

இந்த நிறுவனம் 1985-ல் ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனம் 1-4-1986 லிருந்து உற்பத்தியைத் தொடங்கியது. இந்நிறுவனம் சிவப்பு ஆக்ஸைடு வண்ணப்பூச்சுகள், சாலைகளில் போக்குவரத்து அடையாளக் குறி இடுகின்ற இரப்பர் கலந்த வண்ணப் பூச்சுகள் மற்றும் மெழுகுத் தன்மை கொண்ட வண்ணப் பூச்சு முதலியவற்றைத் தயாரிக்கிறது. இந்த வண்ணங்கள் டான்சியில் தயாராகும் பொருட்களில் உபயோகப்படுத்துவதோடு காவல் துறை, சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத் துறை, சர்க்கரை ஆலை நிறுவனம் மற்றும் இது போன்ற ஏனைய நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

1996-97—லிருந்து இந்நிறுவனத்தின் உற்பத்தி, விற்பனை, ஆதாய இழப்பு ஆகிய விவரங்கள் வருமாறு:—

| ஆண்டு | உற்பத்தி | விற்பனை | ஆதாய-இழப்பு விவரங்கள் |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1996-97 | 114.50 | 106.50 | (+)0.10 |
| 1997-98 | 111.95 | 113.19 | (+)0.28 |
| 1998-99 (28-2-1999 வரையில்) | 100.72 | 96.07 | (—)1.59 |

இந்நிறுவனம் அதன் செயற்பாடுகளை விரிவாக்குவதற்கும், பல திறப்படுத்துவதற்கும், 1-5-1991-லிருந்து தமிழ்நாடு மொபட்ஸ் நிறுவனத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்த கருவிகள் அறையை (Tool Room) எடுத்துக் கொண்டுள்ளது.

## 6. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ)

ரூ.10 கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம், 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அரசு நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டது. இதற்கு அரசு வட்டியில்லா பங்கு மூலதனமாக ரூ.250 இலட்சம் வழங்கியுள்ளது.

### 6.1. இந்நிறுவனத்தின் முக்கியமான நோக்கங்கள் வருமாறு:

தமிழ்நாட்டில் தோல் தொழிலை மேம்படுத்துவதற்காக,

(அ) மூலப்பொருட்கள், இரசாயனப் பொருட்கள் முதலியவற்றை நியாயமான விலையில் சிறு தோல் பதனிடுபவர்களுக்கு வழங்குவது.

(ஆ) காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு விற்பனை உதவி அளிப்பது.

(இ) காலணி மற்றும் இதர தோல் பொருட்கள் தயாரிப்பதில், சிறு கைவினைஞர்களின் திறனை மேம்படுத்துவது.

(ஈ) தோல் தொழிலில் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு அடிப்படை வசதிகள் அளிப்பது.

(உ) தமிழ்நாட்டில் எட்டு இடங்களில் பொது சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதன் மூலம் தோல் தொழிலால் ஏற்படும் மாசு மற்றும் சுற்றுப்புறக் கேட்டை நீக்குவதற்கு உதவியளிப்பது ஆகியனவாகும்.

### 6.2. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் நிருவகித்து வரும் தொழிற்பேட்டை:-

மாதவரத்தில், தோல் தொழிலுக்காகச் செயல்பட்டு வரும் தொழிற்பேட்டையை, 18-6-1986 -லிருந்து 'டால்கோ' நிறுவனம், 'சிட்கோ' நிறுவனத்திடமிருந்து எடுத்துக்கொண்டது. தொழிற்கூடங்களின் உரிமையாளர்களிடமிருந்து, பராமரிப்புக் கட்டணங்கள் வசூலிப்பதன்





மூலம், தொழிற்பேட்டையின் பராமரிப்பை 'டால்கோ' நிருவாகிகள் கவனித்துக் கொள்கின்றனர். தற்பொழுது சொந்த உரிமை அடிப்படையில் 35 தொழிற்கூடங்கள் தொழில் முனைவோர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஒரு தொழிற்கூடம் டால்கோ நிறுவனத்தினால் வைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

### 6.3. மூலப் பொருள் வழங்குவதில் 'டால்கோ'வின் பங்கு:

இந்நிறுவனம், சிறு தோல் பதனிடுவோருக்கு இரசாயனப் பொருட்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பசைப்பொருள் (imported wattle extract) ஆகியவற்றை நியாயமான விலையில் வழங்குகிறது. திண்டுக்கல், பேரணாம்பட்டு, வாணியம்பாடி, திருச்சிராப்பள்ளி மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் 'டால்கோ' நிறுவனத்தின் மூலப்பொருள் வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த வங்கிகளின் விற்று-முதல் இந்நிறுவனத்தின் மொத்த விற்பனையில் பெரும் பங்கு வகிக்கிறது.

### 6.4. சிறு கைவினைஞர்களுக்கு உதவி அளிப்பதில் டால்கோவின் பங்கு:

சிறு கைவினைஞர்களுக்கு உதவிடும் வகையில் பெரம்பூரில் ஒன்றும், சேலத்தில் ஒன்றும், ஆக இரு பொருட்கள் சேகரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் கைவினைஞர்களிடமிருந்து காலணிகளையும் தோல் பொருட்களையும் கொள்முதல் செய்து சீரான வேலைவாய்ப்பினை அளித்து வருகின்றன. இந்தப் பொருட்கள் "டால்கோ" வின் விற்பனைக் கூடங்கள் மற்றும் பொருட்காட்சி, வர்த்தகப் பொருட்காட்சிகள் ஆகியவற்றின் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன.

### 6.5. தோல் பதனிடும் தொழில்களுக்கான கழிவுகள் சுத்திகரிப்பு உதவிகள்:

தமிழ்நாட்டில் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரைச் சுத்திகரிப்பதற்காக உள்ள எட்டு பொது சுத்திகரிப்பு நிலையங்களை 'டால்கோ' மேற்பார்வை செய்கிறது. அவற்றில் 5 மையங்கள் வளையாம்பட்டு, உதயேந்திரம், பக்கலபள்ளி, இராணிப்பேட்டை, திண்டுக்கல் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. திருச்சி, சி.வி. பட்டரை, பேரணாம்பட்டிலுள்ள கோட்டா செக்டர் ஆகிய இடங்களிலுள்ள எஞ்சியுள்ள 3 மையங்கள் பல்வேறு நிலையங்களில் முடிவடையும் தருவாயில் உள்ளன.

[1999 ஏப்ரல் 28

**6.6. தோல் தொழிற்கூடங்கள்:**

டான்சி நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலிருந்த நான்கு தோல் தொழிற்கூடங்கள், 1986 ஏப்ரலில் 'டால்கோ' நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. அவையாவன:

(அ) டால்கோ தோல் பதனிடும் தொழிற்சாலை, விண்ணமங்கலம்

(ஆ) டால்கோ தோல் பதனிடும் தொழிற்சாலை, மாதவரம்

(இ) டால்கோ தோல் பணிகள் தொழிற்கூடம், பல்லாவரம்

(ஈ) டால்கோ தோல் பணிகள் தொழிற்கூடம், பெரம்பூர்

மாதவரத்திலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைக்கு புத்துயிரளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விண்ணமங்கலத்திலுள்ள ஏனைய தோல் பதனிடும் தொழிற்சாலைப் பணி, முடிக்கப்பட்ட தோல் உற்பத்தி செய்தல் மற்றும் சேவைப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பல்லாவரம் மற்றும் பெரம்பூரிலுள்ள மற்ற இரண்டு தோல் பணிகள் தொழிற்கூடங்கள், மத்திய மாநில அரசுகளின், பொதுத் துறை நிறுவனங்களின் தேவைகளைப் பெருமளவில் நிறைவு செய்யும் வகையில் ஷூஸ், பூட்ஸ், உதிரிப் பாகங்கள், கையுறைகள், நடத்துநர் பைகள், வார்ப்பட்டைகள் (Belts) முதலியவற்றை உற்பத்தி செய்கின்றன.

(உற்பத்தி விவரம் 28-2-1999 முடிய)

(ரூபாய் இலட்சத்தில்)

| | குறியீடு | எய்தியது | விழுக்காடு |
|---|---|---|---|
| உற்பத்தி மதிப்பின் விவரம் | 540.00 | 219.91 | 44% |
| விற்பனை மதிப்பின் விவரம் | 1065.00 | 399.62 | 41% |

**முடிவுரை:**

அரசு மேற்கொண்டுள்ள புதிய கொள்கையின் நடவடிக்கைகள் இம்மாநிலத்தில், சிறு தொழில் துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் அவசியமான உதவியை நல்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



1999 ஏப்ரல் 28]

## இணைப்பு 1

### 1999-2000 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள்

### தொழில் வணிக இயக்ககம், சென்னை-600 005.

(ரூபாய் இலட்சத்தில்)

| தொடர் எண் | திட்டத்தின் பெயர் | 1999-2000 ஆம் ஆண்டுக்குரிய மொத்த செலவு |
|---|---|---|
| | **தகவல் தொழில் நுட்பம்** | |
| 1. | கோயம்புத்தூரில் தகவல் தொழில் நுட்பவியல் (Incubator) மையத்தை ஒரு சங்கமாக அமைத்தல் | 50.00 |
| 2. | மதுரையில் CED-யுடன் இணைந்து தகவல்-தொழில் நுட்பவியல் (Incubator) மையம் அமைத்தல் | 50.00 |
| | **தொழில் முனைவோர் பயிற்சியும் வளர்ச்சியும்** | |
| 3. | 1000 மகளிருக்குப் பயிற்சி அளித்தலுக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் | 16.40 |
| 4. | தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வளர்ந்து வரும் 150 தொழில் முனைவோருக்கு (பட்டதாரிகள்/பட்டயம் பெற்றவர்கள்) தனிப்பயிற்சி அளித்தல் | 6.00 |
| | **தொழில் கூட்டுறவு** | |
| 5. | தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியிலுள்ள உலர்ந்த திராட்சை தயாரிப்பாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கத்திற்கு பங்கு மூலதன நிதி உதவி | 12.50 |
| | பயிற்சி அளிக்கும் நிலையங்களில் அத்தியாவசிய வசதிகளைப் பெருக்குதல் | |
| 5. | விருத்தாசலம், மண்பாண்டத் தொழில் நுட்ப நிலையத்தை வலுப்படுத்துதல்-கூடுதலாக சாதனங்கள் வாங்குதல், பழைய சாதனங்களுக்குப் பதிலாக புதிய சாதனங்களை அமைத்தல் | 5.10 |

[1999 ஏப்ரல் 28

| | | |
|---|---|---|
| | இயக்ககத்தை கணினி மயமாக்குதல் | |
| 7 | சென்னை-5 தொழில் வணிக இயக்ககத்தில் கணினி வசதிகளை உருவாக்குதல் | 4.75 |
| | மாவட்டத் தொழில் மையங்களுக்கு அடிப்படை வசதிகளை அளித்தல் | |
| 8. | தூத்துக்குடி, மாவட்டத் தொழில் மையத்திற்கு திறந்த கிணறுக்கு வகை செய்தல் | 0.90 |
| 9. | நாகர்கோவில், மாவட்டத் தொழில் மையத்திற்கு துளைக்கிணறு ஒன்று தோண்டி, ஜெட் பம்ப் பொருத்துதல் | 1.46 |
| | வேதியியல் ஆய்வுக்கூடங்களில் மாசு சோதனை ஆய்விற்கு வசதி செய்தல் | |
| 10. | கிண்டி, வேதியியல் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக் கூடத்தை வலுப்படுத்துதல் | 0.35 |
| 11. | சேலம், வட்டார சோதனை ஆய்வுக் கூடம் | 0.35 |
| 12. | கோயம்புத்தூர், வட்டாரப் சோதனை ஆய்வுக் கூடம் | 0.35 |
| 13. | தூத்துக்குடி, வட்டாரப் பரிசோதனை ஆய்வுக்கூடம் | 0.35 |
| 14. | சென்னை-32, கிண்டி வேதியியல் பரிசோதனை பகுப்பாய்வு சோதனைக் கூடத்தில் இரப்பரைப் பரிசோதிப்பதற்கான வசதிகளை வலுப்படுத்துதல் | 1.00 |
| | அரசு நிறுவனம்: | |
| 15. | தொழில் முனைவோருக்கு எளிய தவணைக் கடன் வழங்க தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு சமபங்கு மூலதனத் தொகை அளித்தல் | 100.00 |
| | பயிற்சி அளிக்கும் நிலையங்களில் அத்தியாவசிய வசதிகளைப் பெருக்குதல் | |
| 16. | திண்டுக்கல்லில், தொழில் நுட்பவியல் நூலகத்தை பெருக்குதலும், CAD வசதிகளுடன் சிறிய கணினி மையத்தை அமைத்தலும் | 11.40 |
| 17. | சென்னை-32, கிண்டியிலுள்ள அரசு தொழில் நுட்பப் பயிற்சி மையத்தில் குளிர்பதன மற்றும் சீர்வளி அடிப்படை வசதிகளை உருவாக்குதல் | 5.38 |
| | மொத்தம் | 266.29 |



1999 ஏப்ரல் 28]

## இணைப்பு-II

### அட்டவணை-I(அ)

### நிதி ஒதுக்கீடு விபரம் (ஊரக மற்றும் சிறு தொழில்கள்)

**கோரிக்கை எண் 47**

(ரூபாய் ஆயிரங்கள்)

| | கணக்குத் தலைப்புகள் | 1998-99 வரவு செலவு திட்ட மதிப்பீடு | 1998-99 திருத்தப்பட்ட திட்டவரவு செலவு மதிப்பீடு | 1999-2000 வரவு செலவு திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 1. | 2059-பொதுப் பணிகள் | 10,75 | 10,75 | 11,34 |
| 2. | 2551-மலைப்பகுதி விரிவாக்கத் திட்டம் | 2 | 2 | 2 |
| 3. | 2851-கிராமம் மற்றும் சிறு தொழில்கள் | 31,83,78 | 34,03,43 | 31,36,96 |
| 4. | 2852-தொழில்கள் | 5,64,29 | 4,59,38 | 4,69,75 |
| 5. | 2885-தொழில் நிறுவிட உதவி | 48,43,78 | 44,20,03 | 32,36,43 |
| | மொத்தம் | 86,02,62 | 82,93,61 | 68,54,50 |

### அட்டவணை I (ஆ)

**கோரிக்கை எண் 59**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 4425-முதலீட்டுச் செலவு | 10,04 | 10,03 | 4 |
| 2. | 4551-மலைப்பகுதி குறித்த முதலீட்டுச் செலவு | 3 | 3 | 3 |
| 3. | 4851-கிராமம் மற்றும் சிறு தொழில் முதலீட்டுச் செலவு | 14,62 | 18,60 | 6,21 |
| | மொத்தம் | 24,69 | 28,66 | 6,28 |

## இணைப்பு-III

*(59 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### பட்டு வளர்ச்சித் துறை

### 1999-2000 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

1.01. தமிழகத்தில் உள்ள கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பை நல்குவதில் பட்டுத்தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். கடந்த பல ஆண்டுகளாக கிராமப்பகுதிகளில் ஏழ்மையை அகற்றி, சிறு, குறு மற்றும் நலிவடைந்த விவசாயிகளுக்கு, குறிப்பாக மகளிருக்குக் கணிசமான பொருளுதவி கிடைக்க பட்டுத்தொழிலும் உதவுகிறது.

1.02. சேலத்தில் செயல்பட்டு வரும் பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் அலுவலகம், பல்வேறு மாவட்டங்களிலும் பட்டுத்தொழில் நுட்ப உதவியும், நிதியுதவியும் அளித்து வருகிறது. தமிழகத்தில் பட்டுத்தொழில் வளர்ச்சியுற, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம், சிறப்பு மத்திய நிதியுதவித் திட்டம், பகுதி 1 மற்றும் பகுதி 2 முதலிய வளர்ச்சித் திட்டங்களையும், சுவிஸ் கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் போன்ற பன்னாட்டு நிதியுதவியுடன் குழுமேம்பாட்டு பட்டு வளர்ப்புத் திட்டங்களையும் பட்டு வளர்ச்சித் துறை செயல்படுத்துகிறது.

1.03. மாநிலத்தில் பட்டுத்தொழில் வளர்ச்சியுற கீழ்க்காணும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

(i) உயர்ரக மல்பரி நடவு மேற்கொள்ள விவசாயிகளுக்கு ஆர்வம் ஏற்படுத்துதல்.

(ii) மல்பரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு, பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றுதல், பட்டு விதை உற்பத்தி பற்றிய தொழில் நுட்பப் பயிற்சியளித்தல்.

(iii) பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்வதற்குத் தேவையான புழு வளர்ப்பு மனை கட்டவும், தளவாடங்கள் வாங்கவும், பட்டுநூற்பு மற்றும் முறுக்கேற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யவும், நடைமுறை மூலதன உதவி பெற வங்கிகள் கடனுதவி வழங்குவதற்குப் பரிந்துரைத்தல்.

[1999 ஏப்ரல் 28

(iv) நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்தி செய்வதை உறுதிசெய்தல்.

(v) பட்டு விவசாயிகள் நோய்த் தடுப்பு முறைகளைக் கையாண்டு, தரமான கூடுதலான பட்டுக்கூடுகள் உற்பத்திக்குத் தேவையான தொழில்நுட்ப உதவியளித்தல்.

(vi) உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகள் மற்றும் பட்டுநூலுக்கு வெளிப்படையான, போட்டி விலை கிடைக்கக்கூடிய விற்பனை முறைக்கு வழிவகை செய்தல்.

(vii) தனியார் மற்றும் கூட்டுறவு அடிப்படையில் பட்டு நூற்பு நிலையங்கள் நிறுவுவதற்கு உதவியளித்தல்.

(viii) மல்பரி தோட்டங்களில் "சொட்டுநீர்ப் பாசனம்" என்னும் சிக்கன நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவதற்கு நிதியுதவி அளித்தல்.

***2. 1998-99* ஆம் ஆண்டில் துறையின் முக்கிய இயல்பு மற்றும் நிதிச்சாதனை விவரம் வருமாறு:**

**இயல்பு சாதனை**

| வ. எண் | விவரம் | அலகு | குறியீடு | சாதனை |
|---|---|---|---|---|
| 1. | மல்பரி விரிவாக்கம் (கூடுதல் பரப்பு) | ஹெக்டேர் | 2024 | 3070 |
| 2. | பட்டு முட்டை உற்பத்தி | இலட்சத்தில் | 204.67 | 121.25 |
| 3. | பட்டுக் கூடுகள் உற்பத்தி | மெட்ரிக் டன் | 8187 | 5800 |
| 4. | கச்சாப்பட்டு உற்பத்தி | மெட்ரிக் டன் | 862 | 611 |
| 5. | வேலைவாய்ப்பு (கூடுதல்) | எண்ணிக்கை | 26316 | 38370 |



1999 ஏப்ரல் 28]

**நிதி சாதனை**

| வ. எண் | திட்ட விவரம் | ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | திட்டப் பணிகள் | | |
| | பகுதி-1 | | |
| | பகுதி-2 | 50.750 | 50.670 |
| 2. | திட்டம் சாராப் பணிகள் | 1949.43 | 1924.640 |
| 3. | பழங்குடியினர் நல துணைத் திட்டம் | 11.075 | 10.300 |
| 4. | மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | | |
| | அ. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 7.250 | 7.250 |
| | ஆ. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | 20.000 | 19.900 |
| 5. | தன்னாட்சி அமைப்புகள் ஆதரவுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 6.790 | 5.680 |
| 6. | பட்டு - 2000 திட்டம் | 8.110 | 6.680 |
| | **மொத்தம்** | **2053.405** | **2025.120** |

***3. 1999-2000* ஆம் ஆண்டுத் திட்டத்தில் கீழ்க்காணும் இயல்பு குறியீடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:**

(i) பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி 2024 ஹெக்டேர் பரப்பில் மல்பரி நடவு மேற்கொள்ளல்.

(ii) 245.16 இலட்சம் நோயற்ற பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு நூற்புக் கூடுகள் உற்பத்தி செய்வதற்காக விநியோகிக்கப்படும்.

[1999 ஏப்ரல் 28

(iii) மாநிலத்தில் 9806 மெட்ரிக் டன் அளவிற்கு பட்டுக் கூடுகள் உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(iv) நடப்பு ஆண்டில் 1032 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(v) நடப்பு ஆண்டில் 26316 மனித நாட்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

***4. 1999-2000* ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன:**

(i) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

(ii) மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டம்

(iii) ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்

***5.01.* மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:** நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டம் 1981-82 ஆம் ஆண்டு முதலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் புதிய பட்டு விவசாயிகளுக்குக் கீழ்க்காணும் உதவிகள் வழங்கப்படும்:

(i) 50 விவசாயிகளுக்கு தலா ரூ.500/- மதிப்பிலான உயர் ரக மல்பரி நாற்றுகள் இலவசமாக விநியோகம் செய்தல்.

(ii) 50 பட்டு விவசாயிகளுக்கு ஒரு மாத கால புழு வளர்ப்புப் பயிற்சியும், பயிற்சி கால உதவித் தொகையாக ரூ.500/- வீதமும் வழங்கப்படும்.

(iii) 50 விவசாயிகளுக்கு நபர் ஒருவருக்கு ரூ.500/- மதிப்பிலான பயிற்சி உபகரணங்கள் வழங்கப்படும்.

(iv) நபர் ஒருவருக்கு ரூ.2,500/- மதிப்பிலான அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள், 50 விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

5.02. இத்திட்டத்தின்கீழ், 1999-2000 ஆம் ஆண்டில், 50 பயனாளிகளுக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்ட உதவிகள் வழங்கப்படும்.



1999 ஏப்ரல் 28]

5.03. 1998-99 ஆம் ஆண்டில் இயல்பு மற்றும் நிதி சாதனை விவரம் வருமாறு:

| வரிசை எண் | திட்ட விவரம் | இயல்பு குறியீடு | இயல்பு சாதனை | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | நிதி சாதனை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | மல்பரி நாற்றுகள் விநியோகம் | 1.25 இலட்சம் | 1.28 இலட்சம் | 0.500 | 0.500 |
| 2. | புதிய பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல் | 100 எண் | 100 எண் | 0.500 | 0.500 |
| 3. | புதிய பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி உபகரணங்கள் இலவசமாக வழங்குதல் | 100 எண் | 100 எண் | 0.500 | 0.500 |
| 4. | அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் விநியோகம் | 100 எண் | 100 எண் | 2.500 | 2.500 |
| 5. | கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லல் | 100 எண் | 100 எண் | 0.750 | 0.750 |
| 6. | குஞ்சப்பணையில் உள்ள அரசு பட்டுப் பண்ணையை மேம்படுத்துதல் | 1 எண் | 1 எண் | 2.500 | 2.500 |
| | மொத்தம் | | | **7.250** | **7.250** |

***6.01.* மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டம்:** இத்திட்டத்தின் கீழ் பட்டு வளர்ச்சிப் பணிகள், 1985-86 ஆம் ஆண்டு முதலாக கீழ்க்காணும் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

(i) கோவை
(ii) திண்டுக்கல்
(iii) தேனி
(iv) விருதுநகர்
(v) திருநெல்வேலி
(vi) கன்னியாகுமரி

6.02. இத்திட்டத்தின்கீழ், புதிய பட்டு விவசாயிகளுக்குக் கீழ்க்காணும் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன:—

[1999 ஏப்ரல் 28

(i) 700 புதிய பட்டு விவசாயிகளுக்கு நபர் ஒருவருக்கு ரூ.125/- வீதம் 25 விழுக்காடு மானிய விலையில் மல்பரி நாற்றுகள் விநியோகம் செய்தல்.

(ii) மல்பரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் நோய்த் தடுப்பு மேலாண்மைப் பயிற்சி விவசாயிகளுக்கு ஒரு மாத காலத்திற்குப் பயிற்சி அளிக்க உதவித்தொகையாக ரூ.150/- வீதம் வழங்குதல்.

(iii) நபர் ஒருவருக்கு ரூபாய் 150/-மதிப்பிலான பயிற்சி உபகரணங்கள் 700 புதிய பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குதல்.

(iv) ரூ.2500/- மதிப்பிலான அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் வழங்குதல்.

6.03. 1999-2000 ஆம் ஆண்டில் 700 புதிய பட்டு விவசாயிகளுக்கு 20.475 இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட உள்ளது.

6.04. 1998-99 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் சாதனை விவரம் வருமாறு:

| வரிசை எண் | திட்ட விவரம் | இயல்பு குறியீடு | இயல்பு சாதனை | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | நிதி சாதனை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | மல்பரி நாற்றுகள் விநியோகம் | 8.525 இலட்சம் | 9.575 இலட்சம் | 0.853 | 0.853 |
| 2. | புதிய பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல் | 682 எண் | 682 எண் | 1.023 | 1.023 |
| 3. | அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் விநியோகம் | 682 எண் | 682 எண் | 17.050 | 17.010 |
| 4. | இலவசப் பயிற்சி உபகரணங்கள் வழங்குதல் | 682 எண் | 682 எண் | 1.023 | 1.014 |
| 5. | பட்டு நூற்பு தொழிற்பேட்டை நிறுவுதல் | 1 எண் | - | 0.055 | - |
| | மொத்தம் | - | - | 20.004 | 19.900 |



1999 ஏப்ரல் 28]

**7.01. ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்**

பட்டு வளர்ச்சித் திட்டங்கள், மலைவாழ் மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக 1975-76 ஆம் ஆண்டு முதலாக கீழ்க்காணும் மலைப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(i) நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை.

(ii) சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களிலுள்ள கல்ராயன்மலை.

(iii) திருச்சி மற்றும் சேலம் மாவட்டங்களிலுள்ள பச்சமலை.

(iv) திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலை.

(v) வேலூர் மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலை.

(vi) சேலம் மாவட்டத்திலுள்ள அருநூத்துமலை.

(vii) சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு மலை.

**7.02 1999-2000 ஆம் ஆண்டில் மலைவாழ் விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு இத்திட்டத்தில் கீழ்க்காணும் உதவிகள் வழங்கப்பட உள்ளன:—**

(i) ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.750/- வீதம் மல்பரி நாற்றுகள் மானிய விலையில் அளித்தல்.

(ii) புதிய விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்குவதற்கு, ரூ.500/- வீதம் பயிற்சி உதவித்தொகை அளித்தல்.

(iii) புழு வளர்ப்பு மனை கட்டுவதற்கு 75% வங்கிக்கடன் மானியமாக ரூ.4,125/- வீதம் அளித்தல்.

(iv) ரூ.2,500/- மதிப்பிலான அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் ஒவ்வொரு புதிய விவசாயிக்கும் இலவசமாக விநியோகித்தல்.

7.03. 1999-2000 ஆம் ஆண்டில் 250 மலைவாழ் விவசாயிகள் பயன் பெறும் பொருட்டு ரூ.19.69 இலட்சம் மதிப்பீட்டிலான உதவிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

***7.04 இத்திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டில் சாதனை விவரம் வருமாறு:***

[1999 ஏப்ரல் 28

| வரிசை எண். | திட்ட விவரம் | இயல்பு குறியீடு | சாதனை | நிதி ஒதுக்கீடு | சாதனை |
|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | மல்பரி நாற்றுகள் விநியோகம் | 2.50 இலட்சம் | - | 0.750 | - |
| 2. | புதிய விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல் | 100 எண் | 100 எண் | 0.500 | 0.500 |
| 3. | புழு வளர்ப்பு மனை கட்டுவதற்காக வங்கிக் கடன் மானியம் | 100 எண் | 100 எண் | 4.125 | 4.125 |
| 4. | அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் விநியோகம் | 100 எண் | 100 எண் | 2.500 | 2.481 |
| 5. | 1997-98 ஆம் ஆண்டு பயனாளிகளுக்கு உரிய மல்பரி நாற்று நடவு மானியம் | 405 எண் | 405 எண் | 3.200 | 3.194 |
| | மொத்தம் | - | - | **11.075** | **10.300** |

**8. பட்டு 2000**

8.01. தரமான மல்பரி இலை உற்பத்தி மற்றும் பட்டுக்கூடு உற்பத்தியை அதிகரிக்கச் செய்து, விவசாயிகளின் பொருளாதார நிலை உயர்வதற்கு உதவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

8.02. 1998-99 ஆம் ஆண்டில் தர்மபுரி மற்றும் கோவை மாவட்டங்களில் 20 பட்டு வளர்ப்பு தர மேம்பாட்டுக் குழுக்கள் கீழ்க்காணும் விவரப்படி ஏற்படுத்தப்பட்டன:—

| வரிசை எண் | மாவட்டம் | குழுக்களின் எண்ணிக்கை | குழு ஒன்றிற்கான உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| 1. | தர்மபுரி | 14 | 6-8 உறுப்பினர்கள் |
| 2. | தர்மபுரி | 01 | 18-20 உறுப்பினர்கள் |
| 3. | கோவை | 04 | 6-8 உறுப்பினர்கள் |
| 4. | கோவை | 01 | 18-20 உறுப்பினர்கள் |
| | மொத்தம் | 20 | |



1999 ஏப்ரல் 28]

8.03. 1998-99 ஆம் ஆண்டில் ரூ.811 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் ரூ. 6.68 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது.

8.04. 1999-2000 ஆம் ஆண்டில், சேலம், நாமக்கல், ஈரோடு, வேலூர், தர்மபுரி மற்றும் கோவை மாவட்டங்களில் ரூ.14.77 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 40 பட்டு வளர்ப்பு தர மேம்பாட்டுக் குழுக்கள் தொடங்கப்பட உள்ளன.

8.05. பட்டுத் தொழில் அறிமுகமில்லாத பகுதிகளிலிருந்து விவசாயிகளைப் பட்டுத் தொழில் நன்கு வளர்ச்சியுற்றுள்ள பகுதிகளுக்கு அழைத்துச் சென்று பயிற்சி வழங்க ரூ.4.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ரூ.6.96 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பட்டுநூற்பு பற்றிய பயிற்சியானது தொழில் முனைவோர், தொழிலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு வழங்கப்படும்.

8.06. சிறு நூற்பாளர்கள் தினமும் உற்பத்தி செய்யும் கச்சாப்பட்டுக்கு உரிய விலை உடனே வழங்குவதற்கு ரூ.67.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் சுழல்நிதி உதவி, விற்பனை வாய்ப்புள்ள இடங்களில் அமைந்துள்ள ஏழு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும். மேலும் ரூ.15.75 இலட்சம் இந்த ஏழு கூட்டுறவுச் சங்கங்களில் கணக்குகளைப் பராமரிக்கும் பொருட்டு கணினிகள் கொள்முதல் செய்து பொருத்துவதற்கு வழங்கப்படும். எனவே, 1999-2000 ஆம் ஆண்டில் பட்டு 2000 திட்டம் ரூ.109.24 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**9. அரசு பட்டுப் பரிமாற்றகம், காஞ்சிபுரம்**

9.01. பட்டு நூற்பாளர்கள் உற்பத்தி செய்யும் பட்டு இழைக்கு நியாயமான, போட்டி விலை கிடைப்பதற்காக காஞ்சிபுரத்தில் அரசு பட்டுப் பரிமாற்றகம் 1991 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தரமான பட்டின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக, பட்டு தரப் பரிசோதனை நிலையம் ஒன்று மத்திய பட்டு வாரியத்தினால் காஞ்சிபுரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்நிலையத்தில் பட்டு பரிமாற்றக உறுப்பினர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பட்டின் தரத்தினை மேம்படுத்துவதற்குண்டான ஒருங்கிணைந்த பட்டுப் பரிசோதனை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்பட்டுப் பரிமாற்றகத்தில் கணினி வசதிகள் ஏற்படுத்தப்பட்டு கணக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

9.02. 1998-99 ஆம் ஆண்டில் பட்டுப் பரிமாற்றகத்தின் செயல்பாட்டு விவரம் வருமாறு:

| பட்டு விற்பனை | மதிப்பு |
|---|---|
| 146.80 மெட்ரிக் டன் | ரூ.23.48 கோடி |

9.03. காஞ்சிபுரம் பட்டுப் பரிமாற்றகத்தில் 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.30 கோடி மதிப்புள்ள 250 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு கொள்முதல் செய்யப்படும்.

**10. டான்சில்க், காஞ்சிபுரம்:**

காஞ்சிபுரத்தில் டான்சில்க் எனப்படும் முதன்மை நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையம் நெசவாளர்களின் பட்டுத் தேவையை நிறைவு செய்யும் வகையில் பயனுள்ள முறையில் ஒழுங்குபடுத்தப்படும். 1999-2000 ஆம் ஆண்டில், ரூ.60 கோடி மதிப்புள்ள 500 மெட்ரிக் டன் பட்டுநூலை டான்சில்க் கொள்முதல் செய்து பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தரமான பட்டு, பாவு மற்றும் ஊடை உற்பத்தி செய்வதற்காக வழங்கப்படும்.

**11. 1999-2000 ஆம் ஆண்டில் புதிய திட்டங்கள் (பகுதி-2)**

கீழ்க்காணும் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் 1999-2000 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். ரூ.42.04 இலட்சம் மதிப்பீட்டிலான இத்திட்டங்களில் சுமார் 4550 விவசாயிகள் நேரடியாகப் பயன்பெறுவர்:

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | திட்டமதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த பட்டு வளர்ச்சித் திட்டம் | |
| | (அ) வீரிய ரக மல்பரி நடவுக்கு ஊக்கத்தொகை | 7.00 |
| | (ஆ) புதிய விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல் | 2.10 |
| | (இ) அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் விநியோகம் | 13.90 |
| 2. | சேலம் பட்டு வளர்ச்சித் துறை இயக்ககத்தில் உள்ள நிர்வாக தகவல் மையம் சீரமைத்தல் | 1.20 |
| 3. | மத்திய பட்டு வாரியம் விடுவித்த புதிய பட்டுப்புழு இனங்களை பிரபலப்படுத்துவதற்கு ஊக்கத்தொகை அளித்தல் | |
| | (அ) இழப்பை ஈடுகட்டுவதற்கு இளம்புழுக்களை ஊக்கத்தொகையாக அளித்தல் | 0.60 |
| | (ஆ) இருசுழற்சி இன பட்டுக்கூடு உற்பத்திக்கு ஊக்கத்தொகை அளித்தல் | 0.26 |
| | (இ) புதிய இனங்களை வளர்க்கும் விவசாயிகளுக்கு கிருமி நாசினிகளை இலவசமாக வழங்குதல் | 1.98 |
| 4. | அதிகபட்ச பட்டுக்கூடு அறுவடைக்குத் தனியாக பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்ட உதவி அளித்தல் | 15.00 |
| | மொத்தம் | **42.04** |





***12. 1999-2000 ஆம் ஆண்டில் திட்ட நிதி மதிப்பீட்டு விவரம்***

1999-2000 ஆம் ஆண்டில் ரூ.1955.58 இலட்ச மதிப்பீட்டில் கீழ்க்காணும் தொடர் திட்டங்களும், புதிய திட்டங்களும் செயல்படுத்தப்பட உள்ளன.

| வரிசை எண் | திட்டங்களின் விவரம் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | திட்டப் பணிகள் | |
| | (அ) திட்டம்சாரா பணிகள் | 1910.97 |
| | (ஆ) தன்னாட்சி அமைப்புகள் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 2.57 |
| 2. | பகுதி-2 திட்டங்கள் | |
| | 1. ஒருங்கிணைந்த பட்டு வளர்ச்சித் திட்டம் | |
| | (அ) வீரிய ரக மல்பரி நடவுக்கு ஊக்கத்தொகை | 7.00 |
| | (ஆ) புதிய விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தல் | 2.10 |
| | (இ) அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் விநியோகம் | 13.90 |
| | 2. சேலம் பட்டு வளர்ச்சித்துறை இயக்ககத்திலுள்ள நிர்வாக தகவல் மையம் சீரமைத்தல் | 1.20 |
| 3. | மத்திய பட்டு வாரியம் விடுவித்த புதிய பட்டுப்புழு இனங்களை பிரபலப்படுத்துவதற்கு ஊக்கத்தொகை அளித்தல் | |
| | (அ) இழப்பை ஈடுகட்டுவதற்கு இளம்புழுக்களை ஊக்கத்தொகையாக அளித்தல். | 0.60 |
| | (ஆ) இருசுழற்சி இன பட்டுக்கூடு உற்பத்திக்கு ஊக்கத்தொகை அளித்தல் | 0.26 |
| | (இ) புதிய இனங்களை வளர்க்கும் விவசாயிகளுக்கு கிருமிநாசினிகளை இலவசமாக வழங்குதல் | 1.98 |
| 4. | அதிகபட்ச பட்டுக்கூடு அறுவடைக்குத் தனியாக பட்டுப்புழு வளர்ப்புமனை கட்ட உதவியளித்தல் | 15.00 |
| | மொத்தம் | ***1955.58*** |

**13. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம்**

தமிழகத்தில் பட்டுத்தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள தர்மபுரி, சேலம் நாமக்கல், ஈரோடு, கோவை மற்றும் வேலூர் ஆகிய ஆறு

மாவட்டங்களில் மட்டும் ரூ.5013.21 இலட்சம் மதிப்பீட்டிலான பட்டு வளர்ச்சித் திட்டங்களை ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் செயல்படுத்த கருத்துருக்கள் அனுப்பப்பட்டன. இதில் மாநில திட்டக்குழு ரூ.4000 இலட்சம் மதிப்பீட்டிலான பட்டு வளர்ச்சித் திட்டங்களை ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது.

**14. மத்திய பட்டு வாரிய நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் கிரியா ஊக்கி வளர்ச்சித் திட்டங்கள்**

14.01 மத்திய பட்டு வாரிய நிதியுதவியுடன் ரூ.492.562 இலட்சம் மதிப்பீட்டிலான 12 பட்டு வளர்ச்சி கிரியா ஊக்கித் திட்டங்கள் செயல்படுத்த திட்டக் கருத்துருக்கள் மத்திய பட்டு வாரியத்திற்கு அனுப்பப்பட்டன. இதில், ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய பட்டு வாரியத்தின் பங்கு ரூ.323.975 இலட்சமும், மாநில அரசின் பங்கு ரூ.137.085 இலட்சமும், பயனாளிகளின் பங்கு ரூ.31.502 இலட்சமும் ஆகும். மேலும் இவற்றில் 9 திட்டங்கள் 1998-99 ஆம் நிதி ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 3 திட்டங்கள் அடுத்து வரும் நிதியாண்டுகளில் செயல்படுத்தப்படும்.

14.02. 1999-2000 ஆம் நிதியாண்டில் மத்திய பட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் கிரியா ஊக்கித் திட்டங்கள் ரூ.151.878 இலட்ச மதிப்பீட்டில் செயல்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், சென்னை.**

1. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் கீழ்க்காணும் முக்கிய குறிக்கோள்களுடன் 1973 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது:

(1) தமிழகக் கைவினைஞர்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களுக்கு நிரந்தரச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்.

(2) முறையான பயிற்சியின் மூலமாக கைவினைஞர்களின் பாரம்பரியத் தொழில் திறனை மேம்பாடடையச் செய்தல்.

(3) கைவினைப் பொருட்களின் உற்பத்தித் திறனையும், தரத்தினையும் மேம்படுத்துவதற்குத் தேவையான உரிய தொழில் நுட்பத்தினை வளர்த்திடும் அதே நேரத்தில், அத்தொழிலில் உள்ள உற்சாகமற்ற கடின உழைப்பைக் குறைத்து தொழில்முறை இடர்பாடுகளைக் களையப் பாடுபடுதல்.





(4) புதுமையினைப் புகுத்துவதன் மூலம் வடிவமைப்புகளை மேம்பாடடையச் செய்தல்.

(5) கைவினைஞர்களுக்கு சமூக மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு அளித்தல்.

மேற்கூறிய குறிக்கோள்களை அடைவதற்காக இந்நிறுவனம் சந்தை வாய்ப்பு, உற்பத்தி, பல்வேறு சிறப்புத் திட்டங்களை மேற்கொள்ளுதல் மற்றும் பயிற்சி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

**2. சந்தை:**

2.01. தமிழகக் கைவினைஞர்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களுக்கு சீரான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காக இந்நிறுவனம் தமிழகத்தில் 15 விற்பனை நிலையங்களையும், வெளிமாநிலங்களில் 4 விற்பனை நிலையங்களையும் நடத்தி வருகிறது. இங்கு கைவினைப் பொருட்கள், "பூம்புகார்" எனும் புகழ்பெற்ற பெயரில் விற்பனை செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டுகளில் இக்கழகத்தின் விற்பனை பின்வருமாறு:

| வருடம். | விற்பனை (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1993-94 | 781.50 |
| 1994-95 | 770.98 |
| 1995-96 | 946.36 |
| 1996-97 | 1058.21 |
| 1997-98 | 1076.94 |
| 1998-99 | 1125.00 |

தமிழகக் கைவினைப் பொருட்களுக்கு உள்ள பரந்த சந்தை முக்கியத்துவத்தை உணர்ந்து, இக்கழகம் 1998-99 ஆம் ஆண்டுக்கான விற்பனைக் குறியீட்டை ரூ.1400.00 இலட்சம் என நிர்ணயித்திருந்தது. எனினும், உலக அளவில் தொழில் துறையில் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையில்

[1999 ஏப்ரல் 28

ஏற்பட்ட வீழ்ச்சியினால் விற்பனையில் குறைவு ஏற்பட்டுள்ளது. எனினும், 1999-2000 ஆண்டுகளில் இந்நிறுவனம் மேம்பட்ட விற்பனையை எய்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2.02.** புதிய விற்பனை நிலையங்கள் தொடங்குதல்:

இக்கழகம் மும்பை பிரபாதேவியில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்த வர்த்தக இடத்தினை பெற்று 8-6-98 முதல் மேற்கத்திய பெருநகரங்களில் நம்முடைய தயாரிப்புகளை பிரபலப்படுத்துவதற்கென ஒரு புதிய விற்பனை நிலையத்தை தொடங்கியுள்ளது. இதைப்போன்றே, பாண்டிச்சேரியில் கைவினைப் பொருட்களுக்கு நிலவும் சந்தை வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் 1999-2000-ஆவது ஆண்டில், பாண்டிச்சேரியில் ஒரு விற்பனை நிலையத்தை தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

**2.03.** சென்னையில் அமைந்துள்ள முதன்மை விற்பனை நிலையத்திற்குக் கூடுதல் இடவசதி செய்தல்:

இந்நிறுவனத்தின் முதன்மை விற்பனை நிலையமான சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் வாடிக்கையாளர்களின் வசதியைக் கூட்டுவதற்கென, விற்பனைப் பரப்பளவை அதிகப்படுத்துவதற்காகவும், வசதிகளைப் பெருக்குவதற்காகவும், ரூ.102.00 இலட்சம் திட்டச் செலவில் கூடுதல் கட்டுமானம், உள்அலங்காரம் மற்றும் குளிர்சாதன வசதி போன்றவை செய்ய இந்நிறுவனம் ஒரு திட்டத்தினை மேற்கொண்டுள்ளது. இத்திட்டம், தற்போது பொது பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. ஆகஸ்ட், 1999-க்குள் இப்பணி முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் நிறைவேறிய பின், இவ்விற்பனை நிலையம் 4000 சதுர அடி கூடுதல் வர்த்தக இடத்தினைக் கொண்டு, நகரிலேயே மிகச் சிறந்த கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையமாக விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதைப்போன்றே திருச்சி மற்றும் சேலம் விற்பனை நிலையங்களிலும், விற்பனை நிலையப் பரப்பளவை அதிகரிக்கும் திட்டங்களை இக்கழகம் மேற்கொண்டுள்ளது.

**2.04.** விற்பனை நிலையங்களைப் புதுப்பித்தல்:

கைவினைப் பொருட்கள் கலைநயமிக்க பொருட்களாதலால், விற்பனை நிலையங்களை பொருத்தமான வகையில் உள்அலங்காரம்



999 ஏப்ரல் 28]

செய்வது அவசியமானதாகும். மேற்கொண்ட நோக்கத்தினை கருத்திற்கொண்டு ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தன்னுடைய விற்பனை நிலையங்களைப் புதுப்பிக்க இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

1998-99 ஆம் ஆண்டில் கன்னியாகுமரியிலுள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் உள்அலங்கார வேலை தொடங்கப்பட்டுள்ளது. 1999-2000 ஆம் ஆண்டில், இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன், கொடைக்கானல், ஊட்டி மற்றும் ஈரோடு ஆகிய விற்பனை நிலையங்களில் உள் அலங்கார வேலைகள் தொடங்கப்படவுள்ளது. கோயம்புத்தூரிலுள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் குளிர்சாதன வசதி செய்ய இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

**2.05.** ஏற்றுமதி:

ஏற்றுமதித் துறையில் இக்கழகத்தின் செயலாக்கத்தினை மேம்படுத்த இக்கழகம் தொழில் முறை கருத்தாய்வு நிலையங்களை அமர்த்தி, ஏற்றுமதிச் சந்தையை அதிகரிக்கும் திட்டத்தினை மேற்கொண்டுள்ளது.

**2.06.** பொருட்காட்சிகள்:

(1) ஏற்றுமதிச் சந்தையினை அதிகரிக்க இந்நிறுவனம், முதன்முறையாக மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள சிநேகலில் நடைபெற்ற வெளிநாட்டுப் பொருட்காட்சியில் கலந்து கொண்டது. இப்பொருட்காட்சியில் விற்பனை எதிர்பார்த்த அளவு இல்லையென்றாலும், இப்பொருட்காட்சியில் பங்கு கொண்டதன் மூலம், பிரஞ்சு, மேற்கு ஆப்பிரிக்கா, வடக்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் கைவினைப் பொருட்களின் ஏற்றுமதிச் சந்தை வாய்ப்பினை அதிகரிக்கவும், மேலும், இந்நாடுகளில் நமது கைவினைப் பொருட்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும், வழிவகை செய்யும். வரும் காலங்களில், பன்னாட்டுச் சந்தை வாய்ப்பைப் பெருக்குவதற்காக இந்நிறுவனம், இந்திய வியாபார மேம்பாட்டு நிறுவனம் மற்றும் கைவினைப் பொருட்களுக்கான ஏற்றுமதி அவை, ஆகியவைகளினால் நடத்தப்படும் பொருட்காட்சிகளில் பங்கு பெற திட்டமிட்டுள்ளது.

(2) புது டில்லியில் முதன் முறையாக தமிழ்நாடு கைவினைப் பொருட்களை விற்பனை செய்ய வேண்டி, அக்டோபர் 1998இல் 'கைவினைப் பொருட்கள் அங்காடி' பொருட்காட்சியை இக்கழகம்

[1999 ஏப்ரல் 28

ஏற்பாடு செய்தது. இதன் மூலம் இம்மாநிலத்திலுள்ள கைவினைஞர்கள் தங்களது படைப்புகளை தாங்களே நேரிடையாக விற்பனை செய்வதற்கான வாய்ப்பைப் பெற்றனர். இந்திய அரசின் நிதி உதவியுடன் இப்பொருட்காட்சி நடத்தப்பட்டது.

(3) ஆகஸ்டு 1998இல், இக்கழகம் அனைத்து கைவினைப் பொருட்கள் பொருட்காட்சி ஒன்றினை மும்பையில் நடத்தி சாதனை விற்பனையாக ரூ.36.00 இலட்சத்தினை எய்தியது.

(4) மேலும் இக்கழகம், தமிழக கைவினைப் பொருட்களின் சிறப்பினைப் பறைசாற்றுவதற்காக இந்தியாவில் உள்ள பல்வேறு முக்கிய நகரங்களில் உள்ளூர் பண்டிகை நாட்களில் பொருட்காட்சிகளை நடத்தி வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டில் முக்கிய நகரங்களான ஹைதராபாத், போபால், இந்தூர், கோவா ஆகிய நகரங்களில் பொருட்காட்சிகளை நடத்தி விற்பனையை அதிகரிப்பதுடன், தமிழகக் கைவினைப் பொருட்கள் பற்றி அறியச் செய்யவும் திட்டமிட்டுள்ளது.

**3. உற்பத்தி:**

இந்நிறுவனம் வெவ்வேறு வகையான கைவினைப் பொருட்களுக்கு, தமிழகத்தில் பல்வேறு இடங்களில் எட்டு உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ளது. கடந்த ஆறாண்டுகளில் அனைத்து உற்பத்தி நிலையங்களின் மொத்த ஆண்டு உற்பத்தி விவரம் கீழ்வருமாறு:

| வருடம் | உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1993-94 | 162.97 |
| 1994-95 | 130.04 |
| 1995-96 | 146.65 |
| 1996-97 | 174.28 |
| 1997-98 | 250.78 |
| 1998-99 | 230.00 |



1999 ஏப்ரல் 28]

இந்நிறுவனம் 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.245.00 இலட்சத்திற்கு பல்வேறு கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்ய திட்டமிட்டிருந்தாலும், தளர்ந்து வரும் சந்தை நிலையினைக் கருத்திற்கொண்டு உற்பத்தி மேலும், மறு ஆய்வு செய்யப்பட்டு, ரூ.230.00 இலட்சத்திற்குக் குறைக்கப்பட்டது. உற்பத்திப் பொருட்கள் குவியாமல் இருக்கவும், நடைமுறை மூலதனம் தடைபடாமலிருக்கவும் இது உதவும். இந்நிறுவனம் கூடுதல் மதிப்புள்ள பொருட்களான பஞ்சலோகச் சிலைகள் மற்றும் பித்தளை விளக்குகளைத் தயாரிப்பதில் அதிகக் கவனம் செலுத்தி, 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.275.00 இலட்சம் உற்பத்தியை எய்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**4. சிறப்புக் கோவில் பணிகள்:**

இக்கழகம் தன்னுடைய வழக்கமான சந்தை நடவடிக்கைகள் மட்டுமின்றி ஒரு மாறுபட்ட நடவடிக்கையாக, பல்வேறு கோவில் ஆணைகளை ஏற்று, தங்கம், வெள்ளி மற்றும் மரத்தாலான தேர்கள் செய்வதையும், ஆலய மணிகள், கோயில் வாகனங்கள், பித்தளை கிராதிகள் முதலியவைகளை உற்பத்தி செய்வதுடன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகிய இயக்குனரகங்களுக்கு அரசு உத்தரவின்பேரில், சலவைப் பெட்டிகளையும் தயாரித்து வழங்கி வருகிறது.

கடந்த ஆறு ஆண்டுகளில் இவ்வாறான சிறப்பு ஆணைகளை நிறைவேற்றியதன் மூலமாக இக்கழகம் ஈட்டிய வருவாயின் விவரம் கீழ்வருமாறு:

| வருடம் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1993-94 | 4.45 |
| 1994-95 | 18.17 |
| 1995-96 | 20.84 |
| 1996-97 | 8.17 |
| 1997-98 | 17.48 |
| 1998-99 | 9.81 |

[1999 ஏப்ரல் 28

இக்கழகம் தற்போது பல்வேறு சிறப்புத் திட்டங்களில் தனது கவனத்தைச் செலுத்தி வருகிறது. ஒவ்வொரு திட்ட விபரங்கள், தற்போதுள்ள வேலைகளின் நிலைகள் ஆகியவை கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மொத்த திட்ட மதிப்பீடு | சிறப்புப் பணிகளின் படி இக்கழகம் பெறப்பட உள்ள தொகை | உற்பத்தியின் நிலை |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்) | | |
| 1. | சென்னை, மாங்காடு அருள்மிகு காமாட்சி அம்மன் திருக் கோயிலுக்கு 16' 6 7/8" உயர தங்கதேர் செய்து வழங்குதல் | 122.34 | 24.00 | மரம் மற்றும் செப்பு வேலை முடிவுற்றது. வெள்ளித் தகடு மற்றும் தங்கத்தகட்டு வேலை செய்யப்பட உள்ளது |
| 2. | மருதமலையிலுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக் கோயிலுக்கு 16' 6 7/8" உயர தங்க இரதம் செய்து வழங்குதல் | 108..00 | 15.85 | மரம் மற்றும் வெள்ளி வேலை முடிவுற்றது. தங்க வேலை செய்யப்படவுள்ளது |
| 3. | சென்னை மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலுக்கு 13'8" உயர தங்க இரதம் செய்து வழங்குதல் | 77.00 | 9 76 | மரம் மற்றும் வெள்ளி வேலை முடிவுற்றது. தங்க வேலை செய்யப் படவுள்ளது |
| 4. | திருக்கழுக்குன்றம அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு 58' 6" உயர மரத்தேர் செய்து வழங்குதல் | 12.70 | 6.88 | கோயில் நிர்வாகிகளிட-மிருந்து மூலப் பொருட்கள் பெறப்பட்டவுடன் மரவேலைகள் செய்யப்படும் |



1999 ஏப்ரல் 28]

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மொத்த திட்ட மதிப்பீடு | சிறப்புப் பணிகளின் படி இக்கழகம் பெறப்பட உள்ள தொகை | உற்பத்தியின் நிலை |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்) | | |
| 5. | கர்நாடக மாநிலத்தில் உள்ள அருள்மிகு குக்கே சுப்பிரமணிய திருக்கோயிலுக்கு 9' 8 7/8" உயர வெள்ளி இரதம் செய்து வழங்குதல் | 32.28 | 11.46 | மரவேலை முடிவுற்றது. வெள்ளித் தகட்டுப் பணிக்கான உத்தரவு எதிர் பார்க்கப்படுகிறது. |
| 6. | காளஹஸ்தியிலுள்ள காளஹஸ்தி சுவாமி வாரி தேவஸ்தானத்திற்கு பித்தளை கிராதிகள் செய்து வழங்குதல். | 30.20 | 30.20 | பிப்ரவரி 1999ல் ஆணை பெறப் பட்டது. இந்த வேலை மார்ச் மாதம் தொடங்கப் பட்டு 60% முடிவடைந்துள்ளது. மே 1999க்குள் முடிக்க நடவடிக்கை எடுக்க முடிவெடுக்கப் பட்டுள்ளது. |

இந்நிறுவனம் பல நிலைகளில் தனது உறுதியான தொடர் நடவடிக்கைகள் மூலம் பெருமைமிகு காளஹஸ்தி சுவாமி திருக்கோயில் பணிக்கான ஆணை பெற்றதன் வாயிலாக ஆந்திர மாநிலத்தின் மற்ற உள்ளார்ந்த கோயில்களையும் தொடர்பு கொள்ள ஆர்வத்துடன் உள்ளது. மேலும் பல்வேறு கோயில் தேவைகளுக்காக ஹைதராபாத்திலுள்ள அறநிலையத் துறை ஆணையாளர் அவர்களிடம் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முயன்று வருகிறது. மேலும் உலகெங்கும் பரவியுள்ள இந்தியர்களின் பல்வேறு சங்கங்கள், சிறப்புத் திட்டங்கள் மேம்பாட்டிற்கு ஒரு வலிமையான கருவியாகக் கருதப்படுகின்றன. உதாரணமாக, சிங்கப்பூரில் வாழும் இந்தியர்களின் 30க்கும் மேற்பட்ட சங்கங்கள் மற்றும் இந்தியர்களால் நடத்தப்பட்டு வரும் உணவு

விடுதிகளை அணுகுவதன் மூலமாக, தகவல்களை பரப்பச் செய்யலாம். மற்றும் உலகெங்கிலும் உள்ள வெளிநாட்டுவாழ் இந்தியர்களின் சங்கங்களும் அறக்கட்டளைகளும் கோயில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. மதுராவைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள 'இஸ்கான்' என்னும் அமைப்பு உலகெங்கும் பல கோயில்களை மேம்பாடடையச் செய்து வருகிறது. வேறு எந்த நிறுவனங்களுக்கும் இத்துறையில் திறமையின்மை காரணமாக, நமது பூம்புகார் நிறுவனம் இவ்வமைப்புகளின் மூலமாக பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளும்.

## 5. பயிற்சி:

### 5.01. புதிய கைவினைஞர்களை உருவாக்குவதற்கான பயிற்சித் திட்டங்கள்

கைவினைப் பொருடகளின் உற்பத்தியில் கிடைக்கும் குறைந்த வருவாயின் காரணமாக, கைவினைஞர்களின் தற்போதைய சந்ததியினர் பழமை மற்றும் பாரம்பரிய கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்வதை விடுத்து, அதிக வருவாய் ஈட்டக்கூடிய தொழில்களில்/ வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், பழமை வாய்ந்த கலைகள் நலிவடைந்து வருகின்றன. எனவே, அனைத்து கலைகளிலும், கைவினைப் பொருட்கள் தயாரிப்பினை பயில ஆர்வமுள்ள இளம் சந்ததியினருக்குப் பயிற்சி வழங்குவதற்கு இதுவே தக்க தருணமாகும். 1998-99 ஆம் ஆண்டில், இந்நிறுவனம் கீழ்க்கண்ட கலைகளில் ஓராண்டுப் பயிற்சித் திட்டத்தினை நடத்தியுள்ளது:

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | திட்டச் செலவு | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஆயிக்குடியில் பிரம்புப் பொருட்கள் பயிற்சி | ரூ.42,000/- | 13 பயிற்சியாளர்கள் |
| 2. | மதுரையில் வெண்கலப் பொருட்கள் தயாரிப்பதில் பயிற்சி | ரூ.42,000/- | 11 பயிற்சியாளர்கள் |

மேற்கண்ட இரண்டு திட்டங்களும், வளர்ச்சி ஆணையர் (கைவினைப் பொருட்கள்) புதுடில்லி, நிதி உதவியுடன் நடத்தப்படுகிறது.



1999-2000 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் முக்கிய கலைகளில் பயிற்சி அளிக்க இக்கழகம் திட்டமிட்டுள்ளது:

1. பஞ்சலோகச் சிலைகள்
2. சந்தன மரச் சிற்பங்கள்
3. கற்சிற்பங்கள்

### 5.02. கைவினைஞர்களுக்கு நவீன முறை உற்பத்தியில் பயிற்சி அளித்தல்:

இந்நிறுவனம் தனது உற்பத்தி நிலையங்களில் பணிபுரியும் கைவினைஞர்களுக்கு, வளர்ச்சி ஆணையர் (கைவினைப் பொருட்கள்) புதுடில்லி அலுவலகத்தின் கட்டுப்பாட்டின்கீழ், பெங்களூரில் இயங்கும் மண்டல வடிவமைப்பு மற்றும் தொழில் மேம்பாட்டு நிலையத்தின் மூலம், மேம்பட்ட பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளது.

### 5.03. வடிவமைப்பைப் புனைதல்:

இக்கழகம், வளர்ச்சி ஆணையர் (கைவினைப் பொருட்கள்), புதுடெல்லி அவர்களின் நிதி உதவியுடன், கலை மற்றும் கைத்திறத் தொழில்களில் தேர்ச்சி பெற்ற வல்லுநர்கள் மற்றும் அரசினர் கலைத் தொழில் கல்லூரி, சென்னை ஆகியவற்றின் மூலமாக பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளைப் பொருட்களில் புதிய வடிவமைப்புகளைக் கொணரத் திட்டமிட்டுள்ளது.

## 6. கைவினைஞர்களுக்கு சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பு அளித்தல்:

### மாநில விருதுகள்

தமிழகக் கலைகளில், புதிய வடிவமைப்புகளை உருவாக்க கைவினைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் மாநில விருதுப் போட்டிகளை இந்நிறுவனம் நடத்தி வருகிறது. விருதுக்காக பெறப்பட்ட பொருட்களில், ஐந்து கலைப் பொருட்கள் வல்லுநர்களால் தேர்வு செய்யப்பட்டு, அப்பொருட்களை உருவாக்கியவர்களுக்கு ரூ.5000/- ரொக்கப் பரிசும், ஒரு வெள்ளிப் பதக்கமும் மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

[1999 ஏப்ரல் 28

இப்போட்டியில் விருது பெற்றவர்கள் 65 வயதை அடைந்தவுடன் மத்திய அரசின் ஓய்வூதியத்தைப் பெற தகுதியுடையவர் ஆவர்.

**7. செயல்பாட்டு அறிக்கை:**

| வரிசை எண் | பங்கு மூலதன அமைப்பு | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு | 171.69 |
| 2. | மத்திய அரசு | 104.00 |
| 3. | கைவினைஞர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் | 0.70 |
| | மொத்தம் | 276.39 |

1990-91லிருந்து, தொடர்ந்து இலாபம் ஈட்டியதன் மூலம் ஒட்டுமொத்த நட்டமாகிய ரூ.161.00 இலட்சத்தை ஆறு ஆண்டு காலத்திற்குள் இந்நிறுவனம் சரி செய்துள்ளது. 31-3-1998 அன்றைய நிலவரப்படி, ரூ.96.50 இலட்சம் உபரியாக இந்நிறுவனத்தினால் பராமரிக்கப்பட்டுள்ளது.

**8.01. மாநில அரசு நிதியுதவி:**

**அ. பகுதி 2 ஆம் திட்டம் 1998-99**

1998-99 ஆம் ஆண்டுக்கான பகுதி 2 திட்டத்தின்கீழ், மாநில அரசு 3-6-1998 நாளிட்ட கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர் துறை அரசு ஆணை (நிலை) எண் 133 மூலமும் மற்றும் 4-3-1999 நாளிட்ட கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர் துறை திருத்தப்பட்ட அரசு ஆணை (நிலை) எண் 34 மூலமும் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்ற வேண்டி, ரூ.25 இலட்சத்தினை பங்கு மூலதனமாக இந்நிறுவனத்திற்கு அனுமதித்துள்ளது.



1999 ஏப்ரல் 28]

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சுவாமிமலையில் கட்டடம் கட்டுதல் | 10.00 |
| 2. | ஈரோட்டில் விற்பனை நிலையத்திற்கு கட்டடம் கட்டுதல் | 4.50 |
| 3. | கோயம்புத்தூர் விற்பனை நிலையத்திற்கு குளிர்சாதன வசதி செய்தல் | 3.00 |
| 4. | கள்ளக்குறிச்சியில் தொழிற்கூடம் அமைத்தல் | 5.50 |
| 5. | ஏற்றுமதி ஆய்வு | 2.00 |
| | மொத்தம் | 25.00 |

வரிசை எண் 4ல் குறிப்பிட்டுள்ள திட்டம் இக்கழகத்தினால் நிறைவேற்றப்பட்டுவிட்டது. வரிசை எண் 1, 2 மற்றும் 3 ஆகியவைகளில் குறிப்பிட்டுள்ள திட்டங்களை நிறைவேற்றுவதற்கான தொகையை இக்கழகம் பொதுப் பணித் துறையிடம் செலுத்தவுள்ளது. ஏற்றுமதி ஆய்வு, ஒரு ஏற்றுமதி ஆலோசனை மையத்திடம் ஒப்படைக்கப்பட்டு அதன் மீதான அறிக்கை விரைவில் பெறப்படவுள்ளது.

**ஆ. பகுதி 2 ஆம் திட்டம் 1999-2000**

தமிழக அரசு கீழ்க்காணும் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இக்கழகத்திற்கு ரூ.15.00 இலட்சம் நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான அரசு ஆணை உரிய நேரத்தில் வெளியிடப்படும்.

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | சுவாமிமலையில் வடிவமைப்பு மற்றும் பயிற்சிக்கூடம் அமைத்தல் | 10.00 |
| 2. | கொள்முதலுக்கான மூலதன நிதியுதவி | 3.00 |
| 3. | உற்பத்தி நிலையங்களை நவீனப்படுத்துதல் | 2.00 |
| | மொத்தம் | 15.00 |

[1999 ஏப்ரல் 28

### 8.02. அ. மத்திய அரசு நிதியுதவி:

இந்நிறுவனம் சமர்ப்பித்த பிரேரணைகளின் அடிப்படையில், மத்திய அரசு 1998-99 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்களுக்காக ரூ.58.38 இலட்சத்தினை அனுமதித்துள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த செலவு | இந்திய அரசின் பங்கு | சதவீதம் | நிறுவன பங்கு | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | |
| 1. | மாமல்லபுரத்தில் தொழிற்கூடம் அமைத்தல் | 2.80 | 2.80 | 100 | .. | .. |
| 2. | ஊட்டி, கொடைக்கானல் மற்றும் ஈரோடு விற்பனை நிலையங்களைப் புதுப்பித்தல் | 30.00 | 15.00 | 50 | 15.00 | 50 |
| 3. | அட்டவணை மற்றும் சிற்றேடு வெளியிடுதல். | 11.32 | 8.49 | 75 | 2.83 | 25 |
| 4. | பொருட்காட்சி செலவுகளை ஈடு செய்தல் | 15.00 | 11.25 | 75 | 3.75 | 25 |
| 5. | (பொருட் காட்சிகள் போபால், இந்தூர், பூனா, சண்டிகார், மற்றும் மும்பை மேலும் புது டில்லியில் சிறுபொருட்காட்சி) | | | | | |
| 5 | ஆயிக்குடியில் பிரம்புப் பயிற்சி மற்றும் மதுரையில் வெண்கலப் பொருட்கள் பயிற்சி. | 0.84 | 0.81 | 100 | .. | .. |
| 6. | பாண்டிச்சேரியில் விற்பனை நிலையம் தொடங்குதல் | 28.46 | 15.00 (அதிக பட்சம்) | 53 | 13.46 | 47 |
| 7. | மூலதனப் பங்கு | - | 5.00 | - | - | -- |



1999 ஏப்ரல் 28]

ஆ. இந்நிறுவனம், 1999-2000 ஆம் ஆண்டிற்காக, கீழ்க்காணும் பிரேரணைகளை மத்திய அரசிற்கு சமர்ப்பித்துள்ளது. மாநில அளவிலான தேர்வுக் குழுவும் இதனைப் பரிந்துரைத்துள்ளது.

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | பயிற்சி (கள்ளக்குறிச்சி, சுவாமிமலை மற்றும் வாகைகுளம்) | 2.775 |
| 2. | பொருட்காட்சிகள் (ஹைதராபாத், பெங்களூர், மும்பை, போபால், கோவா மற்றும் பூனா) | 7.200 |
| 3. | புதிய விற்பனை நிலையங்கள் தொடங்குதல் (ஹைதராபாத்) | 10.000 |
| 4. | புதுப்பித்தல்/உள் அலங்காரம் (பெங்களூர் மற்றும் புதுடில்லி) | 10 000 |
| | மொத்தம் | **29.975** |

### 9. பொது:

### 9.01. பணியாளர் நலத்திட்டம்

(1) 1990-91 ஆம் ஆண்டிலிருந்து நிலையான முன்னேற்றத்தினால் இந்நிறுவனம், தனது பணியாளர்களுக்கு 1-1-1996 முதல் திருத்தப்பட்ட சம்பள விகிதத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

(2) இக்கழகம், தன்னுடைய 25 ஆம் ஆண்டில் முதன் முறையாக நிர்வாக அமைப்பில் விவேகத்தைக் கொணரவும், வேலைவாய்ப்பு மற்றும் பணிகளுக்கான ஒதுக்கீட்டை ஆராயவும், பதவி உயர்வுக்கான திறனை மேம்படுத்தவும் அண்ணா மேலாண்மைக் கழகத்தின் மூலம் ஓர் ஆய்வை மேற்கொண்டது.

### 9.02. கணினி மயமாக்குதல்:

நவீன காலத்தின் மாறுதலுக்கேற்ப, இந்நிறுவனம் தன்னுடைய முதன்மை விற்பனை நிலையமான சென்னை விற்பனை நிலையத்தை 1999-2000-ஆம் ஆண்டில், கணினி மயமாக்கத் திட்டமிட்டுள்ளது. இது

படிப்படியாக அனைத்து விற்பனை நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**9.03. வெள்ளி விழாக் கொண்டாட்டம்:**

இக்கழகத்தின் வெள்ளி விழாவினை விளக்கும் வகையில் ஆகஸ்ட் 1998ல் முப்பெரும் விழா ஒன்று கொண்டாடப்பட்டது. இவ்விழாவில், கணபதி தரிசனக் கண்காட்சி தொடக்க விழாவும், சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்திற்கு ரூ.1.00 கோடி செலவில், கூடுதல் கட்டுமானப் பணி, உள்அலங்காரம் மற்றும் குளிர் சாதன வசதி செய்தல் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டு விழாவும் மற்றும் தகுதி வாய்ந்த கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருது வழங்கும் விழாவும் நடத்தப்பட்டது.

**9.04. இன்டர்நெட்டில் பூம்புகார்:**

நவீன உலகத் தேவைக்கேற்ப, தனது ஏற்றுமதிச் சந்தையை விரிவாக்கும் ஒரு யுக்தியாக 'பூம்புகார்' 12-3-1999 முதல் இன்டர்நெட்டில் தன்னை இணைத்துக்கொண்டுள்ளது.

பூம்புகாரை "www.poompuhar.com" என்ற முகவரியில் காணலாம்.

தன்னுடைய பொருட்களில் செலுத்தும் அதே அளவு கவனத்துடன், பூம்புகார் இன்டர்நெட் மூலம் உலகெங்கும் உள்ள கலை ரசிகர்கள் பயன்பெறும் வகையில் கலைப்பொருட்கள் பற்றிய தொகுப்பினை கண்கவரும் வகையில் வழங்கியுள்ளது.

ஜ௨

V21,31'N99
N99.761
221805

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.